Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 126 | சர்வதேச மின் செய்தித்தாள் | ஆகஸ்ட் 01 2025

## யாழ். செம்மணி

## மணிதப் புதைகுழி



# எங்களின் குரல் கேட்கின்றதா?

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்





































## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

## ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது **https://Thuyarpakirvu.com** இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு

**437 345 4203**

thuyarariviththal@gmail.com

**Thuyarpakirvu.com**

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**ஒரு பலம் வாய்ந்த சர்வதேச சக்தியாக அணிதிரண்டு, எமது மக்களின் விடிவுக்காக உலகத்தமிழினம் உரிமைக்குரல் எழுப்பவேண்டும்.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)
www.sangathamil.com



அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# சுதந்திரத்தைத் தேடி

மட்டக்களப்பின் உணர்வுமிக்க உன்னதமான போராளி லெப்ரினட் கஜன்.

தமிழீழம் என்ற சொல்லுக்கு விடைகண்டு தமிழரின் வரலாற்றை புரட்டியவர்கள், அரசியலாக இருந்த தமிழீழத்தை, எம் கண்முன்னே காட்டி மறைந்தவர்கள், காலத்தால் அழியாதவர்கள், தமிழீழத்தின் கலங்கரை விளக்குகள், வாழ்கின்ற எம் முன் மறைந்து நிற்கின்ற இவர்களின் நினைவை அழிப்பதற்கு ஆக்கிரமிப்பாளர் முயன்றால் அது நிச்சயம் தோற்றுப்போகும்.

உண்மை, சத்தியம், உரிமை என்றும் அழியாது.வரலாற்றைப் புதைத்து அதன்மேல் வாழ நினைப்பவர்கள் ஒரு போதும் வரலாற்றில் நிலைக்கமாட்டர்கள். விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் பல மூத்த மாவீரர்களை மட்டக்களப்பு மண்பெற்றிருக்கின்றது. இவர்கள் ஒவ்வொருவருடைய போராட்டமும், பல வரலாற்று நிகழ்வுகளை எமக்குத்தந்துள்ளது. வீரத்துடன், தன்மானத்துடன் இவர்கள் போர்க்களத்தில் நின்றதைப் பார்க்கின்றபோது இவர்களின் இழப்பு எமக்கு பேரிழப்பாக அமைந்ததை நாம் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

அழகரத்தினம் மணிவண்ணன் (லெப். கஜன்) மட்டக்களப்பு நகரத்தின் மத்தியபகுதியில் புளியந்தீவு என்னுமிடத்தில் 19 .06 .1960 அன்று பிறந்தார். இவருடைய தாயார் ஜீவானந்தம் அழகரத்தினம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சுகாதார ஊழியராக பணியாற்றியிருந்தார். இவர் 1984 .10 மாத காலப்பகுதியில் விசேட சிங்கள காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறுக்கே வளைந்து, நெளிந்து ஓடுகின்ற வாவியினால் இயற்கை வனப்புடன் அழகாக காட்சியளிக்கும் தமிழரின் சொந்த பூர்வீக நிலமாகவும் விளங்குகின்றது. வாவியினால் சூழ்ந்துள்ள புளியந்தீவிற்குள் நுழைவதற்கு ஏனைய பகுதிகளிலிருந்து கோட்டமுனை பாலத்தினூடகவே செல்லமுடியும். புளியந்தீவில்தான் மாவட்டத்தின் ஆயர் இல்லம், போதனா வைத்தியசாலை, பிரபல்யமான தேசிய கல்லூரிகள், மாவட்ட ஆட்சியர் செயலகம், நீதிமன்றம், பொது விளையாட்டு மைதானம்,பேரூந்து நிலையம், உட்பட கல்வி, நீர்ப்பாசனம், மாநகரசபை போன்றவற்றின் பணிமனைகளும் அமைந்து, இத்தீவிற்கு சிறப்பைக் கொடுக்கின்றது.

தீவின் மத்தியில் உயரமான பகுதியில் அமைந்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயமும் அதனையண்டிய மக்களின் வாழ்விடங்களும் பழமையை எமக்கு பறைசாற்றுகின்றது. இவ்வாலயத்தின் அருகாமையில் மணிவண்ணனின் (லெப். கஜன்) வீடும் அமைந்துள்ளது.

இத் தீவில் அரசியலோடு இணைந்ததாக தீவிரமாக பல இளைஞர்கள் செயல்பட்டபோதும் போராளியாக களமிறங்கியவர்களில் ஒருவரும் இத்தீவில் முதல் மாவீரராக வரலாற்றில் பதிவானவரும் லெப். கஜன் என்றே எமக்கு எடுத்துக் கூறக்கூடியதாக இருக்கின்றது.






1983ஆம் ஆண்டு யூலை மாதம் சிறீலங்காவின் தலைநகர் உட்பட பல பகுதிகளில் தமிழின அழிப்பு நடவடிக்கையை மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் சிங்கள அரசியல் வாதிகள் மேற்கொண்டனர். ஒவ்வொரு மாவட்டத்தலைநகரிலும் நேரம் குறித்து சிங்களக் காடையர்கள் தமிழின அழிப்பை நடத்தியதிலிருந்து சிங்கள அரசியல் வாதிகளின் பங்கை எம்மால் உறுதியாகத் தெரிவிக்கமுடியும்.

இதனால் எல்லா இடங்களிலும் தமிழர்களின் பள்ளிக்கூடங்கள் தமிழ் ஏதிலிகள் தங்குமிடங்களாகமாறின. தமிழர்கள் இலங்கைத் தீவில் தங்களின் வாழ்வுரிமைபற்றி வாய் திறக்கக்கூடாது. என்ற அடிப்படையில் மேற் கூறியவற்றை சிங்கள அரசு செய்து முடித்ததனால் “கறுப்பு யூலை” என்று இன்னும் எம் மக்களால் நினைவு கூரப்படுகின்றது.

ஆக்கிரமிப்புமூலம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, சொந்த மண்ணில் தமிழர் சிறுபான்மையராகவாழும் நிலையை உருவாக்குவதன்மூலம் தமிழ்த் தேசிய இனம் தன்னாட்சியுரிமையுடைய இனம் என்பதை இல்லாமல் செய்வதற்கு திட்டங்களை செயல்படுத்திய சிங்கள அரசு இனஅழிப்பு நடவடிக்கைமூலம் பயத்தை உண்டு பண்ணுவதற்கு தீவு தழுவிய இனக்கலவரத்தை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் தமிழ் இளைஞர்கள் மேலும் தீவிரமானர்கள். தமது கைகளில் ஏந்தப்படும் போர்கருவி எமது மக்களைப் பாதுகாக்கும் என்பதில் அசையாத நம்பிக்கையும் கொண்டிருந்தனர். தமிழீழமெங்கும் இளைஞர்களின் எழுச்சி சிங்கள அரசுக்கு பெரும் சவாலாக மாறியது. மட்டக்களப்பில் பல இடங்களிலிருந்து தமிழ் இளைஞர்கள் ஒன்றினைவை ஏற்படுத்தினர். இவ்வாறு சில இளைஞர்கள் சேர்ந்து உருவாக்கியதுதான் “கிழக்கின் குழு” இக் குழுவில் லெப். கஜன், லெப். பயஸ், கப்டன் முத்துசாமி உட்பட பலர் இணைந்திருந்தனர். இக் குழுவினர் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதற்காக முதல் நடவடிக்கையொன்றை திட்டமிட்டனர். புளியந்தீவில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டையினுள் மாவட்ட செயலகம் இயங்குகின்றது இச் செயலகத்தினுள் ஒரு மறைவிட அறையில் பல வேட்டைத்துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அறிந்த இக்குழுவினர் மிகவும் சிறந்த முறையில் திட்டமிட்டு அனைத்து துப்பாக்கிகளையும் அங்கிருந்து கைப்பற்றினர். இச் செயலில் லெப். கஜன் அவர்களின் பங்கு முக்கியமாகவிருந்தது.

அதுமட்டுமல்லாமல் மட்டக்களப்பு மாவட்ட பெருந்தெருக்கள் திணைக்களத்தின் களஞ்சிய அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த வெடிக்க வைக்கும் சாதனம் (Exploder) ஒன்றையும் எடுத்தனர்.

இக் குழுவினரின் சிந்தனையில் போர்க் கருவியினாலே தமிழ் மக்களைப் பாதுகாக்கமுடியும் என்ற உறுதி ஒவ்வொருவருடைய மனதிலும் ஆழமாகப் பதிந்ததனால் தங்களின் செயல்பாடுகளை தீவிரப்படுத்தினர். விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைவதற்கு முன்பே லெப். கஜன் போன்றோர்கள் தங்கள் பாதையைத் தீர்மானித்து விட்டனர். பெரிய பலமான அமைப்பை தமிழீழமெங்கும் இணைந்ததாக உருவாக்குவதன் மூலம் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, தமிழ் மக்கள் விடுதலையைப் பெறமுடியுமென்ற நிலையில் உறுதிதளராத, இலக்குத் தவறாத விடுதலைப்

பயணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதன் தலைவர் பிரபாகரன் அவர்களையும் தேர்ந்தெடுத்தனர்.

அதனால் 1983ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மோகன் என்று அழைக்கப்படும் மணிவண்ணன் இணைந்து கொண்டார். குடும்பத்தில் ஒரு மகனான மணிவண்ணன் உறவினர்கள், அயலவர்களுடன் மிகுந்த பாசத்துடன் பழகும் பண்பான இளைஞராகவும் அவ்வூர் மக்களால் மதிக்கப்பட்டர். தொழில் நுட்பக்கல்வியில் சிறந்து விளங்கியதுடன் இலத்திரனியல் உபகரணப் பொருட்கள் திருத்துவதிலும் திறமையானவராக இருந்தார். சைவப்பற்று, தமிழ்ப் பற்றுடன் வாழ்ந்து அனைவருக்கும் உதவிபுரியும் ஒருவராக காணப்பட்ட மணிவண்ணன், பொதுநலத்தோடு சார்ந்த புனிதமான விடுதலை இயக்கத்தோடு இணைந்து கொண்டது தவிர்க்கமுடியாதது.

**தமிழீழம் என்ற சொல்லுக்கு விடைகண்டு**
**தமிழரின் வரலாற்றை புரட்டியவர்கள்,**
**அரசியலாக இருந்த தமிழீழத்தை,**
**எம் கண்முன்னே காட்டி மறைந்தவர்கள்,**
**காலத்தால் அழியாதவர்கள்,**
**தமிழீழத்தின் கலங்கரை விளக்குகள்.**

புளியந்தீவில் இருந்து முதல் புறப்பட்டாலும், ஒரு பண்பான, எல்லோராலும் விரும்பப்பட்ட ஒரு இளைஞரை போராளியாகப் பெற்றதிலிருந்து விடுதலைப் புலிகள் இயக்கமும், மட்டக்களப்பு மக்களும் பெருமை கொண்டனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இந்தியாவில் நடந்த மூன்றாவது பாசறையில் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட லெப்.கஜன் தாயகம் நோக்கிய பயணத்தில் முதல் கால்வைத்தது தமிழீழத்தின் யாழ்ப்பாண மண்ணில். காலத்தின் ஒரு பதிவாக, வரலாற்றில் சாதனை வீரராக, தலைவரின் அன்புத்தம்பியாக விளங்கிய தளபதி கேணல் கிட்டு அவர்களின் திட்டமிடலிலும், கட்டளையிலும் தகர்க்கப்பட்ட யாழ் சிங்கள காவல் நிலைய அழிப்பிலும் லெப். கஜன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

அக்காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் அழிக்கப்பட்ட சிங்கள காவல் நிலையங்களில் யாழ் காவல் நிலையம் ஆளணி கூடியதாகவும், தமிழின அழிப்பில் ஈடுபட்ட சிங்களக் காவலர்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. தளபதி கிட்டு தமிழீழத்தின் தாக்குதல் தளபதியாக 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் செயல்பட்டிருந்தார். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதல் மீட்கப்பட்ட தமிழர் நிலமாகவும் யாழ்ப்பாணம் இருந்ததற்கு தளபதி கிட்டு முக்கிய காரணமாகவிருந்தார். விடுதலைப் போரின் எழுச்சியிலும் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தகாலமாக யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பட்டிலிருந்ததை குறிப்பிட முடியும்.

தமிழீழத் தனியரசின் நிருவாகச் செயல்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட இடமாகவும் இது அமைந்திருந்தது. யாழ்ப்பாண சிங்கள காவல் நிலையத் தாக்குதல் நடந்த வேளையில் மக்களுக்கும் போராளிகளுக்கும் ஒரு அதிர்ச்சியைக் கொடுத்த விடயம் என்னவென்றால், இரண்டு இடங்களில் தளபதி கிட்டு அவர்கள் ஒரேநேரத்தில் நிற்பதான செய்தி, இச்செய்திக்குரிய விளக்கத்தை பின்பு எம்மால் அறியக்கூடியதாகவுமிருந்தது. லெப். கஜன் அவர்களும், தளபதி கிட்டு அவர்களும் தோற்றத்தில் ஒரே மாதிரி இருந்ததனால் அச் செய்தி எங்கும் பரவியிருந்தது.

இப்பொழுது லெப்.கஜன் அவர்களின் உருவமைப்புப் பற்றி அனைவரும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகயிருக்கும். இவ்வாறான ஓர் போராளி சிறந்த, திறமையானவராக இருந்ததை எண்ணுகின்றபோது விடுதலைப் பயணத்தில் நீண்ட காலம் பயணித்திருக்க கூடாதா என்று எண்ணத் தோன்றுகிறது.

தாய் மண்ணில், பிறந்த மண் நோக்கிய பயணத்தில் போராளிகள் நின்றபோது லெப்.கஜன் அவர்களும் இணைந்திருந்தார். கைக்குண்டுத்தாக்குதல், சிங்கள காவல் நிலைய தாக்குதல், கண்ணிவெடித் தாக்குதல், சிங்கள, இராணுவக் காப்பரண்கள் தாக்குதல், சிறிய முகாம் தாக்குதல், வழிமறிப்புத் தாக்குதல், இராணுவ முகாம் தாக்குதல், இராணுவத்தளத் தாக்குதல், கடலில் தாக்குதல், விமானக் குண்டுத் தாக்குதல் என விடுதலைப்போரில் தாக்குதல் விரிவாக்கத்தை ஏற்படுத்திய விடுதலைப் புலிகள் இயக்கம் இழந்த தாய் நாட்டை மீட்டெடுத்து தனியரசு நிறுவியதை வரலாற்றில் பார்த்திருக்கின்றோம்.

இவ்வாறு எமது தேசிய விடுதலை இயக்கம் வளர்வதற்கு அடித்தளமாகவிருந்தவர்கள் லெப்.கஜன் போன்றவர்கள் என்றால் மிகையாகாது. அடிமைப்பட்டு, அடங்கிப் போய்க்கிடந்த தமிழர்களை தட்டியெழுப்பியவர்கள், உறுதிதளராத வீரம் எம்மை விடுதலைபெற்றவர்களாக மாற்றியமைக்கும் என்பதில் அச்சமின்றி களத்தில் நின்றவர்கள். எம்மண் பெற்றெடுத்த மூத்த மாவீரர்கள். இவர்களுக்கு நாம் தலை வணங்குகின்றோம்.

வீரம், மானம் என்பவை ஒவ்வொரு தமிழருக்கும் தமது இரண்டு கண்களுக்கும் ஒப்பானவையாகும். இவ்வகையில் வாழ்ந்து, களமாடி வீழ்ந்தவர்கள் எப்போதும், எந்த இடத்தில் பிறந்தாலும், எந்த இடத்தில் வாழ்ந்தாலும், தமிழீழத் தாய் மண் என்ற அடிப்படையில் போராட்டத்தில் கலந்து நின்றவர்கள் அநேகமாக முழுத் தாய் நாட்டிலும் இவர்களின் வீரம் வெளிப்பட்டது.

லெப்.கஜன் தனது விடுதலைப் பயணத்தில் தமிழீழத் தலைநகர் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டத்தில் தடம்பதித்த வேளையில் அங்கு நடந்த பாரிய தாக்குதலில் பங்குகொண்டார். அக்காலத்தில் தமிழீழத்தில் எந்த இடத்தில் தாக்குதல் நடந்தாலும் எல்லா மாவட்டத்தையும் சேர்ந்தவர்களும் பங்கு கொள்ளுவார்கள். இப்படித்தான் குச்சவெளி என்னும் கடற்கரை ஊரில் சிங்கள அரசினால் அமைக்கப் பட்டிருந்த காவல்நிலையம்






மீதான தாக்குதலும் நடந்தது. நன்றாக வேவுபார்க்கப்பட்டு எடுத்த தகவலின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட திட்டமிடலில் லெப். கேணல் சந்தோசம் அவர்களின் தலைமையில் இழப்புக்களின்றி வெற்றிகரமாக முடிந்த இத் தாக்குதலில் சிறப்பான அம்சம் என்னவெனில் குச்சவெளி கடக்கரையில் சிங்கள கடற்படை முகாமும் இருந்தது. இத் தாக்குதலின்போது காவல் நிலையத் தாக்குதலுக்கு உதவியாகப் புறப்பட்ட கடற்படையினர் வரமுடியாதவாறு தடுத்து நிறுத்தப்பட்டனர்.

ஆர்.பி.ஜி உந்துகணைத் தாக்குதலினால் திணறிய கடற்படையினர் முகாமுக்கு திரும்பினர். ஏராளமான ஆயுதங்கள் அள்ளப்பட்டும் பல காவல் துறையினரும் அழிக்கப்பட்டனர். வெற்றிகரமாக சிங்கள காவல் நிலையங்கள் அழிக்கப்படுகின்ற போராட்ட வளர்ச்சியை இத்தாக்குதலின் மூலம் பெற்றிருந்தனர்.



மூத்த மாவீரர்களாக இனங்காணப்படுகின்ற பலர் இவ்வாறான தாக்குதலிலும் ஈடுபட்டு சாவிலும் சரித்திரம் படைத்தனர்.

இவர்கள்தான் தமிழீழத்தை காத்து நின்ற எமது காவல் தெய்வங்களாகும். வாழ்வு மேம்பாட்டிற்காக போராட்டத்தை பயன்படுத்தியவர்களுக்கு மத்தியில் மூத்த மாவீரர்களான இவர்கள் வாழ்வை அர்ப்பணித்து விடுதலைப் போராட்ட இயக்கத்தை விருட்சமாக வளர்த்தெடுத்தனர். இத்தாக்குதலில் லெப். கேணல் குமரப்பா, மேஜர் அப்துல்லா, தளபதி அருணா போன்ற முன்னணி வீரர்களும் ஈடுபட்டனர். சிங்கள கடல்படைமுகாம் அருகிலிருந்தும் அவர்கள் வெளிவர முடியாதவாறு தடுத்து நிறுத்தி தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய மூத்த மாவீரர்களின் வீரம் தேசியத் தலைவருக்கு நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூதூர்ப் பகுதியின் தளபதியாக மூத்த மாவீரர் மேஜர் கணேஷ் பணியிலிருந்தார். தேசியத் தலைவரினால் மிகவும் விரும்பப்பட்டவர்களில் கணேஷ் அவர்களும் ஒருவராவர். கந்தளாய் என்னும் ஊரைச்சேர்ந்தவர், பல குறிப்பிடத்தக்க வீரமான நிகழ்வுகளை, நாம் இன்று நினைவு கூறுமளவுக்கு அன்று செய்திருந்தார். இவருடைய வேண்டுகோளின்படி பிறந்தமண் நோக்கிய பயணத்திலிருந்த லெப். கஜன் மூதூரில் தங்கியிருந்த காலத்தில் மூதூர் தளபதி கணேஷ் அவர்களின் திட்டமிடலில் ஒரு கண்ணி வெடித்தாக்குதல் பட்டித்திடல் என்ற பழந்தமிழர் ஊரில் நடந்தது.

இத் தாக்குதலில் கண்ணிவெடி வெடிக்கச் செய்யும் ஆளியை அமத்தி துல்லியமாக, குறித்த நேரத்தில் தாக்குதல் வெற்றிகரமாக அமையவும், இத் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்ட படையினரிடமிருந்து போராட்ட வரலாற்றில் கனரக ஆயுதமான 303 L .M .G பெற்றுக் கொண்டதற்கு காரணமாகவிருந்த லெப். கஜன் பாராட்டுக்குரியவரானார்.

இக்காலத்தில் மட்டக்களப்பில் உணர்வுமிக்க இளைஞர்கள் குழுவாக இணைந்து அரசுக்கெதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்தனர். இதில் வர்க்க, மத வேறுபாடுகளின்றி இளைஞர்கள் களத்தில் குதித்தனர். தமிழ் மக்களின் தமிழ் தேசிய இனத்தின் பாதுகாப்பும், விடுதலையும் தங்களின் இலட்சியம் என்றடிப்படையில் வாழ்க்கையை அர்ப்பணித்தனர். இந்த வரிசையில் சில இளைஞர்கள் இணைத்து உருவாக்கியதுதான் “நாகபடை” ஆகும். இப்படையில் செயல்பட்ட முஸ்லிம் மதத்தைச் சேர்ந்த, ஓட்டமாவடியை பிறப்பிடமாகக் கொண்ட ஜுனைதீன் என்னும் பெயருடன் அழைக்கப்பட்டு, பின்பு தேசிய விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து.

30.11.1985 அன்று வீரச்சாவைத் தழுவிய லெப். ஜோன்சன் அவர்களை எண்ணிப் பார்க்கின்றோம். லெப் ஜோன்சன் விடுதலைப் புலிகளின் இந்தியாவின் மூன்றாவது பாசறையில் பயிற்சி பெற்று தாய்நாடு திரும்பி மட்டக்களப்பில் செயல்பாட்டில் இருந்த வேளையில் திம்பு பேச்சுவார்த்தை யுத்த நிறுத்தத்தின் போது ஆயித்தியமலை என்ற ஊரில் வைத்து ஏறாவூர் சிங்கள காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். இவர் யார் என்று தெரிய வந்தபோது சிறீலங்காவின் பெரிய இராணுவ முகாமான பனாகொடையில் தடுத்து வைத்தனர். அங்கிருந்து தப்பியோட முயற்சி எடுத்தபோது இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவு அடைந்தார்.

இவ்வாறு மட்டக்களப்பில் விடுதலைக் களத்தில் நிமிர்ந்து நின்ற இளைஞர்கள் பலர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டனர் என்பதைப் பதிவு செய்யகின்றோம். விடுதலைப் புலிகள் ஆரம்ப காலத்தில் மட்டக்களப்பு வடமேற்கு பகுதியில் அமைந்துள்ள காடுகளில் தங்கியிருந்தனர். ஏறாவூர் சிங்கள காவல் நிலையத் தாக்குதல் முடிவடைந்த பின்னர் சிங்கள அதிரடிப் படையினரின் நடவடிக்கைகள் அதிகப்படுத்தப்பட்டன. விடுதலைப் புலிப் போராளிகளும் தமது தங்குமிடங்களை மாவட்டத்தின் பல இடங்களுக்கு விரிவுபடுத்தினர்.

மட்டக்களப்பு வாவிக்கு மேற்கு புறமாக அமைந்துள்ள வயல் சார்ந்த சிற்றூர்கள், மாவட்டத்தின் பெருநிலப் பரப்பாகும். இப் பெருநிலப்பரப்பில் தமிழரின் பூர்வீகத்துடன் தொடர்புபட்ட தான் தோன்றிஸ்வரர் ஆலயமும் கொக்கட்டிச்சோலை என்னுமிடத்தில் அமைந்துள்ளது. எமது வரலாற்று பாரம்பரிய தாயகத்தை இவை எமக்கு உணர்த்துகின்றது. இன்று இருக்கின்றது போல ஒரு நாடாக சிங்களவர்களின் ஆட்சியில் எமது தாய்நாடு உட்பட்டு இருந்ததாக எந்த வரலாறும் கூறவில்லை. மாறாக அன்னிய ஆக்கிரமிப்புகளுக்கு முன்பு எமது தாய்நாட்டை நாமே ஆட்சிசெய்து வாழ்ந்தோம் என்பதுதான் உண்மையான ஒன்றாகும்.

இப் பகுதியில் வவுணதீவு வட்டத்தில் குறிஞ்சாமுனை என்ற ஊரை அண்டிய வயல் சார்ந்த காட்டுப்பகுதியில் லெப்.கஜன் போராளிகளுடன் தங்கியிருந்தார். இக்காலத்தில் அவ்வூர் மக்களால் மிகவும் விரும்பப்பட்ட போராளியாக வாழ்ந்தது மாத்திரமல்லாமல் தன்னுடன் இணைந்திருந்த போராளிகள் அனைவரும் அம்மக்களால் விரும்பப்படுமளவுக்கு சிறந்த பொறுப்பாளராக காணப்பட்டார். இந்த வட்டத்திலுள்ள அனைத்து ஊர்களும் சிறியதாக இருந்தபோதும் போராளிகளை நேசிக்குமளவுக்கு லெப். கஜன் அவர்களின் வருகை அமைந்திருந்தது.



அக் காலத்தில் வாழ்ந்த மக்கள் லெப்.கஜன் அவர்களின் நினைவுகளை இன்னும் பகிர்ந்து கொள்ளுகின்றனர். மக்களின் விடுதலைக்காக களத்தில் நின்ற மாவீரர்கள் மக்களால் மதிக்கப்பட்டதற்கு சுயநலமற்ற போராளி வாழ்க்கையே சான்றாக அமைந்தது.

லெப்.கஜன் மட்டக்களப்பு மண்ணில் கால்பதித்திருந்த வேளையில் இவரிடமிருந்த வீரம் இருமடங்கானது வாகரையில் இருந்து ரோந்து செல்லும் சிங்கள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதலுக்கு திட்டமிட்டனர். காயன்கேணி என்னுமிடத்தில் வைத்து 17.08. 1985 அன்று குமரப்பா தலைமையில் நடந்த இத் தாக்குதலில் லெப். கஜன் கண்ணி வெடி வெடிக்கச் செய்து தாக்குதலை ஆரம்பித்து வைத்தார்.

இத் தாக்குதலில் முன்னணி வீரமறவர்கள் சிலர் வெளிப்பட்டனர். மட்டக்களப்பு தாண்டவன் வெளியைச் சேர்ந்த லெப். கலா (ச.ஜெயராஜ்), கல்லடியைச் சேர்ந்த லெப்.ரவிக்குமார் (நாகேஷ் யோகராஜா) இருவரும் சண்டைக்கான வீரர் என தளபதியால் அடையாளப்படுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பு ஏறாவூர் ஊரில் சிங்கள காவல்நிலையம் மீதான தாக்குதல் குழுவில் ஈடுபட்டு 02 . 09 . 1985 அன்று நடந்த தாக்குதலில் லெப். கஜன் முன்னணி வீரர்களில் ஒருவராக தளபதியால் இனங்காணப்பட்டர். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் குறுகியகாலம் தாய்மண்ணில் போராளியாக நின்ற லெப். கஜன் மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதலுக்கு செல்லும் வழியில் கிரான் வடமுனை சாலையில் புலிபாய்ந்தகல் என்னும் ஊருக்கருகாமையில் கோராவெளி என்னும் ஊரில் கப்டன். ஜிம்கலி அவர்களின் பொறுப்பில் இருந்த விடுதலைப் புலிகளின் மறைவிட முகாமில் தங்கியிருந்த வேளையில் 27. 06.1986 அன்று அதிகாலையில் சிங்கள இராணுவத்தினரின் சுற்றி வளைப்புத் தாக்குதலில் வீரச்சாவடைந்தார்.

**விடுதலைக்காக வாழ்ந்தவர்கள்... வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்!**

இவருடன் கப்டன் ஜிம்கெலி (சின்னப்பிள்ளை நடராசா), உட்பட வீரவேங்கை சிந்து (சித்திரவேல் ஜெயாஜ்) - கிரான், வீரவேங்கை. சரவணன் (பிள்ளையான் சௌவுந்தரராஜன்) - கிரான், வீரவேங்கை கங்கா (நாகலிங்கம் கங்காதரன்) - கிரான், வீரவேங்கை குமார் (வில்லியம் அருள்நாதன்) - ஏறாவூர், வீர வேங்கை லோகேஷ் (நவரத்தினம் லோகேந்திரராஜா) -முறக்கொட்டன்சேனை, வீரவேங்கை ரவி (பொன்னையா தரும ராஜா) -கறுவாக்கேணி வாழைச்சேனை, வீரவேங்கை சைமன் (மயில்வாகானம் மாதவன்) - கிரான், வீரவேங்கை ரொஷான் (ஐயாத்துரை அமிர்தநாதன்) - மயிலியதனை ஆகிய பத்து போராளிகள் .வீரச்சாவடைந்தனர். மட்டக்களப்பு நகர் புளியந்தீவு மண் பெற்றெடுத்த வீரப்புதல்வன் லெப்.கஜன் (மணிவண்ணன்) அவர்களினால் அந்த மண் பெருமை கொள்கின்றது. அந்த மண்ணில் வாழ்கின்ற தமிழர்கள் இவரின் தன்னலமற்ற தாய்மண் பற்றை நினைத்து பெருமிதம் கொள்கின்றனர். காலத்தால் அழியாத காவிய நாயகர்களின் வரிசையில் லெப் கஜன் இணைந்து கொண்டார்.

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழீழச் செய்திகள்



## யாழ். செம்மணி அகழ்வு மீண்டும் தொடங்கியது: இரு சிறுவரின் எலும்புக்கூடுகள் இனம் காணப்பட்டது

15.07.2026



யாழ். செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு இன்று மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் இரு சிறுவரின் எலும்புக் கூடுகள் இனம் காணப்பட்டுள்ளன.

மூன்றாம் கட்டத்தின் 33 ஆவது நாளான இன்றைய அகழ்வாய்விலேயே புதிதாக 2 எலும்புக்கூடுகள் அடையாளப் படுத்தப்பன. அந்த இரண்டு எலும்புக்கூடுகளும் குழந்தைகளினுடையதென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று அடையாளப்படுத்தப்பட்ட இரண்டு எலும்புக்கூடுகளுடன் செம்மணி புதைகுழியில் மொத்தமாக அடையாளப்படுத்தப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 414 ஆக அதிகரித்துள்ளது.

முன்னதாக, செம்மணி மனிதப் புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் மூன்றாம் பகுதி இன்று புதன்கிழமை காலை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டிருந்தது.

யாழ். நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படும் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக மொத்தம் 56 நாள்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

கடந்த 32 நாள்கள் அகழ்வுப் பணிகள் நிறைவடைந்த நிலையில், கடந்த யூன் 23ஆம் திகதியுடன் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

முதலாம் கட்ட அகழ்வுப் பணிகளானது கடந்த ஆண்டு மே 15ஆம் திகதி ஆரம்பமாகி, 9 நாள்கள் நடைபெற்ற அகழ்வுகளில் 19 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளானது கடந்த ஆண்டு யூன் 26 முதல் செப்டம்பர் 3ஆம் திகதி வரை 45 நாள்கள் நடைபெற்ற அகழ்வுகளில், முதலாம் கட்டத்தில் கண்டெடுக்கப்பட்டவை உட்பட மொத்தம் 240 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாநகர சபையின் கழிவு மீள் சுழற்சி மையத்தால் சுகாதாரச் சீர்கேட்டுக்கு மத்தியில் இன்னல்களுடன் முகம் கொடுக்கும் அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்

15.07.2026

யாழ்ப்பாணம், காக்கைதீவு பகுதியில் உள்ள கழிவு மீள் சுழற்சி மையத்தை அவ்விடத்தில் இருந்து அகற்றுமாறு கோரி அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்பாக இன்றைய நாள் புதன்கிழமை காலை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாநகர சபையின் கழிவு மீள் சுழற்சி மையம் காக்கைதீவு பகுதியில் அமைந்துள்ளது. தற்போது அங்கு மீள் சுழற்சிகள் இடம்பெறாமல் குப்பைகள் கழிவுகளை கொட்டுவதனால், அயலில் வசிக்கும் தாம் பல்வேறு இடர்களை சந்திப்பதாக குறித்த மீள் சுழற்சி மையத்திற்கு அருகில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மாநகர சபையினால், காக்கைதீவு பகுதியில் மீள் கழிவு மீள் சுழற்சி மையம் அமைக்கப்பட்டது. எமது குடிமனை பகுதியில் அவை அமைக்கப்படும் போது, இது குப்பை கொட்டும் இடமில்லை. கழிவுகளை தரம் பிரித்து, அவற்றை மீள் சுழற்சி செய்யும் இடம் என கூறினார்கள்.

ஆரம்பத்தில் அவ்வாறே இயங்கியது. அங்கு கழிவுகளில் இருந்து உரங்கள் செய்யப்பட்டன. கழிவு மீள் சுழற்சியே நடைபெற்றது.

சிறிது காலத்தில் அவை கைவிடப்பட்டு, குப்பை கொட்டும் இடமாக மாறியது. அங்கு கழிவுகளை தரம் பிரிக்காது கொட்டி குப்பை மேடுகளாக அப்பகுதிகளை மாற்றியுள்ளனர்.

மலசல கூட கழிவுகள், தனியார் உணவகங்கள், தங்குமிட கழிவு நீர் என்பவற்றை அங்கு முன்னர் வடிகட்டும் செயற்பாடுகள் நடைபெற்றது. தற்போது அவை உரிய முறையில் வடிகட்டாது நீரினை அங்குள்ள வாய்க்காலுக்குள் விடுவதனால், அருகில் உள்ள நாம் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்



கிறோம்.

எமது குடிமனைக்குள் உள்ள குடிநீர் கிணற்று நீர்கள் மாசடைந்து, துர்நாற்றம் வீசுகிறது. கொட்டப்படும் கழிவுகளால் இலையான்கள் பெருகி, வீடுகளில் இலையான் தொல்லைகள் காணப்படுகிறது.

இலையான் தொல்லைகளில் உணவுகளை சற்று நேரம் கூட திறந்து வைக்க முடியாத நிலைமை காணப்படுகிறது. உணவை பொறுமையாக உண்ண முடியாத அளவுக்கு எமது உணவு தட்டுக்களில் இலையான் தொல்லைகள் காணப் படுகிறது.

நாடளாவிய ரீதியில் தற்போது டெங்கு பரவல் அதிகமாக காணப் படுகிறது. டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகிறது. எங்கள் வீடுகளில் சிறு சிரட்டையில் தண்ணீர் நின்றாலே , டெங்கு பரவும் சூழலை பேணுகிறார்கள் என நடவடிக்கை எடுக்கிறார்கள்.

ஆனால் குறித்த கழிவு மீள் சுழற்சி மையத்தில் கழிவு நீர்கள் அங்குள்ள வாய்க்கால்களில் தேங்கி நுளம்பு பெருக்கம் அதிகரித்துள்ளது. அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை.

கழிவுகளை தரம் பிரிக்காது கொட்டி குப்பை மேடாக்கி உள்ளனர் என நாம் குற்றம் சாட்டி, நடவடிக்கை எடுக்க கோரி வந்த நிலையில் கடந்த வாரம் அப்பகுதி தீ பற்றி எரிந்தது, இதனால் ஏற்பட்ட புகை மண்டலம் காரணமாக ஒரு இரவு நாம் எமது வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்து உறவினர்கள் நண்பர்கள்



வீடுகளில் தங்கி இருந்தோம்.

அந்த தீ கூட திட்டமிட்டு எரிக்கப்பட்டதாகவே நாம் சந்தேகிக்கின்றோம். அது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அறிந்தோம். எனவே அது தொடர்பில் நாம் மேலும் கருத்து கூற விரும்பவில்லை.

குறித்த கழிவு மீள் சுழற்சி மையத்திற்கு அருகில் உள்ள குடிமனைகளில் வாழும் குடும்பங்களில் 25க்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளன. அது மட்டுமின்றி சுவாச நோய்கள், ஆஸ்துமா உள்ளிட்ட தொற்றா நோய்களுடன் நோயாளிகள் உள்ளனர். இந்த நோய் தொற்றுக்களுக்கு கூட இந்த கழிவு மீள் சுழற்சி மையம் காரணம் என கருதுகிறோம்.

எனவே இந்த கழிவு மீள் சுழற்சி மையத்தில் எமது குடிமனை பகுதிகளில் இருந்து அகற்ற வேண்டும் என கோருகிறோம் என தெரிவித்தனர்.



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மேலும் ஆறு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம்!

16.07.2026

யாழ். செம்மணி மனித புதைகுழியில் புதிதாக ஆறு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டதுடன் ஏழு மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.









செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 34 ஆம் நாள் அகழ்வு பணிகள் வியாழக்கிழமை (16) நடைபெற்ற நிலையில் சட்டத்தரணி வி.எஸ்.நிரைஞ்சன் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் நீதிவான் செ.லெனின்குமார் முன்னிலையில் அகழ்வு பணிகள் நடைபெற்றது. தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர், தடயவியல் பொலிசார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், நல்லூர் பிரதேச சபை ஊழியர்கள் அகழ்வு பணிகளில் பங்கேற்றனர்.

இதுவரை மொத்தமாக 420 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் 416 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளை பாசி மணி ஒன்று 130வது பிற சான்றுப் பொருளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

# மட்டக்களப்பு மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!

16.07.2026

மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களின் வாழ்வாதார உரிமைகளைப் பாதுகாக்கவும், அண்மைக்காலமாக அதிகரித்து வரும் சட்டவிரோத மற்றும் முறையற்ற மீன்பிடி நடவடிக்கைகளுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ளும் முகமாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மீனவர் சமூக அமைப்புகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து இந்த முறைப்பாட்டினை வியாழக்கிழமை (16) கையளித்துள்ளனர்.

மீனவர்க சங்க பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் இந்த முறைப்பாட்டினை பதிவுசெய்துள்ளதுனர்.

தாம் பல்வேறு திணைக்களங்களிடம் இது தொடர்பில் முறைப்பாடுகளை பதிவுசெய்த போதிலும் இதுவரையில் எந்த நடவடிக்கைளும் முன்னெடுக்கப்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

இதன்காரணமாக தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதுடன் மீனவர்களை பாதுகாக்குமாறு கோரியே இந்த முறைப்பாட்டினை செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சமூக செயல்பாட்டாளர் ஜோபின், கடல் வளங்களையும் மீனவர்களின் வாழ்வாதார உரிமைகளையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

“எமது முன்னோர்கள் இந்த இயற்கை வளங்களை முறையான வகையில் பயன்படுத்தி, போஷாக்குள்ள உணவோடு ஆரொக்கியமாக வாழ்ந்தார்கள். எமது எதிர்கால சந்ததியினரும், எமது பிள்ளைகளும் இதே போன்றதொரு போஷாக்கான வாழ்வைப் பெற வேண்டுமாயின், எமது கடல் வளங்களையும் நீர்நிலைகளையும் (வாவி வளங்களையும்) பாதுகாக்க வேண்டியது எமது தார்மீக பொறுப்பாகும்” எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவி மற்றும் கடல் பரப்புகளில் அண்மைக்காலமாக சட்டவிரோத மீன்பிடி முறைகளும், முறையற்ற செயல்பாடுகளும் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

கடல் மற்றும் வாவி வளங்கள் வேகமாக அழிவடைந்து வருகின்றன. மீனவர்களின் அன்றாட வாழ்வாதாரம் பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. எதிர்காலத்தில் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான உணவு முறை இல்லாமல் போகும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மீனவக் குழுக்கள், சமூக மட்ட அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகளுடன் பல கட்டக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், இதுவரை எவ்விதக் கண்முன்னான தீர்வுகளும் எட்டப்படவில்லை என செயல்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



இதன் காரணமாகவே, தங்களது வாழ்வுரிமையை உறுதிப்படுத்தக் கோரி, இறுதிக் கட்ட நம்பிக்கையாக மனித உரிமை ஆணைக்குழுவை நாடியுள்ளதாகக் குறிப்பிட்டனர். மீனவர்களின் கையெழுத்துக்களுடன் கூடிய விரிவான மகஜர் மற்றும் முறையீட்டு ஆவணங்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரத்தில் மனித உரிமை ஆணைக்குழு உரிய தலையீட்டை மேற்கொண்டு, சட்டவிரோத மீன்பிடியைக் கட்டுப்படுத்தவும் தங்களது பாரம்பரிய வாழ்வாதார உரிமைகளை நிலைநாட்டவும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்ற பலத்த நம்பிக்கையை மட்டக்களப்பு மாவட்ட மீனவ சமூகம் கொண்டிருக்கின்றது.

# யாழ். பலாலியில் தொடரும் நிலமீட்புப் போராட்டம்

19.07.2026

“எங்களுக்கென்றொரு நிலம் இருந்தது, எங்களுக்கென்றொரு வீடு இருந்தது... அத்தனையும் எங்களிடமிருந்து பறிக்கப்பட்டது, நாங்கள் நிலமற்றவர்களாக அலைகின்றோம்” என்ற பேராளாத வலியைச் சுமந்து, 36 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் எமது மக்கள், தங்களின் சொந்த நில உரிமைக்காகத் தொடர்ந்து வீதியில் இறங்கிப் போராடி வருகிறார்கள்.

இன்று 19.07.2026 ஞாயிற்றுக்கிழமை நிலமீட்புப் போராட்டம் தொடர்ந்தது. இதற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தனது ஆதரவை வெளிப்படுத்தி உரை நிகழ்த்தினார்.

எமது நிலம் எப்போது நமக்குக் கிடைக்கும்? சொந்த மண்ணில் வாழும் உரிமை கிடைக்கும் வரை இந்த மக்கள் குரல் ஓயாது!



**எந்தவொரு விடுதலைப் போராட்டத்திலும், எதிரியானவன் தனது இயலாத் தன்மையால், வெகுசனம் மீது மூர்க்கமாகப் பழிதீர்த்து கொள்ளத் தயங்குவதில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

**www.sangathamil.com**

# இராணுவத்தினரால் பறிக்கப்பட்ட மக்களின் காணி நிலங்களை மீள ஒப்படைக்க வேண்டும்!

## சம உரிமை இயக்கம் மற்றும் சமூக நீதிக்கான மக்கள் பேரவையின் உறுப்பினர் இந்திரானந்தடி சில்வா

18.07.2026

போரின் போது இராணுவத்தினரால் பறிக்கப்பட்ட மக்களின் காணி நிலங்களை உடனடியாக மீண்டும் ஒப்படைக்குமாறு வலியுறுத்தி, சம உரிமை இயக்கம் மற்றும் சமூக நீதிக்கான மக்கள் பேரவை ஆகியன கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம் கேப்பாபிலவு, பலாலி, காஞ்சி ஆகிய பகுதி மக்களுடன் யாழ்ப்பாணம் நகரில் உள்ள செந்தே செல்வா மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (17) விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தன.

இந்த கலந்துரையாடலின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிக்கும் போதே சம உரிமை இயக்கத்தின் அமைப்பாளரும், முன்னிலை சோசலிசக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான இந்திரானந்த டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாம் சம உரிமை இயக்கம் என்ற ரீதியில் கேப்பாபிலவு, பலாலி, காஞ்சி ஆகிய கிராமப் பகுதி மக்களின் காணி நிலங்கள் வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்டு தற்போது 36 வருடங்கள் கடந்துள்ளன என்பதை நாம் அறிவோம்.

போர் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இந்த நாட்டின் ஆட்சியாளர்களுக்கு அந்த நிலங்களில் மீளக் குடியேறக் காத்திருக்கும் மக்களுக்கு அவற்றை மீண்டும் வழங்குவதற்கு இன்னும் முடியாமல் போயுள்ளது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு சூழ்நிலையாகும்.

ஏனெனில் இன்றைய நாளிலும் அந்த மக்கள் தங்களின் காணி நிலங்களைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். பல்வேறு அரசியல்வாதிகள் இங்கு வந்து இந்த மக்களுக்கு அவர்களின் நிலங்களை மீட்டுத் தருவதாகப் வாக்குறுதிகளை வழங்கிச் சென்றனர். ஆனால் அந்த வாக்குறுதிகள் அனைத்தும் தேர்தல் வரை மட்டுமே மட்டுப்படுத்தப் பட்டிருந்தன.

இந்த அரசாங்கம் அவ்வாறானது அல்ல என நினைத்துத்தான் யாழ்ப்பாணத்து தமிழ் மக்கள் இம்முறை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு தங்களின் வாக்குகளைப் பயன்படுத்தினர். ஆனால் தற்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் நெருங்கிவிட்டன. எனினும், வடக்கில் வலுக்கட்டாயமாகப் பிடிபட்டுள்ள காணி நிலங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை அகற்றுவதற்கு இன்னும் எந்தவித ஆயத்தங்களும் இல்லை.

யாழ்ப்பாணத்து மக்கள் இன்னமும் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைய நாளிலும் சில தேவாலயங்களும் கோயில்களும் இராணுவ முகாம்களுக்கு உள்ளேயே காணப்படுகின்றன. அவற்றிற்குத் தங்களின் மத வழிபாடுகளை மேற்கொள்ளச் செல்வதானால் அடையாள அட்டையை கட்டாயமாகக் காண்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சில இராணுவ முகாம்களுக்குள் ஏக்கர் கணக்கில் தென்னந் தோட்டங்கள் பராமரிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்து ஏழை விவசாயி கடைகளுக்குத் தேங்காயொன்றை 100 ரூபாவுக்கு விற்பனை செய்யும்போது, இராணுவத்தினர் தேங்காய்களை 50 ரூபாவுக்கு விற்பனை செய்கிறார்கள். விவசாயியின் மகன் என்று கூறிக்கொண்ட அநுர திசாநாயக்கவிடம் நாம் கேட்கின்றோம், அப்படியென்றால் இந்த மக்கள் எவ்வாறு வாழ்வது?

தெற்கில் இவ்வாறு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களைக் கைப்பற்றி இராணுவ முகாம்கள் அமைக்கப்படவில்லை என்பதை நாம் அறிவோம். பொதுவாக இராணுவ முகாம்கள் மனித குடியிருப்புகளுக்கு மத்தியில் அமைக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம், அதனால் மக்களுக்கு, குறிப்பாகச் சிறுவர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்பதனாலாகும். ஆனால் தசாப்த காலமாக யாழ்ப்பாணத்து மக்கள் இராணுவ முகாம்களுக்குள்ளேயே வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.



இவ்வளவு காலமும் தெற்கில் உள்ள சிங்கள சமூகத்துகு இந்தப் பிரச்சினை புரியவில்லை. தங்களின் நிலங்களைக் கோரி நீண்ட வருடங்களாகத் தமிழ் மக்கள் முன்னெடுத்து வரும் இந்த நியாயமான போராட்டத்துக்கு இப்பொழுதாவது தெற்கு சமூகம் தனது ஆதரவை வழங்க வேண்டும். எனவே சம உரிமை இயக்கம் என்ற ரீதியில் இந்தச் போராட்டங்களுக்கு எங்களது முழுமையான ஆதரவை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகளை மீண்டும் வென்றெடுக்கும் போராட்டத்தை மையப்படுத்தி ஒன்றிணையுமாறு இந்த நாட்டில் போராடும் அனைத்துச் சக்திகளுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். அதேபோன்று வட பகுதி மக்களிடமிருந்தும் பறிக்கப்பட்ட காணி நிலங்களை உடனடியாக அந்த மக்களுக்கே வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் அரசாங்கத் திடமும் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் சிறுவன் மற்றும் பெரியவரின் எலும்புக்கூடுகள் மீட்பு!

18.07.2026




யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 36ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய நாள் சனிக்கிழமை நடைபெற்றது.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 36ஆவது இன்றைய நாளான சனிக்கிழமை புதிதாக ஒரு பெரியவரின் எலும்புக்கூட்டுடன் சிறியவரின் எலும்புககூடு உள்ளடங்கலாக 06 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை ஏற்கனவே அடையாளம் காணப்பட்டதில் 05 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நிறத்திலான பாசிமணி, இரும்புத்துண்டு, வளையல் என்பவை பிற சான்று பொருட்களாக மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் மூன்று மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒரு மண்டையோடு வித்தியாசமான முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதனை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் செம்மணி புதைகுழியில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் என இதுவரையில் 90 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 437 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 428 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன

# இந்திய மீனவரின் தொடர்ச்சியான அத்துமீறலுக்கு எதிராகப் புங்குடுதீவில் ஆர்ப்பாட்டப் பேரணி

20.07.2026





இந்தியாவின் தமிழக மீனவரின் தொடர்ச்சியான அத்து மீறலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அத்துமீறலைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஞாயிற்றுக்கிழமை (19.07.2026) யாழ்.புங்குடுதீவில் மீனவர்களால் ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தப்பட்டுள்ளது.

புங்குடுதீவு சென்.சேவியர் கடற்தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் புங்குடுதீவு ஆலடிச் சந்தியில் முற்பகல்-11 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகி பின்னர் பேரணியாக புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகில் மணற்காடு கடற்கரையை அடைந்து அங்கு கடலில் இறங்கியும் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் உட்கார்ந்த நிலையில் மனித எலும்புக்கூட்டு எச்சம்!

19.07.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் கால்கள் மடித்து உட்கார்ந்த நிலையில் ஒரு எலும்புக் கூடு அடையாளம் காணப்பட்டு, அதனை சுத்தப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 37ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்று (19) ஞாயிறுக்கிழமை நடைபெற்றது.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 37ஆவது நாளான ஞாயிற்றுக்கிழமை 09 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை, ஏற்கனவே அடையாளம் காணப்பட்டதில் சிசுக்களின் எலும்புக்கூடு உட்பட 06 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.





அதேவேளை நேற்றைய நாள் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணியில் ஒரு மண்டையோடு வித்தியாசமான முறையில் அடையாளம் காணப்பட்ட நிலையில் அதனை சுத்தம் செய்யும் பணிகள் இன்றைய நாள் முன்னெடுக்கப்பட்ட போது, குறித்த எலும்புக்கூடு, கால்கள் மடித்து உட்கார்ந்த நிலையில் காணப்படுகிறது.

இன்றைய நாளும் குறித்த எலும்புக்கூட்டினை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்படும் நிலையில் அது நாளை திங்கட் கிழமை முற்றாக அகழ்ந்து எடுக்கப்படவுள்ளது.

செம்மணியில் புதைகுழிக்குள் இருந்து கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 04ஆம் திகதியும் கால்கள் மடித்து உட்கார்ந்த நிலையில் ஒரு எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்ட நிலையில், புதைகுழிக்குள் இருந்து கால்கள் மடித்து உட்கார்ந்த நிலையில் மீட்கப்படும் இரண்டாவது எலும்புக் கூடு இதுவாகும்.

அதேவேளை, சனிக்கிழமை ஒரு பெரியவரின் எலும்புக் கூட்டுடன், சிறியவரின் எலும்புக் கூடு அடையாளம் காணப்பட்ட நிலையில், அத்தனையும் சுத்தம் செய்யும் பணிகள் இன்றைய நாளை முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவையும் நாளை அகழ்ந்து எடுக்கப்படவுள்ளது.

இதன் அடிப்படையில் செம்மணி புதைகுழியில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் என இதுவரையில் 91 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 446 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 434எலும்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். செம்மணியில் சிறுவரின் எலும்புக்கூடு உள்ளிட்ட 08 எலும்புக்கூடுகள் மீட்பு!

20.07.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 38ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய நாள் திங்கட் கிழமை நடைபெற்றது.



செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 38ஆவது நாளான இன்றைய நாள் திங்கட்கிழமை புதிதாக இரு சிறுவருடைய எலும்புக்கூடுகள் உட்பட 08 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.






அதேவேளை ஏற்கனவே அடையாளம் காணப்பட்டதில் 06 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை உட்கார்ந்த நிலையில் காணப்பட்ட எலும்புக்கூட்டினை சுத்தம் செய்யும் பணிகள் இன்றைய நாளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதவேளை பெரிய எலும்புக்கூட்டிற்கு அருகில் சிறிய எலும்புக் கூடு அடையாளம் காணப்பட்ட நிலையில், அதன் கீழிருந்து மேலும் ஒரு சிசுவின் எலும்புக்கூடும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் செம்மணி புதைகுழியில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் என இதுவரையில் 92 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் , 454 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 440 எலும்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

www.sangathamil.com

www.thuyarpakirvu.com

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மண்டையோடு அற்ற நிலையிலும் மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள்!

21.07.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்குள் இருந்து மண்டையோடு இல்லாத எலும்புக்கூடுகள் இன்றைய நாள் செவ்வாய்க் கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளது.






செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 39ஆம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், 39ஆவது நாளான இன்று செவ்வாய்க் கிழமை, அருகருகே இரு சிறுவர்களின் எலும்புக்கூடு உட்பட 13 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. சில எலும்புக் குவியலாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

அத்துடன் சில எலும்புக்கூடுகளுக்கு மண்டையோடுகள் இல்லாத நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதேவேளை குவியலாக காணப்பட்ட எலும்புக் குவியலுக்குள் மண்டையோடுகளும் காணப்படுவதனால், ஆய்வுகளின் பின்னரே அவை தொடர்பில் மேலதிகமான தகவல் கூற முடியும் என சட்டத்தரணி ஞா.ரனித்தா தெரிவித்தார்.

அதேவேளை ஏற்கனவே அடையாளம் காணப்பட்டதில் 03 சிறுவரின் எலும்புக்கூடுகள் உள்ளிட்ட 04 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.







அதன் அடிப்படையில் செம்மணி புதைகுழியில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் என இதுவரையில் 93 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், 467 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 444 எலும்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.





















# தமிழகக் கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களால் பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான வலைகள் நாசம்

## நெடுந்தீவு பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க உப தலைவர் செபமாலை அந்தோணி சிவராசா

21.07.2026

தமிழகக் கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களால் கடற்தொழிலாளர்களின் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுத்து நாசமாக்கப்பட்டுள்ளதாக , நெடுந்தீவு பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க உப தலைவர் செபமாலை அந்தோணி சிவராசா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழக கடற்தொழிலாளர்களின் இழுவைமடி படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு, மண்டைதீவு, மற்றும் புங்குடுதீவு கடற்தொழிலாளர்களின் வலைகளை அறுத்து நாசமாகியுள்ளனர்.

இதனால் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டுள்ளமையால், எமது தொழிலாளர்கள் பல இலட்சம் நஷ்டமடைந்துள்ளனர். அவர்கள் மீண்டும் அந்த வலைகளை வேண்டி தொழில் செய்வதற்கு பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.

வலைகளை இழந்த தொழிலாளிகளுக்கு நஷ்டஈடுகளை வழங்க கூட எவரும் இல்லை. யாரை குறை சொல்வது யாரிடம் சென்று முறையிடுவது என தெரியாத நிலையில், அநாதரவாக தொழிலாளிகள் நிற்கின்றனர்.

எங்கள் நாட்டு அரசாங்கத்திடம் கடற்தொழில் அமைச்சர் ஊடாக தமிழகக் கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த வேண்டும் என கோரி வருகிறோம். கடற்படையினர் முழுமையான கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு, தமிழகக் கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த வேண்டும்.

அதேநேரம், தமிழக முதலமைச்சர் விஜயிடமும் தயவான வேண்டுகோளை முன் வைக்கிறோம். காரைக்கால், புதக்கோட்டை, இராமேசுவரம் பகுதிகளை சேர்ந்த கடற்தொழிலாளர்களை எல்லை தாண்டி செல்ல வேண்டாம் என தடுத்து நிறுத்துங்கள். அவர்களால் எங்கள் வாழ்வாதாரங்கள் அழிக்கப்படுகிறது.



தொப்புள் கொடி உறவுகள் என கூறிக்கொள்ளும் இரு தரப்பினருக்கும் இடையில் எதிர்காலத்தில் தேவையற்ற பிரச்சனைகள், முரண்பாடுகள் வராது தடுத்து நிறுத்துங்கள்.

இரு நாட்டு அரசாங்கமும் மீனவர் பிரச்சனையை பேசி தீர்வினை பெற வேண்டும். தமிழக அரசும், இது தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும் என தெரிவித்தார்.

# சர்வதேச விசாரணை வேண்டும்: யாழ். செம்மணியில் மக்கள் போராட்டம்

22.07.2026

செம்மணி மனிதப்புதைகுழி விடயத்தில் சர்வதேச விசாரணை வேண்டும் என வலியுறுத்தி இன்று (22) புதன்கிழமை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் போராட்டம் நடைபெற்றது.

செம்மணி மனிதப் புதைகுழியினை பார்வையிடுவதற்காக, ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்பு பிரதிநிதிகள் குழு வருகை தந்த நிலையில் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் முகமாக யாழ். செம்மணி வளைவு பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போரட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பல்கலைக் கழக மாணவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், அரசரார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
































# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிட்ட ஐரோப்பிய சிறப்புப் பிரதிநிதிகள்

22.07.2026

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் 08 பிரதிநிதிகள் கொண்ட குழுவினர், இன்றைய நாள் புதன்கிழமை செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு பணிகளை நேரில் பார்வையிட்டனர்.




செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதற்கு யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப் பிக்கப்பட்ட நிலையில் நீதிமன்றினால் அனுமதி வழங்கப் பட்டது.







அதனை அடுத்து இன்றைய நாள் புதன்கிழமை புதைகுழியில் முன்னெடுக்கப்படும் அகழ்வு பணிகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் கார்மென் மொரேனோ, ஜேர்மனி தூதுவர் கலாநிதி பெலிக்ஸ் நியுமன், பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட், இத்தாலித் தூதுவர் டாமியானோ பிராங்கோவிக், நெதர்லாந்து தூதுவர் விபே டி போயர், ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகளான பிரதித் தூதுக்குழுத் தலைவர் கலியா அகிஷேவா, ஒத்துழைப்புப் பிரிவுத் தலைவர் கலாநிதி ஜோஹன் ஹெஸ் ஆகியோர் அடங்கிய குழுவினர் பார்வையிட்டனர்.

செம்மணியில் போராட்டக்காரர்களை சந்தித்த ஐரோப்பிய ஒன்றிய சிறப்புப் பிரதிநிதிகள் அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டதுடன் அவர்களுடைய கதைகளை உணர்வோடு செவிமடுத்தார். அவர்கள் கொடுத்த அறிக்கையையும் வேண்டிச் சென்றார் இந்த சந்திப்பு சிறப்பாக அமைந்தது.



















**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

# இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டு சர்வதேச விசாரணையை நடத்தவேண்டும்!

## வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி

22.07.2026



இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை தான் என்பதனை ஏற்றுக்கொண்டு, சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் தாம் கோரிக்கையை முன் வைத்துள்ளதாக, வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தூது குழுவினர் இன்று (22) புதன்கிழமை செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வு பணிகளை நேரில் பார்வையிட்டனர்.

இதன்போது, தூதுக்குழுவின் கவனத்தை ஈர்க்கும் முகமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளாக வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி உள்ளிட்ட இருவரை அழைத்து ஐரோப்பிய ஒன்றியத்தினர் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தனர்.

குறித்த சந்திப்பின் பின்னர், வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி ஊடங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

ஐரோப்பிய ஒன்றிய விசேட தூதுக்குழுவினரை செம்மணி புதைகுழி வாசலில் சந்தித்திருக்கிறோம். அவர்களிடம் எங்களுடைய உயிருக்கு மேலான கோரிக்கையான மகஜரையும் கையளித்திருக்கின்றோம்.

தாங்கள் தங்களால் இயன்ற வரைக்கும் எங்களுக்காக வேலை செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

எங்களுக்கு எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது, என தெரிய வேண்டும். இலங்கையில் இனப்படுகொலை தான் நடந்தது என்பதனை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதனூடாக சர்வதேச நீதி விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும். உள்ளகப் பொறிமுறைகளையோ, உள்ளக விசாரணைகளையோ அல்லது OMP அலுவலகம் மாதிரி இலங்கை அரசால் அமைக்கப்படுகின்ற அலுவலகங்களையோ நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எங்களுக்கு இலங்கை அரசாங்கம் ஒருபோதும் எங்களுக்கான நீதியை தரப்போவது இல்லை.

நாங்கள் எத்தனையோ ஆணைக்குழுக்களை சந்தித்திருக்கிறோம், ஆட்சி செய்கின்ற அரசாங்க பிரதிநிதிகளை சந்தித்திருக்கின்றோம்.

அது எதுவும் எமக்கு எதனையும் பெற்று தரவில்லை என்ற பிற்பாடு தான் நாங்கள் சர்வதேசத்தின் ஊடான ஒரு விசாரணையை கோரி நிற்கின்றோம்.

நாம் சர்வதேச விசாரணையை கோரி நிற்கிறோம் என்றால், சர்வதேசம் எங்களுக்கு ஒரு சரியான நீதியை பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையில் தான் சர்வதேச தரப்புக்களிடம் கோரிக்கையையும் மனுக்களையும் கையளித்துக் கொண்டிருக்கிறோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களில் இதுவரையில் 450 பேருக்கு மேல் எங்களோடு இருந்தவர்கள் மரணித்து விட்டார்கள். அவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். எங்களுடைய உறவுகளுக்கான நீதி கிடைக்க வேண்டும்.

கொடூர யுத்தமும் இன அழிப்பும் நடந்த பிற்பாடு கையளித்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை சர்வதேசம் தான் தகவல்களை பெற்று வெளிப்படுத்த வேண்டும். கொலையாளிகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும்.

எத்தனையோ விசேட தூது குழுக்கள், பிரதிநிதிகள் இங்கே வந்து போயிருக்கின்றார்கள். ஆனால் இதுவரைக்கும் எங்களுக்கு எந்தவிதமான ஒரு நல்லதொரு வார்த்தைகளை அவர்கள் எங்களுக்கு தெரிவிக்கவில்லை.

ஆகவே, நீங்கள் ஐரோப்பிய ஒன்றிய விசேட தூதுக்குழுவாக இங்கே வந்திருக்கிறீர்கள். ஐநா மன்றத்தில், மனித நேயங்களை நேசிக்கின்ற நாடுகளில் எங்களுடைய பிரச்சினைகளை முன்வைத்து, எங்களுக்கான சர்வதேச நீதிக்கான விசாரணையை நீங்கள் மேற்கொள்ள உதவ வேண்டும் என்று கூறி, அறிக்கை எமது அறிக்கையை கையளித்தோம்.

எமது இந்த அறிக்கை, அறிக்கை மட்டுமல்ல எங்களுடைய உயிரை உங்களுடைய கையிலே ஒப்படைத்திருக்கின்றோம் என்று கூறி அதனை கையளித்தோம் என்றார்.

# யாழ். செம்மணியில் மழைக் கவசத்துடன் மீட்கப்பட்ட சிறுவனின் எலும்புக் கூடு!

23.07.2026

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் போது, மழை அங்கியை ஒத்த ஆடையுடன் கூடிய சிறுவன் ஒருவரின் எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்டுள்ளது.









செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாட்களுக்கு முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், அதன் 41ஆவது நாள் அகழ்வுப் பணிகள் வியாழக்கிழமை (23) இடம்பெற்றன. இதன்போது மேலும் 7 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுவரை அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடுகளில் 9 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், வியாழக்கிழமை (23) அகழ்வுப் பணிகளின் போது மூன்று எலும்புக் குவியல்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஆணிகள் மற்றும் சிமெந்துத் துண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களாக இதுவரை 95 நாட்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, மொத்தமாக 478 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 464 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், அடையாளம் காணப்பட்ட 467ஆவது எலும்புக்கூடு இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றில் மிகவும் வித்தியாசமான நிலையில் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

அந்த எலும்புக்கூட்டுடன் சவப்பெட்டியின் அடையாளங்கள், மழைக்காலங்களில் பயன்படுத்தப்படும் மழை அங்கி (Raincoat) மற்றும் காலுறைகள் (Socks) என்பன காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், குறித்த நபர் சட்டரீதியான முறையில் அடக்கம் செய்யப்பட்டாரா என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், இது குறித்து நீதிமன்றம் ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை வெள்ளிக்கிழமை (24) வெளியிட முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.



# திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயக் காணியில் தமிழ் மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் விகாரைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

22.07.2026

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலய காணியில் தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சைத்தி கட்டுவதற்கான அடிக்கல் இன்று (22) புதன்கிழமை நாட்டி வைக்கப்பட்டுள்ளது.



வில்கம் விகாரை விகாராதிபதி அம்பிட்டிய சீலவன்சதிஸ்ஸ தேரரின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அருகாமையில் தொல்லியலுக்குரிய இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான உறுதிக் காணியில் குறித்த கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுளது. இதற்கான அடிக்கல்லை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.எம்.ஹேமந்த குமார, திருகோணமலை மாவட்ட தொல்லியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.யூ. சுரங்க பெரேரா உள்ளிட்ட பலர் நாட்டி வைத்தனர்.



குறித்த தொல்லியலுக்குரிய பகுதி என கூறப்படும் பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான பகுதியில் விகாரை ஒன்று கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு அதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்ற நிலையில் அதனை எதிர்த்து 16.07.2019 அன்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருகோணமலை மடத்தடி மாரியம்மன் ஆலய தர்ம கர்த்தாவும், கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் ஆலய தர்ம கர்த்தாவும் நம்பிக்கைப் பொறுப்பாளருமான திருமதி கோகிலரமணி என்பவர் பௌத்த மத ஆக்கிரமிப்புக்கு எதிராக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஆலோசனைக்கு அமைய திருகோணமலை மேல் நீதிமன்றில் 22.07.2019 அன்று வழக்கு ஒன்றை தாக்கல் செய்து ஐந்து தடை ஆணைகளை விதிக்கும்படி கோரியிருந்தார். குறித்த பகுதி தொல்லியலுக்கு உரியது என்ற காரணத்தால் பிள்ளையார் ஆலயம் கட்டுவதற்



கான பிறிதொரு இடத்தில் 10 பேர்ச் காணி வழங்கப்பட்டிருந்தது.

இதன்பின்னர் அப்பகுதியில் தொல்லியத் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில் குறித்த பகுதியில் விகாரை கட்டுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக சமூக ஊடகங்களில் வெளியான நிலையில் நேற்று (21) செவ்வாய்க்கிழமை உப்புவெளி பிரதேச சபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அவ்விடத்திற்கு விஜயம்



மேற்கொண்டு ஆயத்த வேலைகளை பார்வையிட்டனர்.

இதன்போது கட்டுமானங்களுக்குத் தேவையான செங்கற்கள்



உள்ளிட்ட பொருட்கள் இறக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தனர். அத்துடன் இது தொடர்பாக திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் ச.குகதாசனும் அரச தரப்புகளுடன் பேசியதாகவும் அதற்று மறுப்பு தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் பௌத்த கட்டுமானம் இடம்பெறவுள்ளதாக கூறப்படும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என அரச தரப்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டு அப்பகுதியில் எவ்வித புதிய கட்டுமானங்களும் இடம்பெறாது எனவும் சிதைவடைந்து இருக்கின்ற தொல்லியல் சின்னங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்



டிருந்தது. இடம்பெறுவதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில் இன்றைய தினம் (22) குறித்த இடத்தில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றிருந்தது.

இதேவேளை திருகோணமலை மேல் நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்பை உறுதி செய்யும் முகமாக மடத்தடி மாரியம்மன் ஆலய தர்மகர்த்தாவும், கன்னியா வெந்நீர் ஊற்று பிள்ளையார் ஆலய தர்ம கர்த்தாவும் நம்பிக்கைப் பொறுப்பாளருமான திருமதி கோகிலரமணி என்பவரினால் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் அவர்களின் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யும் நட

# ஒரு மனித எலும்புக்கூட்டின் முழங்கால் பகுதியில் சான்றுப் பொருளான இரும்பு ஆணி இனம் காணப்பட்டுள்ளது

23.07.2026

செம்மணி மனிதப்புதைகுழி அகழாய்வின் போது, மேலும் 7 மனித எலும்புக்கூடுகள் இன்று வியாழக்கிழமை சுத்திகரிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளன.



இதனையடுத்து, மூன்று கட்ட அகழாய்வுகளிலும் இதுவரை 478 மனித எலும்புக்கூடுகள் சுத்திகரிக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 464 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இன்றைய அகழாய்வில் மேலும் 3 மனித எலும்புக் குவியல்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றிற்கு இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், இன்று இரு பிற சான்றுப் பொருட்களும் அடையாளம் காணப்பட்டன. அவற்றில் ஒன்றான இரும்பு ஆணி, ஒரு மனித எலும்புக்கூட்டின் முழங்கால் பகுதியில் காணப்பட்டதாக கூறப்படுகின்றது.







இதனிடையே நேற்றைய தினம் ஜரோப்பிய துர்துக்குழுவினர் அகழ்வுப் பணிகளை நேரடியாகப் பார்வையிட்டிருந்தனர். அங்கு களத்தில் பணியாற்றும் சட்ட மருத்துவ அதிகாரிகள் மற்றும் தடயவியல் நிபுணர்களிடம் அகழ்வுப் பணிகளின் தொழில்நுட்ப நகர்வுகள் குறித்துத் தூதுவர்கள் உன்னிப்பாகக் கேட்டறிந்





தனர்

இதுவரையான காலப்பகுதியில் நீதிமன்ற அனுமதியுடன் மொத்தம் 94 நாட்கள் அகழ்வுப் பணிகள் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.thuyarpakirvu.com

# எம்மீதான அடக்குமுறையே சமஷ்டியைக் கோரியது; தனி ஈழத்தையும் தீர்வாக்கியது!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

23.07.2026

இந்தநாட்டில் அகிம்சைவழியில் உரிமைக்குரல் உயரும் போதெல்லாம் அரச இயந்திரங்களின் துணையோடு தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் இனக்கலவரங்களாகத் தொடர்ந்ததாகத் தெரிவித்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இவ்வாறாக அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டதாலேயே தமிழர்கள் சமஷ்டியையும், தனி ஈழத்தையும் கோரவேண்டியநிலை ஏற்பட்டதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எனவே ஆட்சியாளர்கள், இந்த நாட்டின் சிறுபான்மைச் சமூகமான ஈழத் தமிழர்களுக்கு அரணாகுவதால் மாத்திரமே இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுமெனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, வலிந்துகாணால் ஆக்கப்பட்டோர் விவகாரம், முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை, புதைகுழிகள் விவகாரம், நினைவேந்தல் உரிமை உள்ளிட்ட தமிழர்கள் நீதிகோரும் விடயங்களுக்கு ஆதரவாக ஆட்சியாளர்களும் குரல் கொடுக்கவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

கறுப்பு யூலை தொடர்பாக பாராளுமன்றில் 23.07.2026 இன்று பாராளுமன்ற உறுப்பினர் தனுர திசாநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளையின்போதான பிரேரணையில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பேரவையை தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே!

இன்றைய நாள் தேசிய மக்கள் சக்தி சார்பாக சபை ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணையை கொண்டுவந்துள்ள கௌரவ உறுப்பினர் தனுர திசாநாயக்க அவர்களின் நல்ல நோக்கங்கள் நிறைவேறட்டும்.

பேரவைத் தலைவர் அவர்களே!

ஈழத்தமிழர்களும் ஈழத்தமிழர்களின் சார்பாளர்களாக இந்தப் பேரவையிலே கடந்த காலங்களில் இருந்தவர்களும் இப்போது இருக்கின்றவர்களாக நாமும் நல்லிணக்கத்துக்கு எதிரானவர்களல்லர். ஈழத்தமிழர்களாகிய நாங்களும் எமது தாயகத்தில், தன்னாட்சி அதிகாரங்களோடு ஒரு தேசிய இனமாக வாழ வேண்டும் என்பதே எங்களின் அன்று தொட்டு இன்றுவரையான அடிப்படைக் கோரிக்கையும் அரசியலும். ஈழத்தமிழர்கள் ஒட்டுமொத்த தீவையும் அளவற்று நேசித்தவர்கள். நேசிப்பவர்கள்.

தீவு முழுமைக்கும் படர்ந்திருந்திருந்த எங்கள் வாழ்வும் வளமும் காலவெளியிலே அடக்குமுறைகளால் சுருக்கப்பட்டது. எண்ணிக்கையில் சிறுபான்மையினருக்கு அரணாகுதல் என்பதே பல்லினவாழ் சமூகத்தின் நிலைபேறான எழுச்சிக்கான அடிப்படை. ஆனாலும் இத்தீவின் அதிகாரம் பிரித்தானியரிடம் இருந்து கைமாற்றப்பட்ட பின்னர் மாறிவரும் ஒவ்வோர் அரசாங்கமும் அவ் அடிப்படை கருத்தியலை கையிலெடுக்கவில்லை. மாறாக ஈழத்தமிழர்களின் உரிமைகளை நேரடியாகவும் கட்டமைக்கப்பட்ட வழிகளிலும் கட்டுப்படுத்தியது. கட்டுப்படுத்துகிறது.

பேரவைத் தலைவர் அவர்களே!

கறுப்பு யூலை என்பது ஈழத்தமிழர் அழிப்பில் தொடக்கப்புள்ளியும் அல்ல. முற்றுப்புள்ளியும் அல்ல. மாறாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு வெளியிலே கறுப்பு யூலை ஒரு காற்புள்ளி.

கல்லோயா குடியேற்றத்திட்டங்களுக்காக 1956 இல் கொல்லப்பட்டோம். எங்கள் வாழிடங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டோம்.

தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்தோம். அதனால் 1958இல் மீண்டும் கொல்லப்பட்டோம். அகிம்சை வழியில் எங்களின் உரிமைக்குரல் உயரும் போதெல்லாம் அரச இயந்திரத்தின் துணையோடு எம்மீதான அடக்குமுறைகள் இனக்கலவரங்களாக தொடர்ந்தன.

1977ஆம் ஆண்டின் பின்னர் 1981 இல் யாழ்ப்பாணத்தில் நேரடியாக எங்கள் யாழ் நூலகமும் கடைகளும் சொத்துகளும் அரச ஆதரவோடு எரித்து நாசமாக்கப்பட்டன. அதன் பின்னரே இன்றைய ஒத்திவைப்பு வேளையில் உரையாடப்படும் கறுப்பு யூலைக்கலவரம் அரங்கேறியது. உயிரோடு எரிக்கப்பட்டோம். சொல்லொணா உயிர், உடமை இழப்புகளுக்கு ஈழத்தமிழர்கள் நாம் உள்ளாக்கப்பட்டோம். பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையம் (ICJ) இதனை இனப்படுகொலை என விபரித்தது.

இதன் தொடர்ச்சியாக சிறைகளுக்குள்ளும் அரச ஆதரவோடு தமிழர்கள் மீதான இனக்கலவரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. 1983 வெலிக்கடை, 1997 களுத்துறை, 2000 பிந்துனுவேவா என இப்பட்டியல் நீண்டது. பல்லினவாழ் சமூகம் இத்தீவில் மட்டும் வாழவில்லை. மாறாக பல்லினவாழ் சமூகம் வாழும் அனைத்து இடங்களிலும் இவ்வாறான அடக்குமுறைகளும் இனக்கலவரங்களும் தொடர்ச்சியாக ஏவப்படுவதுமில்லை.

இன்று, எங்களுக்காக இறந்த எங்களின் உறவை நினைவேந்த இயலுமாக இருப்பது தான் சுதந்திரம் என்று இருக்கும் நிலைக்கு இத்தீவில் சுதந்திரம் சுருக்கப்பட்டுவிட்டது. உரத்துக் கேட்டு உயிர் மாய்த்து இன்று செம்மணியில் எலும்புகளாகியும்



இந்தத்தீவிலே எங்கள் நீதியை வேண்டிக்கொண்டு இருக்கிறோம்.

கௌரவ உறுப்பினர், தனுர திசாநாயக்க அவர்களின் கோருகின்ற நல்லிணக்கம் எப்போதும் நிரந்தரமாக எங்களிடம் இருந்தது தான். அடக்குமுறையே சமஸ்டியை கோரியது. அடக்குமுறையே தனி ஈழத்தை தீர்வாக்கியது. அடக்குமுறையே இன்றளவும் இந்தத்தீவிலே இயல்பான எங்களை வேறுபட்டவர்களாக காட்டுகிறது. எங்களின் நீதிக்காக நீங்களும் குரல் கொடுங்கள்.

எங்களுக்காக பல்வேறு வழிகளிலும் போராடியவர்கள் அரசியல் கைதிகளாக சிறையிலே வாடும் போது நல்லிணக்கம் எப்போது மலர்ந்துவிடும். கடைசி அரசியல் கைதியும் சிறையிலே மரணிக்கும் வரை கூட இந்த அரசின் நெஞ்சும் கல்லாகித்தான் கிடக்குமா!

அரசிடம் நம்பி ஒப்படைத்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள உறவுகளின் நீதிக்காக குரல் கொடுங்கள்.

1956இலேயே எம்மீதான இனக்கலவரத்துக்கு நீதி கிடைத்திருந்தால் 2009 வரை இனப்படுகொலைகள் தொடர்ந்திருக்காது. அரசே ஆதரவாகி நின்று மேற்கொண்ட குற்றங்களுக்கு அரசே எவ்வாறு தீர்வு கொடுக்கும்? கொடுக்க இயலும்? பன்னாட்டு விசாரணைகளுக்காக குரல் கொடுங்கள். ஈழத்தமிழர்கள் ஒருபொழுதும் நல்லிணக்கத்துக்கு எதிரானவர்களாக இருந்ததில்லை. மாறாக பல்வேறு வழிகளிலும் தம்மை தற்காத்தபடி உயிரிழந்து உடமை இழந்து நிலமிழந்து அடையாளங்களை இழந்து தொடர்ந்தும் தமக்கான நீதிக்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே! எமக்கு அரணாகுதலே - இந்தத்தீவில் நல்லிணக்கம் என்றார்.

# செம்மணி சிந்துபாத்தி மயானத்தில் சட்டரீதியாக சடலங்கள் புதைக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் இல்லை!

## சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன்

24.07.2026

வைத்தியசாலைகளில் இறந்தவர்களை தாம் செம்மணி சிந்துபாத்தி இந்து மயானத்தில் புதைப்பதில்லை என வைத்தியசாலை தரப்பினர் கூறியுள்ளனர். அதேவேளை இந்த மயானத்தில் சடலங்கள் புதைக்கப்பட்டதற்கு இந்த மயான சபையினரிடம் பதிவுகள் இல்லை என சட்டத்தரணி வி.எஸ் நிறைஞ்சன் தெரிவித்துள்ளார்.



அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இது ஒரு இந்து மயானம். இதில் சட்டரீதியான புதைத்தலும் நடைபெறலாம். சிறுவர்கள் என்றால், அனுமதி எடுத்து அடக்கம் செய்யப்பட்டும்.

ஆனால் இங்கு அதிகமான என்புக்கூடுகளை பார்க்கும்போது எங்களுக்கு இது ஒரு குற்றம் நடந்தது, அவசரமாக புதைக்கப்பட்டது என எங்கள் சாதாரண கண்களுக்குத் தெரிகின்றது.

இது சம்பந்தமாக அறிக்கைகள் வந்த பிற்பாடுதான். அது தொடர்பில் மேலதிகமாக சொல்லக்கூடியதாக இருக்கும்.

இங்கு மீட்கப்பட்ட சில மனித என்புகள் சட்டரீதியாக புதைக்கப்பட்டதற்கான ஆடைகளோடு, சவப்பெட்டிகளோடு காணப்பட்டது. சில இடங்களில் உடற்கூற்று பரிசோதனை சான்றுகளும் காணப்பட்டன.ஆனால் அவைகள் இங்கு புதைக்கப்பட்டதற்கு இந்த இந்து மயான சபையினரிடம் பதிவுகள் இல்லை.

அதேநேரம் வைத்தியசாலையை அணுகிய போது, அவர்களும் இந்த இந்து மயானத்தில் சடலங்களை புதைக்க வில்லை என்றும், தாங்கள் கோம்பயன்மணல் மயானத்தையே பயன்படுத்துவதாகவும் கூறியுள்ளார்கள்.



எனவே செம்மணி புதைகுழி தொடர்பில் முழுமையான அறிக்கைகள் வந்த பின்னரே, தெளிவாக கூற முடியும் என தெரிவித்தார்.

**தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு தற்காலிக இடைநிறுத்தம்: 480 எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது!

24.07.2026

யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளின் 42ஆவது நாள் நடவடிக்கைகளில், புதிதாக ஒரு மனித எலும்புக்கூடு மற்றும் ஒரு எலும்புக்கூட்டு குவியல் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளை 56 நாட்கள் முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில், இன்று (24) அகழ்வுப் பணிகளின்போது இந்த கண்டுபிடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

மேலும், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 15 மனித எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், மூன்று எலும்புக்கூட்டு குவியல்களும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது, 437ஆவது எலும்புக்கூட்டின் வலது பக்க மூன்று விலா எலும்புகளுடன் தொடுகையுற்ற நிலையில் இரும்புத் தகடு ஒன்றும், சில ஆணிகளும் சான்றுப் பொருட்களாக மீட்கப்பட்டுள்ளன.

இதுவரை செம்மணி மனிதப் புதைகுழியில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களாக 96 நாட்கள் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், 480 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 479 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.



இதேவேளை, செம்மணி அகழ்வுப் பணிகள் இன்று தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன

# யாழ். வலிகாமம் வடக்கில் 14ஆவது வாரமாகத் தொடரும் ‘எமது நிலம் எமக்கு வேண்டும்’ காணி விடுவிப்புப் போராட்டம்

24.07.2026

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள தமது சொந்தக் காணிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி, காணி உரிமையாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் அமைதிப் போராட்டம் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை 14ஆவது வாரமாகவும் தீவிரமாகத் தொடர்ந்தது.





மயிலிட்டிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் "கொமாண்டோ" பங்களாவிற்கு முன்பாக ஒன்றுதிரண்ட பொது மக்கள், தங்கள் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வலி. வடக்கின் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட மக்கள், கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாத காலப்பகுதியில் இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாகத் தமது சொந்த இடங்களில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

அதன்பின்னர் அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. தொடரும் போராட்டம்:யுத்தம் நிறைவடைந்து 17 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், அப்பகுதிகள் இன்னமும் உயர் பாதுகாப்பு வலயமாகவே பேணப்பட்டு வருகின்றன.

இதனால் தமது பூர்வீக நிலங்களுக்குத் திரும்ப முடியாமல் பல தலைமுறைகளாக மக்கள் சொல்லொணாத் துயரங்களைச் சந்தித்து வருகின்றனர்.

தமது சொந்தக் நிலங்களை மீளப் பெறும் வரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது என முடிவெடுத்த காணி உரிமையாளர்கள், அதற்கமையவே இன்றைய தினமும் 14ஆவது வாரமாகத் தமது நீதிக்கான

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# தமிழர் தாயகத்தில் 'கறுப்பு யூலை 1983' இனப்படுகொலையின் 43ஆம் ஆண்டு நிலைவேந்தல்


காரைதீவு பிரதேச சபை – 23.7.2026







யாழ். முனியப்பர் கோயிலடி – 24.7.2026






யாழ். தந்தை செல்வா கலையரங்கம் – 25.7.2026












யாழ். வலிகாமம் பிரதேச சபை – 25.7.2026






# யாழ். பலாலியில் ஆறாவது வாரமாகத் தொடரும் காணிகளை இழந்த மக்கள் போராட்டம்

26.07.2026

யாழ். வலிகாமம் வடக்கு மக்கள் தமது காணிகளை விடுவிக்கக் கோரி பலாலி சந்தியில் இன்றைய நாள் ஞாயிற்றுக் கிழமை (26.07.2026) ஆறாவது வாரமாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.









கடந்த 36 வருடங்களாக காணிகளை இழந்த மக்கள் சிறீ லங்கா இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி குறித்த போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

தமது காணிகளில் இராணுவம் விவசாய நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நிலையங்களை அமைத்து தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்தி வரும் நிலையில் தாம் நீண்ட காலமாக நிலங்கள், வீடுகள் அற்று வாழ்ந்து வரும் நிலையில் தமது வீடுகள் காணிகளை விடுவிக்க வேண்டும் என கோரி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை கடந்த வாரங்களில் போராட்டக்காரர்கள் பயன்படுத்தினார்கள் என பலாலி பொது நோக்கு மண்டபத்தில் காணப்பட்ட வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான குடிநீர் தாங்கி மற்றும் தற்காலிக மலசல கூடம் என்பவற்றை பலாலி காவல்துறையினர் அவ்விடத்தில் இருந்து எடுத்துச் சென்று காவல்துறை நிலையத்தில் வைத்திருப்பதனால், இன்றைய நாள் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குடிநீர் மற்றும் மலசல கூடங்கள் இன்றி பல்வேறு இன்னல்களையும் அனுபவித்தனர்.

அத்துடன், தற்காலிக கொட்டகை அமைக்கவும் , தரப்பாள் கட்ட இரண்டு தடிகளை நாட்ட கூட காவல்துறையினர் அனுமதிக்காததால், கைகளினால் தரப்பாளை பிடித்தவாறு வெயிலின் கொடுமையில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொண்டு முதியவர்கள் உள்ளிட்டவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தமிழினப் படுகொலையின் சாட்சியே செம்மணி மனிதப் புதைகுழி; ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் யாழ். வருகை வெறும் கண்துடைப்பாக அமையக்கூடாது!

## அரசியல் கைதிகளை விடுதலை செய்தவற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

26.07.2026

செம்மணி மனிதப் புதைகுழி இலங்கையில் இடம்பெற்ற தமிழின படுகொலையின் முக்கிய சாட்சியாக அமைந்துள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் வருகை வெறும் கண்துடைப்பாகவோ அல்லது அரசியல் நாடகமாகவோ அமையக்கூடாது என மனித நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.



அவரால் இன்று (26.07.2026) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செம்மணி மனிதப் புதைகுழி இலங்கையில் நடந்தேறிய தமிழின படுகொலையின் சாட்சியாகும். ஒவ்வொரு நாளும் அங்கு அகழப்படும் போது எம்மவரின் அவல குரல் மட்டுமல்ல நீதிக்கான குரலும் ஓங்கி ஒலிக்கின்றன.

இந்நிலையில் ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் வருகை வெறும் கண்துடைப்பானதாகவோ, மேற்குலக நாடுகளின் அரசியல் நாடகத்தின் ஓர் அங்கமாகவோ, தூது குழுவினரின் சுற்றுலாவாகவோ அமைந்துவிடக்கூடாது.

குழுவினர் கண்ட சாட்சிகள், பெற்றுக்கொண்ட அறிக்கை, மக்களின் நீண்ட கால குரல் என்பவற்றை ஏற்று இலங்கையில் யுத்த குற்றங்களோடு இனப்படுகொலையும் நிகழ்ந்துள்ளது என்பதை வெளிப்படையாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதுவே ஐரோப்பிய ஒன்றியத்திற்கு கௌரவமாக அமையும்.

இலங்கையில் கடந்த 78 ஆண்டு காலமாக தொடர்ந்த தமிழின அழிப்பு 2009 முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலையாக உச் சம் தொட்டது என்பதை சர்வதேசம் அறியும். ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னரும், தற்போதை ஆட்சியிலும் இன அழிப்பு தொடர்கின்றது என்பதுவே உண்மை.

தமிழர்கள் முகம் கொடுத்தது மனித உரிமை மீறல்களுக்கு மட்டுமல்ல. இங்கு நன்கு திட்டமிட்ட இனப்படுகொலையே நிகழ்ந்தது. இது பிராந்திய அரசியலுக்காகவும், சர்வதேச வல் லரசுகளின் ஆதிக்கத்திற்காகவும் அவர்களின் ஆயுத மற்றும் வழிகாட்டல் பங்களிப்புடனும் அவர்களின் மேற்பார்வையுட னுமே நிகழ்ந்தன என்பது ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் நன்கு தெரிந்த விடயமாகும்.

ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டதை தொடர்ந்து உடனடியாகவே ஐ.நா பொதுச் செயலாளர் பாங்யூ மூன் இலங்கைக்கு வந்தது மட்டுமல்ல. யுத்தம் தொடர்பான கருத்தாடல்கள் ஐ.நா மனித உரிமை பேரவையில் இன்றைய நாள் வரை தொடர்ந்து நடைபெறுகின்றன.

மனித உரிமை பேரவையால் முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் ஆலோசனைகள் என்பவற்றை இலங்கை ஆட்சியாளர்கள் திரும்பியும் பார்க்காத நிலை தொடர்கின்றது. இதனால் இலங்கை அரசு மீதும் ஆட்சியாளர்கள் மீதும் தமிழர்கள் நம்பிக்கை இழந்த நிலையிலேயே ஐரோப்பிய ஒன்றிய தூத்துக் குழுவினரின் வருகை நிகழ்ந்தது.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க செம்மணிக்கு வருகை தந்த போதும் அதனால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு எந்த நன்மையும் இதுவரை கிட்டவில்லை என்பதையும் வெளிப்படுத்துகின்றோம்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக பேரினவாத அரசு முன்னெடுத்த கொடிய யுத்தத்தின் போது யுத்தக்குற்றங்களோடு திட்டமிட்ட இனப்படுகொலையே நிகழ்ந்தது என்பதற்கு தமிழர் தாயகத்தில் இதுவரை அகழப்பட்டதும் தற்போது அகழப்பட்டு கொண்டிருக்கின்ற செம்மணி மனித புதைகுழியும் 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த பாரிய இனப்படுகொலையும் போதுமான சாட்சி.



சர்வதேச தயவோடு இயங்கும் ஐ.நா மனித உரிமை பேரவை உட்பட அனைத்து அமைப்புகளும் “யுத்தக்குற்றம், இனப் படுகொலை” எனும் சொற்களை வேண்டுமென்றே தவிர்த்து இலங்கை தொடர்பில் கடந்த 17 வருடங்களாக உரையாடல்கள் நிகழ்வதை நாம் அறிவோம்.

இச்சந்தர்ப்பத்தில் மானிட கௌரவம் கருதியும் தமிழ் மக்களின் எதிர்பார்க்கும் நீதியை முன்னிலைப்படுத்தியும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் யுத்த குற்றங்களோடு, இனப்படுகலையும் நிகழ்ந்தது என்பதை உடனடியாக சர்வதேசத்திற்கு தெரிவித்து இது தொடர்பில் விசேட கவனம் செலுத்த அழுத்தம் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வதேச வல்லரசுகளின் அரசியல் நலன் சார்ந்தும், பிராந்திய நாடுகளின் நலன் காரணமாகவுமே “யுத்த குற்றம்”, “இனப் படுகொலை” எனும் சொற்கள் வேண்டும் என்று தவிர்க்கப் படுவதன் காரணமாக தமிழர்களுக்கான நீதி செயற்பாடுகள் ஐ.நா மனித உரிமை பேரவைக்குள் மட்டும் முடங்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழுவினர் அதற்கு சவால் விடுத்து ஐ.நா மனிதர்கள் பேரவைக்கு வெளியில் தமிழர்களுக்கான நீதி செயற்பாடுகள் தொடர வழி திறக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

ஐரோப்பிய ஒன்றியம் தமிழர்களின் குரலுக்கு செவிமடுக்காது வல்லரசுகளின் அரசியல் தேவையை கருத்தில் கொண்டு இலங்கை அரசினை பாதுகாப்பதற்கான செயற்பாட்டினை தொடர்ந்தால் தமிழர்கள் தமது நீதிக்கான செயற்பாட்டிற்கு மாற்று வழிகளையும், மாற்று சக்திகளையும் அணுக வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுவர் என்பதையும் கூற விரும்புகின்றோம் என தெரிவித்துள்ளார்.

www.thuyarpakirvu.com

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அநுரவை இரு கரம் கூப்பி கும்பிட்டும் கேட்டுவிட்டேன்!

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் துரைராசா

27.07.2026

சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவை இரு கை கூப்பி கும்பிட்டும் கேட்டுவிட்டோம், இனி எவ்வாறு கேட்பது எனத் தெரியவில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் துரைராசா தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை (25) தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் நடைபெற்ற சிறைக் கைதிகள் படுகொலை பொதுநாள் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

கடந்த வருடம் மார்கழி மாதம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இலங்கையர் தினம் கொண்டாடுவதற்காக தமிழ் அரசு கட்சியை சேர்ந்த நான்கு பேரை, கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி செயலகம் அழைத்திருந்தார்.

இக்கலந்துரையாடல் வேறாக இருந்தாலும் ஜனாதிபதியை



சந்தித்தபோது, இரு கரம் கூப்பிக் கேட்டோம். தமிழ் அரசியல் கைதிகளை விடுவியுங்கள். அதிலும் இலங்கையர் தினத்தில் விடுதலை செய்தால் சந்தோஷமடைவோம் எனவும் கூறினோம். ஆனால், நடக்கவில்லை.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ்த் தேசியம் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திப் பேசியிருக்கிறோம்.

அது மட்டுமல்லாது ஜனாதிபதியை சந்திக்கும் சந்தர்ப்பங்களில் தவறாமல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியிருக்கிறோம். ஆனால், நிறைவேறாத ஆசையாக இருந்து வருகிறது.

தற்போது சிறையில் 10 தமிழ் அரசியல் கைதிகள் இருக்கிறார்கள். அவர்களின் விபரம் அடங்கிய கோவையை குரலற்றவர்களின் குரல் அமைப்பு என்னிடமும் தந்துள்ளார்கள். என்னால் முயன்ற வரை கிடைக்கும் சந்தர்ப்பங்களில் ஜனாதிபதியுடன் பேசியிருக்கிறேன்.

ஆகவே, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியிடம் இரு கரம் கூப்பி விடுவியுங்கள் என கேட்டுவிட்டேன். வேறு எவ்வாறு கேட்பது என எனக்குத் தெரியவில்லை என்று அவர் தெரிவித்தார்.

# யாழ். மண்டைதீவு படுகொலை முறைப்பாட்டாளரின் முறைப்பாட்டின் உண்மை தன்மை தொடர்பில் விசாரிக்க உத்தரவு!

28.07.2026

யாழ். மண்டைதீவு படுகொலை சம்பந்தமாக பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, முறைப்பாட்டின் உண்மை தன்மை தொடர்பில், நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு, ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்று யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளது.

மண்டைதீவு படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய சடலங்கள் புதைக்கப்பட்ட கிணறுகளை அகழ்ந்து, அது தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டிற்கு அமைய பொலிசார் வழக்கினை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தியுள்ள நிலையில், குறித்த வழக்கு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில் நேற்றைய தினம் திங்கட்கிழமை குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, சடலங்கள் காணப்படுவதாக கூறப்படும் பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். கிணறு அமைந்துள்ள காணி உரித்து தொடர்பில் உறுதி செய்து அதன் அறிக்கை பெறப்பட வேண்டும்.

மண்டைதீவு கிராம சேவகர், வேலணை பிரதேச செயலகம், வேலணை பிரதேச சபை, பாதிக்கப்பட்டோர், சட்ட வைத்திய அதிகாரி, பொலிசார், கிராமத்தின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்டவர்களை உள்ளடக்கி குழு ஒன்றினை அமைத்து கலந்துரையாடல் நடாத்த ஆவண செய்யுமாறு மன்றில் கோரிக்கை வைக்கப்பட்டது.




அதேவேளை முறைப்பாட்டாளரின் மகனின் சடலம் மண்டைதீவில் உள்ள பிரிதொரு கிணற்றில் மீட்கப்பட்டு விட்டதாகவும், அதனை முறைப்பாட்டாளரே அடையாளம் காட்டி, சடலத்தை பெற்றுக்கொண்டதாகவும், அதற்காக அந்த கால பகுதியில் 25 ஆயிரம் ரூபாய் பணம் இழப்பீட்டு தொகையாக பெற்றுக்கொண்டார் என மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் மன்றில் தெரிவித்தனர்.

அதனை அடுத்து, முறைப்பாட்டாளரின் முறைப்பாடு தொடர்பிலான உண்மை தன்மையை ஆராய்ந்து விசாரணைகளை முன்னெடுத்து அது தொடர்பிலான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதவான் வழக்கினை, எதிர்வரும் செப்டெம்பர் 22ஆம் திகதிக்கு நீதவான் திகதியிட்டார்.

# சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம்!

29.07.2026

யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள தமது காணிகளை மீளக் கையளிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளான தனியார் காணிகளை காணி உரிமையாளர்களிடம் மீளக் கையளிக்க வேண்டும் எனக் காணி உரிமையாளர்கள் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந் நிலையில், முழு பூரணை தினமான இன்று (29.07.2026) புதன் கிழமை இரண்டாவது நாளாகத் தையிட்டியில் மக்கள் குரல் ஒலித்தது.



சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக மக்கள் ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் குதித்தனர்.

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.com

# மூன்று நாட்களில் 05 கோடி ரூபா இழப்பு: தமிழக இழுவைப் படகுகளின் அத்துமீறலுக்கு எதிராகத் தீவகக் கடல்பரப்பில் படகுப் பேரணி

29.07.2026

தமிழ் நாடு காரைக்கால், நாகப்பட்டினம் மற்றும் தொண்டி பகுதிகளைச் சேர்ந்த இந்திய கடற்தொழிலாளர்களின் தொடர்ச்சியான எல்லைதாண்டிய அத்துமீறல் மீன்பிடி நடவடிக்கைகளால், கடந்த யூலை 16 முதல் 18 ஆம் திகதி வரை மூன்று நாட்களில் தீவகத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பாரம்பரிய கடற்தொழிலாளர்களின் ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நண்டு வலைகளை இழுத்தழித்து சேதப்படுத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.





இந்திய அத்துமீறலை கண்டித்து யாழ்ப்பாணம் தீவகப் பகுதி கடற்தொழிலாளர்கள் கடலில் இறங்கி கறுப்புக்கொடி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

குறிகட்டுவான் இறங்குதுறை கடற்பகுதியில் இன்று புதன் கிழமை படகுகளில் கடலுக்குள் இறங்கிச் சென்ற உள்ளூர் கடற்தொழிலாளர்கள், கறுப்புக்கொடிகளை ஏந்தி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் சிறீலங்கா ஜனாதிபதிக்கு கோரி கோரிக்கை மனுவையும் கையளித்துள்ளனர்.

இந்திய இழுவைப் படகுகளின் சட்டவிரோத அத்துமீறலால் தங்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் அழிக்கப்படுவதாக போராட்டத்தில் ஈடுபட்ட கடற்தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போராட்டகாரர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிய கோரிக்கை மனுவில், நெடுந்தீவு, நயினாதீவு, வேலணை, எழுவைதீவு, அனலைதீவு, யாழ்குடா, பாக்குநீரிணை மற்றும் மன்னார் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த பாரம்பரிய கடற்தொழிலாளர் அரசின் உடனடி தலையீட்டை கோருவதாக தெரிவித்துள்ளனர்.

இந்திய இழுவைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து அடிமடி இழுவை மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன, இது வெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மட்டுமன்றி





கடலடித் தளங்கள், பவளப் பாறைகள் மற்றும் மீன்களின் இனப்பெருக்கப் பகுதிகளை அழித்து கடல் உயிரினப் பல்வகைமையையும் மீன்வளத்தையும் கடுமையாக பாதிக்கின்றது.

இலங்கை-இந்திய இராஜதந்திர உறவுகளின் பெயரில் வடக்கு மக்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து பலியிடப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாதது. வடக்கின் பாரம்பரிய கடல்சார் வாழ்க்கை மரபு அழிந்துவிட்டால் அது வடக்கு மக்களுக்கு மட்டுமல்லாது முழு இலங்கைக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாக அமையும்.

அதேவேளை எங்களது போராட்டம் எந்தவொரு நாட்டிற்கோ அல்லது சமூகத்திற்கோ எதிரானதல்ல பாரம்பரிய கடற்தொழிலாளர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளை பாதுகாக்க வேண்டும், கடல் உயிரினப் பல்வகைமை, மீன்வளம் மற்றும் நீலப் பொருளாதாரத்தை எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாக்க வேண்டும், வடக்கு மக்களுக்கும் நாட்டின் ஏனைய மக்களைப் போன்று சமமான சட்டப் பாதுகாப்பும் அரசின் கவனமும் வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூதூர் படுகொலை இடம்பெற்று 20 வருடங்கள் கடந்தும் நீதி இல்லை!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

30.07.2026

சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்ட மூதூர் படுகொலை இடம்பெற்று 20 வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் இன்னமும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.









அத்தோடு மூதூர் படுகொலை உள்ளடங்கலாக முக்கிய வழக்குகளை விசாரிப்பதற்காக ஒரு சுயாதீன சட்டவாதியை நியமிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அரசாங்கம் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்றும் அவ்வமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சட்ட மற்றும் கொள்கைப் பிரிவு இயக்குநர் ஜேம்ஸ் ரோஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

போரின் தீவிரத்துக்கு உள்ளாகியிருந்த திருகோணமலைக்கு அருகில் அமைந்துள்ள மூதூர் நகரில் 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி 17 தன்னார்வ உதவிப் பணியாளர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்ட வேளையில் நான் இலங்கையில் இருந்தேன். அன்றிலிருந்து நான் இச்சம்பவம் குறித்து எழுதி வருகிறேன். ஆனால் இப்படுகொலைகள் இடம்பெற்று 20 வருடங்கள் கடந்த பின்னரும், இதற்குப் பொறுப்பானவர்கள் இன்னமும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 2006ஆம் ஆண்டு மோதல் தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில், ஒகஸ்ட் 2ஆம் திகதி விடுதலைப்புலிகள் மூதூரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அவ்வேளையில் பாரிஸ் நகரைத் தளமாகக் கொண்டு இயங்கிவந்த சர்வதேச தொண்டு நிறுவனமான 'அக்ஷன் எகெய்ன்ஸ்ட் ஹங்கர்' அமைப்பைச் சேர்ந்த, இலங்கையில் பணியாற்றிவந்த தன்னார்வ உதவிப் பணியாளர்கள் துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுவீச்சுகளுக்கு மத்தியில் அவர்களது அலுவலக வளாகத்துக்குள் முடங்கியிருந்தனர். அதனையடுத்து ஒகஸ்ட் 4ஆம் திகதி நண்பகல் விடுதலைப்புலிகள் பின்வாங்கியதைத் தொடர்ந்து சிறீலங்கா பாதுகாப்புப் படையினர் மீண்டும் அந்நகரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததுடன், தாம் மிகப் பயங்கரமான ஒரு உண்மையைக் கண்டறிந்ததாக அறிவித்தனர்.

அதன்படி அத்தொண்டு நிறுவன அலுவலக வளாகத்துக்குள் 15 தன்னார்வப் பணியாளர்களின் உடல்கள் தலையிலும் கழுத்திலும் மிக அருகில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட காயங்களுடன் கண்டறியப்பட்டன. அதுமாத்திரமன்றி தப்பிச் செல்ல முயன்றதாகத் தோன்றக்கூடிய மேலும் இரு பணியாளர்களின் உடல்கள் அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு வாகனத்திலிருந்து கண்டறியப்பட்டன.

அச்சம்பவ இடத்தைப் பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லப்பட்ட வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் ஒரு முஸ்லிம் நபரைத் தவிர ஏனைய அனைவரும் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டதாகவும், அவர்கள் அனைவரும் (13 ஆண்கள், 4 பெண்கள்) தமிழர்கள் என்றும் சிறீலங்கா இராணுவம் தெரிவித்தது.

இருப்பினும் மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் ஊடாக இராணுவத்தினரால் வெளியிடப்பட்ட தகவல்கள் பொய்யானவை எனக் கண்டறியப்பட்டது. அதுமாத்திரமன்றி இந்தப் படுகொலைகளுக்கு இரு பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் சிறீலங்கா கடற்படையின் விசேட பிரிவினருமே பொறுப்பாளிகள் என்றும், பொலிஸ் மற்றும் நீதித்துறை உயரதிகாரிகள் இதனை மறைப்பதற்கு முற்பட்டதாகவும் அவ்வமைப்பு கண்டறிந்தது.

2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 26 ஆண்டு கால உள்நாட்டுப்போரின்போது இருதரப்பினராலும் நிகழ்த்தப்பட்ட மிகமோசமான குற்றங்களில் மூதூர் படுகொலையும் ஒன்றாகும். அதுமாத்திரமன்றி அடுத்தடுத்து ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் விசாரணைகளை முன்னெடுப்பதாக உறுதியளித்த போதிலும், அதுசார்ந்த தன்முனைப்புடன் செயற்படாத முக்கிய 12 மனித உரிமை வழக்குகளில் இதுவும் ஒன்றாகும். எனினும் மூதூர் படுகொலையில் கொல்லப்பட்ட தன்னார்வப் பணியாளர்களின் குடும்பத்தினரும், மோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்ட, வலிந்து காணாமலாக்கப்பட்ட மேலும் பல்லாயிரக்கணக்கானோரின் உறவுகளும் பல ஆண்டுகள் நீதிக்காகக் காத்திருக்கின்றனர்.

மூதூர் படுகொலை உள்ளடங்கலாக முக்கிய வழக்குகளை விசாரிப்பதற்காக ஒரு சுயாதீன சட்டவாதியை நியமிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க அரசாங்கம் அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அளித்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றவேண்டும்.

அத்தோடு யுத்தகால வன்முறைகள் மற்றும் அதன் பின்னரான மீறல்களால் பாதிக்கப்பட்ட சகலருக்குமான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறு சர்வதேச நாடுகள் இலங்கை மீது தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கவேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# யாழ். செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி அமைதிப் பேரணி

30.07.2026

யாழ். செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் புதைக்கப்பட்டுள்ள உறவுகளுக்கு நீதி கோரி, யாழ்ப்பாண மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டம் இன்று, ஆடி மாதம் 30ஆம் திகதி வியாழக்கிழமை, செம்மணி பகுதியில் நடைபெற்றது.

ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை அந்தோனிப் பிள்ளை அகஸ்ரின் அவர்களின் ஒழுங்கமைப்பில், அரியாலை புனித யூதாததேயு திருச்சுரூபம் முன்பாக ஆரம்பமான பேரணி செம்மணி சந்தியைச் சென்றடைந்தது.

பேரணியின் நிறைவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் திரு. டெர்க் அவர்களிடம் கையளிக்கப்படவுள்ள அவசர வேண்டுகோள் அறிக்கையை அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அவர்கள் வாசித்தார்.

அறிக்கையில், 2026ஆம் ஆண்டு ஆடி மாதம் 21ஆம் திகதி வரையில் சிறுவர்கள் மற்றும் சிசுக்களின் எச்சங்கள் உட்பட 454 மனித என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.




மேலும், மனித எச்சங்களை அகழ்ந்தெடுத்தல், அடையாளம் காணல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை மினசோட்டா நெறிமுறை உள்ளிட்ட சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சுயாதீன டி.என்.ஏ. பரிசோதனை, குடும்பங்களின் பங்கேற்பு மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், செம்மணி அகழ்வுப் பணிகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து கண்காணித்து, சான்றுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சாட்சியாளர்களின் பாதுகாப்பிற்காக யாழ்ப்பாணத்தில் ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறையின் பிரசன்னம் அவசியம் என்றும் கோரப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தில் யாழ்ப்பாண மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், யாழ்ப்பாண மாகாண அமல மரித் தியாகிகள் சபையின் முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், அருட்தந்தையர்கள், துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.







# முல்லை. கேப்பாப்பிலவில் காணி விடுவிக்கக் கோரிய போராட்டம் 37ஆவது நாளாகத் தொடர்கின்றது...

30.07.2026

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கேப்பாப்பிலவு பகுதியில், சிறீலங்கா இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, அப்பகுதி மக்கள் இரண்டாவது கட்டமாக இன்று (30) நடத்தி வரும் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் 37வது நாளினை எட்டியுள்ளது.

கேப்பாப்பிலவு பகுதியில் 55 குடும்பங்களுக்கு சொந்தமான 59.5 ஏக்கர் பூர்வீக வாழ்விடக் காணிகளும், மேலும் 4 குடும்பங்களுக்கு சொந்தமான 100 ஏக்கர் மத்திய வகுப்புக் காணிகளும் இன்னும் சிறீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டிலே உள்ளது.

தமக்குச் சொந்தமான காணிகளை மீள ஒப்படைக்குமாறு வலியுறுத்தி, காணி உரிமையாளர்கள் தொடர்ச்சியாக அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தமது பூர்வீக வாழ்விடங்களில் மீளக் குடியேறுவதற்கான உரிமையை உறுதிப்படுத்தி, காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்பதே அவர்களின் பிரதான கோரிக்கையாகும்.

இந்நிலையில், போராட்டம் 37வது நாளைக் கடந்துள்ளபோதிலும் இதுவரை அதிகாரிகளிடமிருந்து எவ்வித நிரந்தரத் தீர்வும் எட்டப்படாத சூழ்நிலையில், போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.




# யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி சிறீலங்கா தலைநகர் கொழும்பில் கவனயீர்ப்பு போராட்டம் – 30.07.2026






# ஊடகப் படுகொலையாளிகளைக் கைது செய்ய வலியுறுத்தி யாழ் மாவட்ட செலகம் முன் போராட்டம்

31.07.2026

அநுர அரசு ஆட்சிக்கு வந்து இரு ஆண்டுகள் ஆகியும் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான ஊடக நிறுவனங்கள் மீதான விசாரணைகளை இதுவரை ஆரம்பிக்காத நிலையில், உடனடியாக விசாரணைகளை துரிதப்படுத்தி அதற்குக் காரணமான ஊடக படுகொலையாளிகளைக் கைதுசெய்யுமாறு வலியுறுத்தி யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் இன்று 31.07.2026 காலை 7.30 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகம் முன்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.






குறித்த போராட்டத்தில் ஊடகவியலாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டு நீதி கோரி பதாகைகளை ஏந்தி குரல் எழுப்பினர்.

யாழ்ப்பாணத்திற்கு இரு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன பங்கேற்கவிருந்த நிகழ்வையே ஊடகவியலாளர்கள் உத்தியோகபூர்வமாகப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று வருகிறார். அதன் ஓர் அங்கமாக யாழ். மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்புக் கருத்தரங்கில் பிரதி அமைச்சர் கலந்து கொள்ளவிருந்தார். எனினும், கடந்த காலத்தில் படுகொலைசெய்யப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அந் நிகழ்வை யாழ். ஊடக அமையத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் முழுமையாகப் புறக்கணித்தனர்.

கருத்தரங்கைப் புறக்கணித்த ஊடகவியலாளர்கள், யாழ். மாவட்ட செயலகத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாகக் திரண்டு, ஊடகச் சுதந்திரத்தை உறுதி செய்யக் கோரியும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கக் கோரியும் பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

















# யாழ். மயிலிட்டியில் 15ஆவது வாரமாகத் தொடரும் போராட்டம்...

31.07.2026

யாழ். வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமாண்டோ" பங்களா முன்பாக இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 15ஆவது வாரமாக போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

வலிகாமம் வடக்கில் 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு யூன் மாத கால பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.



இந்நிலையில் தமது காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு பிரதி வெள்ளிக்கிழமைகளில் போராட்டங்களை முன்



னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில், இன்றைய நாள் வெள்ளிக்கிழமை 15ஆவது வாரமாக போராட்டத்தை முன்னடுத்தனர்

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.com**




# கனடியப் பொருட்கள் மீது அமெரிக்கா 50 வீதப் புதிய வரியை விதித்துள்ளது

20.07.2026

அமெரிக்க அதிபர் டோனல்ட் ட்ரம்பின் நிர்வாகம், பலதரப்பட்ட கனடியப் பொருட்கள் மீது 50% வரி விதிப்பதாக இன்ற திங்களன்று அறிவித்தது.

30 நாட்களில் இந்த வரிகள் அமலுக்கு வரும் என்றும், ஒயின் முதல் ஹாக்கி மட்டைகள், சிமெண்ட் வரையிலான பொருட்களை இது உள்ளடக்கும் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50% வரை சுங்க வரி விதிக்க அனுமதிக்கும், கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு பழமையான வர்த்தகச் சட்டமான 1930 ஆம் ஆண்டின் சுங்க வரிச் சட்டத்தின் 338 ஆம் பிரிவின் கீழ் ட்ரம்ப் மூன்று பிரகடனங்களில் கையெழுத்திட்டார்.

இருப்பினும், எரிசக்தி, பொட்டாஷ் (வேளாண் உரங்களில் பயன்படுத்தப்படுவது), மீன், முக்கிய கனிமங்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான சட்டத்தின் 232வது பிரிவின் கீழ் ஏற்கனவே உள்ள கட்டணங்களின் கீழ் வரும் பொருட்களுக்கு புதிய கட்டணங்கள் பொருந்தாது.

அமெரிக்கப் பொருட்களை கனடா பாகுபாடுடன் நடத்துவதற்கு பதிலடியாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

குறிப்பாக, மற்ற நாடுகளின் கார்களுக்குப் பொருந்தாத சுங்க வரிகளையும் ஒதுக்கீடுகளையும் கனடா அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட கார்களுக்கு விதித்துள்ளது என்றும், கனடாவின் இரண்டு மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களைத் தவிர மற்ற அனைத்தும் அமெரிக்க மதுபான விநியோகத்தைக் கட்டுப்படுத்தியுள்ளன என்றும் அது கூறியது.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில், அமெரிக்காவுடன் ஒரு உடன்பாட்டிற்குப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பதிலாக, அதிபர் ட்ரம்பின் வரிகளுக்கு எதிராகப் பதிலடி கொடுக்கத் தேர்ந்தெடுத்த இரண்டு நாடுகள் மட்டுமே உள்ளன. அவை சீன மக்கள் குடியரசு மற்றும் கனடா, என்று வெள்ளை மாளிகை கூறியது.




# "யூலை 1983 சம்பங்களில் பாதிக்கப்படவர்களின் நினைவைப் போற்றுவதும், உரிமைகள் பாதுகாப்பருவதும் அனைவரின் பொறுப்பாகும்"

## கறுப்பு யூலையின் 43ஆவது ஆண்டு நினைவு கூர்தலை முன்னிட்டு கனடியப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி அவர்களின் அறிக்கை

23.07.2026

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு யூலை இனவெறி வன்முறையின் 43ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு, கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் (Minister of Public Safety) ஹறி ஆனந்தசங்கரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், கறுப்பு யூலை என்பது இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட கொடூரமான இன வெறி வன்முறை என்றும், ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்து, சொத்துக்களை இழந்து, தாய கத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கறுப்பு யூலை தமிழர் சமூகத்தின் வரலாற்றில் அழியாத வடுவாக இருந்தாலும், நீதியும், பொறுப்புக்கூறலும், நல்லிணக்கமும் நிலைநாட்டப்பட வேண்டியது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களின் நினைவைப் போற்றுவதும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் எதிர்காலத்தை உருவாக்குவதும் அனைவரின் பொறுப்பு என்றும் தெரிவித்துள்ளார்.



**Statement from the Hon. Gary Anandasangaree**

"Today we remember Black July.

43 years ago, anti-Tamil pogroms swept Colombo, Sri Lanka. Thousands were killed, and countless homes and businesses were destroyed. Lives were forever changed. This was premeditated state-backed violence, and to this day, no one has been held accountable.

In response to Black July, the Canadian government established a Special Measures program, welcoming over 1,800 Tamil refugees. Many of those survivors, their children and grandchildren, are now our neighbours here in Scarborough—Guildwood—Rouge Park, and across Canada. Tamil Canadians have built businesses, raised families, and strengthened our communities and country.

We honour those who were lost, and stand with the survivors who carry the burden of history every day.

On May 18, 2023, the Canadian Parliament recognized what happened to Tamils in Sri Lanka as a genocide. Canada remains a member of the core group at the United Nations Human Rights Council seeking accountability and justice in Sri Lanka.

Black July must never be forgotten, and it must never happen again."

**Hon. Gary Anandasangaree**
Member of Parliament for Scarborough—Guildwood—Rouge Park

**Déclaration du l'Hon. Gary Anandasangaree**

« Aujourd'hui, nous nous souvenons du juillet noir.

Il y a 43 ans, des attaques anti-tamouls ont ravagé Colombo, au Sri Lanka. Des milliers de personnes ont été tuées, et d'innombrables maisons et entreprises ont été détruites. Des vies ont été à jamais bouleversées. Il s'agissait d'une violence préméditée, soutenue par l'État, et, à ce jour, personne n'a été tenu responsable.

En réponse au juillet noir, le gouvernement du Canada a mis en place un programme de mesures spéciales, accueillant plus de 1800 réfugiés tamouls. Beaucoup de ces survivants, ainsi que leurs enfants et petits-enfants, sont maintenant nos voisins ici à Scarborough—Guildwood—Rouge Park, et partout au Canada. Les Canadiens et Canadiennes d'origine tamoule ont bâti des entreprises, élevé des familles et renforcé nos communautés et notre pays.

Nous rendons hommage à ceux et celles qui ont perdu la vie et nous nous tenons aux côtés des survivants et survivantes qui portent chaque jour le poids de l'histoire.

Le 18 mai 2023, le Parlement du Canada a officiellement reconnu ce qui est arrivé aux Tamouls au Sri Lanka comme un génocide. Le Canada reste un membre actif du groupe principal du Conseil des droits de l'homme des Nations Unies sur le Sri Lanka, appelant à ce que justice soit rendue et que les responsables de ces atrocités aient à répondre de leurs actes.

Le juillet noir ne doit jamais être oublié, et il ne doit jamais se reproduire. »

**l'Hon. Gary Anandasangaree**
Député de Scarborough—Guildwood—Rouge Park

கறுப்பு யூலை மறக்கப்படக்கூடாத வரலாறு; அது மீண்டும் ஒரு போதும் நிகழக்கூடாது என்ற செய்தியுடன் தனது நினைவு அறிக்கையை கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஹறி ஆனந்தசங்கரி வெளியிட்டுள்ளார்.




# RECOGNISE LIBERATION TIGERS OF THAMIL EELAM AS A LIBERATION ORGANISATION



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# தமிழ் நாட்டுச் செய்திகள்



## மேட்டூர் காவிரி ஆற்றங்காரையில் அகழாய்வு: முதுமக்கள் தாழி, மனித எலும்புக்கூடு கண்டெடுப்பு!

15.07.2026

மேட்டூர் காவிரி கரையில் மேற்கொண்டு வரும் அகழாய்வில் மனித எலும்புக்கூடு, முதுமக்கள் தாழி, கத்தி கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தொல்லியல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேட்டூரை அடுத்த கொளத்தூர் ஒன்றியத்துக்குட்பட்ட தெலுங்கனூர், மாங்காடு பகுதிகள் காவிரி கரையோரத்தில் அமைந்துள்ளன. இப்பகுதி 1990 வரை அடர்ந்த வனப்பகுதியாக இருந்தது. பின்னர், வனப்பகுதி அழிந்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.



தற்போது மேட்டூர் அணை நீர்மட்டம் சரியும் போது அதிகளவிலான கல் வட்டங்கள் இருப்பதைக் காண முடியும். இவை உள்ளூர் மக்களால் பாண்டியன் திட்டுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.

இப்பகுதியில் தொல்லியல் துறையினர் ஆய்வு செய்ததில் வாள், அம்பு, முதுமக்கள் தாழி, பெரிய மற்றும் சிறிய அளவிலான பானை மற்றும் கருவிகள் கிடைத்துள்ளன.

இதையடுத்து, அப்பகுதியில் தொல்லியல் துறை அதிகாரிகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் அகழாய்வில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து தொல்லியல் துறை அதிகாரிகள் கூறியதாவது: தெலுங்கனூர், மாங்காடு பகுதிகளில் 80-க்கும் மேற்பட்ட கல் வட்டங்கள் கண்டறியப்பட்டு அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மனிதர்களின் எலும்புக் கூடுகள், அவர்கள் பயன்படுத்திய முதுமக்கள் தாழி, கத்திகள், ஈட்டிகள், பானை, கல்மணிகள், கோடாரி உள்ளிட்டவை கிடைத்துள்ளன.

இரும்பிலான எஃகு வாள், இதுவரை இந்தியாவில் கிடைத்துள்ள காலத்துக்கு முற்பட்டது. ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகம் கண்டுபிடித்த ‘அல்ட்ரா ஹைட்ரோ கார்பன்’ தொழில்நுட்பத்தை, தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பயன்படுத்தியதற்கு சான்றாக இங்கு கண்டெடுக்கப்பட்ட எஃகு வாள் உள்ளது.

கடந்தாண்டு கண்டறியப்பட்ட பெரிய அளவிலான வாள் 3,600 ஆண்டுகள் பழமையானது என்பதால், அதன் காலத்தை ஒட்டி இருக்கும். ஆனால், இதுவரை கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த பொருட்களின் காலம் எது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை. ஆய்வறிக்கை வந்த பிறகு தான் முழுமையான காலம் தெரியவரும், என்றனர்.







## திருச்சி சிறப்பு முகாமில் தொடரும் ஈழ ஏதிலிகளின் உண்ணாநோன்புப் போராட்டம்

21.07.2026

திருச்சி சிறப்பு முகாமில் (சித்திரவதை முகாம்) நடைபெற்று வரும் ஈழ ஏதிலிகளின் உண்ணாநோன்புப் போராட்டம் இன்று ஏழாவது நாளை எட்டியுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள ஏனைய அனைவரும் இன்று ஒருநாள் அடையாள உண்ணாதவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை நேரில் சந்தித்து அவர்களது கோரிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் குறித்து அறிந்து கொள்வதற்காக, ஈழ அகதிகள் பாதுகாப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளரும் வழக்கறிஞருமான புகழேந்தி இன்று திருச்சி சிறப்பு முகாமிற்கு செல்லவுள்ளார்.

உண்ணாநோன்புப் போராட்டம் அமைதியான முறையில் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் ஈழ அகதிகள் பாதுகாப்புக் குழு வலியுறுத்தியுள்ளது.



RECOGNISE LIBERATION TIGERS OF
THAMIL EELAM
AS A LIBERATION ORGANISATION

www.sangathamil.com




# செம்மணி: "நாங்கள் இன்னும் தேடிக்கொண்டிருக்கின்றோம்"

ITJP உடக அறிக்கை 14.07.2026

15.07.2026

**ஊடக அறிக்கை: செம்மணி: "நாங்கள் இன்னும் தேடிக்கொண் டிருக்கின்றோம்"**

***யாழ்ப்பாணம்:*** யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள செம்மணியில் அமைந்துள்ள மனிதப் புதைகுழியானது. உண்மையை நிலைநாட்டுதல், நீதியை வழங்குதல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குப் பொறுப்புக்கூறலை உறுதி செய்தல் ஆகிய தங்களின் கடமைகளை நிறைவேற்றுவதில், அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் திட்டமிட்டு மற்றும் தொடர்ச்சியாக தோல்வியைக் கண்டு வருவதன் அடையாளமாக மாறியுள்ளது என ITJP அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"செம்மணியில் எனது மகனின் உடல் கண்டுபிடிக்கப்பட்டாலும் நான் உடைந்து விடுவேன், கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும் நான் உடைந்துவிடுவேன்." 1999 ஆம் ஆண்டு காணாமலாக்கப்பட்ட தனது மகன் தொடர்பாக பரமானந்தன் செல்வராஜா குறிப்பிட்டார். "நான் மகிழ்ச்சியாக இருப்பதற்கான ஒரே வழி எனது மகன் உயிருடன் என்னிடம் மீண்டும் வருவது மட்டுமே."

**'செம்மணி மனிதப் புதைகுழி: "நாங்கள் இன்னும் தேடிக்கொண் டிருக்கிறோம்"** என்ற புதிய அறிக்கையின் தலைப்பானது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களினால் வழங்கப்பட்ட பல வாக்குமூலங்களின் ஆரம்ப வார்த்தையாக காணப்படுகின்றது. முப்பது ஆண்டுகள் கடந்தும், தங்கள் அன்புக்குரியவர்களின் உடல்களை மீட்பது ஒருபுறம் இருக்க, அவர்களின் நிலை என்னவென்று இன்னும் அவர்களால் அறிய முடியாத நிலையில் அக்குடும்பங்கள் காணப்படுகின்றன.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப்புதைகுழிகளில் மிகப்பெரியதாக இருக்கும் செம்மணி மனிதப்புதைகுழியானது. அந்தப் புதைகுழியின் பெரும் அளவு, ஆதாரங்கள் மறைக்கப்பட்டதாகக் கூறப்படும் நீண்டகாலம், மேலும் மோதல் காலத்தில் இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கட்டாய காணாமலாக்கங்கள், சட்டவிரோதக் கொலைகள் மற்றும் பிற கடுமையான மீறல்களுடன் இந்தத் தளத்தை இணைக்கும் கணிசமான ஆதாரத் தொகுப்பு ஆகிய காரணங்களால் விதிவிலக்கான முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

செம்மணியுடன் தொடர்புடைய மீறல்கள் மற்றும் குற்றங்கள் தொடர்பாக, இன்றுவரை எந்தவொரு நடுநிலை அல்லது மூத்த படைத்தளபதியும் குற்றவியல் ரீதியாகப் பொறுப்புக்கூறலுக்கு ஆளாக்கப்படவில்லை. மாறாக, விசாரணைக்குட்பட்ட காலகட்டத்துடன் தொடர்புடைய பல அதிகாரிகள், உயர் அதிகாரம் மற்றும் பொறுப்புள்ள பதவிகளுக்குப் பதவி உயர்த்தப்பட்டனர். இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் செம்மணிக்குச் சென்றபோது, இலங்கையின் நீதி மற்றும் தேசநிய ஒருமைப்பாட்டு அமைச்சர் கர்சன நாணயக்கார, 1998ஆம் ஆண்டில் இடம்பெற்ற நிழ்வுகள் குறித்து தமது அரசாங்கத்திடம் தகவல்கள் ஏதும் இல்லை என்று தெரிவித்ததுடன், காணாமலாக்கப் பட்டவர்களின் குடும்பங்கயே பொறுப்புக்கூறலுக்குட்பட வேண்டியவர்களை அடையாளம் காணவேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.' செம்மணியில் இடம்பெற்ற குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடர்வதற்கான முதல் நோக்கிலேயே நியாயமான வழக்கு நிலவுகின்றது என்றும், அத்தகைய விசாரணைகளைத் தொடங்கத் தவறியிருப்பது ஆதாரங்கள் இல்லாமையை அல்லாது, பொறுப்புக்குக் கூறலில் தொடர்ச்சியாக நிலவும் குறைபாட்டையே பிரதிபலிக்கின்றது என்றும் ITJP வாதிடுகின்றது. இவ்வறிக்கையில் காணப்படும் ஒரு இணைப்பானது, சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்பட்ட ஏழு இராணுவ அதிகாரிகளை அடையாளம் காட்டுகிறது, இலங்கை இராணுவ வீரர்கள், பரவலான பாலியல் சுரண்டல் மற்றும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகத்தில் ஈடு பட்டிருந்த காலகட்டத்தில், குறித்த ஏழு பேரில் இருவர் ஹைட் டிக்கு ஐ.நா. அமைதிப் படையினராகப் பணியமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களில் சிலர் பின்னர், ஊடகவியலாளர்களின் கடத்தல், சித்திரவதை மற்றும் படுகொலை உள்ளிட்ட ஏனைய கடுமையான குற்றச்சாட்டுகளுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்தனர். பொறுப்புக்கூறலில் ஏற்படும் தோல்விகள், மீண்டும் மீண்டும் நிகழும் சுழற்சியை எவ்வாறு எளிதாக்குகின்றன, பொது நம்பிக்கையை எவ்வாறு சீர்குலைக்கின்றன, மற்றும் கடுமையான மீறல்களில் ஈடுபட்ட தனிநபர்கள் எந்தவொரு விசாரணையுமின்றி தொடர்ந்து அதிகாரத்தைப் பயன்படுத்த எவ்வாறு அனுமதிக்கின்றன என்பதை இந்தப் போக்கு விவரிப்பதோடு தொடர்ச்சியான தண்டனையின்மையையும் ஊக்குவிக் கிறது.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT




செம்மணி என்பது வெறும் ஒரு வரலாற்று குற்ற நிகழ்விடமாக மட்டுமின்றி அது பொறுப்புக்கூறலுக்கான தொடர்ச்சியான சவாலாகவும் காணப்படுகின்றது. சர்வதேச சட்டத்தின் கீழ், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை மற்றும் இருப்பிடம் நிறுவப்படும் வரை, கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்படுதல் என்பது ஒரு தொடர்ச்சியான மீறலாகவே நீடிக்கிறது. குடும்பங்களுக்கு, மனித எச்சங்களைக் கண்டெடுப்பது என்பது உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நோக்கிய முதல் படியாகும்.

முற்றும்

# ஜப்பானை தாக்கிய 7.1 ரிக்டர் அழவிலான பூமியதிர்ச்சி

28.07.2026

தென்மேற்கு ஜப்பானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த பூமியதிர்ச்சியில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



ரிக்டர் அளவுகோலில் 7.1 அளகுகளாகப் பதிவான இந்த சக்திவாய்ந்த பூமியதிர்ச்சி நேற்று (28) செவ்வாய்க்கிழமை ஏற்பட்டுள்ளது.

ஜப்பானின் மூன்றாவது பெரிய தீவான கியூஷ்ூ தீவையே இந்த பூமியதிர்ச்சி மையம் கொண்டு தாக்கியுள்ளது.

பூமியதிர்ச்சியின் அதிர்வினால் இடிந்து விழுந்த வீடுகள் மற்றும் வர்த்தகவளாகங்கள் உள்ளிட்ட கட்டிடங்களின் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், இச்சம்பவத் தில் 10க்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**RECOGNISE LIBERATION TIGERS OF**
**THAMIL EELAM**
**AS A LIBERATION ORGANISATION**









சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபாரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்:

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



மிகவும் நவீனமான தொழில்நுட்ப யுகத்தை நோக்கி இன்றைய உலகம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அறிவியலும் தொழில்நுட்பமும் அபார வளர்ச்சி கண்டு உலகத்தின் வளர்ச்சிப் போக்கில் புரட்சிகரமான மாற்றத்தை நிகழ்த்தி வருகின்றன. இந்த வளர்ச்சிப் போக்கின் தாக்கத்தால் முன்னேறிய நாடுகளின் சமூக, பொருண்மிய வாழ்வும் பிரமிக்கத்தக்க வகையில் மாற்றங்கண்டு வருகின்றது. இந்தப் புதிய யுகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாக விளங்குவது அறிவியல் தொழில்நுட்பக் கல்வியாகும்.

அறிவுசார் கல்வியின் வளர்ச்சியால் மாறிவரும் உலக சமூகத்துடன் ஒப்பு நோக்குகையில் எமது தேசத்தின் கல்வி நிலை மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. இதற்குப் பிரதான காரணி சிங்கள இனவாத அரச ஒடுக்குமுறையாகும். இந்த ஒடுக்குமுறை எமது தேசத்தின் ஆற்றலையும் சக்தியையும் முடக்கி வைத்திருக்கின்றது.

எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாக விளங்கும் கல்வித்துறையைச் சிதைத்துவிடச் சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முனைந்து வருகின்றது. சிங்கள மொழித்திணிப்பில் தொடங்கி, தரப்படுத்தல் என்றும், வெட்டுப்புள்ளி என்றும், காலத்திற்கு காலம் தமிழரின் கல்வியைச் சீர் குலைப்பதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது, இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் இந்தக் கல்வியழிப்புக் கொள்கை மிகவும் நுட்பமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இப்படியான அரச ஒடுக்குமுறையின் நெருக்குதல்கள் காரணமாக எமது கல்வித்துறை என்றுமில்லாதவாறு பெரும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கின்றது.

எதிரியின் பாரிய அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் எமது விடுதலை இயக்கமானது, தனது சக்திக் குட்பட்டதாக, சில ஆக்க வேலைகளைச் செய்து வருகிறது. பெரிய தொரு போருக்கு முகங்கொடுத் தவாறு. சமூக மேம்பாட்டிற்காக உழைப்பதில் பல இடர்பாடுகள் இருக்கவே செய்யும். விடுதலை வேண்டிப் போராடும் இனங்கள் இந்தப் பிரச்சனையை எதிர்கொள்வது இயல்பு.

எமது தேசம் விடுதலை பெற்று, நிலையான அமைதியும், உறுதியான அரசும் தோன்றும் பொழுதுதான் நாம் எமது சமூகப் பொருண்மிய வாழ்வை உயர்ந்த படிநிலைக்கு கட்டி எழுப்புவது சாத்தியமாகும். அப்பொழுதுதான் கல்வித்துறையையும் சீரானமுறையில் சீரமைத்து, எமது நாட்டின் நலன் பேணும் வகையில் மேம்பாடு செய்ய முடியும். தேசியக் கல்வித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த முடியும். அறிவியல், தொழில்நுட்பக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து எமது நாட்டை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்ல முடியும்.

எமது சமூகத்தின் ஒட்டுமொத்தமான விடிவிற்கும் விமோசனத்திற்கும் தேசிய விடுதலை அத்தியாவசியமானது என்பதை நான் வலியுறுத்தத் தேவையில்லை. கல்வி உட்பட சகல சமூக அமைப்புக்களையும் ஒரு உன்னதமான வளர்ச்சிப் போக்கில் உயர்நிலைக்கு நகர்த்திச் செல்வதாயின் நாம் சுதந்திர மனிதர்களாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் உரிமை பெற்றவர்களாக, இறைமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதனால்தான் தேசிய விடுதலையை எமது பிரதான இலட்சிமாக வரித்துக் கொண்டு நாம் போராடுகிறோம்.

இன்று நாம் ஒரு போர்ச்சூழலில் வாழ்கிறோம். இந்தப் போர்ச் சூழலில், எமது தேசிய வாழ்விற்கும் வளத்திற்கும் அடித்தளமாக சமூக நிறுவனங்கள் சிதைந்து போகாமல் பாதுகாப்பது எமது முதன்மையான பணியாக இருக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு எமது விடுதலை இயக்கம் ஆக்கபூர்வமான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. குறிப்பாக கல்வித்துறையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் உருப்படியான முயற்சிகளை முன்னெ டுத்து வருகின்றோம்.

(08.04.1994 அன்று தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி விடுத்த அறிக்கையில் இருந்து)


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


TRANSITIONAL GOVERNMENT OF TAMILEELAM
தியாக தீபம்
லெப். கேணல் திலீபன்
அவர்களின் நினைவாக
நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின்
ஏற்பாட்டில்
11 வது ஆண்டு
கோடை கால
விளையாட்டு விழா
2026
இம் முறை:
02.08.2026
SPORTS CATEGORIES
FOOTBALL
VOLLEYBALL
SOFTBALL CRICKET
NETBALL
KIDS GAMES
CARROM
TRADITIONAL GAMES
SAVE THE DATE!
Let's compete, unite, and achieve!
07577996966 / 07950499567 / 07578086782 / 07771648257


K
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
பிறந்தநாள்
பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal
Non- Bridal
Saree Pleating &
Draping
Hair Flowers &
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# நேற்று இன்று நாளை



தங்கத் தகடடித்து தகதகக்கும் வானமது
மஞ்சள் குளித்து மகிழும் பொன்மாலையிலே
சூடாறிக் கொண்ட சூரியன்போய்
மிகவிரைவாய்;
தேரேறி மேற்குத் திசைபார்த்து செல்லுகின்ற
நேரமதில்
பச்சை நிறமான நெல்வயலில்
ஈரம்சுவற,
இடுப்பொடியப் புல்பிடுங்கி;
மீளும் இளம் பெண்கள் மிடுக்காய் நடைபயில்வர்
ததும்பி வழிகின்ற
தாமரைப்பூவும் பொய்கையதில்
குவிந்து,
ஊர்ச்சிறுவரெலாம் குதித்துக் கலக்கிடுவர்.
மாடெல்லாம் மேய்ந்து மடிநிரப்பி;
வரம்பேறி
வீடுதிரும்ப வெளிக்கிட்டு உடல்நெளிக்கும்.
"அரசவெளி அம்மன்" ஆலயத்து பூசைமணி
தரவை வயல்கடந்து தாவி;
ஊர் எல்லைவரை,
விரையும்.
நீரள்ளி வீடேகும் சிற்றிடையார்
காற்சலங்கையோசை கல்லொழுங்கை மீதிருந்து
மேற்கிளம்பி,
இளசுளின் மேனியிலே கிளுக்கிண்டும்.
விழுதெறிந்த ஆலவிருட்சத்தின் கீழிருந்து
பொழுதுபடும் வரையும் பேசிக்கழிக்கின்ற;
கிழடுகளும் மெல்லக் கிளம்பி நடைபயில்வர்.
தோட்டக்கிணற்றின் துலா அசையும்.
பாட்டுவரும்,
காட்டுக் கொடிசிலிர்த்து கண்மலரும்.
சில்லென்று,
கற்றைக் குழல்கலைத்து காற்றுவந்து விளையாடும்.
அற்புதமாய் எல்லாம் அழகொளிரும்,
கிராமத்து;
வற்றா எழில் கவிதை வரம்புக்குள் சிக்காது.
நேற்றிருந்த வாழ்வை நினைத்தால்...
நெஞ்சத்தில்;
தீப்பிடித்துக் கொள்ளும்.
தித்தித்த வாழ்க்கையினி
எப்போது?
எங்களுக்கு ஏனிந்தத் தண்டனைகள்?
கப்பிக்கிடக்கும் இருள் கலைவதினி எக்காலம்?
குயிலிருந்து பாடிய எம்கொம்புகளில்
மீண்டுமினி
குயிலிருந்து பாடிக் குதூகலித்தல் எப்போது?
எறிகணையும்;
குண்டு ஏற்றிவந்து வீசுகின்ற
வெறிகொண்ட "புக்காரா" விமான இரைச்சலதும்;
குழிவிழுந்த வீதிக் குலுக்கல் பயணமதும்,
வழிதெரியா கும்மிருட்டு வாழ்வும்,
பசிவயிறும்;
பஞ்சுவிளக்கும், பயம் பிடித்த முகங்களதும்,
பிஞ்சில் சொரிகின்ற பிணியும்,
எம்மண்ணிருந்து
என்றகலும்?
எல்லாம் எழிவாதல் எப்போது?
அஞ்சற்க!
எங்கள் அடுத்த தலைமுறைக்குள்
"நஞ்சணிந்தவீரர்" நாடமைப்பார்.
நடக்கின்ற
வெஞ்சமர வென்று வீதியெங்கும் முரசறைவர்,
வேலியொன்று போட்டு வெறிநாய்கள் உட்புகுந்து
காலில் கடிக்காமல் காவலுக்கு நின்றிருப்பர்.
தென்றல் தடவிச் செல்லும்.
திசையெங்கும்
கன்றெல்லாம் துள்ளும்.
கறவையெலாம் பால்சொரியும்.
நாதஸ்வரத்தோடு
தவில் வீணை மத்தளங்கள்
பேசும்;
மரங்களெலாம் புதிதாய் துளிர்த்துவரும்
பூசுமஞ்சள் கரைந்து பொன்னாறு ஓடுதல்போல்
வாசம்சுமந்து வழிநடக்கும்.
வீதியெங்கும்;
காற்சலங்கை மீண்டும் கலகலக்கும்.
பூமரங்கள்
பூத்துச் சொரியும்.
"புலம்பெயர்ந்த குருவி" யெல்லாம்
கூடுதிரும்பும்
கோயிலெல்லாம் கொடியேறும்.
நாடுதிரும்பி நம்கையில் வந்ததென்று
பாடும் குரலெல்லாம் பரவும்.
அஞ்சற்க!

*புதுவை இரத்தினதுரை*
*எரிமலை டிசம்பர் 1994*

**RECOGNISE LIBERATION TIGERS OF**
**THAMIL EELAM**
**AS A LIBERATION ORGANISATION**




# மணலாற்றில் புலிகள் – இந்திய யுத்தம்





## செக்மேற்–01

ஒழுக்கம், கட்டுப்பாடு, உண்மை, வேகம், விவேகம், சுதந்திரப் பற்று, மானம் அனைத்தும் ஒருங்கே பெற்ற எமது தலைவர், காலத்தின் தேவை கருதி மணலாற்றுக் காட்டிற்கு வந்திருந்தார். யாழ்ப்பாணத்தில் போர் தொடங்கிய பின்னர் மணலாற்றுக் காடுகள், தலைவரையும் அவர் வளர்ப்புக்களையும் வரவேற்று நின்றன.

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட இந்தியப் படைகளை எதிர்த்துச் சண்டை செய்ய எம்மிடம் ஆட்பலமோ ஆயுதபலமோ இல்லையென்றாலும், தளராத மனஉறுதி இருந்தது. இந்த மனப் பலத்தினால் இந்தியப் படையினை நிலை கலங்கவைக்க முடியுமென்பதை, எம் தலைவர் உணர்த்தினார். புதிய இடம், திசைதெரியாத காடு; ஆனாலும், தன் புதல்வர்களை மறைத்துக் காத்த பெருமையில் உயர்ந்து நின்றது மணலாறு.

புலித்தலைவனும், அணியும் மணலாற்றுக் காட்டிற்குச் சென்றுவிட்டதை இந்தியப் படை தெரிந்துகொண்டது. மிகவேகத்தில், மணலாற்றுக் காட்டினைச் சுற்றி ஏழு இந்தியப் படை முகாங்கள் - வான்படை இறங்கு தளவசதிகளுடன் - அமைக்கப்பட்டன. சிறப்புக் கட்டளைத் தலைமைத்தளம் நித்திகைக்குளப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டது. நாற்பதினாயிரத்துக்கு மேற்பட்ட துரப்புக்கள் இம் முகாங்களில் குவிக்கப்பட்டன.

தாக்குதலுக்கான முற்றுகை ஆரம்பமாவதனைத் தலைவர் கணித்துக் கொண்டார். அனைத்து வீரர்களுக்கும் நம்பிக்கை மிக்க யுத்ததந்திர முறைகளைத் தெளிவுபடுத்தினார். “இக் காடுதான் எங்களின் இறுதித் தளம் இங்கிருந்து வெளியேறும் எண்ணம் இருக்கக்கூடாது; வாழ்வாயினும் சாவாயினும் இங்குதான் முடிவு எழுதப்படும்” என்ற உறுதியான முடிவை வீரர்களுக்கு தெளிவுபடுத்தினார். தலைவன் தாரக மந்திரம் எம் வீரர்களைப் பம்பரமாக்கியது; எந்த வல்லரசையும் எதிர்கொள்ளும் மனவலிமையைக் கொடுத்தது.

1988ஆம் ஆண்டு வைகாசித் திங்களில் யுத்தமேகங்கள் கருக்கொண்டன மணலாற்றுக் கிராமங்களில் வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. மணலாற்றுக் கிராமங்களையும் காட்டினையும் இருவலயங்களாக இந்தியத் துருப்புக்கள் சுற்றிவளைத்தன. காட்டிற்குள் நுழையும் நோக்கில் வேறோர் படைப் பிரிவு நகர்ந்தது.

எண்ணிக்கையில் எமது வீரர்கள் குறைவாக இருந்தாலும், அளவற்ற மனபலம் அவர்களிடமிருந்தது. அந்தப் பலத்தோடு முற்காப்பு காவலரணில் சண்டையைத் தொடக்கினர். சண்டையின் தொடக்கமே மூர்க்கத்தனமாக இருந்தது. சுதந்திர தாகம் எம் வீரர்களின் நெஞ்சில் ஊறியது. தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் இந்திய ஜவான்கள் பின்வாங்கி ஓடினர்.

மணலாற்றுக் காட்டில் விடுதலைக்கான முதல் உயிர் அர்ப்பணமாகியது. 2ஆம் லெப். ஜீவன், தான் நிலையெடுத்துக் கிடந்த இடத்திலிருந்து சற்றும் பின்வாங்காது - எதிரியை விரட்டிவிட்ட பெருமையில் - கண்மூடிக் கிடந்தான். அன்று மாலை இந்திய வானொலி, “பருப்பு பொறுக்கி என்ற இடத்தில் புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில், 17 படைவீரர் - உயிர் இழந்தனர் முப்பதுக்கு மேற்பட்டோர் காயமுற்றனர்” எனச் செய்தி வெளியிட்டது.

23ஆம் திகதி நடைபெற்ற சண்டையில் சற்றுப் பின்வாங்கிய துருப்புக்கள், அந்த இடத்திலேயே நிலையெடுத்துக்கொண்டனர். 24ஆம் திகதி காலை மீண்டும் சண்டை தொடங்கியது. இந்திய வான்படைக் ‘கெலிக்கொப்டர்’கள் வானில் சுற்றிப் பறந்த வண்ணமிருந்தன. காட்டிற்குள் பிரவேசிக்க வேண்டுமாயின், ‘சந்தனம் சுட்ட பரவை’ வெட்டையினைக் கடக்க வேண்டும்.







காட்டுக் கரையில் நிலையெடுத்துக் கிடந்த குட்டி, நூற்றுக்கு மேற்பட்ட இந்தியத் துருப்புக்களின் முன்னேற்றத்தை, தனது துப்பாக்கியால் தடுத்து நிறுத்தியிருந்தான். வெளியான அந்தப் பிரதேசத்தில் எழுந்து ஓடிவர நினைக்கும் ஒவ்வொரு துருப்பினரும் குட்டியின் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகினர்.

சண்டை நடக்கும் இடத்துக்கு எமது வீரர்கள் விரைந்தனர். குட்டியின் “துப்பாக்கியில் ரவைகள் தீர்ந்துவிட்டன. கடைசி ஒரு ரவை மட்டும் எஞ்சியிருந்தது. தான் உயிருடன் பிடிபட்டால் விளைவு எந்தளவு பாரதூரமானதாக இருக்குமென்பதை அவன் உணர்வான். இதனால் அந்தக் கடைசி ரவையில் தன் முடிவைத் தீர்மானித்துக் கொண்டான். துப்பாக்கியின் சுடு குழலைத் தன் தலைக்கு நேரே திருப்பிக்கொண்டான். சிந்தனைக்கு எட்டாத தியாகத்தை - அந்தக் கடைசி ரவையினால் எழுதிக்கொண்டான். உதவிக்கு விரைந்த எம் வீரர்கள் வந்தடையும்போது, குட்டி இரத்த வெள்ளத்துள் கிடந்தான். படையினர் பலரை இழந்தநிலையில் இராணுவமும் பின்வாங்கிக்கொண்டது. குட்டி யின் முடிவோடு, ‘செக்மேற் - 01’ என்ற, காட்டின் முதற் தாக்குதல் முடிவுக்கு வந்தது.



## செக்மேற் – 02

காட்டில் தமது முதல் நடவடிக்கை பற்றியும், அதன் தோல்விக்கான காரணங்கள் பற்றியும் இந்தியப் படைத் தளபதிகள் ஆராய்ந்து கணித்தனர். காட்டில் புலிகள் பலமாக இருப்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்டனர். “இதனால், மேலதிக படைப் பிரிவுகள் மணலாற்றுக்கு வருவிக்கப்பட்டன. அத்துடன் காட்டிற்கும் - கிராமங்களுக்கும் வெளிக்கிராமங்களுக்குமான இணைப்புப் பாதைகளில் போக்குவரத்துக்குத் தடையும் விதிக்கப்பட்டது; சிறிய வீதிகள், சந்துபொந்துகள் அனைத்தும் தடுக்கப்பட்டன. பட்டினி போட்டுப் புலிகளைப் பணியவைக்கலாமென்ற தவறான கணிப்பீட்டையும் அவர்கள் எடுத்திருந்தனர். தமது தடைகளையும் மீறி, மணலாற்றுக் கிராம மக்கள் புலிகளுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டுசென்று கொடுப்பதாகக் கருதினர். இதனால் மாட்டு வண்டி, சைக்கிள் வண்டிகள் கூட போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டன. 1 கிலோ அரிசிக்கு

மேல் ஒருவர் கொண்டுசெல்வதும் தடைசெய்யப்பட்டது. மணலாற்றுக் கிராமங்களில் இருந்த சிறிய கடைகளில், பொருட்கள் ஒவ்வொரு நாளும் இந்தியப் படையால் கணக்கிடப்பட்டன. பல மாதங்களாக இத்தடைகள் இறுக்கமாக மேற்கொள்ளப்பட்டன.

1989ஆம் ஆண்டு பங்குனித் திங்களில், இரண்டாவது முற்றுகை ஆரம்பமானது. இம்முற்றுகைக்கு முந்திய இடைக்காலத்தில், குமுழமுனை கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோயில் மலையில் இருந்த படை முகாமிலிருந்து, காட்டின்மீது தொடர்ச்சியான ‘ஆட்லறி’வீச்சு இடம்பெற்றது. பெரும் யுத்த முனைகளில் வீசப்பட்டதுபோல், மணித்தியாலமொன்றிற்கு 260 ற்கு மேற்பட்ட ‘ஆட்லறி’ எறிகணைகள் வீசப்பட்டன. இந்திய விமானப் படை ‘கெலிக் கொப்டர்’கள், 250 கிலோ எடைகொண்ட குண்டுகளை நாள் தப்பாது வீசின. இவற்றினைத் தொடர்ந்து காட்டின் வெளியே சுற்றிவர - பல ஆயிரக் கணக்கான படைகள் சங்கிலித் தொடராய் நிலையெடுத்துக் கொண்டன. காட்டினைச் சூழ்ந்த கிராமங்களிலும் இத்தகைய முறையில் படைகள் நிலையெடுத்துக் கிடந்தன.







பங்குனித் திங்கள் 2ஆம் நாள், காடுநோக்கித் துருப்புக்கள் நகரத் தொடங்கின. காட்டிலிருந்து உணவுப் பொருட்களைச் சுமந்துசெல்ல ஆற்றங்கரைக்கு வரும் எமது வீரர்கள், அன்று வருவதற்குச் சற்றுத் தாமதமாகியிருந்தனர்.

மாலை ஐந்து முப்பது மணியளவில், ஆற்றங்கரையின் மறுபுறத்தில், நீண்ட வரிசையில் படைகள் நகர்வதை, காட்டுக் கரையில் அமைந்திருந்த முற்காப்பு அரணில் நின்று எம் வீரர்கள் அவதானிக்க முடிந்தது. மெதுவாக இருள் சூழும் நேரம், உணவுப் பொருட்களைச் சுமக்கச் சென்ற எமது அணியுடன் சண்டை ஆரம்பமாகியது. எதிர்பார்த்த இடத்துக்கு முன்பாகவே தொடங்கியதால், இந்தியத் துருப்புக்கள் சிதறி ஓடின் இவ்வாறு சிதறிய படையினரை ஒன்றிணைப்பதில் இந்தியப் படைத் தளபதிகள் சிரமத்துக்குள்ளாயினர். இதனால், அன்று இரவு முழுவதும் வெளிச்சக் குண்டுகளை வானத்தில் வீசி, தாம் நிற்கும் இடங்களைக் காட்டவேண்டியதாயிற்று.

ஒன்றன்பின் ஒன்றாக வந்த தமது ‘ஆட்லறி ‘ எறிகணைகளுக்கு, தாமே தப்பித்துக்கொள்ள வேண்டிய அவசியமேற்பட்டது. தொடர்பு சாதனங்கள் தொடர்பற்றுப் போனதால், இரவிரவாக எங்கும் அவர்களின் குரலாகவேயிருந்தது. விடியுமுன் எப்படியோ ஒன்றுசேர்ந்தனர். மேலும் சில படைப் பிரிவுகள் உதவிக்கு வந்ததால், புதிய சண்டை ஆரம்பமாயிற்று. பகல் முழுவதும் சண்டை நடைபெற்றும் காட்டிற்குள் பிரவேசிக்கும் முயற்சி கைகூடாமையினால் ‘செக்மேற் -02’ என்ற தமது இரண்டாவது நடவடிக்கையினை முடித்துக் கொண்டனர். ஆனால் ‘ஆட்லறி வீச்சும், வான்தாக்குதலும் நிறுத்தப்படவேயில்லை. நாற்பதுக்கு மேற்பட்ட துருப்புக்களை இந்த நடவடிக்கையில் இந்தியப் படை இழந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



## செக்மேற் – 03

பெரும் எண்ணிக்கையில் தமது துருப்புக்கள் பலியாகியமை இந்தியத் தளபதிகளுக்குச் சினத்தை ஊட்டியது. இதனால், மிக விரைவாக தமது அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் திட்டமிட்டனர். மணலாற்று படைத்தளங்களிலிருந்த துருப்புக்கள் மாற்றப்பட்டு, ‘குர்க்காஸ் ‘ படையினர் வருவிக்கப்பட்டனர். இவர்கள், “எடுத்த கத்தியை ரத்தம் காணாது உறையில் இடாத குர்க்காஸ் படையினர்” என்ற புகழ்பெற்றவர்கள்.

பங்குனித் திங்கள் 22 ஆம் நாள் கேணல் பஸ்கி தலைமையில், குர்க்காஸ் படைப்பிரிவு தாக்குதலில் இறங்கியது. வரிந்து கட்டிக் கொண்டு வந்த வேகத்தில் காட்டில் புகுந்தனர் அதே வேகத்தில் வாங்கிக் கட்டினர். இறந்த வீரர்களைப் புதைக்க நேரமின்றி விழுந்த துப்பாக்கிகளையும், எறிந்த கத்திகளையும் எடுக்க மறந்து, கால்போன போக்கில் திசைமாறி ஓடினர். ஓடிய திசையெல்லாம் மிதிவெடிகள் வெடித்தன. பிடித்த மரம் எல்லாம் வெடித்துப் பிளந்தது் படுத்த புற்றெல்லாம் நெஞ்சை சிதைத்தது. எங்கு போகிறோம் என்பதை மறந்து ஓடியது குர்க்காஸ் படை..

கேணல் பஸ்கியையும் பறிகொடுத்து, நாற்பதுக்கு மேற்பட்ட கத்திகளையும் பறிகொடுத்து, இறந்த தம் சகாக்களை ஒரு அடி ஆழத்தில் கூட கிண்டிப் புதைக்க நேரமின்றி, பத்துப் பன்னிரண்டு சிப்பாய்கள் மட்டுமே தப்பியோடினர். பஸ்கியின் உடலையும் ஒன்பது சிப்பாய்களின் உடலையும் எமது வீரர்கள், இராணுவ மரியாதையுடன் அடக்கம்செய்தனர், இன்னும் அந்த. இடத்தில் அழியாத சுவடுகள் சில இருப்பதைக் கண்டுகொள்ள முடியும்.

- வணங்காமண்: -மணலாறு விஜயன்




www.sangathamil.com




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# சாம்பல்தீவு படுகொலை 04,09.08.1985

திருகோணமலையிலிருந்து தமிழ்மக்களை விரட்டும் நோக்கத்துடன் 04.09.1985க்கும் 09.09.1985க்கும் இடைப்பட்ட காலத்தில் பெரிய எடுப்பில் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சிறீலங்கா அரசின் முப்படைகளும் பொதுமக்கள் மீதான இந்நடவடிக்கையில் ஈடுபட்டன.

ஊர்காவற்படையும், சிறீலங்கா இராணுவத்தினரும் கனஆயுதங்களுடன் மத்திய வீதி, ஏகாம்பரம் வீதி, வீரநகர், திருக்கடலூர், உப்புவெளி, 3ம் கட்டை, நாவலர் வீதி ஆகிய இடங்களில் இறங்கித் தமிழரை தாக்கத் தொடங்கினர். 1500 வரையான வீடுகளும், சிவானந்தம் தபோவனம் எனப்படும் 200 சிறுவர்களை பராமரித்து வந்த சிறுவர் இல்லமும், பல கடைகளும் அழிக்கப்பட்டன. தமிழ் மீனவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள் சூறையாடப்பட்டது. 25க்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஊடகவியலாளர்கள் எவரும் இவ்விடங்களுக்குச் செல்ல அநுமதிக்கப்படவில்லை.

அப்போது பிரஜைகள் குழுத் தலைவராக இருந்த பாடசாலை அதிபர் ஒருவர் எழுதிய அறிக்கையின்படி யூன் 1985இல் மட்டும் 311 பொதுமக்கள் திருகோணமலையில் கொல்லப்பட்டுள்ளனர். செப்டம்பர் மாதத்தில் 383 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இவ்வறிக்கைபற்றி யாழ்பாணத்திலிருந்து அக்காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த 21.12.1985 சற்றடே ரிவ்யூ பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# பூந்தோட்டச்சந்தி படுகொலை 10.08.1985

வவுனியா நகரிலிருந்து கிழக்கே மூன்று கி.மீ. தூரத்தில் பூந்தோட்டம் அமைந்துள்ளது. வயல்களாற் சூழப்பட்ட இக்கிராமத்தில் அதிகமானவர்கள் விவசாயிகளாவர்.

10.08.1985 அன்று காலை 7மணியளவில் வழமைபோல் மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சந்தைக்குப் பொருட்கள் வாங்க மற்றும் விற்கச்செல்வோர், வைத்தியசாலைக்குச்செல்வோர், பாடசாலை செல்வோர் எனப் பூந்தோட்டம் வீதியால் அதிகளவான மக்கள் பயணம் செய்தனர். அந்த நேரம் அவ்வீதியால் வாகனத்தில் வந்த காவற்றுறையினர் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் பத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர்காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 வெள்ளையன் தேவதாஸ் - லொறி கிளினர் - 20
02 பொன்னம்பலம் வில்வராஜ் - வியாபாரம் - 22
03 கதிரேசு சுந்திரசேகரம் - மருந்துத் தொழிலாளர் - 25
04 சிங்காரம் நாகலிங்கம் - தொழிலாளி - 33
05 முனியாண்டி மூக்கன் - தொழிலாளி - 34
06 வீரமாரெட்டியர் கோவிந்தராஜ் - வியாபாரம் - 38
07 சின்னக்கருப்பன் கிட்ணசாமி - தொழிலாளி - 40
08 துரைராஜா நடேசபிள்ளை - உதவி முகாமையாளர் - 43
09 கறுப்பையா ராமராஜ் - வியாபாரம் - 48
10 கோவிந்தசாமி சிங்காரவேலு - கமம் - 63



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கள்ளம்பற்றைச் சந்தி படுகொலை 10.08.1985

திருகோணமலை மாவட்டத்தின் புகழ் பெற்ற இடங்களில் ஒன்றான திரியாய்க் கிராமம். திருகோணமலையிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. 1985ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிப்படைந்த மக்கள் அகதி முகாம்களிற் தஞ்சமடைந்திருந்தனர்.

முகாமிற்கு வந்த இராணுவத்தினர் வன்முறைகளால் இடம் பெயர்ந்து வந்திருந்த மக்கள் ஒன்பது பேரைக் கைது செய்து அழைத்துச் சென்றார்கள். இவ்வாறு கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட மக்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக கள்ளம்பற்றைச் சந்தியிலிருந்து மீட்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இடம் பெயர்ந்து வந்த தமிழர்கள் ஆவர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 நாராயணன் ஜெகநாதன் - கல்லுடைத்தல் - 48
02 சுப்பிரமணியம் நாராயணபிள்ளை - கிராமசேவகர் - 45
03 மாணிக்கம் கிருஸ்ணமூர்த்தி - -
04 நாகேஸ் --



நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# வல்வைப் படுகொலைகள்








# 02, 03, 04. 08.1989

தமிழர் உரிமைப் போராட்டத்தின் திருப்பு முனையாக ஏற்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் (யூலை 29.1987) விளைவாக இலங்கைக்கு வந்த இந்தியப் படைகள் (IPKF) ஏற்கனவே திட்டம் இட்டபடி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுத களைவு என்ற பெயரில் ஒரு முழு யுத்தத்தினையே நடத்தத் தொடங்கின. வேறு வழிவகை அறியா தமிழீழ விடுதலைப் புலிகளும் மக்கள் ஆதரவினை மட்டும் நம்பி உலகின் நாலாவது பெரிய இராணுவத்தினை எதிர்த்து போர்புரிந்துவெற்றியும் பெற்றனர்.

இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் முடிந்து அந்தப் பிரதேசத்தை விட்டு இராணுவம் முகாம்களுக்குத் திரும்பிய பின் வல்வெட்டித்துறைக்குச் சென்று பார்த்தவர்களால், அங்கு நடைபெற்று முடிந்த கொடூரங்களை ஜீரணிக்க முடியவில்லை.

இந்தப் படுகொலைகளின் பொழுது, ஆண், பெண், முதியோர், குழந்தைகள் என்ற வேறுபாடுமின்றி அங்குமிங்குமாக 71 பொதுமக்கள், சுட்டும், வெட்டியும், எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர். இதில் பலர் நிலத்தில் முகங் குப்பறப் படுக்கவைக்கப்பட்ட நிலையில் முதுகில் சுடப்பட்டிருந்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் காயமடைந்திருந்தனர்.

ஒரு நாளில் யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றுவோம் என சொன்ன இந்திய அமைதிப்படையினர் யாழ்பாணத்தினைக் கைப்பற்ற 1 மாதம் எடுத்தது.

யாழ்ப்பாணத்தினை கைப்பற்றிய பின்பு ஏனையபகுதிகளையும் கைப்பற்றிய இந்தியப் படைகள் 200 மீட்டருக்கு ஒன்று என்று ரீதியில் முகாம்களை அமைத்தது. புலிகளும் தமது பிரதான முகாம், தலைமை என்பனவற்றை வன்னிக்கு மாற்றிவிட்டு மற்றைய பகுதிகளில் தமது குறிப்பிட்டளவு போராளிகளை நிறுத்தியிருந்தனர். தினமும் எதாவது ஒரு பகுதியில் போராளிகளைத்தேடும் இந்திய இராணுவத்தினருக்கும் போராளிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம் பெற்ற வண்ணமே இருக்கும்.

இப்படி தான் 1989 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 2ந் திகதி வல்வெட்டித்துறையில் இருக்கும் ஊரிக்காடு, பொலிகண்டி இராணுவ முகாம்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்குடன் புறப்பட்டனர் இந்தியப் படையினர். இந்த இந்திய இராணுவவீரர்களுக்கு தலைமை தாங்கியது. முறையே மேஜர் சுதர்சன் சிங், கப்டன் கோபாலகிருஸ்ன மேனன், கப்டன் கபூர் என்போராவார். இவர்களை எதிர் கொண்டு புலிகள் நடத்திய தாக்குதலில் 09 சீக்கிய சிப்பாய்கள் கொல்லப்பட ஆயுதம் தாங்கிய புலிகளை அழிக்க திராணியற்ற இந்திய படைகள் அப்பாவி மக்கள் மீது தனது வெறியாட்டத்தினை வழமை போல தொடங்கியது.

ஓகஸ்ட் 2 ந் திகதி இச் சம்பவம் நடைபெற 3,4 திகதிகளில் வல்வெட்டித்துறையிலும் அதைச் சூழ உள்ள பகுதிகளிலும் ஊரடங்கு சட்டத்தினை பிரகடனப்படுத்திவிட்டு வெறியாட்டம் ஆடினர். யாருமே வல்வெட்டிதுறைக்குள் போகவே, அங்கிருந்து தப்பி வரவோ முடியவில்லை. வெறியாட்டம் முடிந்து இந்திய இராணுவம் முகாம்களுக்கு திரும்பிய பின் வல்வெட்டித்துறைக்கு சென்றுபார்த்தவர்களால் நடைபெற்ற கொடூரங்களை ஜீரணிக்க முடியவில்லை.





63 பொதுமக்கள் சுட்டும் ,வெட்டியும், எரித்தும் கொல்லப் பட்டிருந்தனர். இதில் பலர் நிலத்தில் கிடத்தி முதுகில் சுடப்பட்டிருந்தனர். ஆண், பெண், முதியோர் வேறுபாடு இன்றி.

100 பேர் அளவில் காயமடைந்திருந்தனர்.

123 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன.

45 கடைகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்டன.

வல்வை சனசமூக நிலையம் (நூலகம்) தீயிடப்பட் டிருந்தது. பல ஆயிரக்கணக்கான நூல்கள். தளபாடங்கள் கொழுத்தப்பட்டிருந்ததுடன் நூலகத்தில் இருந்த காந்தி, நேரு, நேதாஜி, இந்திராகாந்தி போன்ற தலைவர்களின் படங்கள் கூட நொருக்கப் பட்டு தீயிடப்பட்டு இருந்தன.

176 மீன்பிடி வள்ளங்கள் எரிக்கப்பட்டன.

இக்கோர தாண்டவம் பற்றி எந்த ஒரு இந்திய ஊடகமும் செய்தி வெளியிடவில்லை. இன்று கூட எத்தனை இந் தியருக்கு இது பற்றி தெரியும் என்பது கேள்விக் குறியே?

வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் நடத்திய படு கொலைகள் பற்றி பழ. நெடுமாறன் அவர்களால் எழுதப்பட் டவை கீழ் வருமாறு :
தம்பி பிரபாகரன் அவர்களையும் மற்றும் பல புலிகளையும் பெற்றெடுத்த ஊர் என்பதனாலும், இவ்வூர் மக்கள் அனை வருமே புலிகளுக்கு முழுமையாக ஆதரவு தந்தவர்கள் என்பதனாலும் வல்வெட்டித்துறை மீது இந்திய ராணுவ அதிகாரிகளுக்கு மிகுந்த கோபம் இருந்தது. அந்தக் கோபத்தை அவர்கள் தீர்த்துக் கொண்ட விதம் மிகக் கொடூரமானது.

1919ம் ஆண்டு, ஏப்ரல் 13ம் நாள் இந்தியாவில் அமிர் தசரஸ் நகரத்தில் ஜாலியான்வாலாபாக் படுகொலை நடந் தது. மைதானத்தில் கூடியிருந்த அப்பாவிப் பொது ஜாலியான் வாலாபாக் படுகொலை இந்திய மக்களை அன்று கொதித்தெழ வைத்தது. ஆனால், அதே இந்திய நாட்டைச் சேர்ந்த இராணும் வல்வெட்டித் துறையில் மற்றொரு ஜாலியன் வாலாபாக்கை நடத்திக் காட்டியது.

இந்திய இராணுவம் நடத்திய படுகொலைகளை இந்திய அரசு திட்டமிட்டு மறைத்தது. இந்தியப் பத்திரிகைகளுள் பெரும்பகுதி இச் செய்தியை மறைப்பதில் ஒத்துழைப்புக் கொடுத்தன.

ஆனால், வல்வெட்டித்துறையில் இச்சம்பவம் நடந்த 13 நாள்களுக்குப் பிறகு அங்கு சென்ற இலண்டன் "பெர்னாண்டஸியல் டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவத்தைப் பற்றிய விவரங் களை முதன் முதலாக ஆகஸ்ட் 17ம் நாளன்று அவரது பத்திரிகைகளில் இச் செய்தி வெளிவந்தது. பரபரப்பாக வெளி வந்த பிறகு செப்டம்பர் 3ம் நாள் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" சிறிய அளவில் இச் செய்தியை வெளியிட்டது.



## இந்திய இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு பலியான 63 பொதுமக்கள்



எங்கும் சடலங்கள், அவல ஓலங்கள், தீக்கொழுந்துகள், காயமடைந்த, கொல்லப்பட்ட உறவினர்களின் அவலக் குரல்கள். காலங்கள் பல சென்றாலும் இன்றும் வல்வெட்டி துறை மக்களின் மனங்களில் இரண வடுவாக அச்சம் பவம் இருந்து வருகிறது. ஒரே குடும்பத்தில் 3 பேர் கூட கொல்லப்பட்டிருந்தனர். வல்வெட்டிதுறையில் நடைபெற்ற மக்களைப் பிரித்தானிய இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டுப் படுகொலை செய்தது. அந்தப் படுகொலையைத் தலைமை தாங்கி நடத்திய பிரித்தானிய ஜெனரல் டையர் "சுட்டேன், சுட்டேன் குண்டுகள் தீரும் வரை சுட்டேன்" என்று கொக்கரித்தான்.

இந்த முறை வல்வெட்டித் துறைக்கு நான் சென்ற போது இந்தப் படுகொலைகள் பற்றிய முழு விவரத்தையும் அறிந்து கொள்ள முயற்சி செய்தேன். வல்லவை மக்கள் குழுவின்தலைவர் எஸ்.செல்வேந்திரா, செயலாளர் ஆனந்தராஜ், பொருளாளர் நடன சிகாமணி உட்பட பலரை



இந்திய இராணுவத்தினால் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு பலியான பொதுமக்கள்.













# The IPKF in Thamileelam



நான் சந்தித்துப் பேசினேன். இப்படுகொலைகள் நடைபெற்று ஏறத்தாழ ஆறு மாதங்களுக்குப் பிறகு கூட அந்த அதிர்ச்சியில் இருந்து வல்வை மக்கள் மீளாததை நான் பார்த்தேன்.

1989ம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் நாள் வல்வெட்டித் துறை சந்தைச் சதுக்கத்தில் காலை 11 மணிக்கு யாரும் எதிர் பாராத விதமாக விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அதில் 6 இந்தியப் படை வீரர்கள் இறந்ததுடன் 11 பேர் காயம் அடைந்தனர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து வல்வெட்டித் துறையைச் சுற்றி இருந்த மூன்று இராணுவ முகாம்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் வெறியுடன் புறப்பட்டு வந்து வல்வெட்டித் துறையைச் சுற்றி வளைத்தனர். உடனடியாக ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினர். தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு ஊரடங்குச் சட்டம் நீடிக்கப்பட்டது. வீடுகளை விட்டு வெளியே வராமல் அச்சத்துடன் பதுங்கியிருந்த மக்களை வீட்டுக் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்து பதறப் பதறச் சுற்றுக் கொன்றார்கள். மொத்தம் 63 பேர் இவ்விதம் படுகொலை செய்யப்பட்டனர்.

நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்களுக்கு மருத்துவ உதவி செய்வதற்கு முன் வந்த பிரான்சு மருத்துவக் குழுவினரை ஊருக்குள் நுழையவே இந்திய இராணுவம் அனுமதிக்கவில்லை. தொடர்ந்து மூன்று நாள்களாக இராணுவத்தினர் ஊரைச் சுற்றி முற்றுகையிட்டு இருந்ததால் இறந்து போனவர்களின் பிணங்களைக் கூட அப்புறப்படுத்த முடியவில்லை. பிணங்கள் அழுகிப் போன நிலையில் அந்தந்த வீடுகளுக்குள்ளேயே வைத்து உறவினர்களால் எரிக்கப்பட்டனர். கணவர் உடலை மனைவியும், மனைவியின் உடலைக் கணவரும் பெற்றோர் உடலைப் பிள்ளைகளும் பிள்ளைகளின் உடலைப் பெற்றோரும் எரிக்க வேண்டிய அவலத்திற்கு ஆளாயினர்.

கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (இல பெயர் தொழில் வயது)

01 இராஜலிங்கம் சதீஸ்குமார் - மாணவன், 18
02 இராசையா இராஜரட்ணம் - கடற்தொழில், 33
03 இராமச்சந்திரன் நவரத்தினம் - வியாபாரம், 26
04 இராசகுரு யவனராஜ் - மாணவன், 13
05 இராசகுரு புஸ்பராணி - வியாபாரம், 45
06 இராசா ஜெயமயில் - வியாபாரம், 20
07 இராசமாணிக்கம் நடராசா - தபாலதிபர், 62
08 ஈஸ்வரமூர்த்தி இராசலட்சுமி - 24
09 நாகராசா ஞானகுலசிங்கம் - கடற்தொழில், 22
10 நாகலிங்கம் பவப்பிருந்தா - மாணவி, 14
11 நடராசா நல்லமுத்து - வீட்டுப்பணி, 72
12 நடராசா சிவகுமாரன் - மாணவன், 25
13 நடராசா ரவீந்திரன் - கடற்தொழில், 31
14 நல்லரெத்தினம் பானுகோபால், - இரும்பு வேலை, 23
15 கந்தசாமி தங்கராசா - வியாபாரம், 70
16 கந்தசாமி வேலும்மயிலும் - தொழிலாளி, 45
17 கதிர்காமத்தம்பி சிவநேசராசா - வியாபாரம், 36
18 குமாரவேல் செல்வானந்தவேல் - மாணவன், 18
19 கணேசலிங்கம் சசி - குழந்தை, 01
20 குழந்தைவடிவேல் சண்முகவடிவேல் - தொழிலாளி, 37
21 குணரட்ணம் இராசசேகரம் - கடற்தொழில், 18
22 பாலகிருஸ்ணன் பிரேமதாஸ் - சாரதி, 20
23 பாலசுப்பிரமணியம் மகேந்திரதாஸ் - மாணவன், 15
24 பாலசுப்பிரமணியம் யோகேந்திரராசா - மீன்பிடித்தல், 28
25 பீற்றத் விஜயராஜன் கிருஸ்ணவதனா - வீட்டுப்பணி, 33
26 தளையசிங்கம் ஜெயமோகன் - கடற்தொழில், 18
27 தளையசிங்கம் சிவகுமாத் - கடற்தொழில், 21
28 துரைராசா நாகதாஸ் - மின்னியலாளத், 28
29 தங்கவேலாயுதம் ஜெயக்குமார் - மெக்கானிக், 20
30 தங்கவேலாயுதம் சாம்பசிவம் - கடற்தொழில், 18
31 தணிகாசலம் ரவிச்சந்திரன் - வியாபாரம், 28
32 முருகேசு செல்லத்துரை - சாரதி,
33 அப்பாத்துரை மதிவாணன் - வியாபாரம், 18
34 ஆதிஅருணாசலம் பராசர் - வியாபாரம், 20
35 ஆதிஅருணாசலம் பரம்சோதி - வியாபாரம், 18
36 ஆதிஅருணாசலம் சுந்தரேஸ்வரன் - மாணவன், 12
37 அமிர்தலிங்கம் உமாதேவி - 26
38 அருள்பிரகாசம் சுவர்ணதாஸ் - கடற்தொழில், 19
39 அருளப்பு இலங்கைநாதன் - கடற்தொழில், 22
40 அருணாச்சலம் இளையபெருமாள் - துறைமுக ஊழியர், 76
41 ஆறுமுகநாதன் இராமச்சந்திரன் - மேசன், 41
42 பொன்னுத்துரை இராசேந்திரம் - மீனவர், 23
43 பொன்னுத்துரை சண்முகலிங்கம் - சாரதி, 43
44 பொன்னம்பலம் றஞ்சிதகுமார் - கடற்தொழில், 25
45 பொன்னையா காளிதாஸ் - இரும்பு வேலை, 26
46 செந்திவேல் சக்திவேல் - கடற்தொழில், 24
47 சோதிலிங்கம் றமேஸ்குமார் - கடற்தொழில், 18
48 செல்லையா யோகராசா - கமம், 19
49 செல்வக்கதிரமலை மயில்வாகனம் - பரிசோதகர், 55
50 செல்வசுந்தர் தவசீலன் - மாணவன், 07
51 வெங்கடாச்சலம் சுப்பிரமணியம் - நிலஅளவை அதிகாரி,
52 வேலும்மயிலும் செல்வச்சந்திரன் - மாலுமி, 26
53 சுந்தரமூர்த்தி உமாசங்கர் - வியாபாரம், 22
54 சுந்தரலிங்கம் ஞானவேல் - கடற்தொழில், 21
55 சுப்பிரமணியம் அமுதன் - வர்த்தகர், 28
56 சுப்பிரமணியம் பேரின்பம் - மாணவன், 20
57 சின்னத்துரை தம்பித்துரை - கடற்தொழில், 60
58 சின்னத்தம்பி கணேசலிங்கம் - தொழிலாளி, 25
59 சின்னத்தம்பி சிவலிங்கம் - சீவல், 50
60 சின்னவன் கந்தன் - தொழிலாளி, 30
61 சிவப்பிரகாசம் சபாநாயகம் - வியாபாரம், 77
62 சிவபாக்கியம் கந்தசாமி - சலவைத்தொழில், 42
63 சிவலிங்கம் இராமநாதன் - சாரதி, 35
64 வடிவேலு குமாரசாமி - தொழிலாளி, 89
65 விஜயரட்ணம் முரளிதரன் - கடற்தொழில், 20











# திராய்க்கேணிப் படுகொலை 06.08.1990

1954ஆம் ஆண்டு அமரர் தர்மரட்ணம் என்பவரின் தென்னந் தோட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றக் கிராமம் திராய்க் கேணியாகும். திராய்க்கேணிக்கு கிழக்குப் பக்கத்தில் ஒலுவில் கிராமமும் தெற்குப் பக்கத்தில் பாலமுனையும் அமைந்துள்ளது. இக்கிராமம் அட்டாளைச்சேனை உதவிஅரசாங்க அதிபர் பிரிவின் கீழும் அக்கரைப்பற்று நீதிமன்று நியாதிக்கத்தின் கீழும் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முன்நூற்றெழுபதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் முன்நூற்றைம்பது வீடுகளில் வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் பிரதான தொழில் விவசாயமாகும்.

05.08.1990 அன்று திரியாய்க்கேணியில் வசித்து வந்த முசுலிம்களில் ஒருவர் காட்டுக்குச் சென்றவேளை மர்மமான முறையில் உயிரிழந்ததனைத் தொடர்ந்து 06.08.1990 அன்று அக்கிராமத்திலிருந்த நூறு-நூற்றைம்பது பேர் கொணட் முசுலிம் குழு திரியாய்க் கேணியிலிருந்த தமிழர்களைத் தாக்கினார்கள்.

தாக்கக் கத்தி, வாள், பொல்லு போன்ற ஆயுதங்களைப் பயன் படுத்தியதுடன், வீடுகளையும் அவர்களின் உடைமைகளையும் தீயிட்டு எரித்தார்கள். முசுலிம்களின் தாக்குதல் தீவிரமடைய கிராமமக்கள் அருகிலிருந்த பிள்ளையார் கோயிலில் அடைக் கலம் புகுந்தார்கள். கோயிலுக்குள் நுழைந்த முசுலிம் குழுக்கள் அடைக்கலம் புகுந்த மக்களை வாள்களால் வெட்டியும் கத்தி யாற் குத்தியும் தாக்கினார்கள். இவர்களின் தாக்குதலில் குழந் தைகள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் கொல்லப் பட்டனர்.

இவ்வாறு முசுலிம்கள் தாக்குதல் நடத்திக்கொண்டிருக்கும் போது கோயிலுக்கு வெளியில் சிறீலங்கா இராணுவத்தினர் பவள் கவச வாகனத்தில் தாக்குதல் நடத்துபவர்களிக்குப் பாதுகாப்பினை வழங்கிக்கொண்டிருந்தார்கள். எஞ்சியிருந்த நூற்றிஐம்பது குடும்பத்தினர் அகதி முகாமுக்குச் சென்றனர்.

தாக்குதலில் தொண்ணூறிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் தார்கள். நாற்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். முன்நூற்றுநாற்பதிற்கும் மேற்பட்ட வீடுகளும், எழுபது மில் லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியான சொத்துக்களும் எரிக்கப்பட்டன.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 இளையதம்பி மயிலாப்பொடி - -
02 இராமக்குட்டி மயில்வாகனம் - தொழிலாளி 18
03 இராசதுரை பிரகலா - -
04 நாகலிங்கம் தம்பிராசா - -
05 நல்லதம்பி புலேந்திரன் - தொழிலாளி 27
06 கனகரத்தினம் அழகையா - ஊழியர் 35
07 கனகரட்ணம் சுப்ரமணியம் - -
08 கந்தக்குட்டி பூபாலப்பிள்ளை - தொழிலாளி 19
09 கந்தக்குட்டி வேலாயுதம் - -
10 கா.பாஸ்கரலிங்கம் - தொழிலாளி 39
11 கா.சாமித்தம்பி - விவசாயம் 43
12 காந்தன் நவரட்ணம் - -
13 காளிக்குட்டி பாக்கியராசா - -
14 காளிக்குட்டி தம்பிப்பிள்ளை - -
15 கதிரன் கணபதி - -
16 கதிரன் பாக்கியராசா - தொழிலாளி 34
17 கணபதி காளிக்குட்டி - ஊழியர் 50
18 கணபதி காளிமுத்து - வைத்தியர் 45
19 கணபதிப்பிள்ளை கிருஸ்ணன் - -
20 கணபதிப்பிள்ளை அமிர்தலிங்கம் - -
21 பூபாலப்பிள்ளை புலேந்திரன் - தொழிலாளி 30
22 பூபாலப்பிள்ளை ஏகாம்பரம் - தொழிலாளி 24
23 தம்பியப்பா கோபால் - தொழிலாளி 50
24 தம்பிமுத்து ஆனந்தராசா - -
25 மு.கணபதி - தொழிலாளி 76
26 மா.குஞ்சித்தம்பி - தொழிலாளி 50
27 மா.ஜெயசீலன் - தொழிலாளி 24
28 மார்க்கண்டு கிருபை - தொழிலாளி 30
29 மார்க்கண்டு மயில்வாகனம் - -
30 மார்க்கண்டு ஜெயக்குமார் - -
31 முருகன் இளையதம்பி - தொழிலாளி 39
32 முருகேசு நாகேந்திரன் - தொழிலாளி 28
33 பொன்னன் அழகையா - தொழிலாளி 29
34 செல்லையா பாக்கியராசா - தொழிலாளி 26
35 செல்வம் சீனித்தம்பி - -
36 செல்லத்துரை கிருஸ்டியன் - -
37 செல்லத்துரை பாலச்சந்திரன் - -
38 செல்லத்துரை அமிர்தலிங்கம் - -
39 வேலன் கதிரேசப்பிள்ளை - தொழிலாளி 44
40 வேலுப்பிள்ளை குணராசா - -
41 வேலுப்பிள்ளை பாஸ்கரலிங்கம் - தொழிலாளி 35
42 சாமித்தம்பி நாகராசா - -
43 சாமித்தம்பி சௌந்தராஜன் - -
44 சின்னத்தம்பி கன்னி - -
45 சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை - -
46 சின்னத்தம்பி சிவசிதம்பரம் - -
47 சற்குணம் இளையதம்பி - -
48 சற்குணம் விஜயலட்சுமி - -
49 வ.பாக்கியராசா தொழிலாளி 26
50 விஸ்வலிங்கம் அழகை - -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சேவியர்புரம் படுகொலை 07.08.1990

குறவர் பழங்குடியினர் 1950ல் குடியமர்த்தப் பட்ட இடத்தின் பெயர்தான் அம்பாறையில் உள்ள சேவியர்புரம்.

7ம் தேதி ஆகஸ்ட் மாதம், 1990ல் குறவர் பழங்குடியினரின் வீடுகள் கொழுத்தப்பட்டு, அந்த சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களும் கொல்லப்பட்டனர். இவர்களது கோயில்கள், பாடசாலைகள், சமூகப் பொதுமண்டபங்கள் யாவும் இடிக்கப்பட்டதோடு, இச்சமூகத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் என அனை வரையும் மனிதவதைக்கு இந்த நாளில் உள் ளாக்கப்பட்டனர். குறவர் சமூகத்தின் மீது எவ் வித காரணங்களுமின்றி வன்முறை கட் டவிழ்த்து விடப்பட்டது. இச்சமூகத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இஸ்லாமிய ஊர்க் காவல் படையைச் சேர்ந்தவர்கள் என பின்னர் தெரியவந்தது. விடுதலைப்புலிகள் இச்சமூகத் தோடு உறவு வைத்திருந்தார்கள் என்னும் குற்றச்சாட்டோடு இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது. மினியக்கா என்ற பெண்மணி சேவியர் புரம் தாக்குதல் குறித்து சொல்லிய போது,

“1990 ஆகஸ்ட் 07ம் தேதி முற்பகல் 1 மணிக்கு அன்றைய முதல்வேளை உணவை சிலர் உட்கொண்டும், வேறு சிலர் சமைத்துக் கொண்டு இருந்த சமயத்தில், வன்முறை யாளர்கள் அங்கு வந்தனர். நீதை சாலை வழியாக 18 டிராக்டர்கள் ஒன்றன் பின் ஒன் றாய் வந்தது. வந்தவர்களிடம் கத்தி, குண்டாந் தடிகள், அரிவாள், துப்பாக்கி போன்ற ஆயு தங்கள் இருந்தன. வன்முறையாளர்கள் எங்கள் கிராமத்தின் நடுவில் நின்று கொண்டு, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனை வரையும் ஒன்றாய் கூடும்படி கட்டளை யிட் டனர். வன்முறையாளர்கள் கொண்டு வந்த ஆயுதங்களை யார்க்கும் போது ஏதோ இராணுவ படை போன்று தெரிந்தது. வன் முறையார்கள் எங்களிடம் நடந்து கொண்ட முறையும் பயத்தை வரவழைத்தது. சேவியர் புரம் மக்கள் அனைவரும் இந்த நடவடிக் கையை பார்த்து திகைத்துப் போய் செய்வ தறியாது நின்றனர். சாப்பிட்டுக் கொண்டிருந்த மக்கள் அனைவரும், அவசரமாய் கைகளை கழிவிக் கொண்டு, வன்முறையாளர்களின் முன் கூடினர். நானும், எனது கணவர் மற்றும் என்னுடைய மகன், மகள் எல்லோரும் அங்கு நின்றோம். சீருடையணிந்த வன்முறை யாளர்கள் இஸ்லாமிய ஊர் காவல் படையினர் என்றும் அவர்களுடன் வந்த ஏனையோர் அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் எங்களால் அடையாளம் காண முடிந்தது.”

சம்பவந்தை நேரில் பார்த்த ஒருவர் கூறினார், “வந்திருந்த இஸ்லாமிய ஊர்காவல் படை யினர் மற்றம் வன்முறையாளர்களின் முன் நாங்கள் கூடியிருந்த போது, என்னுடைய ஒரே மகனை எங்கள் முன்னேயே மனித வதைக்கு உட்படத்தி, கொடுமைப் படுத்தினர். அதே போல், ஜெயராஜ் என்ற எங்களது சமூகத் தைச் சேர்ந்த வேறோரு இளைஞரையும் தொடர்ந்து மனிதவதைக்குட்படுத்தினர்.

எனது கணவரால் எங்களது கண் முன்னே எங்களது ஒரே மகனை கொடுமைப்படுத்தியது பொறுத்துக் கொள்ள முடியவில்லை. எனது கணவர், துள்ளியெழுந்து தனது எதிர்ப்பை தெரியப்படுத்தினர். நானும் சத்தமிட்டுக் அழு தேன். வன்முறையாளர்களில் ஒருவன், ஒரு மரக்கட்டையை எடுத்து எனது கணவரது நெஞ்சை நோக்கி கொடுத்த அடியினால், அவர் சுயநினைவை இழந்து கீழே விழுந்தார். அவர் கீழே விழுந்தது, ஏதோ ஒரு பெரிய மரம் சாய்ந்தது தோன்றியது. நான் அவசர அவசர மாய் அங்கு ஓடிச் சென்ற எனது கணவரின் தலையை தூக்கி பார்த்தேன். அப்போது, மற் றொரு வன்முறையாளன், அயுதத்தைக் கொண்டு எனது தலையில் பலமாய் அடித் தான். இதனால், எனது தலையிலிருந்து இரத் தம் கொட்டியது மட்டும் உணர்ந்து கொண் டிருக்கும் போதே மயக்கமுற்றேன்.

இத்தாக்குதலிருந்து தப்பிய அனைவரும் காயம்பட்டோரையும் தூக்கிக்கொண்டு திருக் கோயிலுக்கு ஓடினோம். அவர்கள் அனை வரும் தங்களது முதுகில் உடுத்த துணி மட்டும் எடுத்துக் கொண்டு ஓடினர். இதில் சிலர் முந்திய நாள் உணவு கூட உண்ணா திருந் தனர்.



நான் கண் திறந்து பார்த்தபோதுதான், ஒரு மருத்துவமனை படுக்கையில் இருப்பதை உணர்ந்தேன். அங்கு என்னுடன் கிராமத் தைச் சேர்ந்த பலரும் இருந்தனர். அப்போது மாலை சுமார் 4 மணி இருக்கும. நான் என்ன நடந்தது என யூகிக்க முயற்சித்த போதும், முடியாமல் போனது. கவலையும் அதிர்ச்சியும் அடைந்த உறவினர்கள் எனது குடும்பத்தாரை பார்க்க வந்திருந்தனர். இஸ்லாமிய ஊர் காவல் படையனிர் பெட்ரோலையும், மண் ணெண்ணையையும் ஊற்றி எனது கிராம வீடுகளை எரியூட்டியதையும், அங்கு பலர் கொல்லப்பட்டதையும் சொன்னர்கள். எல்லா மக்களும், கிராமத்திலிருந்து ஓடிவிட்ட போதும். சிலர் மட்டும், இறந்தவர்களுக்கு கடைசி மத சடங்குகளை செய்ய சேவியர்புரம் சென்றனர்.

என்னையும் ஏதோ ஒன்று அவர்களுடன் சேவியர்புரம் செல்ல தூண்டியது. என் னுடைய உடல்நிலை மிக மோசமாய் இருந்த போதும், என்னைப் போல வலியால் துடித்துக் கொண்டிருந்த எனது கணவரையும் கண்டு பிடித்து, எங்களது கிராமத்தை சேர்ந்த ஒருவ ருடைய டிராக்டர் வண்டியில் சுமார் 20 பேர்களை ஏற்றிக் கொண்டு எனது கிரா மத்தை நோக்கி சென்றோம். அங்கு என்னு டைய மகன் துப்பாக்கி குண்டுகளால் சிதைந்து கிடந்ததைப் பார்த்து கல்லானேன். அருகே மேலும் இரு வரது உடல்கள் கிடந்தது.

அழித்து ஒழிக்கப்பட்ட அந்த கிராமத்தின் மயான அமைதி என்னுள் ஒரு அச்சத்தை உண்டு செய்தது. சிதைந்து கிடந்த வீடுகள் பேய்களை நினைவுபடுத்தியது. நாங்கள் உடனடியாக திருக்கோவில் ஊருக்கு திரும்பினோம்.”

மாசன்னா என்ற வயதான பெண்மணி குறவர் பழங்குடியினர் வாழ்ந்து வந்த சேவியர் புரத்திலிருந்த மற்றொரு பாதிக்கப் பட்ட நபராவார். அந்த வயதான பெண்மணி தாக்குதல் நடத்தியவர்கள் எல்லோரையும் தனக்கு தெரியும் என்று கூறினார். இப்பெண் மணி வாழ்ந்து வரும் இடத்தின் அருகிலே இருந்த நெல் உற்பத்தியாளர்கள்தான் அன்று தாக்குதல் நடத்திய வன்முறையாளர்கள். அந்த இஸ்லாமிய நெல் உற்பத்தியாளர்களின் வயல்களிலேயே அந்த குறவர் சமூகத்தினர் வேலை செய்து வந்தனர். அம்மாதிரியான உறவுள்ள மக்களின் கிருத்துவகோயில், பாட சாலை, வீடுகள் என அனைத்தையும் நிர் மூலம் ஆக்கினது மட்டுமல்லாது அம்மக் களையும் அன்று கொன்று குவித்தனர்.

வீடுகளை இழந்து தமது வாழ்வாதரங்களை தொலைத்து அன்று கண்ட கொடுமைகளை தாங்க முடியாத அம்மக்களில் சிலர் பின்னர் தற்கொலை செய்து மாண்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கல்முனைப் படுகொலை 11.08.1990



மட்டக்களப்பு நகரத்திலிருந்து 40கி.மீ தொலைவில் கல்முனை உள்ளது. இதனைச்சுற்றி பண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, நிலாவணை ஆகிய கிராமங்கள் உள்ளன.

11.08.1990 அன்று பண்டிருப்பு, கல்முனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களிலுள்ள மக்கள் இராணுவச் சுற்றிவளைப்பினால் அச்சமடைந்து தத்தம் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்தனர். இராணுவம் வீடுகளுக்குள் குறிவைத்துச் சுட்டு மக்களை வெளியே வரும்படி செய்தது. இளம் ஆண்கள் தமது தேசிய அடையாள அட்டையை கையில் வைத்தபடி வெளியே வந்தனர். தாய்மார் தங்கள் குழந்தைகளை இறுகப் படித்தபடி வெளியே வந்தனர். 25 இளம் ஆண்களை இராணுவம் கல்முனைக் கிராமத்திலிருந்து காரைதீவு இராணுவ முகாமிற்குக் கூட்டிச் சென்றது. தமது பிள்ளைகளைத் தொடர்ந்து சென்ற தாய்மார் துவக்கினால் தாக்கப் பட் டனர். பல தாய்மார் மயக்கமுற்று விழுந்தனர்.

அடுத்த நாள் கூட்டிச் செல்லப்பட்டவர்களின் உறவினர்கள் கல்முனை நகருக்கூடாக காரை தீவு முகாமை நோக்கி நடந்து சென்றனர். கல்முனை நகரில் இராணுவம் இவர்களை வீதியருகே நிற்க வைத்தது. பெரும் தொகையான இராணுவம் அவ்விடத்திற்கு வந்து உறவினர்கள் மத்தியிலிருந்த இளம் பெண் களைத் தெரிவு செய்து அருகே இருந்த கட்டடத் திற்குள் கூட்டிச்சென்று அவர்களை பாலியல் வல்லுறவிற்குட்படுத்தியது. உறவினர்கள் மத்தியிலிருந்த ஆண்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கொலைசெய்யப் பட் டனர். மொத்தமாக இரண்டு மணித்தியாலங்களில் 37 பொது மக்கள் கொல்லப் பட்டனர்.

முதல் நாள் காரைதீவுக் குக் கூட்டிச் செல்லப் பட்ட 25 இளம் ஆண்களும் பின்னர் காணப் பட வில்லை. இரண்டு நாட்களில் 62 பொது மக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-

# துறைநிலாவணைப் படுகொலை 12.08.1990

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் துறைநிலாவணைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் விவசாயத்தினையும், மீன்பிடியினையும் தமது பிரதான தொழிலாகக் மேற்கொண்டு வருகின்றார்கள்.

12.08.1990 அன்று காலை நீலாவணை, கல்லாறு இராணுவ முகாம்களிலிருந்த இராணுவத்தினர் துறைநிலாவணைக் கிராமத்தினைச் சுற்றிவளைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்கள். இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வயது வேறுபாடின்றி வீடுகளிலிருந்தவர்களும் வீதியாற் சென்றவர்களுமாக அறுபதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பல பொதுமக்கள் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இளையதம்பி மனோகரன் -
02. இராசதுரை சிவானந்தராஜா - 27
03. நவரட்ணகா சுமதி - 28
04. நல்லதம்பி செல்வராசா - 35
05. கந்தையா சிவானந்தன் -
06. கந்தக்குட்டி சுப்பிரமணியம் - 40
07. கந்தளக்குட்டி திலகநாதன் - 20
08. கணேஸ்தாஸ் சதாசிவம் - 25
09. கண்மணி கிருபாகரன் - 21
10. பூபாலப்பிள்ளை நிமலநாதன் - 21
11. பாக்கியவதி அப்புத்துரை - 35
12. பழனிவேல் பாக்கிராசா - 28
13. வைரமுத்து உதயராஜா - 20
14. வைரமுத்து செல்வராசா - 15
15. வைரமுத்து சுதாகரன் - 20
16. தம்பியப்பா நவரத்தினமூர்த்தி - 28
17. தம்பிமுத் து அழகம்மா 33
18. தட்சணாமூர்த்தி சுதாகரன் - 20
19. தினேஸ்குமார் உதயகுமார் - 18
20. தங்கராசா ஆறுமுகம் - 40
21. மகாலிங்கம் தம்பியப்பா - 35
22. மாணிக்கம் குழந்தைவேல் - 38
23. மகேஸ்வரன் சுதாகரன் - 24
24. அ.ரவிச்சந் திரன் -
25. அழகுதுரை கிருஸ்ணபிள்ளை - 40
26. அழகையா கமலநாயகி - 23
27. பொன்னம்பலம் சின்னவன் - 28
28. பெரியதம்பி இராசலட்சுமி - 20
29. செம்பன் கதிரேசு -
30. வேலுப்பிள்ளை பாக்கியநாதன் - 28
31. ச.சிவமோகன் - 18
32. சுந்தரம் கனகசபை - 38
33. சாமித்தம்பி சிவஞானமூர்த்தி -
34. சதாசிவம் சுகுமார் - 22
35. சின்னத்தம்பி மகேஸ்வரி - 28
36. சின்னத்தம்பி செல்லத்துரை -
37. சின்னமுத்து அன்னம்மா - 45
38. சிவஞானமூர்த்தி சரோசினி - 14
39. சிறிதரன் சிறிகாந்தராஜ் -
40. வடிவேல் சந்திரகுமார் - 28



41. விஜயபால குணபால -
42. விஸ்வலிங்கம் லூத்துமேரி - 21
43. வீரமலை சுவீராஜன் - 23
44. வீரமலை சண்முகதாசன் - 25
45. ரத்தினம் சுவேந்திரன் - 20
46. ரவிக்குமார் ராஜபுத்திரன் - 18
47. வேலுப்பிள்ளை பேரின்பநாயகி - 21

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# ஏறாவூர் வைத்தியசாலைப் படுகொலை 12.08.1990

11.08.1990 அன்று இராணுவத்தினர் செங்கலடி, கிரான் போன்ற கிராமங்களைச் சுற்றிவளைத்து மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இராணுவத்தினரின் துப்பாக்கி பிரயோகத்தினால் காயமடைந்தவர்களில் பத்துப் பேரிற்கும் மேற்பட்டவர்கள் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார்கள்.

12.08.1990 அன்று இரவு 11.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் இராணுவத்தினரும் முசுலிம் குழுக்களும் இணைந்து ஏறாவூர் வைத்தியசாலையிற் சிகிச்சைபெற்று வந்த பொதுமக்கள் பத்துப் பேரையும் வைத்தியசாலையினுள் வைத்தே வெட்டியும் சுட்டும் படுகொலை செய்தார்கள்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# கோராவெளி, ஈச்சையடித்தீவு படுகொலை 14.08 1990

கோராவெளி, ஈச்சையடித் தீவுக் கிராமங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளன. இக்கிராமங்கள் இயற்கை வளம் நிறைந்த விவசாயக் கிராமங்களாகும். மக்கள் நெற்செய்கை மரக்கறிப் பயிர்ச்செய்கை போன்றவற்றில் ஈடுபட்டு வந்ததுடன், தங்களது கிராமத்திற்குரிய தனித்துவமான கலைகளையும் வளர்த்து வந்தார். கோரா வெளிக் கிராமத்தில் இந்து மதத்தவரின் பிரசித்திபெற்ற கோராவெளி அம்மன் ஆலய மும் அமைந்துள்ளது.

1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கிழக்கு மாகாணத்தில் பொதுமக்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்திருந்தன. இராணுவத்தினரும் சிங்கள-முசுலிம் குழுக்களும் மக்கள் மீதான தாக்குலை நடத்தி வந்தனர்.

14.08.1990அன்று நண்பகல் செங்கலடி, கல்லடி இராணுவ முகாம்களிலிருந்து வந்த இராணுவத்தினர் கோராவெளி, பச்சையடித் தீவு கிராமங்களைச் சுற்றிவளைத்து பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தினார். இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் வீடுகளிலிருந்தவர், வீதிகளிற் சென்றவர், வயல்களில் வேலை செய்துகொண்டிருந்தவர் எனப் பதினைந்து பேர் உயிரிழந்தார். இருபத்தைந்து பேர் காயமடைந் தார்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மைலந்தனைப் படுகொலை 09.08.1992

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களாக மைலந்தனை, புனானைக் கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கு வாழ்கின்ற மக்கள் பிரதான தொழிலாக விவசாயத்தினை மேற்கொண்டு வருகின்றார்.

புனானை, மைலந்தனை போன்ற கிராமங்கள் புனானை இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினரால் அடிக்கடிசுற்றிவளைக்கப்படுவதும், பொதுமக்கள் தாக்கப்படுவதும் வழக்கமாக இருந்தன.

09.08.1992அன்று அதிகாலை புனானை, மைலந்தனைக் கிராமங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுப் பொதுமக்கள் மிக மோசமான முறையில் கத்தி, வாள், பொல்லு போன்றவற்றினாற் தாக்கப்பட்டார்கள். இராணுவத்தினர் துப்பாக்கிகளினாலும் சுட்டார்கள்.

இவ்வாறு இராணுவத்தினரின் தாக்குதலால் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார். பலர் காயமடைந்தார்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)



# அக்சன் பார்ம் தன்னார்வ நிறுவனப் படுகொலை 05.08.2006

இலங்கையின் கிழக்குமாகாணத்திலுள்ள திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேசங்களில் ஒன்றே மூதூர் ஆகும். இங்கு தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இலங்கை அரசு இப்பிரதேசத்திலுள்ள மாவிலாறு அணையைத் திறப்பதற்கான யுத்தம் ஒன்றை 2006ஆம் ஆண்டின் யூலை மாத இறுதியில் ஆரம்பித்திருந்தது. இலங்கை அரசு தமிழர் பகுதிகள் மீது விதித்து வந்த பல்வேறு பொருளாதாரத் தடைகள், நெருக்கடிகளுக்கு எதிராக பல்வேறு போராட்டங்களையும் நடாத்திய மக்கள் இறுதியில் மாவிலாறு அணைக்கட்டை பூட்டிவிட்டார்கள். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாத இலங்கை அரசு தனது படைகளை ஏவி மாவிலாறு அணைக்கட்டை திறக்க முயற்சித்தது. இலங்கைத்தீவில் 2002ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையையும் கவனத்திற்கொள்ளாது தமிழர் பிரதேசம் மீது யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டது. இதற்கு பதில் நடவடிக்கையாக தமிழீழ விடுதலைப் புலிகளும் மூதூர் பகுதி இராணுவ நிலைகள் மீது தாக்குதலை மேற்கொண்டனர். விடுதலைப் புலிகள் மூதூர் பகுதி இராணுவ நிலைகளை தகர்த்துவிட்டு தமது பழைய நிலை களில் மீண்டும் நிலைகொண்டனர். இதன் பின்னர் 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 05ஆம் நாள் மூதூர் பகுதிக்குள் நுழைந்த இலங்கை அரச படைகள் அப்பகுதி மீது தமது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டனர். அங்கு மக்கள் பலர் இராணுவத்தினராற் கொல்லப்பட்டனர். இதன் ஓர் அங்கமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான பல்வேறு உதவிகளையும் செய்து வந்த. “Action Contre La Faim” எனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் பணியாளர் 17 பேரை அப்பிரதேசத்திற்குள் நுழைந்த இராணுவத்தினர் கோரமான முறையில் படுகொலை செய்தனர்.

“Action Contre La Faim” நிறுவனமானது பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டது. இந்நிறுவனம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளை வழங்கும் நோக்கில் திருகோணமலை, மூதூரில் தமது அலுவலகத்தை அமைத்துச் செயற்பட்டுவந்தது. மூதூர்ப் பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிக் கொண்டிருந்த வேளை அவர்களது அலுவலகத்திற்குள் வைத்தே, அவர்களது நிறுவனச் சீருடையில் இருந்தவேளை சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்களில் நான்கு பேர் பெண்களாவர். ஒருவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர். இச்சம்பவத்தில் 17 பணியாளர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை இராணுவத்தினர் குழிதோண்டிப் புதைத்துள்ளனர். சடலங்களை மீட்டு பரிசோதித்த போது இப்பணியாளர் ஒவ்வொருவரது உடலிலும் 20 வரையான துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. இப்படுகொலையுடன் இலங்கை அரசே தொடர்புபட்டுள்ளது என்பதற்கு அப்பகுதி மக்களும், இலங்கை போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் அறிக்கையும் சாட்சியங்களாகும்.






இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது):

01. றிச்சட் அருள்ராஜ், 24
02. சிவபாலன் றோமிலா, 25
03. சிங்கராசா பிறீமஸ் ஆனந்தராசா, 34
04. சக்திவேல் கோணேஸ்வரன், 24
05. செல்லையா கணேஸ், 54
06. கணேசு சிறீதரன், 36
07. யோகராசா கோடீஸ்வரன், 31
08. அம்பிகாபதி ஜெயசீலன், 31
09. அப்துல் லத்தீன் மொகமட் ஜப்பா, 31
10. முத்துலிங்கம் நர்மதன், 24
11. கணேசு கவிதா, 27
12. மாதவராசா கேதீஸ்வரன், 36
13. ஜ.முரளிதரன்,35
14. வைரமுத்து கோகிலவதனி, 29
15. கனகரட்ணம் கோவர்தனி, 28
16. பி.பார்த்தீபன், 27
17. ரவிச்சந்திரன் றிசிகேசன், 28

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)
















**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.**
**நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்**
**உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு**
**தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலில் 15 பொதுமக்கள் படுகொலை 08.08.2006

திருகோணமலை மாவட்டத்தின் தெற்கில் உள்ள மூதூர் கிழக்கில் உள்ள நல்லூர் மற்றும் ஊபுரல் கிராமங்கள் மற்றும் தெற்கில் உள்ள ஒவ்வொருசிலம்பத்து கிராமங்கள் மீது ஞாயிற்றுக்கிழமை சிறீலங்கா இராணுவம் மற்றும் சிங்கள கடற்படையினர் நடத்திய பீரங்கி குண்டுகள் தாக்கியதில் குறைந்தது 15 தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 20 பேர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7.15 மணியளவில் இடம் பெற்றது.







திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் உள்ள பல கரையோர கிராமங்களில் ஊபுரல் மற்றும் நல்லூர் ஆகியவை அடங்கும்.

சிவில் சமூகத்தினர் இந்தக் கிராமங்களுக்குச் சென்று சிறிலங்கா அரச படையினரின் பயங்கர பீரங்கித் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பான மேலதிக விபரங்களை சேகரித்துள்ளனர்.

மேலும் விவரங்கள் தெரியவில்லை.

# கதிரவெளி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் சிறீலங்கா படைகளின் தாக்குதலில் 50 பொதுமக்கள் படுகொலை – 10.08.2006

கதிரவெளி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில், ஆயிரக்கணக் கான பொதுமக்கள் இன்னும் அப்பகுதிகளை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த நிலையில், வியாழன் காலை, இலங்கைப் படைகளின் வான்வழி குண்டு வீச்சு மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் குறைந்தது 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சிறீலங்கா இராணுவம் கல்லாறு முகாமில் இருந்து மாவிலாறு மதகு நோக்கி ஆயிரக் கணக்கான துருப்புக்களை உள்ளடக்கிய ஒரு புதிய தாக்குதலை ஆரம்பித்தது, அதே நேரத்தில் ஈசிலம்பத்து மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கண்மூடித்தனமான வான்வழி மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியது.

மட்டக்களப்புக்கு வடக்கே சுமார் 70 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கதிரவெளி பகுதியில் குறைந்தது பதினைந்து பொதுமக்களின் சடலங்கள் காணப்படுவதாக சிவில் வட்

# முகமாலையில் 8 பொதுமக்கள் சிறீலங்கா படையினரின் பீரங்கித் தாக்குதலில் படுகொலை – 12.08.2006

கதிர்காமம் இந்து கோவிலுக்கு மத யாத்திரை சென்று திரும்பிய 7 யாழ்ப்பாணப் பொதுமக்கள் முகமாலை சோதனைச் சாவடியிலிருந்து வடக்கே பின்வாங்கிய சிறீலங்கா இராணுவத்தின் படையினரின் பீரங்கித் தாக்குதலில் கொல்லபபட்டனர் - யாழ்ப்பாணத்தில் உள்ள சிவில் சமூக வட்டாரங்கள் தெரிவித்தன.

வெள்ளிக்கிழமை மாலை கதிர்காமத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த 48 சிவிலியன் யாத்திரீகர்களுடன் சென்ற பேருந்தை சிறீலங்கா இராணுவத்தினர் தடுத்துள்ளனர். நான்கு பயணிகள் தங்கள் சோதனைச் சாவடிகளில் இருந்து வெளியேறும் போது சிறீலங்கா துரப்புக்களின் பீரங்கி மற்றும் துப்பாக்கிச் சூடு தாக்குதல்களில் இருந்து தப்பினர். காயமடைந்தவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் சனிக்கிழமை மீட்டனர்.

"சண்டை வெடித்ததால் நாங்கள் எல்லா திசைகளிலும் பரவினோம்," என்று உயிர் பிழைத்தவர் சுப்பிரமணியம் பாக்கியலட்சுமி, 65, கூறுகிறார்.

துருப்புப் படையினர் விடுதலைப் புலிகளுடன் பீரங்கி சண்டையில் ஈடுபட்டதால் பயணிகள் சாலையோரம் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பின்னர் செக்போஸ்ட்டில் இருந்த சிப்பாய்கள் செக்போஸ்ட்டில் இருந்து வெளியேறினர், செக்போஸ்ட்டில் சிக்கித் தவித்த பொதுமக்களை கவனிக்காமல் விட்டுவிட்டனர் என்று உயிர் பிழைத்தவர்களில் ஒருவர் கூறினார்.

பாக்கியலட்சுமி மற்றும் 3 பேர் அருகில் உள்ள கழிவறைக்கு பின்னால் சென்று மறைந்தனர். பின்னர், அந்தப் பகுதியிலிருந்து வெளியேறும் போது இலங்கைப் படையினர் துப்பாக்கிச் சூடு மற்றும் மோட்டார் குண்டுகளை வீசினர்.

"இன்று காலை புலிகள் வரும் வரை இரவு முழுவதும் நாங்கள் அங்கேயே சிக்கிக் கொண்டோம்," என்று அவர் கூறுகிறார்.

பாக்கியலட்சுமியின் கூற்றுப்படி, ஷெல் தாக்குதலில் குறைந்தது 7 பேர் கொல்லப்பட்டனர். மற்றவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை, என்கிறார்.

கைதடியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவசுப்ரமணியம், 61, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நடராசா இந்திரன், 51, மற்றும் துரைராஜா தவமணி, 68, ஆகிய மூவர், முகமாலை சோதனைச் சாவடியில் உள்ள கழிவறைக்குப் பின்னால் சிக்கி, சனிக்கிழமை மீட்கப்பட்டனர்.


சுப்பிரமணியம் பாக்கியலட்சுமி, 64


துரைராஜா தவமணி, 68


ஆறுமுகம் சிவசுப்பிரமணியம், 61


நடராசா இந்திரன், 51

# நெடுங்கேணி – சமளங்குளம் படுகொலை 08.08.2006






இலங்கையின் வடபகுதியில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேசமே நெடுங்கேணி ஆகும். இப்பகுதிகளில் அண்மைக்காலத்தில் இலங்கை இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியினரால் பல்வேறுபட்ட தாக்குதல்கள் பொதுமக்கள்மீதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. இப்பிர தேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதியினை நொடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனையே வழங்கிவருகின்றது. பெரிதளவிலான வசதிகளைக் கொண்டிராத இம மருத்துவமனை பாரியளவில் பாதிப்பிற்குள்ளான நோயாளர்களை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றமை வழமையானதே.

அவ்வாறே 2006 ஒகஸ்ட் 08ஆம் நாள் இரவு 7.00மணியளவில் நெடுங்கேணி வைத்திய சாலையிலிருந்து கர்ப்பிணித்தாய் ஒருவரை ஏற்றிச்சென்று முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு இரவு 10.00மணியளவில் நெடுங்கேணி வைத்தியசாலை நோக்கி நோயாளர் காவுவண்டி என்ற தகவலை வழங்கும் ஒலியுடனேயே திரும்பிக் கொண்டிருந்தது. இவ்வாறு நோயாளர் காவு வண்டி நெடுங்கேணி வீதியில் உள்ள சமளங்குளம் பகுதியில் இரவு 11.30 மணியளவில் சென்று கொண்டிருந்த சமயம் இலங்கை அரச படைகளின் ஆழ ஊடுருவும் படையினரால் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இச்சம்பவத்தில் அவ்வாகனத்தில் பயணம் செய்துகொண்டிந்த வைத்தியர் ஜெயபாலினா அவரது மனைவி, தாதியர் இருவர் மற்றும் சாரதி ஆகிய ஐவரும் உயிரிழந்தனர்.

வைத்தியர்கள் மிகவும் பற்றாக்குறையான சூழ்நிலைகளிலேயே வன்னி வைத்திய சாலைகள் இயங்கிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதுடன், நெடுங்கேணி சுற்றியல்கூறு வைத்தியசாலையில் ஒரேயொரு வைத்தியர் தான் கடமையாற்றுகின்றமையும் மிகவும் கவலைக்கிடமானதே.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. கதிர்காமத்தம்பி ஜெயபாலினா, 60
02. ஜெயபாலினா பொன்னம்மா, 52
03. ஜெகாநந்தன் நகுலேஸ்வரி, 32
04. இராஜலிங்கம் ஞானேஸ்வரி, 23
05. கோபாலசுந்தரம், 57

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)







# அல்லைப்பிட்டி செல்வீச்சு 13.08.2006

யாழ்ப்பாணத்தின் கரையோரமாக அமைந்திருக்கும் தீவுகளில் அல்லைப்பிட்டியும் ஒன்றாகும் சிறீலங்கா இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே அல்லைப்பிட்டிக்கு சமீபமாக சண்டை ஆரம்பித்ததும் மக்கள் அடைக்கலம் புகுந்த பிலிப்நேரி தேவாலயப் பக்கமாக இராணுவத்தினர் கண்டபடி சுட்டார்கள். இதில் பல எண்ணிக்கையானோர் இறந்ததாக கூறப்படுகின்றது.

இது இன்றுவரை பதிவுக்குட்படுத்தப்படவில்லை. இந்த செல்தாக்குதல் சம்பவத்தைக் கண்ட பில்ப்நேரி தேவாலய பங்குத்தந்தை ஜிம் பிறவுணும் இராணுவத்தினரால் காணாமல் போகச் செய்யப்பட்டார். இந்தச் செல்தாக்குதலுக்கு ஆளான தன்னை இனம் காட்ட விரும்பாத இளம் பெண் ஒருவர் பின்பு இந் நிகழ்வு தொடர்பான தமது அனுபவம்பற்றி எழுதியுள்ளார்.

அந்த இரவின் நிகழ்வு தொடர்பாக வேறு பதிவுகள் இல்லாததால் அவரது பதிவு மிகவும் முக்கியமானது. அவரது கூற்றுப்படி எல்லா இடத்தையும் சுற்றி செல் விழுந்து வெடித்த வண்ணம் இருந்ததால் தாங்கள் மாட்டிக் கொண்டதாகநினைத்தார்கள். அவர்கள் பிலிப் நேர் தேவாலயத்தில் அடைக்கலமடைந்தனர். பின்பு சிறீலங்கா இராணுவத்தினர் தேவாலயத்திற்கு வந்து அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதி அழித்தனர். சிறீலங்கா இராணுவத்தினர் மக்களை கேடயமாக பாவித்து தமது முகாமுக்கு அண்மித்தும் அவர்களை கைவிட்டனர். எனவே மக்கள் செல்தாக்குதலுக்கு மத்தியில் மீண்டும் தேவாலயத்தை நோக்கிச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர். இராணுவத்தின் நோக்கை மக்கள் உணர்ந்து கொள்ளும் வரை பலமுறை இராணுவத்தினர் இவ்வாறு நடந்துகொண்டனர். சில மணித்தியாலங்களுக்கு பிற்பாடு செல்தாக்குதல் நேரடியாக தேவாலயத்துக்கு வந்தது.

கடலிலிருந்தும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தநேரத்தில் பலர் இறந்துவிட்டார்கள். பெற்றோரை பிள்ளைகள் இழந்தனர். இந்த அக்கிரமத்தின் பின்பு உடல்களை மீட்பதற்கு அருட்தந்தை ஜிம் பிறவுணும் முயன்ற போது இராணுவம் அதையும் தடுத்தது. இன்றுவரை கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை பதிவுக்குட்படுத்தப்படவில்லை. இந்தப் புத்தகத்தின் 71ம் பகுதியல் குறிப்பிடப்பட்ட 1990இல் இடம்பெற்ற பெரும் தொகையானோர் காணாமல் போன சம்பவத்தின் மையமாக இதே பிலிப்நேரி தேவாலயம் விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

1. யோகன் றொபேற், 41
2. மேரிமஞ்சுளா, 45
3. மெனிஸ், 19
4. மைக்கல், 55
5. நடராஜா, 60
6. தேவகுமார், 28
7. உதயகுமார், 35
8. டு.ஞானப்பிரகாசம், 70
9. ரமேஸ், 26
10. தேவநாயகி, 30

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# வள்ளிபுனம் செஞ்சோலைப் படுகொலை 14.08.2006











முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் 2006 ஒகஸ்ட் 10ஆம் நாள் முதல் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ முதலுதவிப் பயிற்சி நெறியில் வன்னிப்பிரதேச கிளிநொச்சி, முல்லைத்தீவு கல்வி வலயங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான உயர்தர வகுப்பு மாணவிகள் பங்குபற்றியிருந்தனர். மாணவர் பயிற்சி நெறியில் பங்குபற்றிக்கொண்டிருந்த வேளை இலங்கை வான்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் செஞ்சோலை வளாகத்தில் 2006 ஒகஸ்ட் 14 அன்று காலை 7.30 மணியளவில் காலைக் கடன்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவிகள் மீது கண்மூடித்தனமான குண்டுத்தாக்குதலினை மேற்கொண்டன. இக் குண்டுத் தாக்குதலில் 52 மாணவியர் மற்றும் இரு பணியாளர் உட்பட 54 பேர் உயிரிழந்தனர். 130 மாணவியர் படுகாயமடைந்ததுடன் பல மாணவியர் சிறு காயங்களுக்குமுள்ளாகினர்.

படுகாயமடைந்தவரில் மூன்று மாணவியர் கால்கள் துண்டிக்கப்பட்டதுடன் மாணவி ஒருவர் கண் ஒன்றை இழந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். இவர்களில் மேலும் காயப்பட்ட மூன்று மாணவியர் முல்லைத்தீவு வைத்தியசாலையினால் கண்டி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

சிறீலங்கா பயங்கரவாத விசாரணைத்



திணைக்களம் உடனடியாக காயப்பட்ட மூன்று மாணவியரும் கைதுக்குள்ளாக்கினர். இறுதியாக மூன்று மாணவியர் விடுவிக்கப்பட்டு வன்னியிலுள்ள தமது வீட்டுக்குச்செல்ல விடுவதற்காக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர். அவர்களுள் காயமடைந்த ஒரு மாணவி வவுனியாவில் இறந்துவிட்டார். மற்றைய இரு மாணவிகளும் உடனடியாக கண்டி வைத்திய சாலைக்கு திரும்ப எடுத்துச் செல்லப்பட்டனர். சில மாதங்களின்பின் இரு மாணவியர் எங்கே தங்குகின்றார் என்பதே மர்மமாக மாறியது அவர்களது பெற்றோர்கள் மட்டும் ஏற்கனவே ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தில் அவர்களைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப் படுகின்றனர். ஏறத்தாழ இரு வருடங்களாக எதுவித குற்றச் சாட்டுக்களுமின்றி இந்த இரு மாணவியர் தடுத்துவைத்தலானது அவர் களது பெற்றோருக்கு விளங்கிக்கொள்ள முடியாததாகவே இருக்கிறது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோர் விபரம் (பெயர் வயது)

01. அருளம்பலம் யசோதினி, 18
02. பாலகிருஸ்ணன் மதினி, 18
03. சந்திரமோகன் நிவேதிகா, 17
04. சந்திரசேகரன் விஜயகுமாரி, 29
05. கனகலிங்கம் நிருபா, 17
06. கனகலிங்கம் நிருஷா, 17
07. கணபதிப்பிள்ளை நந்தினி, 18
08. கந்தசாமி குமாரசாமி, 48
09. கிரிதரன் டயானி, 16
10. குபேந்திரச்செல்வம் லிகிதா, 19
11. மகாலிங்கம் வசந்தராணி, 18
12. மகாலிங்கம் வென்சிடியூலா, 17
13. மார்க்குப்பிள்ளை கெலன்சுதாயினி, 18
14. முருகையா அருட்செல்வி, 18
15. முத்தையா இந்திரா, 18
16. நாகலிங்கம் கோகிலா, 19
17. நாகலிங்கம் தீபா, 19
18. நகுலேஸ்வரன் நிஷாந்தினி, 19
19. நல்லபிள்ளை நிந்துஜா, 18
20. நவரட்ணம் சாந்தகுமாரி, 18
21. நீலாயினார் நிவாகினி, 17
22. பத்மநாதன் கலைப்பிரியா, 18
23. புவனசேகரம் புவனேஸ்வரி, 17
24. இராசமோகன் கம்சனா, 19
25. இராசேந்திரச்செல்வம் மகிழ்வதனி, 18
26. இரவீந்திரராசா றம்ஜா, 18
27. ச. ஜெயரூபி, 20
28. சாந்தகுமார் சுகிர்தா, 19
29. சந்தனம் சத்தியகலா, 20
30. செல்வம் நிறோஜினி
31. சண்முகராசா பாவேந்தினி
32. சிவமயஜெயம் கோகிலா
33. சிவமூர்த்தி கார்த்திகா, 18
34. சிவானந்தராசா திவ்வியா
35. சிவசுப்பிரமணியம் வட்சலாமேரி, 20
36. சொலமொன் சிங்கராசா, 65
37. சுந்தரம் அனோஜா, 17
38. தம்பிராசா லக்சியா, 17
39. தம்பிராசா சுகந்தினி, 18
40. தம்பிராசா தீபா, 19
41. தமிழ்வாசன் நிவேதிகா, 18
42. தனபாலசிங்கம் பகீரதி, 19
43. தணிகாசலம் தனுசா, 19
44. தர்மகுலசிங்கம் கேமாலா, 18
45. தர்மராசா பிருந்தா, 17
46. தேவராசா சர்மினி, 17
47. திருநாவுக்கரசு நிரஞ்சுலா, 18
48. துரைசிங்கம் சுதர்சினி, 17
49. துரைசிங்கம் திசானி, 18
50. உதயகுமாரன் கௌசிகா, 19
51. வைரமுத்து கிருத்திகா, 19
52. வரதராஜா மங்களேஸ்வரி, 17
53. வீரசிங்கம் றாஜிதா, 18
54. விஜயபவன் சிந்துஜா, 18
55. விவேகானந்தம் தட்சாயினி, 18
56. தம்பிமுத்து தயாழினி, 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)




















கிராமிய வைத்தியசாலை
துக்குடியிருப்பு
RAL HOSPITAL
PUTHUKKUDIYIRUPPU












எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.
நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்
உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு
தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.



www.sangathamil.com




# இலங்கையின் மகாவம்ச வரலாறைப் புரட்டிப்போட்ட கந்தரோடைத் தொல்லியலும் ஆதி இரும்புக்கால அறிவியல் ஆய்வுகளும்

## பகுதி – 2

### பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரீகம்




இலங்கையின் பெருங்கற்காலக் குடியிருப்புக்களும் ஈமப்புதையல் மையங்களும்

**திருப்புமுனை நான்கு**

கலாநிதி சுதர்ஷன் செனெவிரத்ன: இலங்கையின் கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் தொல்லியல் Sudharshan Seneviratne (1984): The Archaeology of the Black and Red Ware in Sri Lanka> Ancient Ceylon, No. 5, Journal of the Archaeological Survey Department, Sri Lanka.

கலாநிதி சுதர்ஷன் செனெ விரத்ன ஆசியாவில் முத னிலை பெற்றிருந்த ஜவகர் லால் நேரு பல்கலைக்கழகத் திலே பயின்று தத்துவக் கலாநிதி பட்டம் பெற்றவர். பாரபட்சமின்றி நடுநிலை பேணி வரலாற்றை உரைத்த ரோமிலா தாப்பர் போன்ற மேதைகளிடம் கல்வி பயின்றவர். இலங்கைக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ஆதாரமற்ற, புனைகதை போன்ற இலங்கை வரலாற்றைக் கற்க வேண்டிய அனுபவம் அவருக்கு ஏற்படவில்லை. 1984 ஆம் ஆண்டில் அவரது ஆய்வான 'இலங்கையில் பெருங்கற் பண்பாட்டு கறுப்பு-சிவப்பு மண்பாண்டத் தொகுதியின் தொல்லியல்' (The Archaeology of the Megalithic Black and Red Ware Complex in Sri Lanka) என்ற ஆய்வறிக்கை இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் சஞ்சிகையான 'Ancient Ceylon No. 5' இல் 1984 இல் வெளியானது.

இலங்கையின் வரலாற்றாய்வில் இடைக்கற்காலத்திற்கும், ஆரம்ப வரலாற்றுக் காலத்திற்குமிடையிலான கால இடைவெளி பாளி இலக்கியங்களில் காணப்படும் மரபுவழிக் கதைகளைக் கொண்டே நிரப்பப்பட்டு வந்திருக்கிறது. இந்த ஆய்வுகள் கடைப்பிடித்த ஆய்வு நெறிமுறைகள் தொல்லியல் கற்கையைப் புறக்கணித்தே வந்திருக்கின்றன. ஆனால் சமீபகால தொல்லியல் ஆய்வுகள் இலங்கையின் நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப காலங்களையும், உருவாக்க காலங்களையும் பற்றிய பிரச்சினைக்குரிய கேள்விகளை எழுப்பி வருகின்றன.

இந்தக் கற்கையில் முன்வைக்கப்படும் முதன்மையான தொல்லியல் சான்றுகள் (Primary Archaeological Evidence), முக்கியமாக ஆதி இரும்புக் காலத்தைய பெருங்கற் பண்பாட்டு ஈமப் புதையல்கள் எனக் கூறப்படும் நினைவுச் சின்னங்களிலிருந்தும், பண்டைய பெருங்கற் பண்பாட்டுக் குடியிருப்புகளிலிருந்தும் பெறப்பட்ட கலைப்பொருட்கள், குறிப்பாக சிறப்பியல்பு கொண்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களாகும். இந்த மட்பாண்டப் பொருட்கள் ஈமப் புதையல்களுக்கும், இலங்கையின் ஆதிகாலக் குடியேற்றங்களுக்குமிடையே காணப்படும் முக்கியமான தொடர்புகளை நிலைநாட்டுகின்றன. ஆகவே ஆதி வரலாற்றுக் காலத் தெக்காணத்தினதும், இலங்கையினதும் பரந்த பண்பாட்டுக் கட்டமைப்பைக் கொண்ட இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டு கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களின் கற்கை மிக முக்கியமாகிறது.



கதிரவெளி - குழம்பிய கல்லறையின் பக்கக்கற்கள்



திவுல்வேவாவில் கண்ட கல்லறை

Image Source - Lanka Excursions

**சுற்றுச்சூழல் பின்னணி**

வட இலங்கையில் பெருங்கற் பண்பாட்டுக் கறுப்பு-வெள்ளை மட்பாண்டங்கள் காணப்படும் இடங்கள் விவசாயம், மந்தை வளர்ப்பு, மீன்பிடிப்பு, வேட்டையாடல் ஆகிய உணவு தேடும் நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடங்களாகக் காணப்படுகின்றன. ஆதிக் குடியேற்றங்கள் காணப்படும் கடலோர நிலப்பகுதிக்கு அருகாமையில் ஒரு விவசாயப் பின்னிலமும் காணப்படுவது ஒரு பொதுவான பரவல் பாங்கு.

வட இலங்கையின் பெருநிலப்பரப்பில் ஓடிவரும் ஆறுகள் மூலம் நீரைப் பெற முடிந்தது. இந்த ஆறுகள் தகவல் தொடர்பு இணைப்புகளாகவும் விளங்கின. இலங்கையின் ஆரம்பகாலப் பிராமி எழுத்துப்பதிவுகள் இக்குடியேற்றப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன. வட இலங்கையில் 3-10 அடி ஆழத்தில் சுலபமாக நிலத்தடி நீரைப் பெற முடிகிறது. கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் அதிகமாகக் காணப்படும் பகுதியை இக்குடியிருப்புகளின் நடுவப் பகுதியாகக் (Core Area) கொள்ளலாம். இவ்வகையான மட்பாண்டங்கள் குளங்களின், நீர்த்தேக்கங்களின் அருகாமையிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

மேற்கூறிய நடுவப்பகுதிக்குச் சமீபமாக உலர்ந்த - ஈரமான பயிர்ச் செய்கைகளுக்கேற்ற விவசாயத்திற்கான வயல்கள் காணப்படுகின்றன. செழிப்பு மிகுந்த சிவந்த மண் விவசாயத்திற்குச் சிறந்த மண். இந்த மண்ணின் தன்மை ஆரம்பகால மக்களின் குடியேற்றப் பரவலைத் தீர்மானித்த ஒரு காரணி ஆகும். வட யாழ்ப்பாணத்தில் மக்கள் பரவலாகக் குடியேறியிருப்



கலாநிதி கென்னெத் கென்னெடி

பதற்கும், வட மேற்கில் மக்கள் நேரியலாக (நேர் கோட்டில்) குடியேறியிருப்பதற்கும், வட மத்திய இலங்கையில் குடியேற்றங்கள் சில இடங்களில் குவிந்தும் சில இடங்களில் வெற்றுக் காடாகவும் இருப்பதற்கும் மண்ணின் தன்மையே காரணமாகும்.

வட இலங்கையில் பெருங்கற் பண்பாட்டுக் கறுப்பு-சிவப்பு மட்பாண்டத்துடன் தொடர்புடைய ஆரம்பகால இடங்கள் முதலில் பருவகாலக் காடுகளாகவும், முட்புதர்க் காடுகளாகவும் இருந்தன. வடமேற்கு இலங்கையின் பருவகாலக் காடுகளை நீக்க மேம்பட்ட உலோகக் கருவிகள் வேண்டியதில்லை. நெருப்பை வைத்தே இவற்றை அழித்து விடலாம். முட்புதர்க் காடுகள் அடர்ந்த செறிவான அடிமரங்களைக் கொண்டிருக்கும். இவற்றை மேம்பட்ட இரும்புக் கருவிகளைக் கொண்டு நிரந்தரமாக அகற்றி, வதிவிடங்களுக்கும் வயல் காணிகளுக்கும் ஏற்ற நிலங்களாக அமைத்துக்கொள்ள முடியும்.

மேலே கூறப்பட்ட சுற்றுச்சூழல் பின்னணி சமூக அசைவியக்கத்தையும், மக்களின் குடியேற்றத்தையும், வாழ்வாதார முறைகளையும், தொழில்நுட்பப் பரிமாணத்தையும் தீர்மானிக்கும் காரணிகளாக இருந்தன.

**பெருங்கற் பண்பாட்டு மையங்கள்**

இலங்கையில் இதுவரை (1984) கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற் பண்பாட்டு மையங்கள் இவை.

1. காரைநகர் – நீளக்கிடத்திய புதையல்

இந்த மையம் 1981 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினரால் அகழப்பெற்றது. நிலத்திலிருந்து ஒரு அடி கீழே ஈமப்புதையல் காணப்பட்டது. அதனோடு கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், குறியீட்டு எழுத்துகள், இரும்புக் கசடு (Iron Slag), சுறா எலும்புகள் காணப்பட்டன.

2. ஆனைக்கோட்டை – நீளக்கிடத்திய புதையல்

இந்தக் கடற்கரையை அண்டிய ஈமக்காடு 1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுப் பிரிவினரால் அகழப்பெற்றது. 2 அடி ஆழத்தில் மேற்குக் கிழக்காக நீளக்கிடத்திய இரு எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. ஒரு எலும்புக்கூட்டின் தலைப்பக்கத்திலிருந்த கறுப்பு-சிவப்பு மட்பாண்டத்தில் கோவேத என ஆதிப் பிராமி எழுத்துப் பொறித்த ஒரு முத்திரை மோதிரம் காணப்பட்டது. மற்றும் சுறா, கால்நடை எலும்புகள், சில்லில் செய்த கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், சிவப்பு மட்கலன்கள், இரும்புக் கருவிகள், செம்புப் பொருட்கள், லக்ஷ்மி பட்டயம் என்பன கிடைத்தன.

3. கந்தரோடை – குடியிருப்பு உறைவிடம்

சுன்னாகம் பகுதியில் கடற்கரையிலிருந்து 6 மைல் தூரத்தில் அமைந்த இந்த நடுவம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அறிஞர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இக்குடியிருப்பிற்குச் சமீபமாக உள்ள கந்தரோடைக்குளம் அப்பகுதியின் ஊடாக ஓடும் வழுக்கை ஆற்றுடன் யாழ்ப்பாணப் பரவைக் கடலை இணைக்கிறது. ஆரம்பத்தில் இவ்விடத்தில் அகழ்வுகளை மேற்கொண்ட போல் பீரிஸ் மெருகூட்டப்பட்ட ஓடுகள், முத்திரை நாணயங்கள், ஆரம்பகாலப் பாண்டிய நாணயங்கள், உரோம நாணயங்கள், லக்ஷ்மி பட்டயங்கள், இரும்பு, செம்பு, தங்க உலோக எச்சங்களைக் கண்டெடுத்தார். பின்னர் இவ்விடத்தில் பௌத்த நிறுவனங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

விமலா பெக்லியால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் இன்றைய நிலமட்டத்திலிருந்து 12 அடி ஆழத்திற்கு குடியிருப்பு எச்சங்கள் காணப்பட்டன. பெக்லி கந்தரோடையின் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களுக்கும், தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு மட்பாண்டங்களுக்கும், கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட அநுராதபுர கெடிகே பகுதியில் காணப்பட்ட மட்பாண்டங்களுக்குமிடையிலான நெருங்கிய ஒற்றுமை குறிப்பிடத்தக்கதாக இருப்பதாகக் கூறியுள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளாக யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கே இருக்கும் தீவுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் மேற்கொண்ட மேலாய்வுகளில் பல கறுப்பு-சிவப்பு மட்பாண்ட மையங்களைக் கண்டுபிடித்திருப்பதாக தனிப்பட்ட தகவல் தொடர்புகளில் சி.க. சிற்றம்பலம், பொ. இரகுபதி ஆகிய இருவரும் என்னிடம் கூறியுள்ளார்கள் – 1982 (Seneviratne 1984: p. 244).

4. மாந்தை (திருக்கேதீஸ்வரம்) – குடியிருப்பு – நீளக்கிடத்திய புதையல்

பண்டைய கோட்டைப் பட்டினமான மாந்தை அருவி ஆற்றின் கழிமுக நிலத்தில் அமைந்திருக்கிறது. இந்த முக்கியமான குடியிருப்பு மையம் அநுராதபுர கெடிகே பகுதியைப் போன்ற ஒரு கலாசார வரிசையை வெளிக்காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமீபகால ஆய்வுகள் (Prickett, 1980:21) இந்த நகரின் குடியிருப்புச் சிதைவுகள் 30 அடி ஆழத்திற்கு ஆழ்ந்திருப்பதாக அறியத் தருகின்றன.

1950இன் அகழ்வுகளின் போது நகர மதில்களுக்கு வெளியே 4 அடி, 8 அங். ஆழத்தில் ஒரு நீளக்கிடத்திய எலும்புக்கூட்டை சண்முகநாதன் அகழ்ந்தெடுத்தார். இதுவும் ஆனைக்கோட்டைப் புதையலைப் போல மேற்குக் கிழக்காகப் புதைக்கப்பட்டிருந்தது.

1980 இல் ஜோன் கார்ஸ்வெல் மேற்கொண்ட அகழ்வுகள் குறிப்பிடத்தக்க அளவு ஆரம்ப வரலாற்றுக்கால கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களையும், றூலெற்றெட் கலன்களையும் கொடுத்திருந்தன. 4 அடி ஆழத்தில் நீர் மட்டத்தின் கீழ் கண்டெடுத்த கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் பெருங்கற் பண்பாட்டிற்குரிய கலன்களாகக் கருதப்படுகின்றன (Prickett, 1980).

5. தேக்கம் – தாழிப்புதையல்

வில்பத்து வனவிலங்கு புகலிடப் பகுதிக்குள் பொம்பரிப்பைப் போன்று தாழிப்புதையல்களைக் கொண்ட ஒரு பகுதி தேக்கம். இது மோதரகம் ஆற்றின் இடது கரையில் அமைந்திருக்கிறது. இந்த நடுவம் 1977 ஆம் ஆண்டில் சரத் வத்தள என்ற ஆய்வாளரால் அகழப்பெற்றது. மோதரகம் ஆற்றின் முகத்துவாரத்திலுள்ள பூக்குளம் என்ற இடத்தில் சிப்பி ஓடுகளோடு கறுப்பு-சிவப்பு மட்பாண்டக் கலவோடுகள் காணப்படுகின்றன.




இலங்கையில் பண்டைய மனிதர்களின் புதைப்படிம எலும்புகள் காணப்படும் இடங்கள்

6. பொம்பரிப்பு – தாழிப்புதையல்

இலங்கையில் மிகவும் விரிவாக ஆய்வு செய்யப்பட்ட நடுவம் பொம்பரிப்பு. வில்பத்து வனவிலங்கு புகலிடப் பகுதிக்குள் புத்தளம்-மன்னார் வீதியில் 21 ஆவது மைல்கல் இருக்கும் இடத்திற்குச் சமீபமாக, கடற்கரையிலிருந்து 4 மைல் தூரத்தில் இந்த இடம் இருக்கிறது. இந்த நடுவத்திற்குத் தெற்கே வற்றாத கலா ஓயா நதி ஓடுகிறது.

விமலா பெக்லியின் மதிப்பீட்டின்படி இந்த நடுவத்தில் 8,000 தாழிகளில் 10,000-12,000 மக்கள் வரை புதைக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கே புதையுண்டிருக்கும் மக்களின் குடியிருப்புப் பகுதி இவ்விடத்திலிருந்து கிழக்கே அமைந்திருக்கலாம் என பெக்லி கருதுகிறார். இவ்விடத்தில் பலதரப்பட்ட தாழிகள், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், கீறல் எழுத்துகள் கொண்ட ஓடுகள், இரும்புப் பொருட்கள், செம்பு, வெண்கலம், மணிகள், விலங்கு எலும்புகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன (Begley, V. 1981: 49-95).

இந்தப் பகுதியிலுள்ள கொல்லன் கனத்தவில் 1971 இல் அகழாய்வுகளை மேற்கொண்ட சிரான் தெரணியகல, அநுராதபுரம் கெடிகே பகுதியில் கண்டது போன்ற 'பெருங்கற் பண்பாட்டு வகை' கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களை இங்கே கண்டதாகத் தெரிவித்திருக்கிறார் (Deraniyagala, S. 1972a: 1-17).

7. மாமடுவ – கல்லறை, கல்வட்டம்

வவுனியா-மாமடுவ வீதியில் வவுனியாவிலிருந்து 5 மைல் தூரத்தில் தேக்கு மரக் காடுகளினிடையே கடல் மட்டத்திலிருந்து 250-300 அடி உயரத்தில் இவை காணப்படுகின்றன. இதன் கிழக்கே பிராமி எழுத்துப் பொறித்த பாறைகள் (பெரிய புளியங்குளம்) காணப்படுகின்றன. இதன் சமீபத்தில் மாமடுவ குளம் காணப்படுகிறது.

இந்த மையம் 1976 இல் எம்.எச். சிறிசோம என்ற உதவி தொல்லியல் ஆணையாளரால் ஆய்வு செய்யப்பெற்றது. இரு வகையான புதையல்கள் காணப்பட்டன. பெரிய அளவிலான 6 அடி × 4 அடி கொண்ட பல கல்லறைகள் காணப்பட்டன. இவற்றை மூடிய கல்மேசைகள் காணப்பட்டன. இக்கல்லறைகள் மிக நெருக்கமாகக் கணிசமான அளவு நிலப்பரப்பை உள்ளடக்கியிருந்தன.

இரண்டாவது வகைப் புதையல்கள் மரக்காட்டிற்கு வெளியே இருந்த கூட்டுப் பண்ணையில் கல்லறைகளிலிருந்து வேறாக அமைந்திருந்தன. புதையல்களைச் சுற்றிவர வட்ட வடிவில் பெரிய கற்கள் அடுக்கப்பட்டிருந்தன. சில கல்வட்டங்கள் தாழிப் புதையல்களைச் சுற்றிவர அடுக்கப்பட்டிருந்தன. இவை தென்னிந்திய தாமிரபரணி நதிக்கரைக் கல்வட்டங்கள் கொண்ட தாழிப்புதையல்களை ஞாபகப்படுத்தின. இவ்விடத்தின் மேலாய்விலே பல கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகளைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்விடத்தில் வாழும் கிராம மக்கள் கிணறு தோண்டும் பொழுதில் எலும்புகளும், சாம்பலும் கொண்ட பெரிய குடங்கள் வெளிவருவதாகக் கூறியுள்ளார்கள்.

1978-79 ஆண்டுகளின் பின்னர் இக் கல்வட்டங்களைக் காண முடியவில்லை. அதிகாரத்துவ அலட்சியம் காரணமாக அவை முழுதாக மறைந்து போயின (Completely disappeared due to bureaucratic negligence).

8. அளுத்பொம்புவ – கல்லறைப் புதையல்

1982 ஆம் ஆண்டில் வில்பத்து காட்டுவிலங்கு புகலிடப் பகுதிக்குள் காணப்பட்ட கல்லறை வகைப் புதையல் இது (சிரான் தெரணியகலவுடனான தனிப்பட்ட தொடர்பு மூலம் பெறப்பட்ட தகவல்). இப்புதையல் பகுதி ஆலடிமுறிப்புக் குளத்தினருகே காணப்படுகிறது.

9. கரம்பன் குளம் – தாழிப்புதையல்

வில்பத்து வனவிலங்கு புகலிடப் பகுதிக்குள் காணப்படும் இன்னொரு தாழிப்புதையல் நடுவம் இது. இப்பகுதிக்கு கலாஓயாவின் ஒரு கிளை நதியான எல்பத்து ஆற்றினால் நீர் வழங்கப்படுகிறது. பொம்பரிப்பிற்கு அருகாமையில் இருப்பதனால் இது கலாஓயாவின் பெருங்கற் பண்பாட்டுக் குழுவிற்குள் வருகிறது.

10. தம்மென்ன-கொடெல்ல – கல்லறைப் புதையல்

மதவாச்சி-ஹொரவப்பொத்தான வீதியில் 16 ஆவது மைல்கல்லுக்கு வடக்காக தம்மென்ன-கொடெல்ல குளத்திற்கும் கிழக்கேயுள்ள பாறைகளுக்கும் இடையிலுள்ள கல்நிலத்தில் 125 கல்லறைகள் வரை காணப்படுகின்றன.

11. குருகல்-ஹின்ன – கல்லறைப் புதையல்

அநுராதபுரம்-திருகோணமலை வீதியில் 73 ஆவது மைல்கல்லுக்கு அப்பாலுள்ள மேட்டு நிலத்தில் 2 ஏக்கர் பரப்பளவில் இக்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203

கல்லறை நிலப்பகுதி காணப்படுகிறது. இதை முதலில் 1885-86 ஆம் ஆண்டில் R.W. லீவர்ஸ் என்ற ஆங்கிலேயர் கண்டுபிடித்தார். 1970 இல் அகழ்ந்த ராஜா டி சில்வா இக்கல்லறைகளில் ஈமக் குடங்களையும், வெண்கலப் பொருட்களையும் கண்டெடுத்தார் (Silva, R. de. 1970).

12. வடிகவேவா - கல்லறைப் புதையல்

குருகல்-ஹின்ன புதையல் மையத்திலிருந்து கிழக்கே இரு மைல் தொலைவில் காணப்படும் இக்கல்லறைப் புதையல் மையம் 1981 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இடத்தில் 15 புதையல்கள் வரை காணப்பட்டன. இவற்றில் சிலவற்றை 1981 இல் ராஜா டி சில்வா அகழ்ந்திருந்தார்.

13. கொக்கெபே - கல்லறைப் புதையல்

கொக்கெபே கல்லறைகள் பகுதியும் அதைத் தொடர்ந்த 'வட கஹகல்-ஹின்ன' என்ற கல்மேடும் குருகல்-ஹின்னவிலிருந்து சில மைல் தூரம் தென்கிழக்கே அமைந்திருக்கிறது. இதற்கு மேற்கே ஒரு மைல் தொலைவில் யான்ஓயா ஓடிக்கொண்டிருக்கிறது. ஆதி வரலாற்றுக்காலத்தில் இந்த ஆறு இம்மையத்திற்குச் சமீபமாக ஓடியதாக நம்பப்படுகிறது. இவ்விடத்தில் 15 ஏக்கர் பரப்பில் 200 வரையான கல்லறைப் புதையல்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில கல்லறைகள் ராஜா டி சில்வா, சி.க. சிற்றம்பலம் ஆகியவர்களால் அகழ்வாய்வு செய்யப்பட்டிருக்கின்றன.

14. திவுல்வேவா - கல்லறைப் புதையல்

கோன் வேவ சந்திக்கடுத்து 27 ஆவது மைல்கல்லில் மேற்கே திரும்பி இரண்டரை மைல் தூரத்தில் திவுல்வேவா கல்லறைகள் நடுவம் வருகிறது. 15 ஏக்கர் பரப்பில் பரந்து கிடக்கும் இந்த மையத்தில் 100 கல்லறைகள் வரை கண்ணுக்குத் தெரிகின்றன. ஒரு புதையல் குழியிலிருந்து இரும்பினாலான ஓர் ஏர்க்கொழு பெறப்பட்டது (சி.க. சிற்றம்பலத்திடமிருந்து தனிப்பட்ட தொடர்பு மூலம் பெறப்பட்ட தகவல்).

15. றொபெவ - கல்லறைப் புதையல்

யான்ஓயா ஆற்றுப்படுகை நிலங்களில் மற்றுமொரு கல்லறைப் புதையல் பகுதி ஜனவரி 1982 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மையம் திவுல்வேவாவிலிருந்து தெற்காக இரு மைல் தூரத்தில் உள்ளது. வருங்காலத்தில் இலங்கையின் வரலாற்று உதய கால, ஆதி வரலாற்றுக்காலக் கற்கைகளுக்கு 'யான்ஓயா கல்லறைப்புதையல் வளாகம்' (The Yan Oya Burial Complex) மிக முக்கியமான ஒரு தலமாக அமையும்.

இச்சந்தர்ப்பத்தில், குச்சவெளியிலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள திரியாயிக்குச் சமீபமாக உள்ள புதுவக்காட்டில் ஒரு கிணறு தோண்டியபோது நிலத்திலிருந்து 10 அடி ஆழத்தில் எலும்புகளையும், சாம்பலையும் கொண்ட ஒரு ஈமத்தாழி கண்டுபிடிக்கப்பட்டதை குறிப்பிட வேண்டும். யான்ஓயா நதியின் கழிமுகப் பகுதியில் திரியாய் தொல்லியல் மையத்திற்குச் சமீபமாக இது காணப்பட்டது முக்கியத்துவம் வாய்ந்தது. திரியாய் பாறையில் பழைய பிராமிக் கல்வெட்டுகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

16. மச்சகம - கல்லறைப் புதையல்

மிகப் பரந்த அளவினதான இந்த கல்லறைப் புதையல்களைக் கொண்ட மையம் 1979 ஆம் ஆண்டில் உதவி தொல்லியல் ஆணையாளராகவிருந்த P.M. ரத்னாயக்காவினால் அறிவிக்கப்பட்டது. கலாஓயா பெருங்கற் பண்பாட்டு வளாகத்தின் ஒரு பகுதியான மச்சகம, மரதன்கடவல-அநுராதபுர வீதியில் 66 ஆவது மைல்கல்லுக்கு மேற்கே மாநாவ-மரதன்கடவல வீதியில் 4 மைல் தொலைவில் உள்ளது. இங்கே புதையல்கள் மேடான நிலத்தில் காணப்படுகின்றன. இடுகாட்டைச் சுற்றிவர அரை வட்டமானதொரு இயற்கை மேடு கிழக்குப் பக்கத்தில் வடக்குத் தெற்காக ஓடுகிறது. இம்மேட்டுக்கு அப்பால் மச்சகம குளமும், நெல் வயல்களும் காணப்படுகின்றன. இடுகாட்டில் 100 கல்லறைப் புதையல்கள் வரை காணப்படுகின்றன. திறந்து கிடந்த ஒரு கல்லறையினுள்ளே கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகளும், நிலத்தில் படிந்த எலும்புகளும், அதன் முன்னால் இரண்டு வரிசையாக அடுக்கப்பட்ட சிறு மட்குடங்களும் காணப்பட்டன.



பின்-வேவாவில் வெளிப்படுத்தப்பட்ட கல்லறை

Image Source - Tharaka Dias

17. அநுராதபுரம் கெடிகே - குடியிருப்புப் பகுதி

மல்வத்து ஓயாவின் கரையில் அமைந்துள்ள அநுராதபுரம் நகரை, அந்த நதி வடமேற்குக் கரையோடு இணைக்கிறது. 1972 ஆம் ஆண்டில் கலாநிதி சிரான் தெரணியகல அநுராதபுரம் கெடிகே பகுதியில் முன்னெடுத்த தொல்லியல் அகழ்வாய்வுகளின் போது, ஆகப்பழமையான ஆதி இரும்புக்காலக் குடியிருப்பு அடுக்கு (Stratum 3A) கண்டறியப்பட்டது. இந்த அடுக்கில் பெருங்கற்காலத்திற்கே உரிய தனித்துவமான கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அதற்கு உடனடி மேலிருந்த மட்பாண்டங்களில் குறியீட்டு எழுத்துகளும் (Graffiti Symbols), சிலவற்றில் பிராமி எழுத்துகளும் காணப்பட்டன. அதே மட்டத்தில் நெல் உமிகளும், விலங்குகளின் எலும்புகளும் (உணவிற்காக உட்கொள்ளப்பட்டவை) காணப்பட்டன (Deraniyagala, S. 1972b: 48-169).

18. கதிரவெளி - கல்லறைப் புதையல்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்றுப் பிரிவில், மகாவலி கங்கையின் கழிமுகக் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள இப்பகுதி 'குரங்கு படையெடுத்த வேம்பு' என அழைக்கப்படுகின்றது. சிறு மரங்களைக் கொண்ட மணற்தரையான இப்பிரதேசம் மழைக்காலங்களில் சதுப்பு நிலமாகக் காணப்படும். இதற்குச் சமீபமாக சிறிய குளங்களும், நெல்வயல்களும் காணப்படுகின்றன. இவ்விடத்தைச் சூழ மூன்றரை அடி உயரமான வெட்டாத கற்கள் காணப்படுகின்றன. இங்கே காணப்படும் குழம்பிய கல்லறையில் மேல் மூடி காணப்படவில்லை.

19. இப்பன்கட்டுவ - கல்லறைப் புதையல்

குருநாகல்-திருகோணமலை வீதியில் 90 ஆவது மைல்கல்லுக்குச் சமீபமாக தம்புல்லவிலிருந்து இரு மைல் தொலைவில் இப்பன்கட்டுவ இடுகாட்டுப் பிரதேசம் காணப்படுகிறது. இந்த மையத்திற்கு அருகாமையில் வடக்கு-மேற்காக ஓடும் மல்ஓயா, கலா ஓயாவுடன் இணைகிறது. 550 அடி உயரத்திலிருக்கும் இப்பிரதேசத்தில் இரு குளங்களும் நெல்வயல்களும் காணப்படுகின்றன. வீதியின் இடது பக்கத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவான தனியார் நிலத்தில் வரலாற்று உதயகாலக் கட்டத்திற்கு உரியதாகக் கருதப்படும் இடுகாட்டில் பலகைகளாக வெட்டிய பெரிய கற்களைக் கொண்டு பெட்டி வடிவில் நிர்மாணிக்கப்பட்ட சமாதிகள் 1970 ஆம் ஆண்டில் தொல்பொருள் திணைக்களத்தினரால் இனங்காணப்பட்டன. அதே ஆண்டில் ராஜா டி சில்வா 20 கல்லறைகளை வெளிக்கொணர்ந்தார். 1980 ஆம், 1982 ஆம் ஆண்டுகளின் மேலாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட கல்லறைகளில் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் மற்றும் சிவப்பு மட்பாண்டங்களை நாம் கவனித்தோம்.

20. பின்-வேவா - கல்லறைப் புதையல்

குருநாகல் மாவட்டத்தில் மாகோவிலிருந்து தென்கிழக்காக, புராதன நகரமான யாப்பகுவாவிலிருந்து ஒரு மைல் தொலைவில் இந்தக் கல்லறை இடுகாடு காணப்படுகிறது. உயர்ந்த மேடான நிலத்தில் 15 ஏக்கர் பரப்பில் இது அமைந்திருக்கிறது. இங்கே காணப்படும் கல்லறைகள் அளவில் பெரியவை. ஒரு கல்லறை மூடிக்கல் 6 அடி 4 அங். × 3 அடி 3 அங். அளவைக் கொண்டிருந்தது. இங்கே 1965-66, 1966-67 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த ராஜா டி சில்வா அகழ்வுகளை மேற்கொண்டிருந்தார். இங்கே சில கல்லறைகளினுள்ளே தாழிப்புதையல்கள் காணப்பட்டன. அவற்றினுள் எலும்புகள், மட்பாண்டங்கள், இரும்பு, செம்புப் பொருட்கள் காணப்பட்டன. இங்கு காணப்பட்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் பொம்பரிப்புத் தாழிகளை ஒத்திருந்தன (Archaeology Dept Reports. 1965-66: 104; 1966-67: 78).

21. கல்-அத்தர - கல்லறைப் புதையல்

இலங்கையின் ஈரமான தாழ்வான மலைப்பகுதியில் உள்ள இக்கல்லறை இடுகாடு கேகாலை மாவட்டத்தில் அஸ்மதால மலைப்பகுதியில் உள்ள ரப்பர் தோட்டத்தினுள்ளே கடல் மட்டத்திலிருந்து 1000 அடி உயரத்தில் உள்ளது. இந்த நடுவம் 1967 இல் கலாநிதி கொடகும்புரவினால் அகழ்வாய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் குடங்கள், எலும்புகள், இரும்பு ஆயுதங்கள், உலோக அணிகலன்கள் என்பன காணப்பட்டன. பெரிய குடங்களினுள்ளே பல சிறிய குடங்கள் வைக்கப்பட்டிருந்தன (Archaeology Dept Reports, 1966-67: 64). 1977 ஆம் ஆண்டில் இந்த நடுவத்தில் நமது மேலாய்வில் 16 கல்லறைப் புதையல்களை இனங்காணக்கூடியதாக இருந்தது.

22. மக்கேவித்த - குழி அடக்கம்

இலங்கையின் தாழ்நில ஈரமண்டலத்தில் காணப்பட்ட இக் குழி அடக்கம் கொழும்பிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள மக்கேவித்த கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கிருந்த ஒரு கிராமவாசி வாழைமரம் நடுவதற்காக நிலத்தைத் தோண்டியபோது இக் குழி அடக்கம் காணப்பட்டது. இதிலிருந்த கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் பொம்பரிப்பு மட்பாண்டங்களை ஒத்திருந்தன.

நன்றி: சிவ. தியாகராஜா - எழுநா முகநூல்


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

www.sangathamil.com

# ஹவுதிகளின் செங்கடல் வழித்தடை:
# சவுதி – ஈரான் ஆதிக்கப் போட்டி நடுவே யேமன்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா–

29.07.2026




**ஈரானின் முக்கிய கட்டமைப்புகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதால், செங்கடல் மற்றும் ஹோர்முஸ் நீரிணை உள்ளிட்ட முக்கிய கடல்வழிகளில் தாக்குதல் அதிகரிக்கக் கூடும் என்று ஈரான் முன்பே எச்சரித்திருந்தது. மேற்கத்திய நாடுகள் ஹவுதிகள் ஈரானின் ஆதரவைப் பெறுகின்றனர் என்று நீண்ட காலமாகக் கூறி வருகின்றன. மத்திய கிழக்கில் தொடரும் அமெரிக்கா–ஈரான் மோதலும் இந்தச் சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.**

உலகப் பொருளாதாரத்திற்கு மீண்டும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாக மத்திய கிழக்கு போர் உலக அரசியலின் மையப் புள்ளியாக மாறியுள்ளது. ஈரான் போரால் ஏற்கனவே பதற்றம் நிறைந்திருந்த இப்பிராந்தியத்தில், தற்போது யேமனின் ஹவுதி (Houthis/Ansar Allah) இயக்கம் சவுதி அரேபியாவுக்கு எதிராக கடல்வழித் தடையை அறிவித்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. “Saudi க்கு இனி No Entry” என்ற தலைப்பில் சமூக ஊடகங்களிலும் சில ஊடகங்களிலும் பரவி வரும் தகவல்களின் மையக் கருத்து, செங்கடல் வழியாக சவுதியுடன் தொடர்புடைய கப்பல்களின் போக்குவரத்தைத் தடுக்கத் தயாராக இருப்பதாக ஹவுதிகள் எச்சரித்திருப்பதுதான்.

இந்த அறிவிப்பு, யேமன் உள்நாட்டுப் போர், சவுதி–ஈரான் பிராந்திய ஆதிக்கப் போட்டி, அமெரிக்காவின் ஈரான் மீது தாக்குதல், மத்திய கிழக்கு கொள்கை, காசா போரின் தாக்கம் மற்றும் உலகளாவிய எரிசக்தி பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் புதிய பரிமாணத்தை உருவாக்கியுள்ளது.

## யேமனில் உருவான ஹவுதி:

யேமனில் உருவான ஹவுதி இயக்கம் ஆரம்பத்தில் சையிதி ஷியா சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் அரசியல் இயக்கமாக இருந்தது. பின்னர் அது ஆயுத இயக்கமாக வளர்ந்து, 2014ஆம் ஆண்டு தலைநகர் சனாவை கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து சர்வதேச அங்கீகாரம் பெற்ற யேமன் அரசை ஆதரிப்பதற்காக 2015ஆம் ஆண்டு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி யேமனில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது. அதிலிருந்து இன்று வரை நீடித்து வரும் இந்தப் போர் உலகின் மிகப்பெரிய மனிதாபிமான பேரழிவுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்தப் போரின் போது ஹவுதிகள் சாதாரண கிளர்ச்சிப் படையிலிருந்து நவீன ஆயுதத் திறன் கொண்ட இயக்கமாக மாறியுள்ளனர். பாலிஸ்டிக் ஏவுகணைகள், நீண்ட தூர ட்ரோன்கள், கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் கடற்படை ட்ரோன்கள் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தும் திறனை அவர்கள் வளர்த்துள்ளனர். இதன் மூலம் யேமனின் எல்லைகளைத் தாண்டி சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் செங்கடல் வழியாகச் செல்லும் சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கும் அவர்கள் சவாலாக மாறியுள்ளனர்.

இந்த நிலையில், ஹவுதிகள் தற்போது செங்கடலில் சவுதி அரேபியாவுக்கு எதிராக கடல்வழித் தடையை அறிவித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் முக்கிய நோக்கம், சவுதியுடன் தொடர்புடைய அல்லது சவுதி நலன்களைச் சார்ந்த கப்பல்களின் இயக்கத்தைத் தடுக்க முடியும் என்ற எச்சரிக்கையை விடுப்பதாகும். குறிப்பாக உலகின் முக்கியமான கடல் சந்திகளில் ஒன்றான பாப் அல்-மண்டப் (Bab el-Mandeb) நீரிணை இந்தப் பதற்றத்தின் மையமாக மாறியுள்ளது.

பாப் அல்-மண்டப் நீரிணை உலக வர்த்தகத்திற்கு மிகவும் முக்கியமான கடல்வழியாகும். செங்கடலை ஏடன் வளைகுடாவுடன் இணைக்கும் இந்தக் குறுகிய நீரிணை வழியாக ஐரோப்பா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கை இணைக்கும் ஆயிரக்கணக்கான வணிகக் கப்பல்கள் தினமும் பயணம் செய்கின்றன. குறிப்பாக வளைகுடா நாடுகளில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் குறிப்பிடத்தக்க பகுதி இந்தப் பாதை வழியாகவே உலக சந்தைகளை அடைகிறது. எனவே இந்தப் பகுதி முடக்கப்படுவது உலக வர்த்தகத்திற்கே பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

## அமெரிக்கா–ஈரான் மோதல்:

ஹவுதிகள் இந்த நடவடிக்கையை எதற்காக மேற்கொண்டுள்ளனர் என்ற கேள்வியும் முக்கியமானது. அவர்களது குற்றச்சாட்டின்படி, ஹவுதி கட்டுப்பாட்டில் உள்ள சனா சர்வதேச விமான நிலையத்தின் மீது சவுதி அரேபியா வான்வழித் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இதற்கு பதிலடியாகவே சவுதி நலன்களை இலக்காகக் கொண்ட கடல்வழித் தடையை அறிவித்ததாக அவர்கள் விளக்குகின்றனர். அதாவது, “வானில் தாக்கினால், கடலில் பதிலளிப்போம்” என்ற செய்தியையே அவர்கள் வெளிப்படுத்த முயல்கின்றனர்.

இதனுடன், மத்திய கிழக்கில் அமெரிக்கா-ஈரான் மோதலும் இந்தச் சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. ஈரானின் முக்கிய கட்டமைப்புகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதால், செங்கடல் மற்றும் ஹோர்முஸ் நீரிணை உள்ளிட்ட முக்கிய கடல்வழிகளில் பதற்றம் மற்றும் தாக்குதல் அதிகரிக்கக்கூடும் என்று ஈரான் முன்பே எச்சரித்திருந்தது. மேற்கத்திய நாடுகள் ஹவுதிகள் ஈரானின் ஆதரவைப் பெறுகின்றனர் என்று நீண்ட காலமாகக் கூறி வருகின்றன. ஆயுதங்கள், தொழில்நுட்பம், உளவுத்துறை ஆதரவு மற்றும் பயிற்சி ஆகியவை ஈரானிடமிருந்து கிடைக்கின்றன என்பது அமெரிக்கா மற்றும் சவுதியின் நிலைப்பாடாகும். ஈரான் இதனை முழுமையாக ஏற்காதபோதிலும், ஹவுதிகள் “எதிர்ப்பு அச்சு” (Axis of Resistance) எனப்படும் ஈரான் ஆதரவு வலையமைப்பின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றனர்.

தற்போது யேமனின் தலைநகர் சனா உள்ளிட்ட வடக்கு மற்றும் செங்கடல் கடற்கரைப் பகுதிகளின் பெரும்பகுதி ஹவுதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த நிலப்பரப்பு அவர்களுக்கு செங்கடல் கடற்பாதைகளை கண்காணிக்கும் மற்றும் தாக்கும் திறனை வழங்குகிறது. அதனால் பாப் அல்-மண்டப் நீரிணை வழியாகச் செல்லும் கப்பல்கள் எப்போதும் அச்சுறுத்தலுக்குள் இருக்கின்றன.

இந்த நெருக்கடியின் முதல் தாக்கம் சர்வதேச கப்பல் போக்குவரத்திலேயே உணரப்படுகிறது. பல கப்பல் நிறுவனங்கள் செங்கடல் வழியைத் தவிர்த்து ஆப்பிரிக்காவின் தென்முனையான நல்லாசை முனையை (Cape of Good Hope) சுற்றிச் செல்லத் தொடங்கியுள்ளன. இதனால் பயண நேரம் பல நாட்கள் அதிகரிக்கிறது. எரிபொருள் செலவுகள் உயர்கின்றன. கப்பல் காப்புறுதி கட்டணங்கள் பல மடங்கு அதிகரிக்கின்றன. இறுதியில் இந்த கூடுதல் செலவுகள் உலக சந்தையில் பொருட்களின் விலையையும் உயர்த்துகின்றன.

## எண்ணெய் சந்தை விலை உயர்வு

எண்ணெய் சந்தையும் இந்தப் பதற்றத்திற்கு மிகவும் உணர்வுபூர்வமாகப் பதிலளிக்கிறது. மத்திய கிழக்கிலிருந்து உலகின் பல பகுதிகளுக்கு செல்லும் கச்சா எண்ணெய் விநியோகத்தில் இடையூறு ஏற்படும் என்ற அச்சம் உருவானவுடன் சர்வதேச சந்தையில் எண்ணெய் விலை உயரத் தொடங்குகிறது. எண்ணெய் விலை உயர்வது போக்குவரத்து செலவுகளை அதிகரிக்கிறது. அதன் விளைவாக உணவுப் பொருட்கள் முதல் தொழிற்சாலை உற்பத்தி வரை அனைத்திலும் விலைவாசி உயர்வதற்கான வாய்ப்பு உருவாகிறது.

இந்தச் சூழ்நிலையில் சவூதி அரேபியாவின் நிலையும் மிகவும் சிக்கலானதாக உள்ளது. இளவரசர் முகமது பின் சல்மான் தனது Vision 2030 பொருளாதாரத் திட்டத்தின் மூலம் சவூதியை எண்ணெய் சார்ந்த பொருளாதாரத்திலிருந்து தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் முதலீடுகளை மையமாகக் கொண்ட புதிய பொருளாதாரமாக மாற்ற முயற்சித்து வருகிறார். NEOM போன்ற மிகப்பெரிய நகரத் திட்டங்கள், வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புகள் இந்தத் திட்டத்தின் அடிப்படையாக உள்ளன. ஆனால் மீண்டும் ஹவுதிகளுடன் பெரிய அளவிலான மோதல் ஏற்பட்டால், முதலீட்டாளர்களின் நம்பிக்கை பாதிக்கப்படலாம்.

மறுபுறம், தேசிய பாதுகாப்பு மற்றும் எண்ணெய் உற்பத்தி நிலையங்களின் பாதுகாப்பு என்பது சவூதிக்கு மிக உயர்ந்த முன்னுரிமையாகும். 2019ஆம் ஆண்டு அராம்கோ எண்ணெய் நிலையங்கள் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதல்கள் உலக எண்ணெய் சந்தையை உலுக்கியது இன்னும் மறக்கப்படவில்லை. எனவே ஹவுதிகள் மீண்டும் தாக்குதல் நடத்தினால், சவூதி பதிலடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாய்ப்பும் அதிகமாக உள்ளது.

அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளும் இந்தப் பதற்றத்தை கவனமாகக் கண்காணித்து வருகின்றன. உலக வர்த்தகத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய செங்கடலில் பல்வேறு கடற்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் மேலும் பதற்றத்தை அதிகரிக்கும் அபாயத்தையும் தன்னுடன் கொண்டிருக்கிறது.

## “Saudiக்கு இனி No Entry”

இந்தச் சூழ்நிலையைப் பார்க்கும்போது, எதிர்காலத்தில் மூன்று சாத்தியமான நிலைகள் உருவாகலாம். ஒன்று, சவூதி மற்றும் ஹவுதிகள் மீண்டும் பேச்சுவார்த்தை மூலம் பதற்றத்தைத் தணிக்கலாம். இரண்டு, குறைந்த அளவிலான தாக்குதல் மற்றும் பதிலடி நடவடிக்கைகள் நீடிக்கலாம். மூன்று, ஏதேனும் பெரிய தாக்குதல் நிகழ்ந்தால், அது சவூதி, ஹவுதிகள், ஈரான், அமெரிக்கா மற்றும் பிற பிராந்திய நாடுகளையும் உள்ளடக்கிய விரிவான மோதலாக மாறும் அபாயம் உள்ளது.

“Saudiக்கு இனி No Entry” என்ற ஹவுதிகளின் எச்சரிக்கை ஒரு பிரச்சார வாசகமாக மட்டுமல்ல; அது யேமன் போரின் தொடர்ச்சி, சவூதி-ஈரான் போட்டியின் புதிய கட்டம், செங்கடல் கடல்வழி பாதுகாப்பின் சவால் மற்றும் உலக பொருளாதாரத்தின் பாதிப்புகளை ஒரே நேரத்தில் வெளிப்படுத்தும் அரசியல் நிகழ்வாகும். அதே நேரத்தில், சமூக ஊடகங்களில் பரவும் பரபரப்பான தலைப்புகளை அதிகாரப்பூர்வ அறிவிப்புகளாகக் கருதாமல், நம்பகமான செய்தி ஆதாரங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்வது அவசியம்.

மத்திய கிழக்கின் அமைதி இன்று யேமன் போரின் முடிவோடு மட்டுமல்ல, சவூதி-ஈரான் உறவுகள், அமெரிக்காவின் பிராந்தியக் கொள்கைகள், செங்கடல் கடல்வழி பாதுகாப்பு மற்றும் சர்வதேச இராஜதந்திரத்தின் வெற்றியோடும் நெருக்கமாக இணைந்துள்ளது. ஆகவே, இந்த நெருக்கடிக்கு நீடித்த தீர்வு இராணுவ மோதல்களில் அல்ல; அரசியல் பேச்சுவார்த்தை, பரஸ்பர நம்பிக்கை மற்றும் பிராந்திய ஒத்துழைப்பில்தான் உள்ளது.

# செம்படச்சி



அந்தத்தெரு தடை செய்யப்பட்டுள்ளது. அந்தத் தெருவை நினைக்க நினைக்க அவள் மனம் அள்ளுண்டு செல்லும் புளுதியாய் இருப்புக்கொள்ள மறுக்கிறது.

அந்தத் தெருவுக்கு அவள் ஒரு நேரமேனும் செல்லாதுவிட்டால் விசர் பிடித்தவளாய் வெறித்தனம் கொள்வாள். அவள் மாதத்தில் மூன்று நாட்கள்தான் அந்தத் தெருவுக்குப்போகாது இருப்பாள். அந்த மூன்று நாட்களும் அவளுள் முந்நூறு நாட்களாய் வேகும்.

அந்தத் தெருவில்தான் அவள் வணங்கும் அம்மன்கோயில் இருக்கிறது. அதுக்குத் தொண்டுகள் செய்வதே அவளின் ஆத்மதிருப்தி.

காலையில் எழுந்து விளக்குமாற்றுடன் சென்றாளென்றால், இரண்டு மணித்தியாலங்கள் எடுக்கும் வெளிவீதிகள் எங்கும் கூட்டிவிட்டு வீட்டுக்கு வர.

திண்ணையில் இருந்துகொண்டு அந்தத் தெருவைப் பார்க்கப் பார்க்க நெஞ்சில் வேதனை முட்கள் குற்றி வீக்கமெடுத்தது.

எந்நேரமும் அந்தத்தெரு கலகலப்பாகவே இருக்கும். மேளமும், தாளமும், பூசையும் மணியுமாய் சரிகைச் சேலைகளுமாய், பட்டு வேஸ்டிகளுமாய்....

சனம் நிரம்பி வழியும் தெரு இன்று செம்மணி வீதியாய் நிறமிழந்து கிடக்கிறது.

அந்தத் தெருப்பக்கமாய் மாடு ஒன்று கதறும் சத்தம் அவளின் நெஞ்சில் ஊசியாய்த் துளைத்தது. அது அவளின் செம்படச்சியாய்த்தான் இருக்கவேணும். பால்கனத்து முலைக்காம்புகளின் வலியால் வேதனைக் கத்தல்களாகவே அது இருந்தது.

செம்படச்சி அந்தத் தெருவுக்குள் மேயப்போய் மூன்று நாட்களாயிற்று. இன்னும் வீடு திரும்பவில்லை. அதை அவங்கள் கட்டி வைத்திருக்கவேணும். அதை அவள் அந்தத் தெருவின் காவலாளியிடம் கேட்க ஓடினாள். அவன் துப்பாக்கிக்கட்டையை ஓங்கிக்கொண்டு வந்தான். அவனுக்கு அவளின் பாசைகள் புரியாமலும் இருந்திருக்கலாம். புரிந்தும் செம்படச்சியை திருப்பிக் கொடுக்க மனமுமின்றி இருந்திருக்கலாம்.

மீண்டும் செம்படச்சியின் அதே அவலஒலி அந்தத் தெருவுக்குள் காவலாளியையும் மீறி எழும்பி ஓடவேணும் போலிருந்தது. அவளுக்கு அச்சம் விடவில்லை. கால்களுக்கு விலங்கிட்டது. செம்படச்சியை நினைக்க கண்ணீர் நதியாய் ஓடியது. செம்படச்சியில் அவள் நல்ல உயிர்.

சும்மாய் இருக்கும் வேளைகளில் அதனருகிலிருந்து உண்ணிகளை பிடுங்கிக் கொண்டிருப்பாள். முதுகை வருடி தலையை அதன் கன்னங்களோடு தேய்ப்பாள். அதுவும் இதமாய் கன்னங்களை மாறிமாறி கொடுத்துக் கொண்டிருக்கும்.

செம்படச்சியால்தான் அவளின் வாழ்வும் எந்தக் கஷ்டங்களுமில்லாமல் நடந்து சென்றது.

கணவன் வலிகாம இடப்பெயர்வின்போது செத்துப்போக செம்படச்சிதான் வயிற்றுக்கு சோற்றைப்போட்டுக் கொண்டிருந்தது. ஒரு நாளைக்கு எட்டு ஒன்பது போத்தல் பாலைக்கொடுக்கும். அந்தப் பலைவிற்றே சீட்டும்போட்டு கஷ்டமின்றி வாழ்ந்தாள். அந்தச் செம்படச்சியால்தான் “பாலாச்சி” என்ற பெயரும் வந்தது.

பாலுக்கு வந்து ஏமாற்றங்களோடு திரும்பும் ஒவ்வொருவரையும் பார்க்கப்பார்க்க வேதனைத்தீ அவளில் முளாசி எரிந்தது. அப்படியே திண்ணையில் படுத்தாள்.

“ம்...பா...”

செம்படச்சியின் கன்று கட்டைக்குள் நின்று கத்தியது. அதுவும் தாயைக்காணாமல் மூன்று நாட்களாய் கதறுகிறது. எழுந்து கன்றுக்கருகே ஓடினாள் படுத்திருந்தவாறே கன்றும் அவளைப் பார்த்தது. கண்ணீர் கண்களில் குழமாகியது கன்றுக்கு.

அப்படியே சாணியென்றும் பாராமல் சக்கப்பணிய இருந்தாள். கன்றின் தலையைத் தூக்கி மடியிலே வைத்தாள். அதன் கன்னங்கள் இரண்டையும் தடவினாள். வயிறு குழி விழுந்திருந்தது.

“செம்படச்சி...”

மெதுவாய் அழைத்தாள். கன்றும் செம்படச்சி மாதிரித்தான். மண்நிறம் உச்சியில் சுட்டி. சிவனின் நெற்றிக்கண்ணாய் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் அந்தச்சுட்டியில்தான் செம்படச்சிக்கு சந்தனத்தை அழகாய் வைப்பாள்.

கன்று காதுகளை ஊசியாய் நீட்டிக்கொண்டு சுற்றுமுற்றும் விழிகளை அகட்டியது. அதுக்கு விளங்கவில்லை. அவள் தன்னைத்தான் அழைத்தாள் என்று.

“ம்...மாய்...”

“அம்மா இனி வரமாட்டாள். அவங்கள் வரவும் விடமாட்டாங்கள். இனி அம்மாவை மாதிரி எனக்கு நீதான் என்ர ராசாத்தி. இனி நீயும் அந்தப் பக்கம் போயிடாதை நீயும் கண்களுக்கு நல்ல குளிர்ச்சி. அவங்கள் கண்டாங்கள் எண்டால் உன்னைக் கொத்திக்கொண்டு போய்விடுவாங்கள்”

இமைகள் வெட்ட, அறுந்த நீர்த்துளிகள் கன்றின் முகமுடியில் விழுந்தது. நாக்கால் அந்த நீர்த்துளிகளை கன்று நக்கியது.

நாட்கள் நகர்ந்தது. அவளின் நினைவில் செம்படச்சி வந்து போவாள். கன்று தாயை மறந்திருக்கவேணும். கத்துவதில்லை. அவள் போடும் புற்களையும், தவிடுகளையும் தின்றுவிட்டு அப்படியே தூங்கிவிடும்.

அவள் சிலவேளைகளில் கன்றை அவிட்டுவிடுவாள். வீட்டைவிட்டு கன்று எங்கும் செல்லமாட்டாது.




**– யூலை எரிமலை 2000 –**

மேய்ந்து வயிறு நிறைந்ததும் தொட்டியில் நிரப்பிவிட்ட தண்ணியை குடித்துவிட்டு தூங்கிவிடும்.

ஒரு நாள் காலை...

சூரியனை முகில்கள் மூடியிருந்தன. மழையின் அறிகுறியாய் வானம் கறுத்திருந்தது. குளிர்மைக்காற்றில் தேகம் சில்லிட வைத்தபொழுது, அது அந்தவேளை “ம்... பாய்...!” என்றொரு சப்தம்.

அது செம்படச்சியின் சப்தமாக இருக்கவேணும். கறகறப்பாய் உச்சஸ்தாயில் கேட்டது. அந்தக் காலைப் பொழுதில் அந்த ஒலி சுவர்களில் மோதி எதிரொலித்தது.

அது செம்படச்சியின் குரலாகத்தான் இருக்கவேணும். எண்ண அலைகள் ஆர்ப்பரிக்க வெளியில் ஓடினாள்.

முற்றத்தில் நின்று சுற்று முற்றும் பார்த்தாள். செம்படச்சி அவளையே பார்த்த வண்ணம் படலையில் நின்றது. அவளுக்கு தன் விழிகளையே நம்பமுடியவில்லை. விழிகளைக் கசக்கி மீண்டும் பார்வையை எறிந்தாள். அதே செம்படச்சி!

கழுத்தில் கட்டியிருந்த கயிறு அறுபட்டு கால்வரைக்கும் நீண்டிருந்தது. நுனி தும்பு தும்பாய் சிதலப்பட்டிருந்தது.

கட்டை அறுத்து அது வெளியில் வந்திருக்கவேணும். புழுதிகள் மேலெங்கும் சுவறியிருந்தன. முட்கம்பிகள் மடியில்கீறி முலைக் காம்பு ஒன்று அறுந்து தொங்கியது. அவள் செம்படச்சியை அந்தக்கோலத்தில் கண்டதும் பதறிப்போனாள். அந்தப் பதற்றக் கொதகொதப்பில்

“செம்படச்சி...”

என்றவாறு அதனருகில் ஓடினாள்.

வயிறும், மடியும் பருத்து முலைக்காம்புகள் இறங்கி செம்படச்சி ஒரு கன்றை சுமந்திருப்பதை அவள் உணராமல் அதன் கன்னத்தை தனது கன்னத் தோடு தேய்த்த வண்ணமிருந்தாள்.

-கருணை ரவி-

# நூல் மதிப்புரை

# பிரிகேடியர் தீபன் – களமுனைகளின் செருக்கள நாயகன்

– மிதயா கானவி –

28.07.2026

**நூல்: பிரிகேடியர் தீபன் – களமுனைகளின் செருக்கள நாயகன்**
*தொகுப்பு: அ.ம. இசைவழுதி*
*வெளியீடு: தேசக்காற்று ஆவணக்காப்பகம்*
*பக்கங்கள்: 650*











கிட்டத்தட்ட பதினேழு ஆண்டுகால நெடிய காத்திருப்பிற்குப் பிறகு, ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போரியல் வரலாற்றின் மாபெரும் ஆவணப் பேழைகளில் ஒன்றான இந்நூல் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு, தற்கால வாசகர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதே, இந்த வரலாற்று வரவிற்கான ஆகச்சிறந்த பிரகடனமாக அமையும்.

கைக்குக் கிடைத்த சில தினங்களிலேயே, இந்த வரலாற்றுப் பேழையை ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன். அதன் ஒவ்வொரு பக்கமும், எம் தாயக விடுதலைக்காக நாம் கடந்து வந்த கரடுமுரடான பாதைகளையும், விடுதலைப் போராட்ட வரலாற்றின் அழியாத குருதிச் சுவடுகளையும், எம் மக்களின் விடுதலைக்காக எம் இளம் சந்ததி கொண்டிருந்த சாவுக்கு அஞ்சாத உறுதியையும், தன்னலமற்ற அர்ப்பணிப்பையும் என் கண் முன்னால் அதீத உயிர்ப்புடன் காட்சிப்படுத்தின. கடந்த காலத்தின் குரல்கள் மீண்டும் உயிர்பெற்று காதுகளில் ஒலித்தன.





நினைவுகள் மீண்டும் தூங்கவிடாது துரத்திக்கொண்டிருக்கின்றன.

வெறும் எழுத்துகளின் ஊடாக மட்டுமன்றி, அந்த வரலாற்றின் அசைக்க முடியாத சாட்சியங்களாகப் பொருத்தமான அரிய வண்ணப் புகைப்படங்களும் இந்நூலில் இணைக்கப்பட்டிருப்பது இதற்கு மேலும் உயிர்ப்பூட்டுகிறது. இது வெறும் புத்தகம் அல்ல; ஒரு “மெய்யான வரலாற்று ஆவணம்” என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை வாசகனுக்கு வழங்குகிறது.

தாயக மண்ணின் விடுதலைக்காக நாம் முன்னெடுத்த போராட்டத்தையும், அதன் மெய்யான வரலாற்றையும், உயரிய அந்த இலட்சியங்களுக்காக எம் தோழர்கள் புரிந்த ஒப்பற்ற தியாகங்களையும் ஆழமாக அறிந்துகொள்ள விரும்பும் உலகத் தமிழர் ஒவ்வொருவரின் வீட்டு நூலகத்திலும் தவறாது இடம்பெற வேண்டிய காலப் பெட்டகம் இது எனலாம்.

இந்நூல், வீரத்தளபதி பிரிகேடியர் தீபன் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைச் சரிதத்தை மட்டும் பதிவு செய்யும் ஒரு சுருங்கிய எல்லைக்குள் முடங்கிவிடவில்லை. மாறாக, இதன் பக்கங்கள் எங்கும் எமது ஒட்டுமொத்த விடுதலைப் போராட்ட வரலாற்றின் திருப்பங்களும், இதுவரை பொதுவெளியில் பேசப்படாத பல உண்மைகளும், எண்ணற்ற எம் புனிதர்களின் உன்னத அர்ப்பணிப்புகளும், உயிர்த்தியாகங்களும் ஒரு காட்டாற்றைப் போலப் பாய்ந்தோடுகின்றன.

போரியல் இலக்கியங்களில் கவனிக்கப்பட வேண்டிய பல சொல்லாடல்களையும் இந்நூல் தாங்கி நிற்கிறது.

ஆதலால், இது ஒரு வீரனின் வரலாறு என்ற எல்லையைக் கடந்து, விடுதலைப் போராட்டத்தின் வெவ்வேறு காலகட்டங்களின் கூட்டு நினைவுகளையும், போரியல் வரலாற்றின் பன்முக அடுக்குகளையும், இந்நீண்ட வழித்தடத்தில் பயணித்த ஏராளமான போராளிகளின் வரலாற்றையும் சுமந்து நிற்கும் அரிய வரலாற்றுப் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**நூலின் கட்டமைப்பு: பன்முகப் பரிமாணங்கள்**

இந்நூல், வாசகனை வரலாற்றின் வெவ்வேறு தளங்களுக்கு அழைத்துச் செல்லும் வகையில் மிக நேர்த்தியாகப் பகுக்கப்பட்டுள்ளது.

**சக தோழர்களின் நேரடி சாட்சியங்கள்**

நூலின் முதற்பாகம், பிரிகேடியர் தீபன் அவர்களோடு பள்ளியிலும், களமுனைகளிலும், போராட்ட வாழ்விலும் ஒன்றாகப் பயணித்து, நெருங்கிப் பழகிய சக தோழர்களின் நேரடி வாக்குமூலங்களாக விரிந்து செல்கிறது.

அவற்றில், இதுவரை வெளிவராத பல வரலாற்றுச் சம்பவங்கள் துல்லியமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

“போராளிகள் போர்ப்பிரியர்கள் அல்ல; மற்றவர்களுக்காக வாழத் துணிந்தவர்கள்.”

தீபன் என்ற பெருவீரனின் எண்ணங்கள் கருணை நிறைந்தவை என்பதையும் இங்கே வரலாறு பதிவாக்கத் தவறவில்லை.

ஒரு காலத்தின் இதயத் துடிப்பை, ஒரு தலைமுறையின் தியாகங்களை, ஒரு போரியல் நினைவுகளைச் சுமந்த மாபெரும் வரலாற்றுப் பெட்டகம் இது.

**பெண் போராளிகளின் நெஞ்சுரம்**

அவற்றில் குறிப்பாக, இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் எமது பெண் போராளிகள் எதிர்கொண்ட நெருக்கடிகளும், அந்தச் சவால்களை அவர்கள் வெற்றிகொண்ட வீரம் செறிந்த சம்பவங்களும், எமது போராட்ட வரலாற்றின் முதல் அணியைச் சேர்ந்த பெண் போராளி ஒருவரின் நேரடி





வாக்குமூலத்தின் வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், தீபன் அண்ணாவின் கட்டளையின் கீழ் நேரடியாகக் களம் கண்ட பெண் போராளிகளின் பார்வையும் மிகுந்த மனக் கனத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. சில பக்கங்கள் நெஞ்சை இறுகப் பிடிக்கின்றன் சில வரிகள் கண்களை ஈரமாக்கு கின்றன. அவை வெறும் நினைவுகள் அல்ல; காலம் அழிக்க முடியாத வரலாற்றுச் சாட்சிகள். இவை எமது எதிர்காலத் தலை முறைக்குக் கடத்தப்பட வேண்டிய மிக முக்கியமான வரலாறுக ளாகும்.

**வரலாற்றுச் சமர்களும் ஆனந்தபுரக் களமும்**

1984ஆம் ஆண்டு போராட்ட வாழ்விற்குள் நுழைந்த தீபன் அண்ணா பயணித்த பாதைகள் அனைத்தும் போரியல் வாழ் வின் சாட்சிகளே.

காட்டுச் சண்டையில் தொடங்கி, யாழ் இடப்பெயர்வுச் சமர்கள், வன்னிப் பெரும் சமர்கள் என அவற்றின் பின்னணிகளும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

வன்னிப் பெருநிலத்திலும், வட தமிழீழத்திலும் நிகழ்ந்த வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெரும் சமர்களும், அவற்றின் கேந்திர மூலோபாயங்களும் இதில் விரிவாகப் பேசப்பட்டுள் ளன. கரந்தடிப் படையாக இருந்த எமது விடுதலை அமைப்பை, 1990-க்குப் பின் மரபுவழிப் படையாக வளர்த்தெடுத்ததில் தலைவனுக்குத் துணைநின்ற முன்னணித் தளபதிகளில் தளபதி தீபன் அண்ணாவின் வகிபாகம் குறித்து இக்களமுனை எழுத்துக்கள் தெளிவாகப் பதிவு செய்கின்றன.

நாம் இப்போதும் அடிக்கடி உச்சரிப்பதும், இப்போது நினைத் தாலும் உயிர் கலங்கும் துயரத்தைத் தருவதுமான, இந்தப் பெருவீரன் விதையாகிப் போன “ஆனந்தபுரம் சமர்” பற்றியும், அந்த நெருப்பாற்றினுள் நின்று காயங்களுடன் போராடி, மீண் டும் மீண்டும் விழுப்புண்களுடன் சாவின் இறுதிக்கணம் வரை போராடி வீழ்ந்த வீரர்களின் தியாகங்கள் பற்றியும் இந்நூல் நெகிழ்ச்சியுடன் பேசுகிறது.

குறிப்பாக, அந்தக் களத்தில் பணியாற்றிய மருத்துவப் போராளி ஒருவரின் வாக்குமூலத்தின் வழியாக இதுவரை அறியப்படாத பல தகவல்கள் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.




**மழலையர் நெஞ்சில் "தீபன் மாமா"**

எமது அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் தங்களின் பாசத்திற் குரிய “தீபன் மாமா” விற்காக எழுதிய நினைவுப் பதிவுகளும் இதில் இடம்பெற்றிருப்பது இந்நூலின் மற்றுமொரு நெகிழ்ச் சியான சிறப்பம்சமாகும்.

இவற்றை நாம் சாதாரணமாகக் கடந்து சென்றுவிட முடியாது. அந்த மழலை வரிகள் எமது உண்மையான வரலாற்றைத் தாங்கி நிற்கும் குழந்தைகளின் தூய்மையான மனமார்ந்த சாட்சியங்களாகத் திகழ்வதுடன், எமது அடுத்த சந்ததிக் குழந் தைகள் எமது வரலாற்றைக் கற்கவும், எழுதவும், கடத்தவும் கொண்டுள்ள ஆர்வம் மனநிறைவைத் தருகிறது.

**போராளிகளின் குருதிச்சுவடுகள்**

தீபன் அண்ணா அவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதிய “போராளிகளின் குருதிச்சுவடுகள்” என்ற வரலாற்றுப் பதிவுகள் அடுத்த பகுதியாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

எழுத்து வடிவங்களாகவும், உரைகளாகவும், நேர்காணல்களா கவும் வெளிவந்த அவரது சொந்தப் பதிவுகள் அடங்கிய இப் பகுதி, இந்நூலின் மிகவும் ஆழமான, கருத்தாழமிக்க ஒரு பகுதியாக மிளிர்கிறது.

**தோளோடு தோள் நின்ற ஆளுமைகள்**

இந்நூலின் இறுதிப் பகுதியாக, பிரிகேடியர் தீபன் அவர்களுடன் தோளோடு தோள் நின்று, எமது பல வரலாற்று வெற்றிகளுக்கு உரம் சேர்த்த தளபதிகள், பொறுப்பாளர்கள் மற்றும் போரா ளிகள் எனச் சுமார் 34 ஆளுமைகள் பற்றிய அரிய வரலாற்றுப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

இவை, இந்த ஒட்டுமொத்த வரலாற்றுப் பெட்டகத்திற்கு மேலும் வலுசேர்க்கும் சான்றுகளாக அமைந்துள்ளன.

**முடிவுரை**

இந்நூலின் ஊடாகப் பயணிக்கும் வாசகர் எவராலும், அதன் ஒவ்வொரு பக்கத்திலும் பொதிந்துள்ள போரியல் வரலாற்றின் நுட்பமான பக்கங்களையும், தமிழ் இளம் சந்ததியின் ஒரு பகுதி இனத்தின் விடுதலைக்காக புரிந்த உயரிய தியாகங்களையும், காலத்தின் பின்னால் மறைந்து கிடக்கும் பல உண்மைத் துளிகளையும் தேடிக் கண்டறிந்துகொள்ள முடியும்.

நிச்சயமாக, நவீன போரியல் வரலாற்றின் நுட்பங்களையும், எமது விடுதலைப் போராட்டத்தின் தியாகம் செறிந்த ஆழமான பரிமாணங்களையும் தெளிவாக அறிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு மனிதரும் தவறாது வாசிக்க வேண்டிய ஒப்பற்ற ஆவணக் கருவூலம் இது என்பதில் ஐயமில்லை.

இந்நூலானது கடந்த மே மாதம் 30ஆம் நாளன்று, அரங்கம் நிறைந்த மக்களின் ஆதரவோடு கனடாவின் ஸ்காபரோ நகரில் வெளியிடப்பட்டது.

அடுத்து, ஐரோப்பிய நாடுகளில் வெளியிடும் முயற்சிகள் நடை பெற்று வருவதாக அறிய முடிகிறது.

தமிழர்கள் செறிந்து வாழும் பல்வேறு நாடுகளில் இந்நூல் வெளியீடு காண்பதன் வாயிலாக, தமிழர்கள் அனைவரிடமும் இந்நூலைக் கொண்டு சேர்க்க வேண்டும்.

திருமதி இலக்கியா தீபன் அவர்களின் எண்ணங்கள் உயி ரோவியமான நூலாக எமது கைகளில் கிடைத்துள்ளன. அவ ருக்கு மனமார்ந்த பாராட்டுகளும் நன்றிகளும்.

அதேபோல், இந்நூலாக்கக் குழுவினருக்கும் நெஞ்சார்ந்த நன் றிகள். இதன் தொடர்ச்சியாக இன்னும் பல வரலாற்று ஆவணங் களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.













# சவுதி – அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம்: மத்திய கிழக்கில் புதிய அணு யுகத்தின் தொடக்கமா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

25.07.2026

உலகில் அணுசக்தி என்பது வெறும் மின்சார உற்பத்திக்கான தொழில்நுட்பமாக மட்டுமல்ல. அது பாதுகாப்பு, பொருளாதாரம், சர்வதேச இராஜதந்திரம் மற்றும் இராணுவ வலிமை ஆகியவற்றோடும் நேரடியாகப் பின்னிப் பிணைந்துள்ள ஒரு முக்கிய துறையாகும். இந்தப் பின்னணியில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், சவூதி அரேபியாவுடன் முப்பது ஆண்டுகள் காலம் செல்லுபடியாகும் சிவில் அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அனுமதி வழங்கியிருப்பதாக வெளியாகியுள்ள தகவல் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.



## மத்திய கிழக்கில் அணுசக்தி

குறிப்பாக, சர்வதேச அணுசக்தி பாதுகாப்பு நடைமுறைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படும் "தங்கத் தரநிலை" (Gold Standard) முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படாத நிலையிலும் இந்த ஒப்பந்தம் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுவது, மத்திய கிழக்கில் புதிய பாதுகாப்பு சவால்களை உருவாக்கும் என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மைய நோக்கம், சவூதி அரேபியாவின் சிவில் அணுசக்தித் திட்டத்தை மேம்படுத்தி, எதிர்கால மின்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும்.

உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடுகளில் ஒன்றாக இருந்தாலும், உள்நாட்டு மின்சாரத் தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. மேலும், "Vision 2030" என்ற பொருளாதார மாற்றுத் திட்டத்தின் கீழ் எண்ணெய் சார்ந்த பொருளாதாரத்திலிருந்து பல்துறை பொருளாதாரத்திற்கு மாறும் முயற்சியில் சவூதி ஈடுபட்டுள்ளது. அதற்காக புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களுடன் அணுசக்தியையும் முக்கிய மாற்று ஆற்றல் ஆதாரமாகக் கருதுகிறது.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமெரிக்க நிறுவனங்கள் சவூதிக்கு அணுமின் நிலையங்களை அமைப்பதற்கான தொழில்நுட்பம், பொறியியல் திறன் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்கவுள்ளன. ஆனால், மிக முக்கியமான விவாதமாக இருப்பது யுரேனியம் செறிவூட்டும் (Uranium Enrichment) உரிமை பற்றிய கேள்வியாகும். அணுமின் உற்பத்திக்குத் தேவையான குறைந்த அளவிலான செறிவூட்டப்பட்ட யுரேனியம் சட்டபூர்வமான தேவையாக இருந்தாலும், அதே தொழில்நுட்பத்தை மேலும் மேம்படுத்தினால் அணு ஆயுத உற்பத்திக்கும் பயன்படுத்த முடியும். எனவே, இந்தத் திறன் எந்த நாட்டிற்கும் வழங்கப்படும்போது உலக நாடுகள் மிகுந்த எச்சரிக்கையுடன் அணுகுகின்றன.

## அமெரிக்கா சவூதி உறவு

அமெரிக்கா கடந்த காலங்களில் ஐக்கிய அரபு அமீரகத்துடன் மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தில், அந்த நாடு யுரேனியம் செறிவூட்டலையோ அல்லது பயன்படுத்திய அணு எரிபொருளை மறுசுழற்சி செய்வதையோ நிரந்தரமாகத் துறக்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தது. இதுவே "Gold Standard" என அழைக்கப்பட்டது. ஆனால் சவூதியுடனான புதிய ஒப்பந்தத்தில் அந்த அளவிலான கட்டுப்பாடு இடம்பெறவில்லை என்ற தகவல்களே சர்ச்சையின் மையமாக உள்ளன.

சவூதி அரேபியா தனது நாட்டில் யுரேனியம் தாதுக்கள் இருப்பதாகக் கூறி, அவற்றை பயன்படுத்தி எதிர்காலத்தில் அணு எரிபொருளை உள்நாட்டிலேயே தயாரிக்க விரும்புகிறது. இது பொருளாதார ரீதியில் தன்னிறைவை நோக்கிய ஒரு முயற்சியாக விளக்கப்படுகின்றது. இருப்பினும், இதே திறன் அணு ஆயுத உற்பத்திக்கான அடித்தளமாகவும் மாறக்கூடும் என்பதால் பல நாடுகள் கவலை வெளியிடுகின்றன.

குறிப்பாக மத்திய கிழக்கில் ஏற்கனவே அணுசக்தி தொடர்பான பதற்றம் நீண்டகாலமாக இருந்து வருகிறது. ஈரான் தனது அணுசக்தித் திட்டம் முழுமையாக அமைதியான நோக்கங்களுக்காகவே என வலியுறுத்தி வந்தாலும், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் அது அணு ஆயுதத் திட்டமாக மாறக்கூடும் என்ற சந்தேகத்தை நீண்டகாலமாக வெளிப்படுத்தி வருகின்றன. இந்தப் பின்னணியில் சவூதிக்கும் யுரேனியம் செறிவூட்டும் உரிமை வழங்கப்பட்டால், அது ஈரான்-சவூதி போட்டியை மேலும் தீவிரப்படுத்தக்கூடும்.




**மத்திய கிழக்கில் அணுசக்தி தொடர்பான பதற்றம் நீண்டகாலமாக இருந்து வருகிறது. ஈரான் தனது அணுசக்தித் திட்டம் முழுமையாக அமைதியான நோக்கங்களுக்காகவே என வலியுறுத்தி வந்தாலும், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் அது அணு ஆயுதத் திட்டமாக மாறக்கூடும் என்ற சந்தேகத்தை நீண்டகாலமாக வெளிப்படுத்தி வருகின்றன. இந்தப் பின்னணியில் சவூதிக்கும் யுரேனியம் செறிவூட்டும் உரிமை வழங்கப்பட்டால், அது ஈரான்–சவூதி அதிகார போட்டியை மேலும் தீவிரப்படுத்தக்கூடும்.**

சவூதி இளவரசர் முகம்மது பின் சல்மான் ஏற்கனவே, ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கினால், சவூதி அரேபியாவும் அதே பாதையில் செல்லும் என்று கடந்த காலங்களில் எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்தக் கருத்து இன்றும் பல பாதுகாப்பு ஆய்வாளர்களால் நினைவு படுத்தப்படுகிறது. எனவே, அணுசக்தி தொழில்நுட்ப ஒத்துழைப்பு எதிர்காலத்தில் பிராந்திய ஆயுதப் போட்டிக்கு வழிவகுக்குமா என்ற கேள்வி எழுகிறது.

இதேவேளை, இந்த ஒப்பந்தத்தில் சில பாதுகாப்பு ஏற்பாடுகளும் இடம்பெற்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. யுரெனியம் செறிவூட்டல் பொருளாதார ரீதியாகவும் தொழில்நுட்ப ரீதியாகவும் நியாயமானதா என்பதை அமெரிக்கா-சவூதி கூட்டுக் குழு முதலில் ஆய்வு செய்யும். மேலும், மிக உயர்ந்த உணர்திறன் கொண்ட அணு தொழில்நுட்பங்கள் நேரடியாக சவூதிக்கு மாற்றப்படாது என்றும், அணுமின் நிலையங்களின் முக்கிய கட்டுமானப் பணிகளை அமெரிக்க நிறுவனங்களே மேற்கொள்வார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்த ஏற்பாடுகள் அணு ஆயுதப் பரவல் அபாயத்தைக் குறைப்பதற்கான முயற்சியாகக் கருதப்படுகின்றன.

## அமெரிக்க பொருளாதார நலன்

இந்த ஒப்பந்தம் அமெரிக்காவின் பொருளாதார நலன்களுடனும் தொடர்புடையது. உலக அணுசக்தி சந்தையில் அமெரிக்க நிறுவனங்கள் ரஷ்யா, சீனா, தென் கொரியா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுடன் கடுமையான போட்டியில் உள்ளன. சவூதி போன்ற செல்வாக்கு மிக்க சந்தையில் அமெரிக்க நிறுவனங்களுக்கு பெரிய ஒப்பந்தங்கள் கிடைப்பது ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளையும் பல பில்லியன் டொலர் முதலீட்டையும் உருவாக்கக்கூடும். இதுவும் ட்ரம்ப் நிர்வாகம் இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

அதே நேரத்தில், அரசியல் ரீதியாக இந்த ஒப்பந்தம் அமெரிக்க காங்கிரஸில் கடுமையான விவாதத்தை ஏற்படுத்தக்கூடும். அணு ஆயுதப் பரவலைத் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் பல செனட்டர்கள் மற்றும் பிரதிநிதிகள், போதுமான பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லாமல் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்கக் கூடாது என்று வாதிடலாம். குறிப்பாக ஈரானுடனான பதற்றம் இன்னும் முழுமையாகத் தணியாத நிலையில், சவூதிக்கு அணுசக்தி தொழில்நுட்ப அனுமதி வழங்குவது புதிய பாதுகாப்பு சிக்கல்களை உருவாக்கும் என்ற கருத்து வலுப்பெறலாம்.

சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) உலகளாவிய அணுசக்தி நடவடிக்கைகளை கண்காணித்து வருகிறது. அதன் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது சர்வதேச நம்பகத்தன்மைக்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனவே, சவூதி எதிர்காலத்தில் IAEA உடன் எவ்வாறு செயல்படும் என்பது இந்த ஒப்பந்தத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் முக்கிய அம்சமாக இருக்கும்.

## இஸ்ரேல் அதிருப்தி

இஸ்ரேலும் இந்த ஒப்பந்தத்தை மிகுந்த கவனத்துடன் நோக்கி வருகிறது. மத்திய கிழக்கில் அணு ஆயுத திறன் கொண்ட ஒரே நாடாகக் கருதப்படும் இஸ்ரேல், பிராந்தியத்தில் வேறு எந்த நாடும் அணு ஆயுதத் திறனை நோக்கிச் செல்லக் கூடாது என்ற கொள்கையை நீண்டகாலமாகப் பின்பற்றி வருகிறது. ஆகவே, சவூதியின் அணுசக்தி முன்னேற்றம் இஸ்ரேலின் பாதுகாப்புக் கணக்கீடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

மற்றொரு முக்கிய அம்சம், இந்த ஒப்பந்தம் அமெரிக்கா-சவூதி உறவை மேலும் வலுப்படுத்தும் முயற்சியாகவும் பார்க்கப்படுகிறது. சீனா மற்றும் ரஷ்யா மத்திய கிழக்கில் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்த முயற்சித்து வரும் நிலையில், சவூதியை அமெரிக்காவின் மூலோபாய கூட்டாளியாகத் தொடர்ந்து வைத்திருப்பது வாஷிங்டனின் முக்கிய வெளியுறவுக் கொள்கை நோக்கங்களில் ஒன்றாகும். அணுசக்தி ஒத்துழைப்பு இந்த கூட்டுறவை நீண்டகாலத்திற்கு உறுதிப்படுத்தும் கருவியாக அமையக்கூடும்.

எனினும், அணுசக்தி தொழில்நுட்பம் அமைதியான நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே உலக சமூகத்தின் அடிப்படை எதிர்பார்ப்பாகும். அதற்காக வெளிப்படைத்தன்மை, சர்வதேச கண்காணிப்பு, பாதுகாப்பு ஒப்பந்தங்கள் மற்றும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு உடன்படிக்கைகளின் முழுமையான அமலாக்கம் இன்றியமையாததாகும்.

ட்ரம்ப் நிர்வாகம் சவூதி அரேபியாவுடன் மேற்கொள்ளவுள்ள அணுசக்தி ஒப்பந்தம், வெறும் எரிசக்தித் திட்டம் மட்டுமல்ல; அது உலக அரசியல், மத்திய கிழக்கு பாதுகாப்பு, அணு ஆயுதப் பரவல், அமெரிக்காவின் மூலோபாய நலன்கள் மற்றும் சர்வதேச அதிகாரச் சமநிலை ஆகிய அனைத்தையும் தொடும் மிக முக்கியமான நிகழ்வாகும். இந்த ஒப்பந்தம் சரியான பாதுகாப்பு உத்தரவாதங்களுடனும் சர்வதேச மேற்பார்வையுடனும் நடைமுறைப்படுத்தப்பட்டால், சவூதியின் எரிசக்தி மாற்றத்திற்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும். ஆனால் போதுமான கட்டுப்பாடுகள் இல்லாத சூழலில் இது மத்திய கிழக்கில் புதிய அணு ஆயுதப் போட்டிக்கான தொடக்கமாக மாறும் அபாயமும் இருப்பதை உலக நாடுகள் மறுக்க முடியாது. எனவே, இந்த ஒப்பந்தத்தின் இறுதி வடிவமும் அதன் நடைமுறைகளும் எதிர்கால சர்வதேச பாதுகாப்பு சூழலை குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கக் கூடியவை என்பதில் எந்த ஐயமும் இல்லை.

# ஹோர்மூஸ் – பாப் எல் மண்டெப் நீரிணை: உலக எண்ணெய் வர்த்தகத்தின் உயிர்நாடி!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

23.07.2026

உலகப் பொருளாதாரம் இன்று பெருமளவில் எரிசக்தியைச் சார்ந்தே இயங்குகிறது. தொழிற்சாலைகள், மின்சார உற்பத்தி, போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, வேளாண்மை, இராணுவ நடவடிக்கைகள் என மனித வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இன்றியமையாத வளங்களாக உள்ளன. இந்த எரிசக்தி வளங்கள் உலகின் சில பகுதிகளில் மட்டுமே அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் உலகின் மிகப்பெரிய எண்ணெய் இருப்புகளைக் கொண்டுள்ளன. ஆனால் அந்த எண்ணெய் உலகின் பிற நாடுகளுக்கு பாதுகாப்பாகவும் தடையின்றியும் சென்றடைந்தால்தான் உலகப் பொருளாதாரம் சீராக இயங்க முடியும்.




## ஹோர்மூஸ் நீரிணை முடக்கம்

இதனால்தான் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளை விட, அந்த எண்ணெய் உலகச் சந்தைகளை அடையும் கடல் வழித்தடங்கள் மிகுந்த மூலோபாய முக்கியத்துவம் பெற்றுள்ளன. உலகின் மிக முக்கியமான கடல்சார் நெருக்கமான போக்குவரத்து வழித்தடங்கள் (Maritime Chokepoints) என்று அழைக்கப்படுபவைகளில் முதன்மையானவை ஹோர்மூஸ் நீரிணை மற்றும் பாப் எல்-மண்டெப் நீரிணை ஆகும். இந்த இரண்டு நீரிணைகளும் உலக எண்ணெய் விநியோகத்தின் உயிர்நாடிகளாகக் கருதப்படுகின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்று தற்காலிகமாகக் கூட முடக்கப்பட்டால், அதன் தாக்கம் உலக எண்ணெய் சந்தை மட்டுமல்ல, உலக பொருளாதாரம் முழுவதையும் உலுக்கக்கூடியதாக இருக்கும்.

ஹோரமூஸ் நீரிணை பாரசீக வளைகுடாவையும் ஓமான் வளைகுடாவையும் இணைக்கும் குறுகிய கடற்பாதையாகும். வடக்கில் ஈரான் அமைந்துள்ளதுடன், தெற்கில் ஓமான் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் அமைந்துள்ளன. அகலத்தில் மிகவும் குறுகியதாக இருந்தாலும், உலகின் மிகப்பெரிய எண்ணெய் போக்குவரத்து பாதையாக இது விளங்குகிறது. சவுதி அரேபியா, ஈராக், குவைத், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஈரான் போன்ற எண்ணெய் வளமிக்க நாடுகளின் பெரும்பாலான கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இந்த நீரிணை வழியாகவே உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சர்வதேச எரிசக்தி ஆய்வுகளின்படி, உலகின் கடல்வழி கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு ஹோர்மூஸ் நீரிணை வழியாகவே செல்கிறது. தினமும் கோடிக்கணக்கான பீப்பாய் கச்சா எண்ணெய் இந்த பாதையை கடந்து உலகின் பல்வேறு சந்தைகளை அடைகிறது. இதனால், இந்த நீரிணை உலக எரிசக்தி பாதுகாப்பின் மிக முக்கியமான மையமாகக் கருதப்படுகிறது.

ஹோர்மூஸ் நீரிணை எண்ணெய் மட்டுமல்லாமல், உலகின் மிகப்பெரிய திரவ இயற்கை எரிவாயு (LNG) ஏற்றுமதிக்கும் முக்கியமான பாதையாகும். குறிப்பாக கத்தார் உலகின் முன்னணி LNG ஏற்றுமதியாளர்களில் ஒன்றாகும். அதன் ஏற்றுமதியின் பெரும்பகுதி இந்த நீரிணை வழியாகவே ஆசியா மற்றும் ஐரோப்பாவுக்கு செல்கிறது. எனவே, ஹோர்மூஸ் நீரிணையில் ஏற்படும் எந்தவொரு பதற்றமும் உலக இயற்கை எரிவாயு சந்தையையும் நேரடியாகப் பாதிக்கும்.

இந்த நீரிணையின் முக்கியத்துவம் காரணமாகவே இது பல தசாப்தங்களாக சர்வதேச அரசியலின் மையமாக இருந்து வருகிறது. குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான பதற்றங்கள் அதிகரிக்கும் ஒவ்வொரு முறையும், ஹோர்மூஸ் நீரிணை குறித்து உலகம் கவலை அடைகிறது. ஈரான் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் போதெல்லாம், தேவை




யானால் ஹோர்முஸ் நீரிணையை மூடத் தயார் என ஈரான் பலமுறை எச்சரித்துள்ளது. அத்தகைய நிலைமை ஏற்பட்டால், உலக எண்ணெய் விநியோகம் கடுமையாக பாதிக்கப்படும்.

எண்ணெய் விலை மிக வேகமாக உயரக்கூடும். பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் பல நாடுகளில் அதிகரிக்கும். உலக பங்குச் சந்தைகள் சரிவைச் சந்திக்கலாம். பணவீக்கம் உயரக்கூடும். உலக பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படலாம். இந்த காரணங்களால் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் பாரசீக வளைகுடா பகுதியில் நிரந்தர கடற்படைப் பிரசன்னத்தை வைத்துள்ளன. உலகின் எரிசக்தி விநியோகத்தைப் பாதுகாப்பது அவர்களின் முக்கிய நோக்கமாகும்.

## பாப் எல்–மண்டெப் நீரிணையில் தாக்குதல்

ஹோர்மூஸ் நீரிணைக்கு இணையான மற்றொரு முக்கிய கடற்பாதை பாப் எல்-மண்டெப் நீரிணை ஆகும். அரபு மொழியில் “பாப் எல்-மண்டெப்” என்பது “கண்ணீரின் வாயில்” என்று பொருள்படும். இது செங்கடலையும் ஏடன் வளைகுடாவையும் இணைக்கும் முக்கிய நீரிணையாகும். இதன் வடக்கில் யேமனும் தெற்கில் ஜிபூட்டி மற்றும் எரிட்ரியாவும் அமைந்துள்ளன.

**உலக எரிசக்தி வழங்கலின் மூலோபாய முக்கியத்துவம் இரு நீரிணைகளில் முக்கியமாக தங்கியுள்ளது. ஹோர்மூஸ் நீரிணை – பாப் எல்–மண்டெப் நீரிணை இரண்டும் உலக எண்ணெய் வர்த்தகத்தின் உயிர்நாடிகளாக விளங்குகின்றன. ஹோர்மூஸ் நீரிணையும் [Strait of Hormuz] பாப் எல்–மண்டெப் நீரிணையும் [Bab el-Mandeb] தற்போதைய மத்திய கிழக்கு போர் சூழ்நிலையில் உலகின் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன.**

இந்த நீரிணையின் முக்கியத்துவம், இது சூயஸ் கால்வாயுடன் நேரடியாக இணைந்திருப்பதில்தான் உள்ளது. மத்திய கிழக்கிலிருந்து ஐரோப்பாவுக்குச் செல்லும் பெரும்பாலான எண்-ணெய்க் கப்பல்களும் வர்த்தகக் கப்பல்களும் இந்தப் பாதையைப் பயன்படுத்துகின்றன. பாப் எல்-மண்டெப் நீரிணையை கடந்த கப்பல்கள் செங்கடல் வழியாகச் சென்று பின்னர் சூயஸ் கால்வாய் வழியாக மத்தியதரைக் கடலை அடைகின்றன. இதனால் ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடையிலான வர்த்தகத்திற்கு மிகக் குறுகிய மற்றும் வேகமான கடற்பாதை உருவாகிறது.

இந்த நீரிணை தற்காலிகமாக மூடப்பட்டால், கப்பல்கள் ஆப்பிரிக்க கண்டத்தின் தென்முனையான கேப் ஆஃப் குட் ஹோப் (Cape of Good Hope) வழியாக முழு ஆப்பிரிக்காவையும் சுற்றிச் செல்ல வேண்டியிருக்கும். இதனால் பயண தூரம் ஆயிரக் கணக்கான கிலோமீட்டர்கள் அதிகரிக்கும். எரிபொருள் செலவுகள் உயரும். சரக்கு விநியோகத்திற்கு கூடுதல் வாரங்கள் தேவைப்படும். கப்பல் காப்புறுதி செலவுகள் அதிகரிக்கும். உலகளாவிய விநியோகச் சங்கிலியில் தாமதம் ஏற்படும்.

2023 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து யேமனில் செயல்படும் ஹூவுதி ஆயுதக் குழுவினர் செங்கடல் வழியாகச் சென்ற பல சர்வதேச வர்த்தகக் கப்பல்களை டிரோன்கள் மற்றும் ஏவுகணைகளால் தாக்கிய சம்பவங்கள் உலக கவனத்தை ஈர்த்தன. இதன் விளைவாக உலகின் முன்னணி கப்பல் நிறுவனங்கள் பல இந்தப் பாதையைத் தவிர்க்கத் தொடங்கின. பல கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கப்பல் போக்குவரத்து செலவுகள் அதிகரித்ததுடன், ஐரோப்பா மற்றும் ஆசியாவின் வர்த்தக விநியோகத்திலும் தாமதம் ஏற்பட்டது. இது உலக வர்த்தகச் சங்கிலி எவ்வளவு எளிதில் பாதிக்கப்படக்கூடும் என்பதை வெளிப்படுத்தியது.

இந்த இரண்டு நீரிணைகளும் எண்ணெய் வர்த்தகத்திற்காக மட்டுமல்ல, உலக அரசியல் மற்றும் பாதுகாப்பிற்கும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை. அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் இந்தப் பகுதிகளில் கடற்படைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. கடற்கொள்ளை, பயங்கரவாதத் தாக்குதல்கள், பிராந்திய மோதல்கள் மற்றும் கடல் வழிப் போக்குவரத்து பாதுகாப்பு ஆகியவை இந்த நாடுகளின் முக்கிய கவலைகளாக உள்ளன.

இந்தியாவைப் போன்ற எண்ணெய் இறக்குமதியை அதிகம் சார்ந்த நாடுகளுக்கும் இந்த நீரிணைகள் மிக முக்கியமானவை. இந்தியா தனது கச்சா எண்ணெயின் பெரும் பகுதியை மத்திய கிழக்கிலிருந்து இறக்குமதி செய்கிறது. எனவே ஹோர்மூஸ் அல்லது பாப் எல்-மண்டெப் நீரிணைகளில் ஏற்படும் பதற்றங்கள் இந்தியாவின் எரிபொருள் விலை, பண வீக்கம், தொழில்துறை உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கும். இதேபோல் சீனா, ஜப்பான், தென் கொரியா போன்ற ஆசிய பொருளாதாரங்களும் இந்த கடல் வழித்தடங்களின் பாதுகாப்பை மிகுந்த முக்கியத்துவத்துடன் நோக்குகின்றன.

சில நாடுகள் இந்த நீரிணைகளின் மீதான சார்பைக் குறைப்பதற்காக எண்ணெய்க் குழாய்கள் (Pipelines) அமைத்துள்ளன. உதாரணமாக, சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் சில மாற்று குழாய் வழித்தடங்களை உருவாக்கியுள்ளன. இருப்பினும், அவற்றின் கொள்ளளவு குறைவாக இருப்பதால் ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் மொத்த எண்ணெய் அளவை முழுமையாக மாற்ற முடியாது. அதேபோல், பாப் எல்-மண்டெப் பாதைக்கு மாற்றாக ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்லும் வழி இருந்தாலும், அது அதிகச் செலவு மற்றும் அதிக நேரம் தேவைப்படும் பாதையாகும்.

இன்றைய உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தில், எரிசக்தி பாதுகாப்பு என்பது தேசிய பாதுகாப்புடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. அதனால் உலக வல்லரசுகள் இந்த இரண்டு நீரிணைகளிலும் நிலைத்தன்மையைப் பேணுவதற்கு தொடர்ந்து இராணுவ, இராஜதந்திர மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஒரு பிராந்திய மோதல் கூட உலகளாவிய பொருளாதார அதிர்வை உருவாக்கும் சூழ்நிலை இன்று நிலவுகிறது.

ஹோர்முஸ் நீரிணையும் பாப் எல்-மண்டெப் நீரிணையும் வெறும் புவியியல் அமைப்புகள் அல்ல; அவை உலக பொருளாதாரத்தின் உயிர்நாடிகள். உலகின் எரிசக்தி பாதுகாப்பு, சர்வதேச வர்த்தகம், எண்ணெய் விலை, தொழில்துறை உற்பத்தி மற்றும் உலக அரசியல் ஆகிய அனைத்தும் இவற்றின் பாதுகாப்போடு நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளன. எதிர்காலத்தில் எரிசக்தி மாற்றம் (Energy Transition) புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டை அதிகரித்தாலும், அடுத்த சில தசாப்தங்களுக்கு உலக எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்தில் இந்த இரண்டு நீரிணைகளின் மூலோபாய முக்கியத்துவம் குறைய வாய்ப்பில்லை. எனவே, ஹோர்முஸ் மற்றும் பாப் எல்-மண்டெப் நீரிணைகள் உலக அமைதி, பொருளாதார நிலைத்தன்மை மற்றும் எரிசக்தி பாதுகாப்பின் மையப் புள்ளிகளாக தொடர்ந்து விளங்கும்.

# ஒரு சர்வதேச அமைப்பு “இனப்படுகொலை” என முதன் முறையாக அறிவித்த ‘கறுப்பு யூலை’

– பா. அரியநேத்திரன்–

22.07.2026




1983 யூலை 23இல் தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் வீதியில் படை நகர்வுக்காக சென்ற இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இந்த தாக்குதலை தூண்டுதலாக எடுத்து திட்டமிட்ட இனப்படுகொலையை அப்போதைய ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசின் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன, பிரதமர் ஆர் பிரமதாசா, அமைச்சர் சிறில் மத்தியூ மற்றும் கட்சி உறுப்பினர்களால் திட்டமிடப்பட்ட கூட்டு இனப்படுகொலை இதுவாகும். இதனை கறுப்பு யூலை என பின்னர் அடையாளப் படுத்தப்பட்டது. 2026 யூலை 23 இன்று 43 வருடங்கள் அந்த கொடூரம் நடந்து இன்று வரையும் அதற்கான நீதியில்லை.

“இந்த படுகொலை கொடூரத்தை முதன் முதலாக ஒரு சர்வதேச அமைப்பான பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையம் (International Commission of Jurists) என்ற அரசசார்பற்ற அமைப்பு 1983 டிசம்பரில் வெளியிட்ட அறிக்கையில் யூலை படுகொலை இப்படுகொலை என்று விவரித்தது” எப்படி இந்த இனப்படுகொலை 1983 யூலை 23 தொடக்கம் 1983, யூலை 30 வரையும் தொடர்சியாக 8நாட்கள் அரங்கேறியது என்பதை விரிவாக பார்போம்.

## 01 ஆம் நாள்



1983 யூலை 23 சனிக்கிழமை இரவு 11.30 மணியளவில், தமிழீழ விடுதலைப்புலிகள் யாழ். நகருக்கு அருகில் உள்ள திருநெல்வேலியில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத் தொடரணி மீது பதுங்கியிருந்து தாக்குதலை தொடுத்தனர். இதன்போது இரண்டு இராணுவத்தினர் காயமடைந்தனர். அதன் பின்னால் வந்த வாகனத்தில் இருந்த இராணுவத்தினர் தங்கள் சக வீரர்களுக்கு உதவக் கீழே இறங்கினர். அவர்கள் மீது போராளிகள் தானியங்கி ஆயுதங்கள், கைக்குண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தினர். தொடர்ந்து நடந்த மோதலில், ஒரு அதிகாரியும் பன்னிரண்டு இராணுவத்தினரும் கொல்லப் பட்டனர்.

## 02 ஆம் நாள்

1983 யூலை 24 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை யாழ் பலாலி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி செல்லும் பாதையில் உள்ள அனைத்துக் கடைகளையும் அடித்து நொறுக்கியதுடன 51 தமிழ் பொது மக்கள் இராணுவத்தால் படுகொலை செய்யப் பட்டனர்.

13 இராணுவத்தினரின் இறுதிச் சடங்குகளை யாழ்ப்பாணத்தில் நடத்தக் கூடாது என இராணுவத்தின் தளபதி திச்ச வீரதுங்க உட்பட்ட இராணுவ அதிகாரிகள் முடி வெடுத்தனர். அதற்குப் பதிலாக கொழும்பில் பொரளை கனத்தை சேமக்காலையில் முழு இராணுவ மரியாதையுடன் இறுதிச் சடங்குகளை நடத்த முடிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தன, பிரதமர் ரணசிங்க பிரேமதாசா, 1983 யூலை 24 மாலை 5 மணிக்கு நடைபெறவிருந்த இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள சென்றனர். இறந்த இராணுவத்தினரை அவர்களது சொந்தக் கிராமங்களில் அடக்கம் செய்வதற்காக அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் வழக்கமான நடை முறைக்கு மாறாகவே இது நடந்தது.

பொரளையில் உள்ள காவல் நிலையத்தில் கலகத் தடுப்புப் பிரிவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டு இறுதிச் சடங்கிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் மாலை 5 மணியாகியும் உடல்கள் கொழும்புக்கு வரவில்லை. இராணுவ வீரர்களின் உடல்களை தங்களிடம் ஒப்படைத்து, பாரம்பரிய முறைப்படி அடக்கம் செய்ய வேண்டும் என இராணுவ வீரர்கள் வலியுறுத்தினர்.

நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, சடலங்கள் பலாலி இராணுவ முகாமில் தொடர்ந்து இருந்தன. பலாலி விமானப்படை தளத்தில் இருந்து உடல்களை ஏற்றி வந்த அவ்ரோ விமானப் படை விமானம் இரவு 7.20 மணிக்கு இரத்மலானை வானூர்தி நிலையத்தை வந்தடைந்தது. சடலங்கள் கனத்தை மயானம் கொண்டு செல்ல தாமதமானதன் காரணமாக கனத்தை சேமக் காலையில் பதற்றம் அதிகரித்தது. கொழும்பு வனாத்தமுல்லை சேரியைச் சேர்ந்த சுமார் 3000, தொடக்கம் 8000, பேர் உட்பட ஒரு பெரிய கூட்டம், தாக்குதல் செய்தியால் கோபமடைந்த நிலையில் கனத்தையில் திரண்டனர்.

உடல்களை மயானத்தில் அடக்கம் செய்வதை விட குடும்பத்தாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஒரு கூட்டத்தினர் சத்தமிட்டு கோசமிட்டனர். கூட்டத்திற்கும் காவல்துறையினருக்கும் இடையே வன்முறை வெடித்தது, கலவரப் படை வரவழைக்கப்பட்டது. கலகத் தடுப்புப் பிரிவினர் கூட்டத்தின் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி, தடியடி நடத்தினர். நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர இராணுவம் வரவழைக்கப்பட்டது.

இறுதியில் இராணுவ இறுதிச் சடங்கு நிறுத்தப்பட்டு உடல்களைக் குடும்பத்தினரிடம் ஒப்படைக்க ஜே. ஆர். முடிவு செய்தார். இரத்மலானையிலிருந்து உடல்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் இராணுவத் தலைமையகத்திற்கு திருப்பி விடப்பட்டன. கனத்தையில் குழுமி இருந்த கூட்டத்திற்கு இரவு 10 மணியளவில் ஜனாதிபதி ஜே. ஆரின் முடிவு தெரிவிக்கப்பட்டது. பின்னர் திரண்ட மக்கள் சேமக் காலையை விட்டு வெளியேறியனர்.



வெளியேறிய கூட்டத்தின் ஒரு பகுதி சிங்களக் குண்டர்கள் டி. எஸ். சேனநாயக்கா வீதியில் இருந்து பொரளை வீதிவரை உள்ள தமிழருக்குச் சொந்தமான நாகலிங்கம் ஸ்டோர் என்ற கடையை தீயிட்டு அழித்து தமிழர்களுடைய வீடுகளையும் உடைத்தனர். இவ்வேளையில் 10,000 இற்கும் அதிகமானோர் இக்கும்பலில் சேர்ந்தனர்.

அவர்கள் பொரளையில் உள்ள கடைகளைக் கொள்ளையடித்தனர், பொரளை சந்திக்கு அருகில் உள்ள பொரளை அடுக்குமாடி குடியிருப்புகள், தமிழ் யூனியன் துடுப்பாட்டக் கழகம் உட்பட தமிழ்த் தொடர்பைக் கொண்டிருந்த அனைத்துக் கட்டடங்களையும் தாக்கிக் கொள்ளையடித்துத் தீ வைத்தனர். அப்போது அக்கம் பக்கத்தில் உள்ள தமிழர்களின் வீடுகள் குறிவைக்கப்பட்டன. பின்னர் தெமட்டகொடை, மருதானை, நாரகேன்பிட்டி, பாலத்துறை, திம்பிரிகசாய ஆகிய திசைகளில் கூட்டம் கலைந்து, அங்கு தமிழர்களின் சொத்துக்களை தாக்கி சூறையாடி தீ வைத்தனர்

## 03 ஆம் நாள்

1983 யூலை 25 திங்கள்கிழமை காலை 9.30 மணிக்கு ஜே. ஆர். ஜெயவர்தனா நாட்டின் பாதுகாப்புப் பேரவையை மாலையில் கூட்டினார். பாதுகாப்பு பேரவை கூட்டம் நடக்கும் அதே நேரத்தில் அம்மாளிகையில் இருந்து 100 யார் தொலைவில் இருந்த 'அம்பாள் கபே' தீ மூட்டப்பட்டு எரிந்து கொண்டிருந்தது. அருகில் யோர்க் வீதியில் 'சாரதாஸ்' நிறுவனமும் தீக்கிரையானது. தொடர்ந்து ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் இருந்த பெய்லி வீதியில் அனைத்துத் தமிழ்க் கடைகளுக்கும் தீ மூட்டப்பட்டன. பாதுகாப்புப் பேரவையின் கூட்டம் முடிவடைவதற்கிடையில், கொழும்பு கோட்டைப் பகுதியில் இருந்த அனைத்துத் தமிழ் நிறுவனங்களும் தீக்கிரையாகின.

அன்று மாலை 6 மணி முதல் கொழும்பில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சிங்களகாடைக்கும்பல் ஓல் கொட் மாவத்தை வழியே சென்று கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்னால் இருந்த ‘ஆனந்த பவன்’, ‘இராஜே சுவரி ஸ்டோர்’, ‘அஜந்தா ஓட்டல்’ ஆகியவற்றிற்கும் தீ வைத்தனர்.

அமைச்சர்களான சிறில் மத்தியூ உட்பட பலர் அன்று காலை கொழும்பின் பல்வேறு இடங்களில் தமிழர் குடியிருப்புகளைத் தாக்குமாறு கும்பல்களை வழி நடத்திக் கொண்டிருந்தனர். ரணசிங்க பிரேமதாசாவின் நம்பிக்கைக்குரிய அடியாளான சிறில் மத்தியூ கோட்டை, புறக்கோட்டை பகுதிகளிலும், கொழும்பு நகர முதல்வரின் அடியாட்கள், மாநகரசபைப் பணியாளர்கள், போக்குவரத்து அமைச்சர் எம். எச். முகம்மதின் ஆட்கள் பொரளையிலும், மாவட்ட அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சியின் அடியாட்கள் கொழும்பு வடக்கிலும், துணை அமைச்சர் அனுர பஸ்தியானின் ஆட்கள் கொழும்பு தெற்கிலும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இன்னுமொரு கும்பல் பாலத்துறை, கிருலப்பனை, கொட்டாஞ்சேனை, மருதானை, முகத்துவாரம், நாரகேன்பிட்டி, கொம்பனித் தெரு, வனாத்தமுல்லை உட்பட பெரும்பாலான பகுதிகளில் தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன. கம்பிகள், சமையலறைக் கத்திகளுடன் ஆயுதம் ஏந்திய கும்பல் தெருக்களில் சுற்றித் திரிந்து, தமிழர்களைத் தாக்கிக் கொன்றது. அடுத்ததாக, யாழ்ப்பாணத் தமிழர் பெருமளவு வசிக்கும் வெள்ளவத்தை, தெகிவளை போன்ற பகுதிகளில் வன்முறை பரவியது. பெருமளவு வீடுகளும், கடைகளும் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

கொழும்பு பிரதான வீதி, ஐந்துலாம்படிச் சந்தியில் உள்ள கடைகளும் தாக்கப்பட்டன. அன்டர்சன் தொடர் குடியிருப்பு, எல்விட்டிகல, டொரிங்டன் திம்பிரிகசாய தொடர் குடியிருப்புகளில் இருந்த தமிழ் வீடுகள் தாக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டன. மிகவும் பாதுகாப்பானதெனக் கருதப்பட்ட கறுவாத்தோட்டத்தில் இருந்த தமிழர் வீடுகளும் தாக்கப்பட்டன.

கடவத்தை, களனி, நுகேகொடை, இரத்மலானை போன்ற புறநகர்களிலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியத் தூதரின் வீடும் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது. ஏறக்குறைய நகரின் அனைத்துப் பகுதிகளும் தீயில் மூழ்கின. அன்று மாலை 6.00 மணிக்கு அமுலாகவிருந்த ஊரடங்கு மறுநாள் பிற்பகல் 2.00 மணிக்கு கொண்டுவரப்பட்டது. நீர் கொழும்பிலும் தமிழர் பகுதிகள் தாக்கப்பட்டதை அடுத்து, கம்பகா மாவட்டத்திலும் ஊரடங்கு கொண்டுவரப்பட்டது. களத்துறையில் டி.கே.வி.எஸ் என்ற வணிக நிறுவனம் தீக்கிரையாக்கப்பட்டது. அதன் உரிமையாளரான தமிழர் மாடியில் இருந்து குதித்துத் தப்ப முயன்றார், ஆனால் வன்முறைக் கும்பல் அவரை மீண்டும் தீப்பற்றிய கடைக்குள் எறிந்து அவரைக் கொன்றனர். ஊரடங்கு சட்டம் களுத்துறை மாவட்டத்திற்கும் நீடிக்கப்பட்டது. காவல்துறை ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமலோ அல்லது விரும்பாததாலோ, காவல்துறைக்கு உதவ இராணுவம் வரவழைக்கப்பட்டது.

கலவரக்காரர்கள் தமிழர்களைக் குறிவைக்க வாக்காளர் பதிவுப் பட்டியலைப் பயன்படுத்தத் தொடங்கினர். தமிழர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களை அடையாளம் காணும் கும்பல்களிடம் தேர்தல் பட்டியல்கள் கைவசம் இருந்தமை, அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகளின் ஒத்துழைப்பைக் குறிக்கிறது. சனாதிபதி ஜெயவர்தன பின்னர் ஒரு அறிக்கையில் ஒப்புக்கொண்டது போல், “நடந்த கலவரங்கள், கொள்ளைகளில் ஒரு அமைப்பினால் திட்டமிட்ட முறையில் கவனிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.” சொய்சா குடியிருப்பில் உள்ள தமிழர்களுக்குச் சொந்தமான 92 குடியிருப்புகளில் 81 குடியிருப்புகள் தாக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு தீ வைக்கப்பட்டன. தமிழர்களுக்குச் சொந்தமான பல தொழிற்சாலைகளைக் கொண்ட இரத்மலானை கைத்தொழில் பகுதி மீது இந்தக் கும்பல் தாக்குதல் நடத்தியது.

காலி வீதியில் இருந்த ஜெட்ரோ கார்மென்ட்சு, டாட்டா கார்மென்ட்சு முற்றிலும் எரிந்து நாசமானது. பாண்ட்ஸ், எஸ்-லான், ரீவ்ஸ் கார்மென்ட்சு, ஹைடோ கார்மென்ட்சு, ஹைலக் கார்மென்ட்சு, ஏ ஜி எம் கார்மென்ட்சு, மன்ஹாட்டன் கார்மென்ட்சு, புளோய் பெக், பெரெக், மாஸ்கான்ஸ் ஆசுபெசுட்சு ஆகியவை தாக்கியழிக்கப்பட்ட ஏனைய தொழிற்சாலைகள் ஆகும். குண்டன்மால்ஸ், ஆக்ஸ்போர்டு மற்றும் பேக்சன் கார்மென்ட்சு போன்ற இந்தியருக்குச் சொந்தமான தொழிற்சாலைகள் தாக்கப்படவில்லை, இது வேண்டுமென்றே இலங்கைத் தமிழர் இலக்குகளையே வன்முறைக் கும்பல் பின்தொடர்ந்தது என்ற கருத்துக்கு நம்பகத்தன்மையை அளிக்கிறது.

இரத்மலானையில் 17 தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டன. தமிழருக்குச் சொந்தமான கேப்பிடல் மகாராஜா இலங்கையின் மிகப்பெரிய கூட்டு நிறுவனங்க ளில் ஒன்றாகும். இரத்மலானாவில் உள்ள அவர்களது ஆறு தொழிற்சாலைகளும், பேங்சால் தெருவில் உள்ள அவர்களின் தலைமையகமும் அழிக்கப்பட்டன. வன்முறைக் கும்பலால் கல்கிசையில் உள்ள டில்லிஸ் பீச் ஹோட்டலுக்கு தீவைக்கப்பட்டது.

## வெலிக்கடை சிறைச்சாலைப் படுகொலைகள்

1983 யூலை 25 திங்கட்கிழமை கொழும்பு நகரில் தாக்குதல் நடத்தும் சம நேரத்தில் நடந்த மிக மோசமான இனப்படுகொலை கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை யில் இடம்பெற்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த குட்டிமணி, ஜெகன் உட்பட 37 தமிழ் அரசியல் கைதிகள், சிங்களக் கைதிகளால் கத்திகள் மற்றும் இரும்புக் கம்பி, தடிகளால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

சிங்கள சிறை அதிகாரிகள் தமிழ் அரசியல் கைதிகள் இருந்த அறைகளின் சாவிகளை சிங்களக் கைதிகளுக்கு வழங்கினர். இதனை உயிர் பிழைத்தவர்கள் கூறினர். ஆனால் சிறை அதிகாரிகள் அவர்களிடம் இருந்து சாவிகள் திருடப்பட்டதாகக் கூறினர்.








தங்கதுரை குட்டிமணி ஜெகன்

ஈழத் தமிழ் மண்ணில் எங்கும் பிணத்திரள்! எங்கும் பிணநெடி!

தங்கதுரை - குட்டிமணி - ஜெகன் உட்பட

37 பேர் படுகொலை!

சிறைக்குள் சிங்களவர் வெறியாட்டம்!




## 04 ஆம் நாள்

1983 யூலை 26 செவ்வாய்கிழமை வெள்ளவத்தை, தெகிவளையில் சிங்கள காடைக்கும்பல் தாக்குதல்கள் தொடர்ந்தன. தெகிவளை இரத்னாகர வீதியில் இருந்த 53 வீடுகளில், தமிழர்கள் வசித்து வந்த 24 வீடுகள் எரிக்கப்பட்டன. தமிழர் வாடகைக்குக் குடியிருந்த சிங்களவருக்கு சொந்தமான மூன்று வீடுகளை எரிக்காமல் உடமைகளை மட்டும் வெளியே அகற்றி அவற்றை எரித்தனர். நகரின் பல பகுதிகளில், இராணுவத்தினரும் காவல்துறையினரும் சொத்துக்கள் அழிக்கப்பட்டதையும், மக்கள் கொல்லப்பட்டதையும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அன்று யூலை 26 நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான கண்டிக்கும் வன்முறை பரவியது. பிற்பகல் 2.45 மணியளவில் பேராதனை வீதியிலுள்ள டெல்ட்டா மருந்தகம் தீப்பற்றி எரிந்தது. அதன் பின்னர், லக்சலா கட்டிடத்திற்கு அருகாமையில் உள்ள தமிழருக்குச் சொந்தமான கடை ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டது, மேலும் வன்முறை காசில் தெரு, கொழும்பு தெரு வரை பரவியது. பின்னர் காவல்துறையினரால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்தது, ஆனால் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு எரிபொருட்களுடன் ஆயுதம் ஏந்திய ஒரு கும்பல் கண்டி, கோட்டை, கொழும்பு, கிங்ஸ், திருகோணமலை வீதிகளில் உள்ள தமிழ்க் கடைகளைத் தாக்கத் தொடங்கியது. பின்னர் அந்த கும்பல் அருகில் உள்ள கம்பளைக்கு சென்றது. 1983 யூலை 26 மாலையே கண்டி மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதாகவும், காரைநகர் கடற்படைத் தளம் அழிக்கப்பட்டதாகவும், நாக விகாரை தேதப்படுத்தப்பட்டதாகவும் பொய்யான வதந்திகள் திருகோணமலையில் பரவ ஆரம்பித்தன. திருகோணமலை கடற்படைத் தளத்தை தளமாகக் கொண்ட கடற்படையினர் மத்திய வீதி, கப்பல்துறை வீதி, பிரதான வீதி மற்றும் வடக்கு கடற்கரைச் சாலையைத் தாக்கி வெறித்தனமாகச் சென்றனர். அவர்கள் தங்கள் தளத்திற்குத் திரும்புவதற்கு முன் 170 தமிழர்களுடைய வீடுகள், கட்டடங்களுக்கு தீ மூட்டினர். திருஞானசம்பந்தன் வீதியிலுள்ள சிவன் ஆலயமும் தாக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழு வதும் 1983 யூலை 26இல் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது. பல் வேறு இனக் குழுக்கள் இணைந்து வாழ்ந்த பகுதிகளில் தமிழர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் கொள்ளைகள் அதிகமாக இடம் பெற்றன. திருநெல்வேலித் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் 1983 யூலை 26 இரவு ஊரடங்கு உத்தரவின் போது அடக்கம் செய்யப்பட்டன.

## 05 ஆம் நாள்

1983 யூலை 27 புதன்கிழமை இரண்டாம் தடவையாக வெலிக்கடை சிறையில் டாக்டர் இராஜசுந்தரம் உட்பட 18 பேர் படுகொலை செய்யப்பட்டனர். மத்திய மாகாணத்தில், நாவலப்பிட்டி, அட்டன்வரை வன்முறை பரவியது. அதற்கு அண்டைய ஊவா மாகாணத்தின் மிகப்பெரிய நகரமான பதுளையில் அன்று காலை 10.30 மணியளவில் மணிக்கூட்டு கோபுரத்தின் முன் தமிழர்களுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் தீவைக்கப்பட்டது. நண்பகலில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் நகரின் வணிகப் பகுதி வழியாக சென்று கடைகளுக்கு தீ வைத்தது. கலவரம் பின்னர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் பரவியது, மேலும் பல தமிழர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. பின்னர் அந்தக் கும்பல் தாங்கள் திருடிய வாகனங்களிலும் பேருந்துகளிலும் நகரை விட்டு பண்டாரவளை, ஆலி-எல, வெலிமடை ஆகிய இடங்களுக்குச் சென்று, அங்கு தொடர்ந்து சொத்துக்களுக்கு தீ வைத்து எரித்தது. கலவரம் இரவு நேரத்தில் லுணுகலை வரை பரவியது.

## 06 ஆம் நாள்

1983 யூலை 28 வியாழக்கிழமை பதுளை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது, மேலும் கலவரம் லுணுகலையில் இருந்து பசறை வரை பரவியது. நுவரெலியா மற்றும் சிலாபத்திலும் கலவரம் ஏற்பட்டது. ஆனால் கொழும்பு, கண்டி மற்றும் திருகோணமலையில் வன்முறைகள் குறைந்தன.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவரது அமைச்சரவையும் அன்று அவசர கூட்டத்தை நடத்தி ஜெயவர்தன ரூபவாஹினி தொலைக்காட்சியில் மக்களுக்கு உரையாற்றினார், அதில் அவர் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்து விட்டு அதே நேரம் அவர் கூறியது “1976 ஆம் ஆண்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி, மிகப் பெரிய அரசியல் கட்சியாக இருந்த போது, சுதந்திர தமிழ் அரசுக்காக விடுத்த அழைப்புகளால், “சிங்களவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே வளர்ந்த

ஆழமான மோசமான உணர்வும் சந்தேகமும்" வன்முறைக்கு காரணம் என்றும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றியது. சிங்கள மக்கள் எதிர்வினையாற்றிய விதம் தமிழ்ப் போராளிகள் செய்த வன்முறைக்கே என்றும் அவர் நியாயம் கற்பிக்கும் விதமாக குற்றம் சாட்டினார். 2,500 ஆண்டுகளாக ஒரே தேசமாக இருந்த ஒரு நாட்டைப் பிரிப்பதற்கு சிங்கள மக்கள் ஒருபோதும் உடன்பட மாட்டார்கள் என்று சபதம் செய்த ஜெயவர்தனா, அரசாங்கம் "சிங்கள மக்களின் கூக்குரலுக்கு இணங்கும்" மற்றும் தேசத்தைப் பிளவுபடுத்த முயலும் எந்தக் கட்சியும் தடை செய்யப்படும் என்றும் அறிவித்தார்"

1983 யூலை 28 வியாழக்கிழமை இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஜெயவர்தனாவிடம் யூலை கலவரம் இந்தியாவில் ஏற்படுத்திய தாக்கத்தை அவருக்குத் தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சர் பி. வி. நரசிம்மராவைத் தனது சிறப்புத் தூதராக ஜெயவர்தனே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். ஜெயவர்தனே அதனை ஏற்றுக்கொண்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு ராவ் இலங்கைக்கு வந்தார்.




## 07 ஆம் நாள்

1983 யூலை 29 வெள்ளிக்கிழமை கொழும்பு அமைதியாக இருந்தது. நகரத்தில் உள்ள பல அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்த நண்பர்கள் மற்றும் உறவினர்களை தமிழ் மக்கள் பார்வையிட்டனர். காலை 10.30 மணியளவில் காஸ் வர்க்சு வீதியில் இரண்டு சிங்கள இளைஞர்கள் சுடப்பட்டனர். அடம் அலி கட்டடத்தில் இந்த இளைஞர்கள் தமிழ் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாக வதந்திகள் பரவ ஆரம்பித்தன. கட்டடம் இராணுவம், கடற்படை மற்றும் காவல்துறையினரால் சூழப்பட்டது, அவர்கள் கட்டிடத்தின் மீது துணை இயந்திரத் துப்பாக்கிகளினால் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.





ஒரு உலங்குவானூர்தியும் கட்டிடத்தின் மீது சுட்டது. பாதுகாப்புப் படையினர் கட்டிடத்திற்குள் நுழைந்த போது உள்ளே தமிழ் புலிகள், ஆயுதங்கள் அல்லது வெடிமருந்துகள் எதுவும் கிடைக்கவில்லை. எனினும், இராணுவம் தமிழ் புலிகளுடன் போரில் ஈடுபட்டதாக கொழும்பில் வதந்திகள் பரவ ஆரம்பித்தன. புலிகளை எதிர்த்துப் போரிடத் தயாராக கோடரிகள், செங்கல்கள், இரும்புக் கம்பிகள், கத்திகள் மற்றும் கற்கள் போன்ற ஆயுதங்களுடன் தெருக்களில் கும்பல்களாக சிங்கள் மக்கள் கூடத் தொடங்கினர். வாகனங்களை நிறுத்தித் தமிழர்களைத் தேடினர். அவர்கள் கண்டறிந்த தமிழர்கள் தாக்கப்பட்டு



தீவைக்கப்பட்டனர்.

கிருள வீதியில் ஒரு தமிழர் உயிருடன் எரிக்கப்பட்டார். அத்திடிய வீதியில் பதினொரு தமிழர்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். இரண்டு தமிழர்களினதும், மூன்று முசுலிம்களினதும் சடலங்கள் இருந்த ஒரு வாகனத்தை அதே வீதியில் காவல்துறையினரால் 15 கலவரக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். யூலை 29 பிற்பகல் 2 மணிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஆகத்து 1 திங்கள் காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்ம ராவ் உலங்கு வானூர்தியில் கண்டிக்கு செல்வதற்கு முன்னர் அரசுத்தலைவர் ஜனாதிபதி ஜெயவர்தன, வெளிவிவ கார அமைச்சர் ஏ. சீ. எஸ். அமீது ஆகியோருடன் கலந்துரையாடினார்.

## 08 ஆம் நாள்

1983 யூலை 30 சனிக்கிழமை நுவரெலியா, கந்தப்பளை, காவ எலிய, மாத்தளை ஆகிய இடங்களில் வன்முறைகள் இடம் பெற்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் அமைதி நிலவியது. வன்முறைகளைத் தூண்டியமைக்காக அதே நாள் இரவில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, நவ சமசமாஜக் கட்சி ஆகிய மூன்று இடதுசாரிக் கட்சிகளுக்கு அரசு தடை வித்தது. ஏனைய குழுக்களைச் சேர்ந்த சில தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வாக்காளர் இடாப்புக்களை கையில் வைத்திருந்த வன்முறையாளர்கள், தமிழர்களின் வீடுகளையும் வணிக நிலையங்களையும் தேடித்தேடித் தாக்கினர். ஏழு நாட்களில், 1983 யூலை 24 தொடக்கம் யூலை 30 வரையும் நடந்த இனப்படுகொலையால் மூவாயிரம் (3,000) தமிழர்கள் உயிரிழந்தனர் என மதிப்பிடப்பட்டது, வீடுகளையும், உடமைகளையும் இழந்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (150,000) பேர் வீடற்றவர்களாயினர். ஏறத்தாழ எண்ணாயிரம் (8,000) வணிக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. இக்கலவரத்தின் போது ஏற்பட்ட மொத்தப் பொருளாதாரச் செலவு முன்னூறு (300) மில்லியன் என மதிப்பிடப்பட்டது.

இவ்வினப்படுகொலைகளின் விளைவாக இலங்கைத் தமிழர்கள் பலர் அடுத்தடுத்த ஆண்டுகளில் வெவ்வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். ஏராளமான தமிழ் இளைஞர்கள் போராளிக் குழுக்களில் சேர்ந்தனர். கறுப்பு யூலை என்பது பொதுவாக தமிழ் போராளிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான இலங்கை உள்நாட்டுப் போரின் தொடக்கமாகக் கருதப்படுகிறது கறுப்பு யூலை மாதம் உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் ஈழத் தமிழரின்நினைவு மாதமாக நினைவு கூரப்படுகிறது.










# நெதன்யாகு – ஜே.டி வான்ஸ் முரண்பாடு: மாறிவரும் அமெரிக்க – இஸ்ரேல் அரசியல் உறவு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா–

15.07.2026



மத்திய கிழக்கின் அரசியல் கடந்த எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக உலக வல்லரசுகளின் மூலோபாயப் போட்டிகளால் வடிவமைக்கப்பட்டு வருகிறது. அந்தப் போட்டிகளில் மிக நீடித்த மற்றும் அதிக தாக்கம் செலுத்திய கூட்டணிகளில் ஒன்றாக அமெரிக்கா-இஸ்ரேல் உறவு கருதப்படுகிறது. இராணுவ உதவி, பொருளாதார ஒத்துழைப்பு, தொழில்நுட்ப வளர்ச்சி, உளவுத்துறை தகவல் பரிமாற்றம், மற்றும் சர்வதேச அரங்கில் பரஸ்பர அரசியல் ஆதரவு ஆகியவற்றின் மீது கட்டமைக்கப்பட்ட இந்த உறவு, பல தசாப்தங்களாக அசைக்க முடியாத கூட்டணி என்ற பெயரைப் பெற்றிருந்தது.

ஆனால் உலக அரசியல் வேகமாக மாறிக்கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், அந்த உறவின் தன்மையும் மாற்றமடைந்து வருவதாக பல அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் வெளியிட்ட கருத்துக்கள், டொனால்ட் டிரம்பின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கை முன்னுரிமைகள், மற்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அணுகுமுறையைச் சுற்றி உருவாகியுள்ள கருத்து வேறுபாடுகள், அமெரிக்கா-இஸ்ரேல் உறவு ஒரு புதிய அரசியல் கட்டத்தை நோக்கி நகர்கிறது என்ற கேள்வியை எழுப்பியுள்ளன.

இது வெறும் இரண்டு தலைவர்களுக்கிடையேயான தனிப்பட்ட முரண்பாடு அல்ல. மாறாக, அமெரிக்காவின் தேசிய நலன்கள், உலகளாவிய மூலோபாயப் போட்டி, மத்திய கிழக்கின் அதிகாரச் சமநிலை, மற்றும் “America First” என்ற புதிய அரசியல் தத்துவம் ஆகியவை ஒன்றோடொன்று மோதும் ஒரு முக்கிய தருணமாக இதைப் பார்க்க முடியும்.

**இஸ்ரேலை விட அமெரிக்காவே முக்கியம் என்று அமெரிக்க உப அதிபர் தன் நிலைப்பாட்டை மிகத் தெளிவாக சொல்லிவிட்டார். கடந்த சில மாதங்களாக நெதன்யாகு–ஜே. டி. வான்ஸ் முரண்பாடு தொடர்கிறது. இதன் காரணமாக அமெரிக்க–இஸ்ரேல் உறவில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.**

## America First -கொள்கை

டொனால்ட் டிரம்பின் அரசியல் வாழ்க்கையை முழுமையாகப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், அவரது “America First” என்ற கொள்கையைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கொள்கையின் மையச் சிந்தனை மிகவும் எளிமையானது. அமெரிக்காவின் பொருளாதாரம், தேசிய பாதுகாப்பு, வேலைவாய்ப்புகள் மற்றும் உள்நாட்டு வளர்ச்சியே முதன்மை வெளிநாட்டு கூட்டாளிகளின் தேவைகள் அதற்குப் பின்னரே வர வேண்டும் என்பதே அதன் அடிப்படை.



இந்த அணுகுமுறையை மிகவும் தெளிவாக பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளில் ஒருவர் ஜே.டி. வான்ஸ். அவர் பல சந்தர்ப்பங்களில், அமெரிக்கா தனது கூட்டாளிகளுக்கு ஆதரவளிப்பது இயல்பானதே என்றாலும், அந்த ஆதரவு அமெரிக்க மக்களின் நலன்களை பாதிக்கக் கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

அவரது சமீபத்திய கருத்துகளில் மிகவும் கவனத்தை ஈர்த்தது, இஸ்ரேலுடன் கொள்கை ரீதியான முரண்பாடு ஏற்பட்டால், இறுதியில் நாங்கள் அமெரிக்க மக்களின் பக்கமே நிற்போம் என்ற நிலைப்பாடாகும். இந்த ஒரு வாக்கியம், பல ஆண்டுகளாக அமெரிக்க அரசியலில் நிலவியிருந்த இஸ்ரேலுக்கு எப்போதும் முழுமையான ஆதரவு என்ற பாரம்பரிய அணுகுமுறைக்கு ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது.

## நெதன்யாகு நோக்கிய விமர்சனம்

அமெரிக்க நிர்வாகத்தின் உள்ளே இஸ்ரேலின் சில நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி இருப்பதாக பல மாதங்களாக அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வந்தது. ஆனால் அந்த அதிருப்தி பொதுவெளியில் இவ்வளவு தெளிவாக வெளிப்பட்டது அண்மைக் காலங்களில்தான்.

ஜே.டி. வான்ஸ், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சில முக்கியமான முடிவுகளைத் தவறாக எடுத்துள்ளார் என்று வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக காசா போர், லெபனான் மீதான தாக்குதல்கள், மற்றும் ஈரானைச் சுற்றியுள்ள பதற்றங்கள் போன்ற விவகாரங்களில் நெதன்யாகுவின் அணுகுமுறை, அமெரிக்காவின் நீண்டகால மூலோபாய இலக்குகளுடன் முழுமையாக ஒத்துப்போவதில்லை என்ற கருத்து தற்போது வாஷிங்டனில் வலுப்பெற்று வருகிறது.

இது வெறும் கொள்கை வேறுபாடு மட்டுமல்ல. மத்திய கிழக்கில் தொடர்ச்சியான போர் சூழல், அமெரிக்காவின் உலகளாவிய கவனத்தை சிதறடிப்பதாகவும், சீனா மற்றும் ரஷ்யா போன்ற வல்லரசுகளுடனான போட்டியில் அமெரிக்காவின் முன்னுரிமைகளை பாதிப்பதாகவும் சில பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்கா-இஸ்ரேல் உறவில் கருத்து வேறுபாடுகள் புதியவை அல்ல. கடந்த காலங்களிலும் பல அமெரிக்க அதிபர்களுக்கும் இஸ்ரேலிய தலைவர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் அவை பெரும்பாலும் தனிப்பட்ட இராஜதந்திர சந்திப்புகளிலேயே பேசப்பட்டன.

அமெரிக்க துணை அதிபரே நேரடியாக ஊடகங்கள் முன்னிலையில் தனது அதிருப்தியை வெளிப்படுத்துவது, இந்த முரண்பாடு இனி மறைக்கப்பட வேண்டிய ஒன்றாகக் கருதப்படவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. இது அமெரிக்காவின் மத்திய கிழக்கு கொள்கையில் ஒரு புதிய கட்டம் தொடங்கியிருக்கலாம் என்ற அரசியல் வாசிப்பையும் உருவாக்கியுள்ளது.

## டிரம்பின் தற்போதைய நிலை

டிரம்பின் முதல் பதவிக்காலம், இஸ்ரேலுக்கான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆதரவின் காலமாகவே நினைவுகூரப்படுகிறது. ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தது, அமெரிக்கத் தூதரகத்தை அங்கு மாற்றியது, கோலான் உயர்வுகள் மீதான இஸ்ரேலின் கட்டுப்பாட்டை அங்கீகரித்தது, மற்றும் ஆபிரகாம் ஒப்பந்தங்களை உருவாக்கியதில் வகித்த பங்கு ஆகியவை அனைத்தும் டிரம்பை இஸ்ரேலின் மிக நெருங்கிய அமெரிக்க கூட்டாளிகளில் ஒருவராக மாற்றின.

அந்தக் காலத்தில் நெதன்யாகுவுக்கு அரசியல் ரீதியாக “Blank Check” வழங்கப்பட்டதாக விமர்சகர்கள் கூறினர். அதாவது, இஸ்ரேல் எடுக்கும் பெரும்பாலான முடிவுகளுக்கும் அமெரிக்கா நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியது என்ற கருத்து நிலவியது. ஆனால் தற்போதைய சூழல் அதேபோல இல்லை.

டொனால்ட் டிரம்ப் தன்னை ஒரு “Deal Maker” என அடிக்கடி வர்ணித்து வந்துள்ளார். அவரது அரசியல் அணுகுமுறையில், நீண்டகால இராணுவ மோதல்களை விட, பேச்சுவார்த்தைகள் மற்றும் அரசியல் ஒப்பந்தங்கள் மூலம் முடிவுகளை உருவாக்குவதே முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஈரான் தொடர்பான அணுகுமுறை, காசா போர், லெபனான் நிலைமை, மற்றும் வளைகுடா நாடுகளுடனான உறவுகள் ஆகியவற்றில் புதிய ஒப்பந்தங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கம் அவரிடம் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால் நெதன்யாகுவின் பாதுகாப்பு மையப்படுத்தப்பட்ட கடுமையான அணுகுமுறை, இந்த முயற்சிகளுக்கு சவாலாக இருப்பதாக அமெரிக்க நிர்வாகத்தில் சிலர் கருதுகின்றனர். இதுவே இரு தலைவர்களுக்கிடையேயான பதற்றத்தை அதிகரித்துள்ளது.

## அமெரிக்கா இல்லாமல் இஸ்ரேல் இல்லை!

அமெரிக்கா இல்லாமல் இஸ்ரேல் இருந்திருக்காது என்ற டிரம்பின் கருத்து உலகளவில் பரவலாக விவாதிக்கப்பட்டது. இதை சிலர் அரசியல் தற்பெருமையாகக் கருதினாலும், பல ஆய்வாளர்கள் அதை வேறுவிதமாகப் பார்க்கின்றனர்.

அந்தக் கருத்து ஒரு முக்கியமான உண்மையை நினைவூட்டுகிறது. இஸ்ரேல் தனது பாதுகாப்புத் திறனை பெரும்பாலும் தானாகவே கட்டியெழுப்பிய நாடாக இருந்தாலும், அமெரிக்காவின் தொடர்ச்சியான ஆதரவு அதன் மூலோபாய வலிமையின் முக்கிய அங்கமாக இருந்து வருகிறது.

பல பில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ உதவி, அதிநவீன போர் விமானங்கள், ஏவுகணைத் தடுப்பு அமைப்புகள், உளவுத்துறை ஒத்துழைப்பு, தொழில்நுட்ப பரிமாற்றம், மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புகளில் அமெரிக்காவின் அரசியல் பாதுகாப்பு ஆகியவை, இஸ்ரேலின் பாதுகாப்பு அமைப்பின் முக்கிய தூண்களாக உள்ளன. இந்தச் சூழலில் டிரம்பின் கருத்து, இஸ்ரேலின் சக்தி முழுமையாக தனித்து நிற்பதல்ல; அது அமெரிக்க கூட்டணியுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது என்ற அரசியல் உண்மையை வெளிப்

படுத்துவதாக பலர் விளக்குகின்றனர்.

## இஸ்ரேலுக்கு ஆதரவு தொடருமா?

இஸ்ரேலின் பார்வையில் அமெரிக்க ஆதரவு என்பது ஒரு சாதாரண இராஜதந்திர உறவு அல்ல; அது தேசிய பாதுகாப்பின் அடிப்படை அம்சமாகும். அமெரிக்க ஆதரவு குறைந்துவிட்டால், இராணுவ நடவடிக்கைகள், ஆயுத விநியோகம், உளவுத்துறை ஒத்துழைப்பு, மற்றும் சர்வதேச அரசியல் பாதுகாப்பு ஆகிய அனைத்திலும் சவால்கள் உருவாகும். இதனால், வாஷிங்டனில் உருவாகும் ஒவ்வொரு அரசியல் மாற்றத்தையும் இஸ்ரேல் மிகுந்த கவனத்துடன் கண்காணித்து வருகிறது.

இந்த விவாதத்தைப் புரிந்துகொள்ள அமெரிக்காவின் உள்நாட்டு அரசியலையும் கவனிக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக அமெரிக்காவில் வெளிநாட்டு போர்களுக்கான ஆதரவு குறைந்து வருகிறது. ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போர்களின் நீண்டகால அனுபவம், பெரும் பொருளாதாரச் செலவுகள், மற்றும் உள்நாட்டு பிரச்சினைகள் ஆகியவை, “உலகின் காவலர்” என்ற பாரம்பரிய பாத்திரத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கருத்தை வலுப்படுத்தியுள்ளன.

குடியரசுக் கட்சிக்குள்ளேயே “America First” அணுகுமுறைக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக, அமெரிக்காவின் கூட்டாளிகளுக்கான ஆதரவும் எதிர்காலத்தில் தேசிய நலன்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படலாம் என்ற புதிய அரசியல் சூழல் உருவாகியுள்ளது.

## உளவு முறிவா – மறுவடிவமைப்பா?

சிலர் இந்த முரண்பாடுகளை அமெரிக்கா-இஸ்ரேல் உறவின் முடிவாகச் சித்தரிக்க முயல்கின்றனர். ஆனால் அது மிகைப்படுத்தப்பட்ட முடிவாக இருக்கும். இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு, உளவுத்துறை, தொழில்நுட்பம், பாதுகாப்புத் தொழில், மற்றும் மூலோபாய ஒத்துழைப்பு ஆகியவை மிகவும் ஆழமாகப் பதிந்துள்ளன.

எனவே, இந்த உறவு திடீரென முறிந்துவிடும் வாய்ப்பு மிகவும் குறைவு. ஆனால் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. எதிர்காலத்தில் அமெரிக்காவின் ஆதரவு தானாகக் கிடைக்கும் ஒன்றாக இருக்காது. அது அமெரிக்க தேசிய நலன்களுடன் பொருந்துகிறதா என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

ஜே.டி. வான்ஸ் மற்றும் பெஞ்சமின் நெதன்யாகு இடையேயான கருத்து வேறுபாடு என்பது இரண்டு தலைவர்களுக்கிடையேயான தனிப்பட்ட மோதல் அல்ல. அது அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் உருவாகி வரும் புதிய சிந்தனையின் பிரதிபலிப்பாகும். “அமெரிக்காவின் தேசிய நலன்களே முதன்மை” என்ற அணுகுமுறை வலுப்பெறும் நிலையில், பாரம்பரிய கூட்டணிகளும் புதிய நிபந்தனைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றன.





அதேநேரத்தில், அமெரிக்கா-இஸ்ரேல் உறவு உடனடியாகச் சிதைந்துவிடும் என்று கூற முடியாது. அந்த உறவு பல தசாப்தங்களாக உருவாக்கப்பட்ட பாதுகாப்பு, பொருளாதாரம், தொழில்நுட்பம் மற்றும் இராஜதந்திர ஒத்துழைப்பின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நிபந்தனையற்ற ஆதரவின் காலம் மெல்ல மாறிக்கொண்டிருக்கலாம் என்ற அரசியல் சுட்டுக்காட்டுகள் இன்று தென்படுகின்றன.

எதிர்காலத்தில் காசா போரின் போக்கு, ஈரான் தொடர்பான பேச்சுவார்த்தைகள், அரபு நாடுகளுடனான அமெரிக்க உறவுகள், சீனா மற்றும் ரஷ்யாவுடனான உலகளாவிய போட்டி, மற்றும் அமெரிக்காவின் உள்நாட்டு அரசியல் ஆகியவை அனைத்தும் இந்த உறவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். எனவே, “இஸ்ரேலின் பாதுகாப்பு முக்கியமா, அல்லது அமெரிக்காவின் தேசிய நலன்களா?” என்ற கேள்வி இனி ஒரு அரசியல் முழக்கம் மட்டுமல்ல; அது வருங்கால சர்வதேச அரசியலின் மிக முக்கியமான விவாதங்களில் ஒன்றாக மாறியுள்ளது.




www.sangathamil.com



# யுத்தத்திற்குப் பின்னரான ஈழத்துச் சமூகப் பொரளாதாரச் சவால்கள்!

சு. லோஜிதன்

28.07.2026

## அறிமுகம்

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த கொடூரமான உள்நாட்டுப் போர், 2009 ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வமாக முடிவுக்கு வந்தது. யுத்தத்தின் முடிவு, வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையில் வாழ்ந்த ஈழத்தமிழர்களுக்குப் பாதுகாப்பையும் அமைதியையும் தரும் என்ற பெரு எதிர்பார்ப்பு நிலவியது. இருப்பினும், துப்பாக்கிச் சத்தங்கள் ஓய்ந்து 15 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்ட நிலையிலும், யுத்தத்தால் ஏற்பட்ட வடுக்களும், அழிவுகளும், கட்டமைக்கப்பட்ட சீரழிவுகளும் அப்பகுதி மக்களின் வாழ்வியலை இன்றும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

யுத்தத்திற்குப் பிந்தைய ஈழத்துச் சமூகம் சந்திக்கின்ற சவால்கள் வெறும் உள்கட்டமைப்பு சார்ந்தவை மட்டுமல்ல; அவை வாழ்வாதாரம், உளவியல், சமூகம், அடையாளம் மற்றும் அரசியல் எனப் பல பரிமாணங்களைக் கொண்டவை. போர் ஓய்ந்தாலும், அமைதிக்கான சுவடுகளைத் தேடும் ஈழத்துச் சமூகத்தின் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் குறித்த ஆழமான பார்வையை இக்கட்டுரை முன்வைக்கிறது.

## 1. சமூகவியல் ரீதியான சவால்கள்

யுத்தம் என்பது மனித உயிர்களைப் பறிப்பதோடு நிறுத்திவிடுவதில்லை; அது ஒரு சமூகத்தின் பண்பாட்டு, குடும்ப மற்றும் சமூகக் கட்டமைப்புகளை முற்றாகக் குலைத்து விடுகிறது.

### அ) பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள்

யுத்தத்தின் மிக மோசமான விளைவுகளில் ஒன்று, பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் (Female-Headed Households) எண்ணிக்கை வியக்கத்தக்க வகையில் அதிகரித்தமையாகும். வடக்கு மற்றும் கிழக்கில் பல்லாயிரக் கணக்கான பெண்கள் தம் கணவன்மாரைப் போரில் இழந்தோ, காணாமலாக்கப்பட்ட நிலைமையிலோ அல்லது மாற்றுத்திறனாளிகளாக்கப்பட்ட நிலைமையிலோ குடும்பத்தைக் கொண்டுநடத்தும் பாரிய பொறுப்பை ஏற்றுள்ளனர்.

- ***பொருளாதார நெருக்கடி:*** பாரம்பரியமாக ஆண்களைச் சார்ந்திருந்த சமூக அமைப்பில், போதிய தொழிற்திறனோ அல்லது வருமான வழிமுறைகளோ இன்றி இப் பெண்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- ***சமூகப் பாதுகாப்பின்மை:*** இத்தகைய குடும்பங்கள் சமூகத்தின் சுரண்டல்களுக்கும், பாலியல் ரீதியான அச்சுறுத்தல்களுக்கும் எளிதில் இலக்காகிவிடும் அபாயத்தில் உள்ளன.

### ஆ) போரினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள்

ஷெல் வீச்சுக்கள், துப்பாக்கிச் சூடுகள் மற்றும் கண்ணிவெடி விபத்துக்கள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் தமது கை, கால்களை இழந்து மாற்றுத்திறனாளிகளாக மாறியுள்ளனர். அவர்களுக்கான முறையான மறுவாழ்வுத் திட்டங்களோ, சுயதொழில் வாய்ப்புகளோ, அவர்களுக்கு உகந்த உள் கட்டமைப்பு வசதிகளோ போதுமான அளவு கிடைக்கப்பெறவில்லை. இது அவர்களை வாழ்நாள் முழுவதும் பிறரைச் சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

### இ) உளவியல் ரீதியான தாக்கங்கள் (PTSD) மற்றும் சமூகச் சீரழிவுகள்

நீண்டகாலமாகப் போர்ச் சூழலில் வாழ்ந்த மக்களிடையே 'மன அதிர்ச்சிக்குப் பிந்தைய மன அழுத்தம்' (Post-Traumatic Stress Disorder - PTSD) பரவலாகக் காணப்படுகிறது.

- ***போதைப்பொருள் கலாச்சாரம்:*** வறுமை, விரக்தி மற்றும் எதிர்காலம் பற்றிய பயம் காரணமாக இளைஞர்களிடையே போதைப்பொருள் பயன்பாடும், மதுப்பழக்கமும் அண்மைக்காலமாகப் பெருமளவில் அதிகரித்துள்ளன.
- ***வாள்வெட்டுக் குழுக்கள் மற்றும் குற்றச்செயல்கள்:*** இளைஞர்களுக்கான முறையான வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்புகள் இல்லாத சூழல், அவர்களைக் குற்றச் செயல்கள் மற்றும் வாள்வெட்டுக் குழுக்களின் பக்கம் திசை திருப்புவதற்குக் காரணியாக அமைகிறது. இது சமூகப் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

## 2. பொருளாதாரச் சவால்கள் மற்றும் வாழ்வாதார சீரழிவு

ஈழத்து மக்களின் பாரம்பரியப் பொருளாதார அஸ்திவாரங்கள் யுத்தத்தினால் முற்றாகத் தகர்க்கப்பட்டன. போருக்குப் பிந்தைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் உள்ளூர் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்குப் பதிலாக, மேலும் பலவீனப்படுத்துவதாகவே அமைந்தன.

### அ) கடன் பொறி (Microfinance Micro-credit Trap)

யுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களில் 'நுண்கடன்' வழங்கும் நிறுவனங்களின் ஆதிக்கம் பெருமளவில் நுழைந்தது.

- வாழ்வாதாரத்தை மீளமைக்க வழியின்றித் தவித்த ஏழைப் பெண்கள், அதிக வட்டி வீதம் கொண்ட இந்த கடன்களைப் பெற்றனர்.
- கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழலில், அதிக வட்டி, அவமானம் மற்றும் கடன் நெருக்குதல் காரணமாகப் பல பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் சோக நிலை உருவானது. இது ஈழத்துச் சமூகத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்குப் பதிலாக, அவர்களை மேலும் வறுமைப் பொறியில் தள்ளியது.

### ஆ) பாரம்பரிய தொழில்களின் வீழ்ச்சி

- ***விவசாயம்:*** பெருமளவிலான விவசாய நிலங்கள் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு மண்டலங்களாக மாற்றப்பட்டமை, கண்ணிவெடிகள் அகற்றப்படாமை மற்றும் உரம், எரிபொருள் விலையேற்றம் என்பவற்றால் விவசாயத்துறை பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.
- ***மீன்பிடித்தல்:*** வடபகுதி மீனவர்கள் இந்திய (தமிழ்நாடு) இழுவைப்படகுகளின் சட்டவிரோத ஊடுருவலாலும், சிறீலங்கா கடற்படையின் எல்லைக் கட்டுப்பாடுகளாலும் தமது வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர். நடுக்கடலில் உடைமைகளை இழப்பதும், வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதும் அன்றாட நிகழ்வாக மாறியுள்ளது.

### இ) வேலையின்மையும் மூளைச்சலவையும் (Brain Drain)

முறையான தொழில்துறை முதலீடுகளோ அல்லது தொழிற்சாலைகளோ யுத்தத்திற்குப் பின்னரான பிரதேசங்களில் உருவாக்கப்படவில்லை. பட்டதாரிகளான இளைஞர்களுக்குப் பொருத்தமான வேலைவாய்ப்புகள் இன்மையால், திறமை மிக்க இளைஞர்கள் மற்றும் தொழில்முறையாளர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்கின்றனர் (Brain Drain). இது

உள்ளூர் மனிதவளத்தை மிக மோசமாகப் பாதித்துள்ளது.

## 3. நிலம், இராணுவமயமாக்கல் மற்றும் இனவரைபட மாற்றம்

பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு அப்பாற்பட்டு, நிலம் சார்ந்த உரிமைகள் ஈழத்துச் சமூகத்தின் முக்கிய சவாலாக உருவெடுத்துள்ளன.

**அ) இராணுவமயமாக்கல்**

யுத்தம் முடிந்து பல ஆண்டுகள் கடந்த பின்னரும், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தின் வீதம் மிக அதிகமாகவே உள்ளது. மக்களின் அன்றாட சமூக, பொருளாதார நடவடிக்கைகளில் இராணுவத்தின் மறைமுக தலையீடு நிலவுகிறது. இராணுவத்தினர் உணவகங்கள், பண்ணைகள் மற்றும் சுற்றுலா மையங்களை நடாத்துவது, உள்ளூர் சிறு வணிகர்களின் வாழ்வாதாரத்தைப் பறிப்பதாக அமைந்துள்ளது.

**ஆ) நில ஆக்கிரமிப்பும் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளும்**

- மக்களின் பூர்வீக நிலங்கள், விவசாய நிலங்கள் இன்றும் இராணுவத்தினரின் பயன்பாட்டிலும், பாதுகாப்புப் படைகளின் வசமும் காணப்படுகின்றன.
- மகாவலி அபிவிருத்தித் திட்டம், வனவளத் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் பெயரால் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. இது அப்பகுதியின் இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கும் (Demographic Change) முயற்சியாகவே மக்களால் பார்க்கப்படுகிறது.

## 4. அரசியல் ஸ்திரமின்மையும் நீதிக்கான காத்திருப்பும்

சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசியல் ஸ்திரத்தன்மையும், நீதியும் மிக அவசியமானவை. ஆனால், ஈழத்துச் சமூகம் இவ்விரண்டிலுமே இன்றும் புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது.

**அ) காணாமலாக்கப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகள் பிரச்சினை**

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல், வீதிகளில் இறங்கி ஆயிரக்கணக்கான நாட்களாகப் போராடி வரும் தாய்மார்களின் கண்ணீர் இன்றும் தொடர்கிறது. அரசியல் கைதிகளின் விடுதலை தாமதமாவதும், போர்க் குற்றங்களுக்கான சர்வதேச நீதி மறுக்கப்படுவதும் மக்களிடையே அரச கட்டமைப்பு மீதான நம்பிக்கையின்மையை தீவிரப்படுத்தியுள்ளது.

**ஆ) புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளுக்கான தடைகள்**

உலகெங்கிலும் வாழும் புலம்பெயர் தமிழ் சமூகம் (Tamil Diaspora), தாயகத்தின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முதலீடு செய்யத் தயாராக இருந்தபோதிலும், சிறீலங்கா அரசின் சட்டக் கெடுபிடிகள், ஊழல் மற்றும் பாதுகாப்பற்ற சூழல் என்பன அவற்றுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன.

## தீர்வை நோக்கி: மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்



யுத்தத்திற்குப் பின்னரான ஈழத்துச் சமூகத்தை மீட்டெடுப்பதற்கும், நீடித்த நிலையான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் பின்வரும் நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும்:

***1. சுயசார்புப் பொருளாதாரம்:*** நுண்கடன் பொறிகளிலிருந்து மக்களை விடுவித்து, கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உள்ளூர் வளங்களை அடிப்படையாகக் கொண்ட சுயசார்பு வாழ்வாதாரத் திட்டங்களை ஊக்குவித்தல்.

***2. இராணுவ மயமாக்கலைக் குறைத்தல்:*** பொதுமக்களின் காணிகளை உடனடியாக விடுவிப்பதோடு, மக்களின் இயல்பு வாழ்க்கையிலும் பொருளாதாரத்திலும் இராணுவத்தின் தலையீட்டை முற்றாக நிறுத்த வேண்டும்.

**3. உளவியல் மறுவாழ்வு:** பாதிக்கப்பட்ட மக்களுக்கு, குறிப்பாகப் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்குத் தொழில்முறை உளவியல் ஆலோசனைகளையும் (Counseling), தொழிற்பயிற்சிகளையும் வழங்குதல்.

***4. புலம்பெயர் முதலீடுகளை ஈர்த்தல்:*** வெளிப்படைத்தன்மையான மற்றும் பாதுகாப்பான முறையில் புலம்பெயர் தமிழர்கள் தாயகத்தில் தொழில் திட்டங்களை உருவாக்கச் சாதகமான சூழலை ஏற்படுத்தல்.

***5. அரசியல் தீர்வும் நீதியும்:*** ஈழத்து மக்களின் நில உரிமை, சுயமரியாதை மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தும் நிலையான அரசியல் தீர்வை நோக்கிய நகர்வு.

## முடிவுரை

யுத்தத்திற்குப் பின்னரான ஈழத்துச் சமூகம் என்பது வெறும் இயல்பு நிலைக்குத் திரும்பிய ஒரு சமூகமல்ல; அது ஆழமான காயங்களோடும், பல்வேறு நெருக்கடிகளோடும் வாழ்விற்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு சமூகமாகும். வெறும் வீதிகளையும், பாலங்களையும் கட்டுவது மட்டுமே அபிவிருத்தியாகாது. மனிதர்களின் வாழ்வியலையும், மனங்களையும், வாழ்வாதாரத்தையும் கட்டியெழுப்புவதே உண்மையான மறுவாழ்வாகும்.

ஈழத்துச் சமூகம் தனக்கு முன்னால் உள்ள சமூக-பொருளாதாரச் சவால்களை எதிர்கொண்டு மீண்டெழ வேண்டுமாயின், அதற்கு உண்மையான அரசியல் விருப்பமும், சர்வதேசத்தின் நேர்மையான தலையீடும், தமிழ்ச் சமூகத்தின் அகநிலை சார்ந்த ஒருங்கிணைப்பும் மிக அவசியமாகும்.



# சர்வதேச குற்றவியல் நீதிமன்ற எதிர்காலம்?

# இஸ்ரேல் அழுத்தத்தால் பதவி விலகும் கரீம் கான்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

28.07.2026

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court - ICC) என்பது மனிதகுலத்திற்கு எதிரான மிகக் கொடூரமான குற்றங்கள், இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்தன்மைக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்காக 2002 ஆம் ஆண்டு ரோம் ஒப்பந்தத்தின் (Rome Statute) அடிப்படையில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் நிரந்தர சர்வதேச குற்றவியல் நீதிமன்றமாகும். தேசிய நீதித்துறைகள் செயல்பட முடியாத அல்லது செயல்பட விரும்பாத சூழ்நிலைகளில், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதே இதன் அடிப்படை நோக்கமாகும். பலவீனமான மக்களுக்கு நீதியை வழங்கும் உலகளாவிய அமைப்பாக இது கருதப்பட்டாலும், அதன் செயல்பாடுகள் ஆரம்பம் முதலே அரசியல், அதிகாரம் மற்றும் சர்வதேச சக்திச் சமநிலைகளுடன் பின்னிப்பிணைந்தே இருந்து வருகின்றன.

## பதவி விலகும் கரீம் கான்

இந்நிலையில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞராக இருந்த கரீம் கான் தனது பதவியில் இருந்து விலகியிருப்பது உலகளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, காசா போரின் பின்னணியில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக கைது ஆணை கோரிய பின்னரே இந்தச் சம்பவம் நிகழ்ந்திருப்பதால், இது வெறும் நிர்வாக மாற்றமா அல்லது சர்வதேச நீதியின் மீது அரசியல் அழுத்தத்தின் வெளிப்பாடா என்ற கேள்விகள் உலகம் முழுவதும் எழுந்துள்ளன.



ஆனால் இந்த விவகாரத்தை ஆராயும்போது உண்மைகளையும் அரசியல் கருத்துக்களையும் தெளிவாகப் பிரித்துப் பார்ப்பது அவசியமாகும். கரீம் கான் ஒரு சாதாரண வழக்கறிஞர் அல்ல. மனித உரிமைகள், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் போர்க்குற்ற விசாரணைகளில் பல தசாப்தங்களாக அனுபவம் பெற்ற பிரித்தானிய சட்ட நிபுணரான அவர், 2021 ஆம் ஆண்டு ICC-இன் தலைமை வழக்கறிஞராக பொறுப்பேற்றார். அவரது தலைமையில் உக்ரைன், சூடான், மியான்மர், லிபியா, ஆப்கானிஸ்தான், காங்கோ உள்ளிட்ட பல முக்கிய வழக்குகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு எதிராக கைது ஆணை கோரப்பட்டதும், பின்னர் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டதும் அவரது பதவிக்காலத்தை உலக அரசியலின் மையமாக மாற்றியது.

2024 ஆம் ஆண்டில் காசா போரின் போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலாந்த் மற்றும் ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக கைது ஆணை கோரி கரீம் கான் தாக்கல் செய்த மனு, உலகளவில் மிகப்பெரிய அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பின்னர் ICC நீதிபதிகள் சில கைது ஆணைகளைப் பிறப்பித்தனர். இதனை இஸ்ரேல் கடுமையாக நிராகரித்தது. அமெரிக்காவும் நீதிமன்றத்தின் அதிகாரத்தை விமர்சித்தது. சில மேற்கத்திய நாடுகள் ஆதரவு தெரிவித்தன் சில நாடுகள் அமைதியாக இருந்தன. இதன் மூலம் சர்வதேச சட்டமும் உலக அரசியலும் எவ்வளவு நெருக்கமாக இணைந்துள்ளன என்பது மீண்டும் வெளிப்பட்டது.

இந்தப் பின்னணியில் தான் கரீம் கான் மீது ஒரு பெண் ஊழியரால் பாலியல் முறைகேடு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அந்தக் குற்றச்சாட்டுகளை அவர் முழுமையாக மறுத்தார். இருப்பினும், நீதிமன்றத்தின் நம்பகத்தன்மையைப் பாதுகாக்கும் நோக்கில் சுயாதீன விசாரணைகள் தொடங்கப்பட்டன. அதன் பின்னர் அவர் தனது பொறுப்புகளில் இருந்து விலகினார். இங்கு குறிப்பிட வேண்டிய முக்கியமான அம்சம் என்னவெனில், தற்போது பொதுவில் கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில், அவர் நெதன்யாகுவுக்கு எதிராக கைது ஆணை கோரியதற்காக அதிகாரப்பூர்வமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்று உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரம் இல்லை. அவரது பதவி விலகல், அவர்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பான நடைமுறைகளுடன் தொடர்புடையதாகவே அதிகாரப்பூர்வமாக விளக்கப்பட்டுள்ளது.




## இஸ்ரேல் அழுத்தம் காரணம்?

இருப்பினும், இந்த இரண்டு சம்பவங்களும் ஒரே காலகட்டத்தில் நிகழ்ந்திருப்பதால் உலகம் முழுவதும் பல்வேறு அரசியல் சந்தேகங்கள் எழுந்துள்ளன. சர்வதேச நீதிமன்றம் உண்மையில் அரசியல் அழுத்தங்களிலிருந்து சுதந்திரமாகச் செயல்படுகிறதா? சக்திவாய்ந்த நாடுகளின் நலன்களைத் தொடும் வழக்குகளில் நீதிமன்றம் சுதந்திரமாக முடிவெடுக்க முடியுமா? உலக அரசியல் அமைப்பின் அதிகாரச் சமநிலைகள் நீதியின் பாதையை மாற்றுகின்றனவா? போன்ற கேள்விகள் மீண்டும் எழுந்துள்ளன.

ICC உருவாக்கப்பட்டபோது அதன் நோக்கம், எந்த நாட்டின் தலைவராக இருந்தாலும், எந்த இராணுவத் தளபதியாக இருந்தாலும், எந்த அரசியல் அதிகாரம் கொண்டவராக இருந்தாலும், அவர் செய்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்கு சட்டத்தின் முன் பொறுப்புக்கூறச் செய்வதேயாகும். ஆனால் நடைமுறையில் அந்த இலட்சியத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது எளிதல்ல.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா போன்ற உலகின் முக்கிய இராணுவ மற்றும் அரசியல் சக்திகள் ரோம் ஒப்பந்தத்தில் உறுப்பினர்களாக இல்லை. எனவே ICC-இன் அதிகார வரம்பு எல்லா நாடுகளுக்கும் ஒரே அளவில் பொருந்துவதில்லை. மேலும், ICC-க்கு தனிப்பட்ட காவல்துறை அல்லது இராணுவம் இல்லை. அது உறுப்புநாடுகளின் ஒத்துழைப்பை மட்டுமே நம்பியுள்ளது. கைது ஆணை பிறப்பிக்கப்பட்ட ஒருவர் ஒரு நாட்டில் இருந்தாலும், அந்த நாடு ஒத்துழைக்காவிட்டால் கைது செய்வது சாத்தியமற்றதாகிவிடுகிறது. இதனால் சட்டத்தின் அதிகாரமும் நடைமுறை அரசியலும் இடையறாத மோதலில் உள்ளன.

இதுவெ ICC மீது நீண்டகாலமாக முன்வைக்கப்படும் முக்கிய விமர்சனமாகும். குறிப்பாக ஆபிரிக்கா மற்றும் உலக தெற்கில் உள்ள பல நாடுகள், இந்த நீதிமன்றம் பலவீனமான நாடுகளின் தலைவர்களை மட்டுமே குறிவைக்கிறது என்ற குற்றச்சாட்டை பல ஆண்டுகளாக முன்வைத்து வருகின்றன. அதேவேளை, சமீப காலங்களில் ரஷ்யா மற்றும் இஸ்ரேல் தொடர்பான நடவடிக்கைகள், அந்த விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் முயற்சியாக சில ஆய்வாளர்களால் பார்க்கப்படுகின்றன.

கரீம் கான் விவகாரம் இன்னொரு முக்கியமான உண்மையையும் வெளிப்படுத்துகிறது. நீதியை வழங்கும் நிறுவனங்களே தங்களுக்குள் பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்த வேண்டும். ஒரு நீதிமன்றம் உலகத் தலைவர்களிடம் வெளிப்படைத்தன்மையை எதிர்பார்க்கிறதெனில், அதே அளவிலான வெளிப்படைத்தன்மை அதன் தலைமை அதிகாரிகளிடமும் இருக்க வேண்டும். இதுவே சட்டத்தின் ஆட்சியின் அடிப்படைத் தத்துவமாகும். ஒருவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவது அவர் குற்றவாளி என்பதை நிரூபிக்காது; அதே நேரத்தில், எந்த அதிகாரப் பதவியிலும் இருப்பவராக இருந்தாலும், குற்றச்சாட்டுகள் சுயாதீனமாக விசாரிக்கப்பட வேண்டும் என்பதே நவீன நீதியின் அடிப்படை.

இந்தச் சம்பவத்தின் அரசியல் தாக்கங்களும் குறைவானவை அல்ல. உலக அரசியலில் சர்வதேச சட்டத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் சிறிய நாடுகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கங்கள் இந்த விவ காரத்தை மிகுந்த கவனத்துடன் நோக்கி வருகின்றன. ஏனெனில், ICC போன்ற அமைப்புகளே பல நேரங்களில் அவர்களுக்குக் கிடைக்கும் கடைசி சர்வதேச நீதித் தளமாக இருக்கின்றன. அந்த அமைப்பின் நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டால், உலகளாவிய மனித உரிமை பாதுகாப்பு அமைப்பின் மீது மக்களின் நம்பிக்கையும் பாதிக்கப்படும்.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்ற தலைமை வழக்கறிஞராக இருந்த கரீம் கான் தனது பதவியில் இருந்து விலகியிருப்பது உலகளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. காசா போரின் பின்னணியில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிராக கைது ஆணை கோரிய பின்னரே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இது வெறும் நிர்வாக மாற்றமா அல்லது சர்வதேச நீதியின் மீது அரசியல் அழுத்தத்தின் வெளிப்பாடா என்ற கேள்விகள் உலகம் முழுவதும் எழுந்துள்ளன.**

அதேவேளை, கரீம் கான் பதவியில் இருந்து விலகியதால் ஏற்கனவே நீதிபதிகளால் பிறப்பிக்கப்பட்ட கைது ஆணைகள் தானாகவே ரத்து செய்யப்படுவதில்லை. நெதன்யாகு தொடர்பான கைது ஆணைகளோ, பிற நாடுகளைச் சார்ந்த விசாரணைகளோ, நீதிமன்றத்தின் நடைமுறைகளின்படி தொடர்கின்றன. ICC என்பது ஒரே நபரைச் சார்ந்த அமைப்பு அல்ல; அது நீதிபதிகள், வழக்கறிஞர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் உறுப்பு நாடுகளின் ஒத்துழைப்பால் இயங்கும் நிறுவனமாகும். எனவே, ஒரு தலைமை மாற்றம் அதன் அனைத்து வழக்குகளையும் நிறுத்திவிடும் என்ற கருத்து சரியானதல்ல.

இந்தச் சம்பவம் உலக நீதியின் எதிர்காலம் குறித்து ஆழமான சிந்தனையைத் தூண்டுகிறது. சர்வதேச நீதித்துறை உண்மையில் அரசியல் அழுத்தங்களிலிருந்து முழுமையாக விடுபட முடியுமா? சக்திவாய்ந்த நாடுகள் மீது சர்வதேச சட்டம் சமமாகப் பயன்படுத்தப்படுமா? உலக அரசியலில் இரட்டை அளவுகோல்கள் தொடரும் வரை சர்வதேச நீதியின் மீது மக்களுக்கு முழு நம்பிக்கை ஏற்படுமா? போன்ற கேள்விகளுக்கு இன்னும் தெளிவான பதில்கள் இல்லை.

## சர்வதேச நீதிமன்ற நம்பகத்தன்மை

ஆனால் ஒரு விஷயம் மட்டும் உறுதியானது. சர்வதேச நீதியின் நம்பகத்தன்மை அதன் சட்ட ஆவணங்களில் மட்டும் இல்லை; அதன் செயல்பாடுகளிலும், வெளிப்படைத்தன்மையிலும், அரசியல் அழுத்தங்களுக்கு மத்தியிலும் சுயாதீனமாக நிற்கும் திறனிலும் இருக்கிறது. அதே நேரத்தில், அந்த அமைப்பின் அதிகாரிகளும் சட்டத்தின் முன் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என்பதும் ஜனநாயக நீதியின் தவிர்க்க முடியாத அடிப்படை நெறியாகும்.

எனவே, கரீம் கான் விவகாரத்தை சர்வதேச நீதியின் முடிவு என்று பார்க்க முடியாது. அதேபோல், சக்திவாய்ந்த நாடுகளை இனி யாரும் கேள்வி கேட்க முடியாது என்ற முடிவுக்கும் தற்போதுள்ள ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. மாறாக, இந்தச் சம்பவம் சர்வதேச நீதித்துறையின் வலிமை, அதன் பலவீனங்கள், உலக அரசியலின் தாக்கம், மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்கான அவசியம் ஆகியவற்றை உலகிற்கு மீண்டும் நினைவூட்டிய ஒரு முக்கியமான திருப்புமுனையாகக் கருதப்பட வேண்டும்.

உலகம் இன்று ஒரு முக்கியமான சந்திப்புப் பாதையில் நிற்கிறது. ஒரு புறம் அரசியல் அதிகாரம் மறுபுறம் சர்வதேச சட்டம். இந்த இரண்டிற்கும் இடையில் சமநிலையைப் பேண முடிந்தால் மட்டுமே, மனிதகுலம் அனைவருக்கும் சமமான நீதி என்ற உயரிய இலட்சியத்தை உண்மையாக அடைய முடியும். கரீம் கான் விவகாரம் அந்தப் போராட்டம் இன்னும் முடிவடையவில்லை என்பதையே உலகிற்கு உணர்த்துகிறது.



# முத்துக்கடலும் முள்வேலியும்



அலைகள் தாலாட்டும்
அழகிய முத்துக் கடலோரம்,
அமைதி தேடி அலைந்த
எம் மக்களின் நெஞ்சோரம்...
இயற்கை தந்த வரமாய்
ஒளி வீசிய தாய் நிலம்,
இன்று நனைந்து கிடக்குதே
கண்ணீரின் ஈரத்தில்தான்.
நீலக் கடலின் ஆழத்தில்
முத்துக்கள் சிரித்திருக்க,
நீண்ட கடற்கரை எங்கும்
முள்வேலிகள் முளைத்திருக்க...
சுதந்திரமாய் நீந்திய மீன்கள்
கரையை நெருங்குகையில்,
சொந்த மண்ணில் மனிதரோ
வேலிக்குள் அடைபட்டனரே!

கடல் காற்று வீசையிலே
சுவாசம் கூடச் சிறைப்பட்டது,
காலங்கள் உருண்டோடியும்
காயங்கள் ஆறாமல் போனது.
முள்வேலி கிழித்த வடுக்கள்
உடலில் மட்டுமல்ல,
உயிரோடு வாழும்
வரலாற்றின் பக்கங்களிலும் தான்.
ஆயிரம் முள்வேலிகள்
எங்களைச் சூழ்ந்தாலும்,
ஆழக் கடலின் முத்துப்போல்
எம் நம்பிக்கை ஒளிரும்!
அலைகள் உடைந்து மீண்டும்
கரையைத் தொடுவது போல,
எம் தமிழீழத்தின் உரிமைகள்
மீண்டும் ஒருநாள் மலரும்!

– சு.லோஜிதன் –



# மீளத் தொடரும் அமெரிக்க – ஈரான் மோதல்: ஹார்முஸ் நீரிணை எண்ணெய் நெருக்கடி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

20.07.2026

**மோதலின் மிக முக்கியமான பரிமாணம் ஹார்முஸ் நீரிணையைச் சுற்றியுள்ள நெருக்கடியாகும். உலகின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு இந்த நீரிணை வழியாகவே செல்கிறது. சவுதி அரேபியா, குவைத், ஈராக், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஏற்றுமதிக்கான முக்கிய கடல்வழி இதுவாகும்.**

**ஈரான் இந்த நீரிணையை மூடுவது அல்லது அங்கு கப்பல் போக்குவரத்தைத் தடுப்பது தனது மிகப் பெரிய அரசியல் மற்றும் இராணுவ அழுத்தக் கருவியாகக் கருதுகிறது.**

மத்திய கிழக்கு என்பது உலகின் மிகவும் பதற்றமான புவிசார் அரசியல் பிராந்தியமாகக் கருதப்படுகிறது. கடந்த பல தசாப்தங்களாக அமெரிக்கா, ஈரான், இஸ்ரேல், வளைகுடா அரபு நாடுகள், ரஷ்யா மற்றும் பல்வேறு ஆயுதக் குழுக்களின் போட்டிகள் இப்பிராந்தியத்தை தொடர்ச்சியான மோதல்களின் மையமாக மாற்றியுள்ளன. குறிப்பாக 1979 ஆம் ஆண்டு ஈரானில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் அமெரிக்கா-ஈரான் உறவு பகைமை நிறைந்ததாகவே இருந்து வருகிறது. அணுசக்தித் திட்டம், பொருளாதாரத் தடைகள், கடல்சார் பாதுகாப்பு, பிராந்திய ஆதிக்கப் போட்டி ஆகியவை இந்த மோதலின் அடிப்படைக் காரணங்களாகும்.

2026 ஜூன் 17 அன்று இரு நாடுகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானபோது, பல ஆண்டுகளாக நீடித்த பதற்றம் தணியலாம் என்ற நம்பிக்கை சர்வதேச சமூகத்தில் உருவானது. ஆனால் அந்த நம்பிக்கை வெறும் ஒரு மாதத்திற்குள் முற்றிலும் சிதைந்துள்ளது. ஜூலை மாதத்தின் நடுப்பகுதியில் அமெரிக்கா மீண்டும் ஈரானின் இராணுவ இலக்குகள் மீது தொடர்ச்சியான வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ள நிலையில், ஈரானும் அமெரிக்காவின் பிராந்திய இராணுவத் தளங்களை இலக்காகக் கொண்டு பதிலடி தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு மீண்டும் ஒரு விரிவான பிராந்தியப் போரின் விளிம்பில் நிற்கிறது.

## அமைதி ஒப்பந்தம் ஏன் தோல்வி?

ஜூன் 17 அன்று கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம் அணுசக்தி விவகாரம், பொருளாதாரத் தடைகள், கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய நிலைத்தன்மை தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதை நோக்கமாகக் கொணடிருந்தது. ஆனால் ஒப்பந்தத்திற்குப் பிறகும் இரு தரப்பினரிடையே நம்பிக்கை உருவாகவில்லை.

அமெரிக்கா, ஈரான் தனது ஏவுகணைத் திட்டங்களைத் தொடர்ந்து விரிவுபடுத்தி வருவதாகவும், ஹெஸ்புல்லா, ஹூவுதி, ஈராக்கிலுள்ள ஷியா ஆயுதக் குழுக்கள் போன்ற அமைப்புகளுக்கு ஆதரவை நிறுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டியது. மறுபுறம், பொருளாதாரத் தடைகள் நடைமுறையில் தளர்த்தப்படவில்லை என்றும், அமெரிக்க இராணுவம் வளைகுடா பிராந்தியத்தில் தனது படை இருப்பை குறைக்கவில்லை என்றும் ஈரான் வாதிட்டது. இவ்வாறு பரஸ்பர சந்தேகமும் நம்பிக்கையின்மையும் ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்தன.

அமெரிக்காவின் மத்திய கட்டளைப் பிரிவு (CENTCOM) தொடர்ந்து ஈரானின் பல்வேறு இராணுவ இலக்குகள் மீது துல்லியமான வான்வழித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. இந்தத் தாக்குதல்களில் இராணுவக் கண்காணிப்பு மையங்கள், நிலத்தடி ஆயுதக் கிடங்குகள், ஏவுகணை ஏவுதளங்கள், கடற்படை தளவாட வசதிகள், ட்ரோன் சேமிப்பு மையங்கள் மற்றும் கடல்சார் கட்டுப்பாட்டு நிலையங்கள் குறிவைக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்கள் பொதுமக்களை இலக்காகக் கொண்டவை அல்ல என்றும், துல்லிய வழிகாட்டி ஆயுதங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருப்பினும் ஈரானின் தெற்குப் பகுதியில் உயிரிழப்புகளும் காயங்களும் ஏற்பட்டதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் இராணுவ நடவடிக்கைகள் மனிதாபிமான நெருக்கடியாக மாறும் அபாயமும் அதிகரித்துள்ளது.

## ஈரானின் பதிலடி எச்சரிக்கை

அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு பதிலடியாக ஈரான் தனது இராணுவ நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. பஹ்ரைனிலுள்ள அமெரிக்காவின் முக்கிய விமானத் தளமான Sheikh Isa, ஜோர்டான் மற்றும் குவைத்தில் உள்ள அமெரிக்க இராணுவ வசதிகள் மீது ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில் ஈரான் முழுமையான தாக்குதல் நடத்தத் தயாராக இருப்பதாக எச்சரித்துள்ளது. இந்தச் சொல் வெறும் அரசியல் அறிக்கையாக அல்லாமல், ஒருங்கிணைந்த பல்வேறு இராணுவ நடவடிக்கைகளை குறிக்கிறது. இதில் நீண்ட தூர ஏவுகணைகள், தற்கொலை ட்ரோன்கள், கடல்சார் தாக்குதல்கள், இணையத் தாக்குதல்கள் (Cyber Warfare), மின்னணு போர்த் தொழில்நுட்பங்கள், மேலும் பிராந்திய கூட்டணி ஆயுதக் குழுக்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் இடம்பெறக் கூடும். இவ்வகை நடவடிக்கைகள் தொடங்கினால், போர் ஈரான் மற்றும் அமெரிக்காவுக்கு இடையேயான நேரடி மோதலைத் தாண்டி முழு மத்திய கிழக்கையும் உள்ளடக்கிய பிராந்தியப் போராக மாறும் அபாயம் உள்ளது.

ஈரானின் ஏவுகணைகள் ஜோர்டானின் வான்வெளியை நோக்கி வந்ததைத் தொடர்ந்து அந்த நாடு அவசரநிலையை




அறிவித்துள்ளது. அந்நாட்டு வான் பாதுகாப்பு அமைப்புகள் பல ஏவுகணைகளை இடைமறித்து அழித்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன. இது ஒரு முக்கியமான மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. இதுவரை அமெரிக்கா-ஈரான் மோதலாக இருந்தது, தற்போது வளைகுடா மற்றும் மத்திய கிழக்கின் பல நாடுகளையும் நேரடியாக பாதிக்கும் பிராந்திய பாதுகாப்பு நெருக்கடியாக மாறியுள்ளது. பஹ்ரைன், குவைத், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா போன்ற நாடுகளில் அமெரிக்க இராணுவத் தளங்கள் இருப்பதால், அவை அனைத்தும் சாத்தியமான தாக்குதல் இலக்குகளாக மாறியுள்ளன.

## ஹார்முஸ் நீரிணை முக்கியத்துவம்

இந்த மோதலின் மிக முக்கியமான பரிமாணம் ஹார்முஸ் நீரிணையைச் சுற்றியுள்ள நெருக்கடியாகும். உலகின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் சுமார் ஐந்தில் ஒரு பங்கு இந்த நீரிணை வழியாகவே செல்கிறது. சவுதி அரேபியா, குவைத், ஈராக், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளின் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஏற்றுமதிக்கான முக்கிய கடல்வழி இதுவாகும்.

ஈரான் இந்த நீரிணையை மூடுவது அல்லது அங்கு கப்பல் போக்குவரத்தைத் தடுக்குவது தனது மிகப் பெரிய அரசியல் மற்றும் இராணுவ அழுத்தக் கருவியாகக் கருதுகிறது. இதன் மூலம் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளுக்கு பொருளாதார அழுத்தம் கொடுக்க முடியும் என்பதே அதன் கணக்கீடு.

ஹார்முஸ் நீரிணையை கடக்க முயன்ற சில சர்வதேசக் கப்பல்கள் தடுத்து நிறுத்தப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல்கள் உலக வர்த்தகத்திற்கு மிகப்பெரிய எச்சரிக்கையாகக் கருதப்படுகின்றன. இந்த நிலைமை நீடித்தால், கப்பல் காப்புறுதி செலவுகள் அதிகரிக்கும் சரக்கு விநியோகச் சங்கிலி பாதிக்கப்படும் உலகளவில் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் உயரும் கடல்சார் வர்த்தகத்தில் நிச்சயமற்ற சூழல் உருவாகும் மேலும் பல நாடுகள் மாற்று எரிசக்தி மற்றும் மாற்று கடல்வழிகளைத் தேடும் நிலை உருவாகலாம்.

## உலகப் பொருளாதார தாக்கம்

மத்திய கிழக்கில் நீண்டகாலப் போர் ஏற்பட்டால் உலக பொருளாதாரத்தில் கடுமையான தாக்கங்கள் ஏற்படும்.

முதலாவதாக, எண்ணெய் விலை உயர்வால் உலகளாவிய பண வீக்கம் அதிகரிக்கும். இரண்டாவதாக, உற்பத்தி மற்றும் போக்குவரத்து செலவுகள் அதிகரிப்பதால் உணவுப் பொருட்கள் முதல் தொழில்துறைப் பொருட்கள் வரை அனைத்தின் விலையும் உயரும். மூன்றாவதாக, உலக பங்குச் சந்தைகள் நிலைகுலையும்; முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீடுகளுக்குத் திரும்புவார்கள். நான்காவதாக, கப்பல் போக்குவரத்து பாதிப்பால் உலகளாவிய விநியோகச் சங்கிலி மீண்டும் சீர்குலையும். இது கொரோனா காலத்தில் ஏற்பட்ட பொருளாதார பாதிப்புகளை நினைவூட்டக்கூடிய அளவுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.



இந்த மோதலை உலகின் முக்கிய வல்லரசுகள் மிகுந்த கவனத்துடன் நோக்கி வருகின்றன. ரஷ்யாவும் சீனாவும் நேரடி இராணுவ மோதலைத் தவிர்த்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டுமென வலியுறுத்தலாம். ஐரோப்பிய ஒன்றியம் எரிசக்தி விநியோகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் கவனம் செலுத்தும். வளைகுடா நாடுகள் தங்களது வான் பாதுகாப்பையும் கடற்படை பாதுகாப்பையும் மேலும் வலுப்படுத்தும். ஐக்கிய நாடுகள் அமைப்பு உடனடி போர் நிறுத்தம் மற்றும் புதிய இராஜதந்திர முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும்.

தற்போதைய சூழ்நிலையைப் பார்க்கும்போது பல்வேறு சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. தாக்குதல்கள் மேலும் தீவிரமடைந்தால் முழுமையான பிராந்தியப் போர் வெடிக்கலாம். சர்வதேச அழுத்தம் அதிகரித்தால் மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்க வாய்ப்புள்ளது. அல்லது இந்த மோதல் நேரடி போரிலிருந்து பிரதிநிதி (Proxy) போராக மாறி பல ஆண்டுகள் நீடிக்கலாம். ஹார்முஸ் நீரிணை நீண்டகாலமாக செயலிழந்தால் உலகளாவிய எரிசக்தி நெருக்கடி உருவாகி, உலக பொருளாதாரத்தில் மிகப்பெரிய மந்தநிலை ஏற்படும் அபாயமும் உள்ளது.

அமெரிக்கா-ஈரான் மோதல் இன்று ஒரு சாதாரண இருதரப்பு இராணுவ மோதலாக இல்லை. இது மத்திய கிழக்கின் பாதுகாப்பு அமைப்பை மட்டுமல்லாமல், உலக அரசியல், சர்வதேச வர்த்தகம், எரிசக்தி விநியோகம் மற்றும் உலகப் பொருளாதாரத்தின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் முக்கிய புவிசார் அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளது.

அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி ஒரு மாதத்திற்குள் மீண்டும் போர் வெடித்திருப்பது, அரசியல் ஒப்பந்தங்கள் மட்டும் நிலையான அமைதியை உருவாக்க முடியாது என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது. பரஸ்பர நம்பிக்கை, பாதுகாப்பு உத்தரவாதங்கள், சர்வதேச நடுநிலைமை மற்றும் தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சிகளே நீடித்த அமைதிக்கான அடித்தளமாக அமையும். இல்லையெனில் இந்த மோதல் மத்திய கிழக்கைத் தாண்டி உலகின் ஒவ்வொரு நாட்டின் பொருளாதாரம், பாதுகாப்பு மற்றும் அரசியல் நிலைத்தன்மையையும் தீவிரமாகப் பாதிக்கும் ஒரு உலகளாவிய நெருக்கடியாக உருவெடுக்கும் அபாயம் உள்ளது.



ஈழத் தமிழருக்கான நீதி
இன்னும்
கிடைக்கவில்லை
OSLP must report the Cycle of Violence and Genocide since 1948
Stop Land Grab
'நீதியின் ஓலம் – 2'
WE WANT JUSTICE
யாழ். செம்மணியில்
2026 ஆகஸ்ட் 14, 15, 16, 17 ஆம்
நாட்களில் நீதிக்கான மாபெரும்
மக்கள் எழுச்சிப்போராட்டம்
இன்றும் சர்வதேச நீதி வேண்டி நிற்கின்றோம்....
- தாயகச் செயலணி-

# தமிழர்களும் விலங்குகளும்!

29.07.2026





ஒருபுறம் செம்மணியில் மனித குல நாகரீகத்திற்கு முரணாக, இன அழிப்பு என்றும் குற்றம் சாட்டத்தக்க விதத்தில் புதைக்கப் பட்ட மனிதர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்படும் ஒரு நாட்டில், இன்னொரு புறம், விலங்குகளை பாதுகாப்பதற்கு மிக விரிவான நுட்பமான ஏற்பாடுகளைக் கொண்ட ஒரு சட்டமூலம் முன்வைக்கப்பட்டிருக்கிறது. இது புதுவை இரத்தினதுரை பல ஆண்டுகளுக்கு நுண் எழுதிய பின்வரும் கவிதை வரிகளை ஞாபகப்படுத்தவில்லையா ?

**"மான் சுட்டால் அன்றி**
**மரை சுட்டால், மயில் சுட்டால்**
**ஏன் என்று கேட்க இந்நாட்டில் சட்டமுண்டு**
**மாடடித்தல் கூட, மறைவான ஓரிடத்தில்**
**சாகடிக்க வேண்டுமெனச்**
**சட்டத்தில் இடமுண்டு.**
**கொக்குச் சுடுதல் குற்றம்**
**பயிரழித்து**
**திக்கெட்டும் நடந்து திரிகின்ற ஆனையினைச்**
**சுட்டால், அது குற்றம்**
**'சுதந்திர பூமியிலே'**
**சட்டம் இதற்கெல்லாம் தண்டிக்கும்**
**தண்டிக்க வேண்டியதே.**
**நாய்ப்பிடிக்கக்கூட நகரசபைக்காரர்கள்**
**நீ பிடிக்கலாமென்று நியமனங்கள் செய்துள்ளார்**
**மானுக்கு, மாட்டுக்கு**
**மரையோடு, மயிலுக்கு**
**ஆனைக்குக்கூட அனுதாபப்படும் நாட்டில்**
**மனித உயிர் மட்டும் மலிவு**
**மிக மலிவு."**

46ஆவது ஜூலை இன அழிப்பு நினைவுகளை தமிழ் மக்கள் கடந்துபோகும் ஒரு காலப் பின்னணியில், ஐரோப்பிய ஒன்றி யத்தின் விசேஷ தூதுக்குழு செம்மணிக்கு வருகை தந்த ஓர் அரசியல் சூழலில், செம்மணியில் அந்தத் தூதுக்குழு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து அவர் களுடைய கருத்துக்களைக் கேட்டு அறிந்திருக்கும் ஒரு பின்ன ணியில், செம்மணியில் மேலும் மேலும் கூடுகள் வந்த வண்ணம் உள்ளன.

இந்த எலும்புக்கூடுகளில் ஒன்று இருந்த நிலையில் காணப் பட்டது. இன்னொன்று மழைக்கு அணியும் ஜாக்கெட்டுடன் காணப்பட்டது. இவை எவற்றைக் காட்டுகின்றன என்றால், அங்கே மனிதர்களின் உடல்கள் உரிய மரியாதைகளோடு புதைக்கப்படவில்லை என்பதைத்தான்.

தமிழ் மக்களோ, சிங்கள மக்களோ, முஸ்லிம் மக்களோ, உடல் களைப் புதைக்கும் பொழுது இருந்த நிலையில் புதைப் பதில்லை. சமாதி அடைந்த சன்னியாசிகளைத்தான் இருந்த நிலையில் புதைப்பதுண்டு. மேலும் மழைக்கு அணியும் ஜாக்கெட்டுடன் பூத உடல்களை புதைப்பதில்லை. எந்த ஒரு மத நம்பிக்கையாக இருந்தாலும் அல்லது மத நம்பிக்கைகள் இல் லாத இறுதிச் சடங்குகளின் போதும் உடல்களுக்கு அவற்றுக் குரிய மரியாதை கொடுக்கப்படுவதே வழமை. உடல்களை அவற்றுக்குரிய மரியாதையான நிலையில் கிடத்தி, உறுப் புகளை நீட்டி நிமிர்த்தி ஒன்றில் எரிப்பார்கள் அல்லது புதைப் பார்கள்.

ஆனால் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் பெரும்பாலானவை அவ்வாறான மரியாதைகள் இன்றி புதைக் கப்பட்டிருக்கின்றன. அதுவே ஓர் இன அழிப்புதான். அதுவே ஒரு பண்பாட்டுப் போர்தான். அதைப் புதைத்தவர்களின் பண்பாட்டு வீழ்ச்சிதான்.

அதுமட்டுமல்ல, அது மனித குல நாகரிகத்தை அவமதிக்கும் ஒரு செயல். தமது சக மனிதரின் இறந்த உடலுக்கு அதாவது பூத உடலுக்கு மரியாதை கொடுப்பது, வணக்கம் செலுத்துவது என்பது மனிதர்களை ஏனைய விலங்குகளிடமிருந்து வித்தி யாசப்படுத்தும் விடையங்களில் ஒன்று. விலங்குகள் ஒரு சக விலங்கு இறந்தால் ஒன்றில் அவற்றை உணவாக்கிக் கொள் ளும். அல்லது அவற்றை அப்படியே கைவிட்டுச் செல்லும். இறந்த விலங்கின் உடல் புழுக்களுக்கும் பறவைகளுக்கும் இரையாகும்.

இறந்துபோன குட்டியின் உடலை தாய் விலங்கு சுற்றிசுற்றி வரக்கூடும். ஆனாலும் ஒரு கட்டத்தில் அது அதனை இயற்கை யிடம் ஒப்படைத்துவிட்டு விலங்கு நகர்ந்து விடும். ஆனால் மனிதர்கள் இறந்த சக மனிதர்களை உரிய மரியாதை கொடுத்து புதைப்பார்கள்.அல்லது தகனம் செய்வார்கள். சக மனிதரின் உடலுக்கு மரியாதை செய்வது என்பது மனித நாகரீகத்தின் தொடக்கப் புள்ளிகளில் ஒன்று.

ஆனால் செம்மணியில் பெரும்பாலான எலும்புக்கூடுகளை பொறுத்தவரை, அந்த நாகரீகம் பின்பற்றப்படவில்லை. மனிதர்கள் நாகரீகமாகப் புதைக்கப்படவில்லை. எந்த ஒரு மத நம்பிக்கையின் அடிப்படையிலும் அங்கே உடல் அடக்கம் செய் யப்படவில்லை என்பதைத்தான் அங்கு கிடைக்கும் எலும்புக் கூடுகள் நமக்கு உணர்த்துகின்றன.

இறந்த அல்லது கொல்லப்பட்டவர்களின் உடல்களை அவற்றுக் குரிய மரியாதையைக் கொடுக்காமல் புதைப்பது அல்லது எரிப்பது என்பது இன அழிப்பின் ஒரு பகுதிதான். செம்மணியில் எடுக்கப்படும் எலும்புக்கூடுகள் இன அழிப்பின் ஆகப்பிந்திய சாட்சியங்களா?

இவ்வாறு செம்மணியில் உடல்கள் தாறுமாறாக எந்த மரியா தையுமின்றி மனித குல நாகரீக வளர்ச்சிகளுக்கு முரணாக, கண்டபடி புதைக்கப்பட்டிருப்பது வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், இலங்கை அரசாங்கம் விலங்குகளை நேசித்தல், அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் விலங்குகளுக்கு எதிரான கொடுமைகளைத் தடுத்தல் ஆகிய வற்றுடன் தொடர்புடைய சட்டக் கட்டமைப்பை மேலும் வலுப் படுத்தும் நோக்கில் புதிய விலங்கு நலச் சட்டமூலத்தை சமர்ப் பித்துள்ளது.

2026 ஜூலை 17ஆம் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானி அறி வித்தலில் வெளியிடப்பட்டுள்ள இந்தச் சட்டமூலத்தின் மூலம், விலங்குகள் மீது கருணை, தயவு மற்றும் சரியான கவனத் தைச் செலுத்துதல், அத்துடன் அவற்றின் பாதுகாப்பு, நலன் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கான புதிய சட்ட விதி களை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இச்சட்ட மூலத்தின்படி விலங்குகளைப் பாதுகாப்பதற்கு பின்வரும் விடயப் பரப்புகளில் கவனம் செலுத்தப்படும்.

***முதலாவதாக,*** விலங்கு நலன் என்பது விலங்குகளைத் தாக் காமல் இருப்பதுடன் மட்டுமல்ல. அவற்றுக்குத் தேவையான உணவு, சுத்தமான நீர் மற்றும் பொருத்தமான இருப்பிடத்தை வழங்குவதும் விலங்கு நலனின் அடிப்படை அம்சங்களாகக் கருதப்படுகின்றன. அதற்கமைய, விலங்குகளுக்கு உணவோ அல்லது நீரோ வழங்காதிருத்தல், அவற்றுக்குரிய இருப் பிடத்தை வழங்காதிருத்தல், அளவுக்கு அதிகமாக வேலை வாங்குதல், தகுதியற்ற விலங்குகளை வேலைக்கு ஈடுபடுத் துதல் அல்லது ஏனைய செயற்பாடுகள் அல்லது செய்யத் தவ றுதல்கள் மூலம் தேவையற்ற வலி அல்லது துன்பத்தை ஏற் படுத்துவதைத் தடை செய்ய இச்சட்டமூலம் முன்மொழிகிறது.

***இரண்டாவதாக,*** விலங்குகளுக்கு வேண்டுமென்றே செய்யப் படும் கொடூரச் செயல்கள் மட்டுமன்றி, அவற்றை உரிய விதத் தில் பராமரிக்காமல் விடுவதையும் சட்டப்படி குற்றமாக்கும் விதத்தில் இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற் கமைய, விலங்குகளைக் கொடுமைப்படுத்துவது தொடர்பாகக் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவருக்கு ரூபா 250,000 இற்கு மிகையாத அபராதம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத சிறைத்தண்டனை அல்லது இவ்விரண்டு தண்ட னைகளும் விதிக்கப்படலாம்.

***மூன்றாவதாக,*** விலங்கொன்றைக் கொடூரமான முறையில் கொல்வது தொடர்பாகக் குற்றவாளியாகும் ஒருவருக்கு ரூபா 500,000இற்கு குறையாத அபராதம் அல்லது மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது இவ்விரண்டு தண்ட னைகளும் விதிக்கப்படலாம் என்றும் சட்டமூலத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

***நாலாவதாக,*** செல்லப்பிராணிகளை வளர்த்துவிட்டுப் பின்னர் அவற்றைக் கைவிடுவது தொடர்பிலும் புதிய சட்டமூலம் கவனம் செலுத்தியுள்ளது. நோயுற்ற அல்லது ஊனமுற்ற விலங்கு களைப் பொது இடங்களில் இறக்க விடுவது, விலங்குகளைக் கைவிடுவது மற்றும் அவற்றுக்குத் தேவையான சிகிச்சைகள் கிடைக்காமல் விடுவது போன்ற செயல்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் விதிகள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

***ஐந்தாவதாக,*** சட்டவிரோதமான முறையில் விலங்குகளைக் கருத்தடை செய்தல் மற்றும் தகுதியற்ற நபர்களால் விலங்குக ளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தல் தொடர்பிலும் புதிய சட்ட மூலம் கவனம் செலுத்தியுள்ளது.

***ஆறாவதாக,*** விலங்குகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் சண் டைகள், விலங்குகளுக்குக் காயம் அல்லது மரணத்தை ஏற் படுத்தும் வேட்டை விளையாட்டுகள் மற்றும் விலங்குகளுக்கு இடையேயான சண்டைகளை நடத்துதல் போன்ற செயற் பாடுகளும் புதிய சட்டங்களின் கீழ் தடை செய்ய முன்மொழியப் பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், அதற்காக வசதிகளைச் செய்து கொடுத்தல் அல்லது விளம்பரம் செய்தல் என்பனவும் குற்றமாகக் கருதப்படவுள்ளது.

***ஏழாவதாக,*** விலங்குகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத் திற்குக் கொண்டு செல்லும்போது அவற்றுக்குத் தேவையற்ற வலி, துன்பம், காயம் அல்லது விபத்து ஏற்படாதவாறு செயற்பட வேண்டும் என்ற புதிய நிபந்தனைகளை அறிமுகப்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது. அவ்விதிகளை மீறும் நபர்களுக்கு ரூபா 300,000இற்கு குறையாத அபராதம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மிகையாத சிறைத்தண்டனை அல்லது இவ் விரண்டு தண்டனைகளும் விதிக்கப்படலாம்.

***எட்டாவதாக,*** செல்லப்பிராணி விற்பனை நிலையங்களுக்கு மற்றும் செல்லப்பிராணிகளைப் பெருகச் செய்யும் (இனப் பெருக்க) நிலையங்களுக்கு அனுமதிப் பத்திர முறைமையை அறிமுகப்படுத்தவும் புதிய சட்டமூலம் முன்மொழிகிறது. இதன் மூலம் விலங்கு வர்த்தகம் மற்றும் இனப்பெருக்கம் தொடர்பான செயற்பாடுகளை முறைப்படுத்தும் வாய்ப்புப் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட அம்சங்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டிருக்கும் சட்டமூலத்தின் விதிகளைப் பரிசீலித்து பொருத்தமான பரிந் துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக, 2025 டிசம்பர் 29 ஆம் திகதி யிட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலா ளரால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு சமர்ப்பித்த பரிந்துரைகளின் அடிப்படையில் விலங்கு நலன் தொடர்பான இறுதிச் சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு 2026 மே18 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சட்ட வரைஞருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்கமைய, சட்ட வரை ஞரால் விலங்கு நலச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்குச் சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து, குறித்த சட்ட மூலத்தை அரசாங்க வர்த் தமானியில் வெளியிட்ட பின்னர் ஒப்புதலுக்காக நாடாளுமன் றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளது.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் பெட்டிக்குள் காணப்பெறும் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதையை மீண்டும் ஒரு தடவை படித்துப் பாருங்கள்! அப்போது இந்த கட்டுரையின் உட்பொருள் விளங்கும்.

நன்றி: நிலாந்தன்

# ஆபிரிக்க வானில் உதித்த விடுதலைச் சூரியன் நெல்சன் மண்டேலா

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

**இன்று உலகம் முழுவதும் யூலை 18 "நெல்சன் மண்டேலா சர்வதேச தினம்" எனக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் மக்கள் குறைந்தபட்சம் 67 நிமிடங்கள் சமூக நலப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுக்கிறது. மண்டேலா சமூக நலனுக்காக அர்ப்பணித்த 67 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில் இந்த மரபு உருவாக்கப்பட்டது. யூலை 18 நெல்சன் மண்டேலாவின் பிறந்த தினத்தையோட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

16.07.2026

ஒரு மனிதரின் வாழ்க்கை, ஒரு நாட்டின் வரலாற்றையே மாற்றிவிட முடியும் என்பதை உலகிற்கு நிரூபித்த சில தலைவர்களில் நெல்சன் மண்டேலா மிக முக்கியமானவர். அவர் வெறும் தென்னாப்பிரிக்காவின் முன்னாள் தலைவர் மட்டுமல்ல. மனித உரிமை, சமத்துவம், நீதி மற்றும் மன்னிப்பின் உலகளாவிய அடையாளமாகவும் திகழ்ந்தவர். உலகின் பல்வேறு பகுதிகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர் ஒரு நம்பிக்கையின் ஒளிவிளக்காக இருந்தார். இனவெறி என்னும் மனித நேயமற்ற அமைப்பை எதிர்த்து தனது வாழ்நாளின் பெரும் பகுதியை அர்ப்பணித்த மண்டேலா, சிறைச்சாலையின் இருட்டுக்குள் இருந்தபோதும் தனது இலட்சியத்தை இழக்காத "சிறை யிலும் வாடாத கறுப்பு மலர்" என்ற பெருமையைப் பெற்றார்.



## சிறையிலும் வாடாத கறுப்பு மலர்:

1918 ஆம் ஆண்டு யூலை 18 ஆம் நாள் தென்னாப்பிரிக்காவின் டிரான்ஸ்காய் பகுதியில் உள்ள ம்வேசோ என்ற சிற்றூரில் நெல்சன் ரோலிஹ்லாஹ்லா மண்டேலா பிறந்தார். கோசா இனத்தைச் சேர்ந்த தெம்பு அரச குடும்ப மரபில் பிறந்த அவர், சிறுவயதிலேயே வாழ்க்கையின் கடினமான உண்மைகளை எதிர்கொண்டார். ஒன்பது வயதில் தந்தையை இழந்த அவர், ஆடுகளை மேய்த்துக் கொண்டே கல்வி கற்றார். தமது குடும்பத்தில் பள்ளிக்குச் சென்ற முதல் நபராக இருந்தார்.

கல்வியே மனிதனை உயர்த்தும் என்ற நம்பிக்கையுடன் வளர்ந்தாலும், தென்னாப்பிரிக்காவின் நிறவெறி அரசியல் அவரை வேறு பாதைக்கு அழைத்துச் சென்றது. அந்தக் காலத்தில் தென்னாப்பிரிக்காவில் நிலவிய "அப்பார்தெய்ட்" (Apartheid) எனப்படும் இனஒதுக்கல் கொள்கை உலகின் மிகக் கொடூர மான இனவெறி ஆட்சி முறைகளில் ஒன்றாக இருந்தது. வெள்ளையர்கள் மட்டுமே அதிகாரத்தையும் செல்வத்தையும் அனுபவித்தனர். பெரும்பான்மையான கறுப்பின மக்கள் தங்களது சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப் பட்டனர்.

அவர்கள் நிலம் வாங்க முடியாது, சுதந்திரமாக பயணிக்க முடியாது, வாக்களிக்க முடியாது, உயர்கல்வி பெற முடியாது, பல தொழில்களில் ஈடுபட முடியாது என்ற அளவிற்கு மனித உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தன. ஒரே நாட்டிற்குள் வாழ்ந்தாலும், வெள்ளையரும் கறுப்பின மக்களும் தனித் தனியாக வாழ கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்த மனிதாபிமானமற்ற சூழலே மண்டேலாவின் அரசியல் விழிப்புணர்வை உருவாக்கியது.

1912 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (African National Congress - ANC), கறுப்பின மக்களின் உரிமைகளுக்காக போராடிய முக்கிய இயக்கமாக விளங்கியது. சட்டம் படித்த மண்டேலா, இவ்வியக்கத்தில் இணைந்து சமூக நீதிக் கான போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டார். ஆரம்பத்தில் மகாத்மா காந்தியின் அகிம் சைக் கொள்கையைப் பின்பற்றி அமைதியான எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தார். ஆனால், அரசின் அடக்கு முறைகள் அதிகரித்தபோது, வெறும் அமைதிப் போராட்டங்களால் மாற்றம் ஏற்படாது என்ற முடிவுக்கு வந்தார். இதன் விளைவாக ANC-யின் ஆயுதப்பிரிவான உம்கொன்டோ வெ சிஸ்வே (Umkhonto we Sizwe) உருவாக் கப்பட்டபோது அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

## சிறையில் மண்டேலா :

1962 ஆம் ஆண்டு மண்டேலா கைது செய்யப்பட்டார். பின்னர் நடைபெற்ற ரிவோனியா வழக்கில் அவர் மீது தேசத்துரோகமும் அரசைக் கவிழ்க்கும் சதியும் குற்றமாக சுமத்தப்பட்டது. நீதிமன்றத்தில் அவர் ஆற்றிய உரை உலக வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுள்ளது. அனைவரும் சம உரிமையுடன் வாழும் ஜனநாயக சமூகத்திற்காக நான் வாழ்ந்திருக்கிறேன் தேவைப்பட்டால் அதற்காக உயிரையும் தியாகம் செய்யத் தயார் என்ற அவரது வார்த்தைகள் உலக மனசாட்சியை உலுக்கியன. அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

அதன்பின் ராபன் தீவு சிறையில் அவர் 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். மிகச் சிறிய அறையில் கடுமையான உழைப்பிற்கும், தனிமைக்கும் உட்படுத்தப்பட்டாலும், அவரது மன உறுதி தளரவில்லை. உடலைச் சிறைப்படுத்த முடிந்தது. ஆனால் அவரது சிந்தனையையும் இலட்சியத்தையும் யாராலும் சிறைப்படுத்த முடியவில்லை. அதனால்தான் உலகம் அவரை "சிறையிலும் வாடாத கறுப்பு மலர்" என்று போற்றியது.

சிறையில் இருந்தபோதே மண்டேலா உலகளாவிய எதிர்ப்பின் அடையாளமாக மாறினார். உலக நாடுகள் தென்னாப்பிரிக்காவின் நிறவெறி அரசை கண்டித்தன. பல நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்தன. பல்கலைக்கழகங்கள், தொழிற்சங்கங்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள் என உலகம் முழுவதும் "Free Nelson Mandela" என்ற முழக்கம் ஒலித்தது. அவர் சிறையில் இருந்தாலும், அவரது பெயர் சுதந்திரத்தின் சின்னமாக மாறியது.

1990 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 அன்று மண்டேலா விடுதலையானார். அந்த தருணம் தென்னாப்பிரிக்காவுக்கே அல்ல, உலக மனித உரிமை வரலாற்றிற்கும் ஒரு புதிய அத்தியாயமாக அமைந்தது. சிறையிலிருந்து வெளியே வந்த அவர் பழிவாங் - கலை அல்ல, சமரசத்தையும் நல்லிணக்கத்தையும் தேர்ந்தெடுத்தார். பல ஆண்டுகள் தன்னைச் சிறையில் அடைத்த வெள்ளையர்களிடம் கூட வெறுப்பை வளர்க்காமல், நாம் அனைவரும் இணைந்து புதிய தென்னாப்பிரிக்காவை உருவாக்க வேண்டும் என்றார்.

1993 ஆம் ஆண்டு மண்டேலாவும் அப்போதைய அதிபர் எப்.டபிள்யூ. டி. கிளெர்கும் இணைந்து அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றனர். 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் முழுமையான ஜனநாயகத் தேர்தலில் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் முதல் கறுப்பின குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அது ஒரு தனி மனிதரின் வெற்றி மட்டுமல்ல நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்று வெற்றியாகும்.

குடியரசுத் தலைவராக இருந்தபோது அவர் எடுத்த முக்கியமான நடவடிக்கை, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணையம் (Truth and Reconciliation Commission) அமைத்ததேயாகும். கடந்த காலக் கொடுமைகளை மறைக்காமல் உண்மையை வெளிப்படுத்தி, அதே நேரத்தில் பழிவாங்கலைத் தவிர்த்து தேசிய ஒற்றுமையை உருவாக்க முயன்றார். இது உலக அரசியலில் புதிய நல்லிணக்க மாதிரியாகக் கருதப்பட்டது.

மண்டேலாவின் மிகப்பெரிய சிறப்பு அவரது மன்னிக்கும் பண்பாகும். 27 ஆண்டுகள் சிறையில் அடைத்தவர்களையே அவர் எதிரிகளாக அல்ல, எதிர்காலத்தின் கூட்டாளிகளாகப் பார்த்தார். வெறுப்புடன் சிறையிலிருந்து வெளியே வந்திருந்தால், நான் இன்னும் சிறையிலேயே இருந்திருப்பேன் என்ற அவரது சிந்தனை, மனித மனத்தின் உயர்ந்த வெளிப்பாடாகக் கருதப்படுகிறது.

அவரது வாழ்க்கை அரசியலைத் தாண்டி மனிதநேயத்தின் பாடமாகவும் விளங்குகிறது. அதிகாரம் என்பது பழிவாங்குவதற்கான கருவி அல்ல; மக்களை ஒன்றிணைப்பதற்கான பொறுப்பு என்பதை அவர் உலகிற்கு உணர்த்தினார். அவர் தனது பதவிக் காலம் முடிந்ததும் அதிகாரத்தைப் பற்றிக் கொள்ளாமல், தன்னார்வமாக ஓய்வு பெற்றதும் ஜனநாயகத்தின் மீதான அவரது மரியாதையை வெளிப்படுத்துகிறது.

இன்று உலகம் முழுவதும் யூலை 18 "நெல்சன் மண்டேலா சர்வதேச தினம்" எனக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் மக்கள் குறைந்தபட்சம் 67 நிமிடங்கள் சமூக நலப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுக்கிறது. மண்டேலா சமூக நலனுக்காக அர்ப்பணித்த 67 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில் இந்த மரபு உருவாக்கப்பட்டது.

நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையையும், போராடுபவர்களுக்கு உறுதியையும், அரசியல்வாதிகளுக்கு பணிவையும், மனிதகுலத்திற்கு மன்னிப்பின் அர்த்தத்தையும் கற்றுத்தருகிறது. அவரது வாழ்க்கை நமக்கு கூறும் மிகப்பெரிய பாடம் என்னவென்றால், ஆயதங்களால் வெற்றி பெறுவது எளிது. ஆனால் மனித இதயங்களை வெல்வதே உண்மையான வெற்றியாகும்.

நெல்சன் மண்டேலா ஒரு நாட்டின் தலைவர் மட்டுமல்ல. மனித குலத்தின் பொதுச் சொத்து. சிறையின் சுவர்கள் அவரது சிந்தனையை அடைக்கவில்லை. அடக்குமுறைகள் அவரது இலட்சியத்தை அணைக்கவில்லை.அதிகாரத்தின் கவர்ச்சி அவரது பணிவை மாற்றவில்லை. அதனால் தான் அவர் இன்று வரை உலக மனங்களில் வாழும் விடுதலைச் சூரியனாகவும், நீதிக்காக மலர்ந்த கறுப்பு மலராகவும், மனித கண்ணியத்தின் நிரந்தரச் சின்னமாகவும் திகழ்கிறார்.




# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com

# உக்ரைன் இராணுவத் தலைமை மாற்றம்! ஜெலன்ஸ்கியின் புதிய முடிவின் பின்னணி

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

26.07.2026

உக்ரைன் ஜனாதிபதி விலோடிமிர் ஜெலன்ஸ்கி தனது ஆயதப் படைகளின் தலைமைத் தளபதி ஒலெக்சாண்டர் சிர்ஸ்கியை (Oleksandr Syrskyi) பதவியில் இருந்து நீக்கியதாக வெளியான செய்திகள் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளன. ஒரு நாட்டின் போர்க்காலத்தில் இராணுவத் தலைவரை மாற்றுவது என்பது சாதாரண நிர்வாக நடவடிக்கை அல்ல. அது போரின் திசையை மாற்றக்கூடிய மூலோபாய முடிவாகவும், அரசியல் நம்பிக்கையைப் புதுப்பிக்கும் முயற்சியாகவும், புதிய போர் அணுகுமுறையை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையாகவும் பார்க்கப் படுகிறது.

ரஷ்யா-உக்ரைன் போர் 2022 ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து உலக அரசியலின் மையப் பிரச்சினையாகவே இருந்து வருகிறது. இந்தப் போர் ஒரு சாதாரண எல்லைப் பிரச்சினையாக இல்லாமல், உலக சக்திகளின் போட்டி, நேட்டோ - ரஷ்யா மோதல், ஐரோப்பிய பாதுகாப்பு, எரிசக்தி அரசியல் மற்றும் தொழில்நுட்பப் போரின் எதிர்காலம் ஆகிய அனைத்தையும் தீர்மானிக்கும் ஒரு முக்கியமான மோதலாக மாறியுள்ளது.



## போரில் உருவான புதிய உண்மைகள்

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரஷ்யா தனது முழுமையான படையெடுப்பை ஆரம்பித்தபோது, சில நாட்களிலேயே கீவ் தலைநகரைக் கைப்பற்ற முடியும் என்று பலரும் கருதினர். ஆனால் உக்ரைன் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியது. மேற்கத்திய நாடுகளின் ஆயுத உதவி, உக்ரைன் மக்களின் எதிர்ப்பு மனப்பான்மை மற்றும் இராணுவத்தின் ஒழுங்கமைப்பு ஆகியவை ரஷ்யாவின் ஆரம்பத் திட்டத்தை தோல்வியடையச் செய்தன.

அதன்பின் போரின் தன்மை மாறியது. வேகமான முன்னேற்றம் காணாமல், நீண்டகால தேய்மானப் போராக (War of Attrition) அது மாறியது. ஆயிரக்கணக்கான வீரர்கள் உயிரிழந்தனர். நகரங்கள் அழிந்தன. பொருளாதாரங்கள் பாதிக்கப்பட்டன. இந்த சூழலில், ஒவ்வொரு இராணுவ முடிவும் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமானதாக மாறியது.

## ஒலெக்சாண்டர் சிர்ஸ்கியின் பங்களிப்பு

சிர்ஸ்கி (Oleksandr Syrskyi) உக்ரைன் இராணுவத்தில் நீண்ட அனுபவம் கொண்ட அதிகாரி. ரஷ்யாவின் ஆரம்ப தாக்குதலின் போது கீவ் நகரை பாதுகாப்பதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். பின்னர் கிழக்கு முன்னணியில் நடைபெற்ற கடுமையான போர்களிலும் அவரது தலைமையிலான நடவடிக்கைகள் உக்ரைனுக்கு பல முக்கிய வெற்றிகளை அளித்தன. அவரது கட்டுப்பாட்டில் நடைபெற்ற கார்கிவ் (Kharkiv) எதிர்தாக்குதல் உலகம் முழுவதும் பாராட்டப்பட்டது. இதனால் அவர் திறமையான தளபதியாக மதிக்கப்பட்டார்.

ஆனால் போர் நீடித்தபோது நிலைமை மாறியது. ரஷ்யா தனது பாதுகாப்புக் கோட்டைகளை பலப்படுத்தியது. மில்லியன் கணக்கான கண்ணிவெடிகள், அகழிகள் மற்றும் பல அடுக்குப் பாதுகாப்பு அமைப்புகள் காரணமாக உக்ரைனின் முன்னேற்றம் மிகவும் மந்தமானது. ஒரு போரில் வெற்றியடைய முடியாத நிலை உருவானால், அரசியல் தலைவர்கள் பொதுவாக இரண்டு வழிகளில் செயல்படுவார்கள். ஒன்று, போர்த் திட்டத்தை மாற்றுவது. மற்றொன்று, அதனை நடைமுறைப்படுத்தும் தலைமைத்துவத்தை மாற்றுவது.

ஜெலன்ஸ்கி இரண்டாவது வழியைத் தேர்ந்தெடுத்ததாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். போரின் நான்காவது ஆண்டிலும் முன்னணி நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை. அதே நேரத்தில் ரஷ்யா தனது ஏவுகணை, டிரோன் மற்றும் வான்வழித் தாக்குதல்களை அதிகரித்தது. உக்ரைன் அதிகமான மனிதவள இழப்பைச் சந்தித்தது. கட்டாய இராணுவ ஆட்சேர்ப்பு குறித்து மக்களிடையே அதிருப்தி உருவானது. இத்தகைய சூழலில் புதிய சிந்தனையும் புதிய தலைமையும் தேவைப்படுகிறது என்ற முடிவுக்கு ஜெலன்ஸ்கி வந்திருக்கலாம்.

## பாதுகாப்பு அமைச்சில் மாற்றங்கள்

இது தனித்துவமான ஒரு நிகழ்வு அல்ல. கடந்த இரண்டு ஆண்டுகளில் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சகத்தில் பல முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயுதக் கொள்முதல் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை அதிகரிக்கப்பட்டது. அத்தோடு ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். பாதுகாப்புத் துறையை நவீனமயமாக்கும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன. இதன் தொடர்ச்சியாகவே இராணுவத் தலைமையிலும் மாற்றம் இடம் பெற்றதாகக் கருதப்படுகிறது.

தற்போது தொழில்நுட்பப் போராக மாறிய உக்ரைன் போர் காரணமாக பல ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார வளம் வீண்டிக்கப்பட்டு வருகிறது என்பதை மறுக்க முடியாது. இன்றைய போர் வெறும் டாங்கிகள் மற்றும் பீரங்கிகளால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. டிரோன்கள், செயற்கை நுண்ணறிவு, செயற்கைக்கோள் தகவல்கள், இணையத் தாக்குதல்கள், மின்னணுப் போர், துல்லிய ஏவுகணைகள், நீண்டதூரத் தாக்குதல் திறன் ஆகியவை போரின் வெற்றியை நிர்ணயிக்கின்றன.

உக்ரைன் உலகின் மிகப்பெரிய டிரோன் போர்க்களமாக மாறியுள்ளது. சிறிய வர்த்தக டிரோன்கள்கூட குண்டுகளை ஏந்திச் செல்லும் ஆயுதங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலைக்கு ஏற்ற தலைமை அவசியம் என்பதால் இராணுவ மறுசீரமைப்பு முன்னெடுக்கப்பட்டதாக பல பாதுகாப்பு நிபுணர்கள் கருதுகின்றனர்.

## மைகைலோ ட்ரபாட்டே முக்கியத்துவம்

புதிய உக்ரைனிய தளபதி மைகைலோ ட்ரபாட்டே (Major General Mykhailo Drapaty) உக்ரைனின் டிஜிட்டல் மாற்ற அமைச்சராக உலகளவில் அறியப்பட்டவர். போரின் ஆரம்ப நாட்களிலேயே உலக நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆதரவைப் பெறுவதில் அவர் முக்கிய பங்காற்றினார். SpaceX நிறுவனத்தின் Starlink சேவையை உக்ரைனுக்கு கொண்டு வருவதிலும், டிரோன் திட்டங்களை உருவாக்குவதிலும், இணைய பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது. எனவே அவர் எதிர்கால பாதுகாப்புத் திட்டங்களில் அதிக பொறுப்பைப் பெறக்கூடும் என்ற ஊகங்கள் எழுந்தன.

ஒரு ஜனாதிபதி தனது இராணுவத் தலைவரை மாற்றும்போது, அதற்குப் பின்னால் அரசியல் கணக்கும் இருக்கும். போர் நீடிக்கும்போது மக்களின் எதிர்பார்ப்புகள் மாறுகின்றன. உயிரிழப்புகள் அதிகரிக்கின்றன. பொருளாதார சுமைகள் அதிகரிக்கின்றன. மேலும் வெளிநாட்டு உதவிகள் குறையக்கூடும் என்ற அச்சம் உருவாகிறது.

இத்தகைய சூழலில் புதிய தலைமை என்பது அரசு இன்னும் செயல்படுகிறது; மாற்றத்திற்கு தயாராக உள்ளது என்ற அரசியல் செய்தியை மக்களுக்கும் கூட்டாளி நாடுகளுக்கும் அனுப்புகிறது.

(ஒரு போரில் வெற்றியடைய முடியாத நிலை உருவானால், அரசியல் தலைவர்கள் பொதுவாக இரண்டு வழிகளில் செயல்படுவார்கள். ஒன்று, போர்த் திட்டத்தை மாற்றுவது. மற்றொன்று, அதனை நடைமுறைப்படுத்தும் தலைமைத்துவத்தை மாற்றுவது. ஜெலன்ஸ்கியால் உக்ரைனின் இராணுவத் தலைமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த புதிய முடிவின் பின்னணியில் ஐரோப்பிய அரசியல், உள்நாட்டு இராணுவம் மற்றும் உலக அரசியலின் தாக்கங்கள் குறித்து பல்வேறு விவாதங்கள் உள்ளன. உக்ரைனில் போர் நீடித்தபோது நிலைமை மாறியது. ரஷ்யா தனது பாதுகாப்புக் கோட்டைகளை பலப்படுத்தியது. மில்லியன் கணக்கான கண்ணி வெடிகள், அகழிகள் மற்றும் பல அடுக்குப் பாதுகாப்பு அமைப்புகள் காரணமாக உக்ரைனின் முன்னேற்றம் மிகவும் மந்தமானது.

## மேற்குலக எதிர்பார்ப்புகள்

அமெரிக்கா, பிரித்தானியா, ஜெர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் உக்ரைனுக்கு பில்லியன் கணக்கான டாலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்கியுள்ளன. இந்த உதவிகள் திறமையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பது சந்தேகமே. அத்தோடு புதிய இராணுவத் திட்டங்கள் உருவாகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும்.

அத்துடன் மனிதவள மேலாண்மை சரியாக நடைபெறுகிறதா என்பதை அவர்கள் தொடர்ந்து கவனித்து வருகின்றனர். எனவே தலைமையிலான மாற்றம் மேற்கத்திய நாடுகளுக்கும் ஒரு முக்கியமான அரசியல் சைகையாகும்.

மறுபுறம், ரஷ்யா இந்த மாற்றத்தை தனது வெற்றியின் அடையாளமாகக் காட்ட முயற்சிக்கலாம். உக்ரைன் இராணுவ தலைமை நம்பிக்கையை இழந்துள்ளது என்ற பிரச்சாரத்தை ரஷ்ய ஊடகங்கள் முன்னிறுத்தக் கூடும். ஆனால், போர் வரலாற்றைப் பார்க்கும்போது, போரின் நடுவே தலைமை மாற்றம் பல நாடுகளில் இடம்பெற்றுள்ளது. இரண்டாம் உலகப் போரிலும் பல நாடுகள் தங்கள் தளபதிகளை மாற்றியுள்ளன. எனவே தலைமை மாற்றம் என்பது தோல்விக்கான சான்று என்று மட்டுமே கருத முடியாது.

இதேவேளை புதிய இராணுவத் தலைமை பல கடினமான சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். முதலாவதாக, டொன்பாஸ் முன்னணியை பாதுகாக்க வேண்டும்.

இரண்டாவதாக, ரஷ்யாவின் தொடர்ச்சியான ஏவுகணை மற்றும் டிரோன் தாக்குதல்களுக்கு எதிராக வான்பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். மூன்றாவதாக, புதிய வீரர்களை பயிற்றுவித்து முன்னணிக்கு அனுப்ப வேண்டும். நான்காவதாக, மேற்கத்திய ஆயுதங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும். ஐந்தாவதாக, உள்நாட்டு பாதுகாப்புத் தொழிற்துறையை வளர்த்தெடுக்க வேண்டும். ஆறாவதாக, நீண்டகால போரில் மக்களின் மனஉறுதியை நிலைநிறுத்த வேண்டும். இந்த அனைத்து இலக்குகளும் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்பட வேண்டியவை.

## போரின் அடுத்த கட்டம்

வரும் காலங்களில் ரஷ்யா-உக்ரைன் போர் மேலும் தொழில்நுட்ப மயமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு வழிநடத்தும் தாக்குதல்கள், தானியங்கி டிரோன் கூட்டங்கள் (Drone Swarms), இணையத் தாக்குதல்கள் மற்றும் மின்னணுப் போர் ஆகியவை அதிகரிக்கும். அதேநேரம், இரு தரப்பும் உள்நாட்டு ஆயுத உற்பத்தியை அதிகரித்து வருகின்றன. எனவே எதிர்கால வெற்றி அதிகமான வீரர்களால் மட்டுமல்ல, அதிகமான தொழில்நுட்ப திறனால் தீர்மானிக்கப்படும்.

உக்ரைன் இராணுவத் தலைமை மாற்றம் என்பது ஒரு சாதாரண நிர்வாக மாற்றம் அல்ல; நீண்டகால போரின் சவால்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்ட மூலோபாய மறுசீரமைப்பாகும். இதன் மூலம் ஜெலன்ஸ்கி, போரை புதிய அணுகுமுறையுடன் முன்னெடுக்க விரும்புவதாகவும், தொழில்நுட்பம் சார்ந்த நவீன இராணுவ அமைப்பை உருவாக்க முயலுவதாகவும் ஒரு தெளிவான செய்தியை வழங்குகிறார்.

அதேவேளை, இந்த மாற்றம் மட்டுமே போரின் நிலையை உடனடியாக மாற்றிவிடும் என்று கருத முடியாது. போரின் முடிவை நிர்ணயிப்பவை இராணுவத் தலைமையுடன் மட்டுமல்ல; மனிதவளம், ஆயுத உற்பத்தி, பொருளாதாரத் திறன், சர்வதேச ஆதரவு, மக்களின் மனஉறுதி மற்றும் அரசியல் நிலைத்தன்மை ஆகிய பல காரணிகளின் ஒருங்கிணைப்பாகும்.

எனவே, இந்த தலைமை மாற்றம் உக்ரைனுக்கு ஒரு புதிய வாய்ப்பையும் அதே சமயம் ஒரு பெரிய பொறுப்பையும் உருவாக்குகிறது. புதிய தலைமை போர்க்களத்தில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தால், அது உக்ரைனின் பாதுகாப்புத் திறனை வலுப்படுத்தும். இல்லையெனில், நீடித்து வரும் இந்தப் போர் மேலும் சிக்கலான, செலவுமிக்க மற்றும் நீண்டகால மோதலாக உலக அரசியலை தொடர்ந்து பாதித்துக் கொண்டே இருக்கும். இந்த நிகழ்வு, ஒரு நாட்டின் இராணுவத் தலைமையில் ஏற்படும் மாற்றங்கள் வெறும் நிர்வாகச் செயல்கள் அல்ல; அவை சர்வதேச அரசியல், கூட்டணி உறவுகள் மற்றும் உலக பாதுகாப்பு அமைப்புகளின் எதிர்காலத்தையே பாதிக்கக்கூடிய முக்கிய மூலோபாய முடிவுகள் என்பதை மீண்டும் ஒருமுறை நினைவூட்டுகிறது.

# TGTE Condemns Deployment of Sri Lankan Security Forces to Haiti

## Calls on the United Nations to Apply Its Own Human Rights Due Diligence Policy

**July 15th, 2026**

The Transnational Government of Tamil Eelam (TGTE) expresses its profound concern and unequivocal opposition to the deployment of 1,132 Sri Lankan military and police personnel to Haiti as part of the UN-authorized Multinational Security Support (MSS) mission.

Amnesty International has rightly raised concerns regarding unresolved allegations of sexual exploitation and abuse committed by Sri Lankan personnel during previous deployments to Haiti. In this context, the TGTE further notes the extensive evidence of sexual violence committed by the Sri Lankan Security Forces during the final stages of the armed conflict between the Sri Lankan State and the Liberation Tigers of Tamil Eelam (LTTE), including sexual abuse and the operation of detention sites where women were subjected to sexual slavery. The TGTE also draws attention to the continuing use of torture and conflict-related sexual violence by Sri Lankan security forces in the years following the end of the armed conflict. These abuses have been documented by the United Nations High Commissioner for Human Rights, Volker Türk, in his report, Sri Lanka: Report on Conflict-Related Sexual Violence, dated 13 January 2026. The TGTE believes that the concerns surrounding this deployment extend well beyond the documented pattern of institutionalized sexual exploitation and abuse.

For decades, victims, survivors, and international human rights organizations have documented war crimes, crimes against humanity, and genocide committed against the Tamil people during and after the armed conflict in Sri Lanka. Yet, despite repeated calls from the United Nations Human Rights Council, UN experts, and international human rights organizations, accountability has remained absent.

The TGTE also notes the concerns expressed in the Joint Statement of 25 June 2026, signed by leading international human rights and victims' organizations, including the International Truth & Justice Project (ITJP), the Sri Lanka Campaign for Peace & Justice (SLC), PEARL, the Australian Centre for International Justice (ACIJ), the International Centre for the Prevention and Prosecution of Genocide (ICPPG), and other civil society organizations. The statement calls forthe immediate suspension of the deployment until an independent and credible human rights vetting mechanism is established, with meaningful participation by the Office of the United Nations High Commissioner for Human Rights (OHCHR). It warns that proceeding without such safeguards risks exposing Haitian civilians to foreseeable harm while undermining the United Nations' own human rights commitments.

The deployment of Sri Lankan security forces to an international mission before credible accountability has been achieved sends a deeply troubling message. Rather than advancing international justice, it risks rehabilitating the international image of security forces accused of committing widespread and systematic international crimes. The TGTE also recalls the precedent established following Nepal's civil war. When it became evident that the Nepalese Army was obstructing accountability for serious violations of international humanitarian law, the then UN High Commissioner for Human Rights, Navi Pillay, recommended that the United Nations refrain from accepting additional Nepalese troops for peacekeeping operations until the Government of Nepal established a credible accountability mechanism.

By accepting this deployment without first ensuring meaningful accountability, the international community risks legitimizing Sri Lanka's longstanding culture of impunity. Such action undermines the confidence of victims and survivors who have spent years seeking justice and weakens both the credibility and integrity of the United Nations.

The TGTE further calls upon the United States, the largest financial contributor to UN peacekeeping operations, to urge the United Nations to act consistently with the principles embodied in the U.S. "Leahy Law", which prohibits U.S. assistance to foreign security force units where there is credible information that they have committed gross violations of human rights.

The TGTE calls upon the United Nations to rigorously apply its Human Rights Due Diligence Policy (HRDDP) in relation to Sri Lanka's participation in international peace operations. The TGTE further calls upon the United Nations to publicly urge Sri Lanka to ratify the Rome Statute of the International Criminal Court and to accept the Court's jurisdiction retroactively from 1 July 2002, when the Rome Statute entered into force.

The people of Haiti deserve security forces that command public confidence and embody the principles of accountability, professionalism, and respect for human rights. Rather than contributing to the "bluewashing" of Sri Lankan security forces that continue to enjoy impunity for international crimes, the United Nations should seek troop and police contributions from countries whose personnel meet the highest standards of accountability and respect for international law.

Visuvanathan Rudrakumaran
Prime Minister
Transnational Government of Tamil Eelam




"நான் மீண்டும் பிறப்பேன்! மீண்டும் இந்த மண்ணில் தமிழுக்காகவே பிறப்பேன்! எந்த இலட்சியத்துக்காக இந்தப் பிறவியில் போராடி வந்தேனோ அந்த இலட்சியங்களை ஈடேற்றுவதற்காக அடுத்த பிறவியிலும் விடுதலைக்குப் போரிடுவேன்!"
பொன். சிவகுமாரன் –

**நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.com**

# வெலிக்கடை படுகொலையும் கறுப்பு யூலை இனவாதமும்

– நவீனன்–

21.07.2026

கறுப்பு யூலை “இனக்கலவரம்” என்ற போர்வைக்குள் நடைபெற்றதே தமிழர் மீதான “இனப்படுகொலை” நிகழ்வாகும். ஆனால் கறுப்பு யூலை படுகொலைகள் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட முறையும் அளவும் அதற்கு அரச தரப்பில் இருந்த ஆதரவும் அதனை வெறும் இன வன்முறையாகக் கருத முடியாது.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை செயற்பாடாகவே ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

நாற்பத்தொரு ஆண்டுகளை கடக்கும் கறுப்பு யூலையும், வெலிக்கடை சிறைப் படுகொலையின் சூத்திரதாரிகள் இதுவரை நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த பாரிய இனப்படுகொலையான “கறுப்பு யூலை”யின் கோர நிகழ்வுகள் தமிழரின் வரலாறுகளிலும், மனங்களிலும் ஒருபோதும் நீங்காத வடுக்களை பதித்துள்ளது.

சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுக்கிடையில் இனரீதியாக ஏற்பட்டிருந்த பிளவை சீர்செய்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைககளும் எந்த ஒரு அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும். நாற்பத்தொரு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு யூலைப் படுகொலை ஓர் இனத்திற்கு எதிரான அழிப்பு நடவடிக்ககையாகவே தமிழ் மக்களால் கருதப்படுகிறது.

தமிழ்மக்கள் மேல் கட்டவிழ்த்த இனப்படுகொலை நீதி மறுக்கப்பட்டு, சர்வதேசத்தால் மறக்கப்பட்டாலும் அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை போராடும் இனங்கள் தெளிவாக கற்று அறிய வேண்டும்.

## 1983, யூலை 23:

1983, யூலை 24, 25 காலப் பகுதியில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சிங்கள படைத்துறையால் 100 பேர் வரையான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுடன் ஆரம்பமாகி, வெலிக்கடை சிறைப்படுகொலை, பின்னர் தென்னிலங்கை இனப்படுகொலையாக தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன. 1983 கருப்பு யூலையில் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்தமை மானுட வரலாற்றில் துன்பவியல் நிகழ்வாகும்.

இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட படுகொலை செயற்பாடாகவே நம்பப்படுகிறது. கறுப்பு யூலை நிகழ்வுகளே இலங்கை இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.

## இனப்படுகொலை திட்டமிடப்பட்டதா?

மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சை போராட்டம் தோற்றுப் போக தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கறுப்பு யூலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள் என்பதும் உண்மையே. ஏற்கனவே திட்டமிட்டப்பட்டிருந்தபடி கொழும்பிலும் ஏனைய சிங்களப் பகுதிகளிலும் தமிழ் மக்கள் மீதான வன்முறைகளை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசு கட்டவிழ்த்துவிட்டது. உண்மையில் இக்கோர கறுப்பு யூலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராட தூண்டியது என்றும் கூறலாம்.

ஈழத் தமிழினம் டீ.எஸ். சேனநாயக்கா போன்ற சிங்களப் பேரினவாதத் தலைவர்களால் காலத்துக்குக் காலம் பொருளாதாரரீதியாகவும், நில உரிமை ரீதியாகவும், மொழி ரீதியாகவும் நயவஞ்சகமாகவும் நேரடியாகவும் நசுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அவற்றுக்கெதிராக அவ்வப்போது சில அரசியல் தலைவர்களது குரல் ஒலிப்பதும், சில அற்பசொற்ப சலுகைகளுக்காக அடங்கிப் போவதும் நாம் கண்ட வரலாறாகும்.

## தரப்படுத்தலும் மாணவர் எழுச்சியும்:

தமிழினத்தை தன்னிலைபற்றிச் சிந்தித்து, தனக்கென ஒரு நாடு தேவை என்ற தீர்வைக் கொடுத்தது என்னவோ, சிறீமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரது ஆட்சிக் காலத்தில் அமுல்படுத்தப்பட்ட ‘தரப்படுத்தல்” என்ற தமிழ் மாணவரது கல்வியை நசுக்கும் செயல்தான் என்பதை எவராலுமே மறுக்கமுடியாது.






தரப்படுத்தல் சிவகுமாரன் போன்ற மாணவர்களை அகிம்சை வழியிலிருந்து விலகி ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியது. அரச பயங்கரவாதச் சுரண்டல்களுக்குப் பரிகாரம் ஆயுதப் போராட்டமே என்ற எண்ணம் பல இளைஞருள்ளும் அக்காலத்தில் எழுந்தது.

அரச படை இயந்திரங்களை எதிர்த்துப் போரிட முடியுமா என்ற கேள்வியே ஈழத் தமிழினத்தால், குறிப்பாக தமிழின அரசியல் மேடைப்பேச்சுத் தலைவர்களால் நினைத்துப் பாராததொன்றாக இருந்தது. ஈழத்தமிழனின் கல்வியில் திணிக்கப்பட்ட தரப்படுத்தலானது இளைஞர்களை ஆயுதங்கள் பக்கமாகச் சிந்திக்கத் தூண்டியதும் வரலாற்று உண்மையாகும்.

திருநெல்வேலி தாக்குதலும் அதைத் தொடர்ந்து எழுந்த அரச பயங்கரவாத ஆதரவுடன் இடம்பெற்ற இனக்கலவரமும் ஈழப் போராட்ட அமைப்புகளின் பாரிய வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

## வெலிக்கடை சிறைப் படுகொலை:

யூலை 1983 இல் இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கெதிராக இடம்பெற்ற கறுப்பு யூலை வன்முறை நிகழ்வுகளின் போது இடம்பெற்ற உச்சக்கட்ட நிகழ்வே வெலிக்கடை சிறைப் படுகொலையாகும். இதன் போது மொத்தம் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பின் அதிஉயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் சக சிங்களக் கைதிகளால் குத்தியும் வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் எவரும் இன்று வரையில் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை.

வெலிக்கடை சிறைப் படுகொலை இரண்டாம் தடவையாக யூலை 28ஆம் திகதி மீண்டும் இடம்பெற்றது. இதில் 18 பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிறைச்சாலை அதிகாரிகளே அறைக்கதவுகளின் திறப்புகளை சிங்களக் கைதிகளுக்கு கொடுத்ததாக தெரிவித்தனர். ஆனால் சிறை அதிகாரிகளின் கூற்றுப்படி, சிங்களக் கைதிகள் தம்மிடம் இருந்து திறப்புகளைக் களவெடுத்ததாகத் தெரிவித்தனர்.

இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தின்படி சிங்கள இனவெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலையின் முன் கொல்லப்பட்ட குட்டிமணியின் உடலை நிர்வாணமாக்கிப் போட்டார்கள். இவ்வாறாக ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு ஆணுறுப்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது.

காட்டுமிராண்டித் தனமான கூச்சல்களுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு, நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர். சிங்கள இன வெறியர்கள், தமிழ் இளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், செங்குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர். இப்படுகொலைகள் நடைபெற்ற தினத்திற்கு முதல் நாள் புத்தர்களின் புனிதநாளான போயா தினமாகும். போயா தினத்தில் உபவாசம் இருந்து “சில்” அனுஷ்டித்தவர்கள் மறுநாள் இப்படுகொலையில் சம்பந்தப்பட்டிருந்தனர் என இப்படுகொலை நிகழ்வில் தப்பிப் பிழைத்தவர்களின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் பேசும் கட்சிகளின் கூட்டு?

15.07.2026

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே இன்றுவரையிலும் ஒரு சமூக உடன்படிக்கை எழுதப்படவில்லை. கதிர்காமத்துக்கு பாதயாத்திரை போன சுப்பிரமணியனின் விடயத்தில் சமூக ஊடக வலைத்தளச் சூழலில் நிகழ்ந்த வெறுப்பு மிகுந்த வாதப்பிரதிவாதங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது, இரண்டு சமூகங்களும் எந்த அளவுக்குப் பிளவுண்டிருக்கின்றன என்பதை உணர முடிந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது சமூகங்களுக்கிடையிலான அரசியல் உடன்படிக்கையில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதனை ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை அதன் தீர்வு முன்மொழிவில் கூறியிருக்கிறது. தமிழ் சட்டத்தரணிகள் சங்கமும் அதனை ஏற்றுக் கொள்கிறது. தமிழ்த் தேசிய பெரு மன்றும் ஏற்றுக்கொள்கிறது. தமிழ் தேசிய பேரவையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் இங்கே பிரச்சனை, அவ்வாறான ஒரு சமூக உடன்படிக்கைக்கான உரையாடல்கள் இதுவரை தொடங்கப்படவில்லை என்பதுதான். ஆறு கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய அந்த இடையூடாட்டத் தளம் அவ்வாறான உரையாடல்களுக்குரிய ஒரு தளமாக விரிவடையுமா? தமிழ்த் தேசியப் பேரவையைத் தவிர்த்துவிட்டு அதைச் செய்யப் போகிறார்களா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவை தமிழ்நாட்டுக்கு இரண்டாவது தடவையாக பயணத்தை மேற்கொண்டு திரும்பியிருக்கும் ஒரு பின்னணியில், தமிழ் சட்டத்தரணிகள் அமைப்பின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் அடுத்தடுத்த கட்டங்களுக்கு வேகமாக முன்னெடுக்கப்படாத ஓர் அரசியல் சூழலில்,

இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுக்கு உரிய முன்மொழிவை வரையும் நோக்கத்தோடு புலம்பெயர்ந்த தமிழ் தரப்புக்களும் தாயகத்தில் உள்ள சிவில் அமைப்புகள் சிலவும் இணைந்து "ஈழத்தமிழர்கள் உரிமைகள் பெரு மன்று" என்று ஓர் அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பானது திருக்கோணமலையில் ஒரு பிரகடனத்தையும் வெளியிட்டிருக்கும் ஒரு பின்னணியில்,



தமிழ்த் தேசியப் பேரவையானது ஒரு தொகுதி சிவில் சமூகங்களோடு இணைந்து யாப்புருவாக்கத்திற்கான ஒரு நிர்ணய சபையை உருவாக்கியிருக்கும் ஒரு பின்னணியில்,

தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையே ஒருங்கிணைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் அவ்வப்போது நடந்து கொண்டிருக்கும் ஒரு பின்னணியில்,

புலம்பயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர்களின் பின் பலத்தோடு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50ஆவது ஆண்டை முன்வைத்து அந்தத் தீர்மானத்தின் இலக்குகளை நோக்கி தமிழ் அரசியலை முன்னெடுத்தும் நோக்கத்தோடு ஒரு மாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்திருக்கும் ஒரு பின்னணியில்,

கடந்த ஞாயிற்றுக்கிழமை, கொழும்பில், தமிழ் பேசும் சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு கட்சிகள் இணைந்து ஓர் ஒருங்கிணைப்பு முயற்சியை அறிவித்துள்ளன.

அதுதொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. ஈழத் தமிழர்கள் மத்தியில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளும் மலையகக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் இணைந்து இணக்கம் ஒன்றுக்கு வந்துள்ளன.

இதுபோன்ற ஓர் இணக்கத்துக்கு வர வேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவராகிய மனோ கணேசன் பலகாலமாக கூறி வருகிறார். தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு இடையே இணைந்து செயல்படலாம், அல்லது தமிழ் பேசும் சமூகங்களைப் பிரதிபலிக்கும் கட்சிகள் தங்களுக்கு இடையில் ஏதோ ஓர் இணக்கத்துக்கு வரலாம் போன்ற கோரிக்கைகளை அவர் தொடர்ந்து முன்வைத்து வருகிறார். எனினும் அவ்வாறான இணக்கத்தை, ஒரு கூட்டை உருவாக்க முடியவில்லை. இப்பொழுதும் இந்தக் கூட்டில் அவர் அங்கம் வகிக்கிறார். அதேசமயம் அது தொடர்பாக அவர் தெரிவித்த ஒரு கருத்து மிகவும் தெளிவானதும் இந்த இணக்கத்தின் சாராம்சத்தை வெளியே கொண்டு வருவதுமாகும். மனோ கணேசன் பின்வருமாறு கூறினார் "இது மேடைதான் அரசியல் தேர்தல் கூட்டணி அல்ல"

இப்படி ஓர் இணக்கம் ஐந்தாண்டுகளுக்கு முன் 2021ஆம் ஆண்டும் அதன் பலவீனமான நிலையில் கருக்கட்டியது. அப்பொழுது அந்த இணக்க முயற்சிகளை முன்னெடுத்தது டெலோ அமைப்பு. யாழ்ப்பாணம், திண்ணை விருந்தினர் விடுதியில் நடந்த சந்திப்பின்போது தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு அப்பால் சென்று அந்த நிலைப்பாட்டைக் கொண்டிராத தமிழ் பேசும் சமூகங்களை பிரதிபலிக்கின்ற கட்சிகளையும் இணைத்து ஒரு கூட்டை உருவாக்குவதற்கு திண்ணை சந்திப்பில் முயற்சிக்கப்பட்டது. ஆனால் அன்றைக்கு அந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ளவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கலந்து கொள்ளவில்லை. அந்தச் சந்திப்புக்களின் விளைவாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் முக்கியமானது 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்துவது ஆகும். அந்தச் சந்திப்பு அடுத்தடுத்த கட்டங்களுக்கு வளர்ந்து செல்லவில்லை. அதற்குப் பிரதான காரணங்களில் ஒன்று தமிழரசுக் கட்சி அதில் ஒத்துழைக்கவில்லை என்பது.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை 6 கட்சிகள் இணைந்து ஒரு பொதுத் தளத்தில் வேலை செய்வது என்று இணங்கி இருப்பதாக தெரிகிறது. 50 ஆண்டுகளுக்கு முன்பு, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய காலகட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னெடுத்த ஒருங்கிணைப்பு முயற்சிகளை இது நினைவுபடுத்துகிறது.

பத்திரிகையாளர்களுக்கு ஆறு கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்த தகவல்களைத் தொகுத்துப் பார்த்தால், மூன்று முக்கிய விடயங்களின் மீது அவர்கள் கவனத்தைக் குவிப்பார்கள் என்று தெரிகிறது. முதலாவது, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் ஒரு புதிய யாப்பைக் கொண்டு வந்தால் அதை எப்படி இணைந்து எதிர்கொள்வது என்பது. இரண்டாவது, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது. மூன்றாவது, காணிப் பிரச்சினையும் உட்பட, தமிழ் பேசும் சமூகங்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகளில் பொதுவான ஒரு நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய பொதுவான ஓர் இடையூடாட்டத் தளமாக அதனைப் பயன்படுத்துவது.

தமிழ் பேசும் கட்சிகள் தங்களுக்கிடையே பொதுவாக உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஏதோ ஓர் இணக்கத்துக்கு வர வேண்டியது அவசியம். இலங்கைத் தீவுக்குள் பிரிவினை அல்லாத ஏதாவது ஒரு தீர்வை தமிழ் மக்கள் நாடுவார்களாக இருந்தால் அது உச்சபட்ச சமஷ்டியாக இருந்தாலும் கூட, தமிழ் பேசும் சமூகங்களுக்கு இடையில் உரையாடல் வேண்டும். தமிழ் பேசும் சமூகங்கள் தங்களுக்கு இடையே ஏதோ ஒரு பொது உடன்படிக்கைக்கு வரவும் வேண்டும். அந்த அடிப்படையில் இந்த முயற்சிகளை எடுத்த எடுப்பில் நிராகரிக்க தேவையில்லை.

இந்த முயற்சியில் தமிழ்த் தேசிய பேரவைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதற்குரிய விளக்கத்தை இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளை முன்னெடுத்தவர்கள் தர வேண்டும்.

அதேசமயம், இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட காலப் பின்னணி தொடர்பில் இக்கட்டுரையின் முதல் பந்தியில் கூறப்பட்டதை சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். அந்த முதலாவது பந்தி மிகவும் நீண்டது. அதைத் தொடர்ச்சியாக வாசிக்கும் போது, பகுத்தறிவுள்ளவருக்கு ஒருவிடயம் இயல்பாகவே பொறி தட்டும். அது என்னவென்றால், ஒரு புதிய யாப்பை நோக்கியும் இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கியும் கட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடும் கட்சிகளையும் சிவில் சமூகங்களையும் ஒருங்கிணைத்தும் எத்தனை முயற்சிகள் சமகாலத்தில் முன்னெடுக்கப்படுகின்றன? ஒரே நோக்கத்தை கொண்ட வெவ்வேறு முயற்சிகள். அத்தனை முயற்சிகளும் ஒரு சிறிய மக்கள் கூட்டத்துக்குள் இடம் பெறுபவை. இந்த எல்லா முயற்சிகளின் பின்னணியில்தான் இப்புதிய முயற்சியும் தொடக்கப்பட்டிருக்கிறது. ஆயின் இப்புதிய முயற்சியானது ஏற்கனவே தொடங்கப்பட்ட முயற்சிகளுக்கு ஒத்துழைக்கும் நோக்கிலானதா? இல்லையா?

சிறிய மக்கள் கூட்டமாகிய தமிழ் மக்கள் மத்தியில் எத்தனை ஒருங்கிணைப்பு முயற்சிகள்? எத்தனை அரசியல் தளங்கள்? எத்தனை மேடைகள்? எத்தனை முன்மொழிவு முயற்சிகள்? எத்தனை பிரகடனங்கள்? எத்தனை தீர்மானங்கள்? எத்தனை உள்ளோட்டங்கள்? தனியோட்டங்கள்?

கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டிருக்கும் ஆறு கட்சிகளின் கூட்டு இப்படி பத்தோடு பதினொன்றாக மாறுமா? அல்லது தமிழ் பேசும் சமூகங்களுக்கு இடையே பொதுவான விடயங்களை பேசி தீர்க்கும் ஒரு பயன் பொருத்தமான களமாக மாறுமா?

குறிப்பாக இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகள் தொடர்பாக கட்சித் தலைவர்கள் உத்தியோகபூர்வமாக தெரிவித்த தகவல்களின்படி ஒரு புதிய யாப்பை நோக்கி மேற்படி கட்சிகள் இணைந்து செயல்படும் விடயம் இதுவரை செல்லும்?

ஏற்கனவே 2015ல் இருந்து 2018 வரையிலும் அவ்வாறு இக்கட்சிகள் இணைந்து செயல்பட்டன. அதன் விளைவாக ஓர் இடைக்கால வரைவும் உருவாக்கப்பட்டது. அது ஒற்றையாட்சித் தீர்வு என்றும், அதை அமுல்படுத்துவதுதான் சுமந்திரனின் உள்நோக்கம் என்றும் கஜேந்திரக்குமார் குற்றச்சாட்டுகிறார். அவ்வாறான ஒற்றையாட்சித் தீர்வை எதிர்ப்பதற்கான பிராந்தியச் சூழலை ஏற்படுத்தும் நோக்கத்தோடுதான் தமிழ்த் தேசியப் பேரவை இரண்டு தடவைகள் தமிழ்நாட்டுக்குச் சென்றிருக்கிறது.

அண்மை மாதங்களாக கட்சிகளும் பொதுமக்கள் அமைப்புகளும் முன்வைக்கும் பிரகடனங்கள், தீர்மானங்களில் ஒரு விடயம் பொதுவானதாகக் காணப்படுகிறது. அதுதான் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமூக உடன்படிக்கை ஆகும். அதாவது இனங்களுக்கு இடையிலான ஒரு சமாதான உடன்படிக்கை.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையே இன்றுவரையிலும் ஒரு சமூக உடன்படிக்கை எழுதப்படவில்லை. கதிர்காமத்துக்கு பாதயாத்திரை போன சுப்பிரமணியனின் விடயத்தில் சமூக ஊடக வலைத்தளச் சூழலில் நிகழ்ந்த வெறுப்பு மிகுந்த வாதப்பிரதிவாதங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது, இரண்டு சமூகங்களும் எந்த அளவுக்குப் பிளவுண்டிருக்கின்றன என்பதை உணர முடிந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது சமூகங்களுக்கிடையிலான அரசியல் உடன்படிக்கையில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதனை ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை அதன் தீர்வு முன்மொழிவில் கூறியிருக்கிறது. தமிழ் சட்டத்தரணிகள் சங்கமும் அதனை ஏற்றுக் கொள்கிறது. தமிழ்த் தேசிய பெரு மன்றும் ஏற்றுக்கொள்கிறது. தமிழ் தேசிய பேரவையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் இங்கே பிரச்சனை, அவ்வாறான ஒரு சமூக உடன்படிக்கைக்கான உரையாடல்கள் இதுவரை தொடங்கப்படவில்லை என்பதுதான். ஆறு கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய அந்த இடையூடாட்டத் தளம் அவ்வாறான உரையாடல்களுக்குரிய ஒரு தளமாக விரிவடையுமா? தமிழ்த் தேசியப் பேரவையைத் தவிர்த்துவிட்டு அதைச் செய்யப் போகிறார்களா?

நன்றி: நிலாந்தன்

# பூட்டினுக்கு அதிகரிக்கும் அணு ஆயுத அழுத்தம்!
# உலகப் போராக மாறுமா உக்ரைன் போர்?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.07.2026

உக்ரைன் போர் இன்று ஒரு பிராந்திய மோதலைத் தாண்டி, 21ஆம் நூற்றாண்டின் உலக அதிகார அமைப்பை மறு வடிவமைக்கும் முக்கியமான புவிசார் அரசியல் சவாலாக மாறியுள்ளது. இந்த நெருக்கடி எவ்வாறு முடிவடையும் என்பது ரஷ்யா அல்லது உக்ரைன் மட்டுமல்ல, உலக நாடுகள் அனைத்தினதும் அரசியல், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு எதிர் காலத்தையும் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக இருக்கும்.



## அணுஆயுத அச்சுறுத்தல்

இந்த நிலையில், ரஷ்யாவின் தேசியவாத வட்டாரங்கள் மற்றும் சில பாதுகாப்பு மூலோபாயவாதிகள், உக்ரைனில் வழக்கமான ஆயுதங்களால் வெற்றிபெறுவது கடினமாகிவிட்டதால், அணு ஆயுத அச்சுறுத்தலை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர். குறிப்பாக ரஷ்ய இராணுவ வலைப்பதிவாளர் யூரி பரஞ்சிக் (Yuri Baranchik) மற்றும் அரசியல் ஆய்வாளர் செர்ஜி கரகானோவ் (Sergey Karaganov) போன்றோர் வெளியிட்ட கருத்துகள், உலகளவில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன.

இந்தக் கருத்துக்கள் ரஷ்ய அரசின் அதிகாரப்பூர்வ கொள்கையாகக் கருதப்பட முடியாது. இருப்பினும், அவை ரஷ்ய தேசியவாத சிந்தனையின் ஒரு பகுதியை பிரதிபலிப்பதால், அவற்றை உலக நாடுகள் கவனமாகக் கண்காணித்து வருகின்றன. பரஞ்சிக்கின் வாதத்தின் மையக் கருத்து என்னவெனில், ரஷ்யா நீண்டகால சோர்வுப் போரில் சிக்கிக்கொண்டால், அதன் மனித வளமும் பொருளாதாரமும் கடுமையாக பாதிக்கப்படும் என்பதாகும்.

அதனால், எதிரியின் மன உறுதியை உடைக்கும் வகையில் தந்திரோபாய அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும் விருப்பத்தையும் ரஷ்யா திறந்தவையாக வைத்திருக்க வேண்டும் என அவர் வலியுறுத்துகிறார். மேலும், ஒரு குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கையில் ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்கள் உயிரிழக்கக்கூடிய சூழ்நிலை உருவானால், வழக்கமான தாக்குதல்களுக்கு பதிலாக தந்திரோபாய அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறைந்த தீமையாக இருக்கும் என்றும் அவர் வாதிடுகிறார். இந்த அணுகுமுறை சர்வதேச சட்டம், மனிதாபிமானக் கொள்கைகள் மற்றும் அணு தடுப்பு (Nuclear Deterrence) என்ற பல தசாப்தங்களாக நிலவி வரும் பாதுகாப்பு சமநிலைக்கு முற்றிலும் முரணானதாகக் கருதப்படுகிறது.

இதனுடன் தொடர்புடைய மற்றொரு முக்கியமான விவாதம், ரஷ்ய அரசின் மொழிநடை மாற்றமாகும். நீண்ட காலமாக சிறப்பு இராணுவ நடவடிக்கை என்று அழைக்கப்பட்ட இந்த மோதலை, சமீபகாலங்களில் கிரெம்ளின் அதிகாரிகள் சிலர் வெளிப்படையாக போர் என்று குறிப்பிடத் தொடங்கியுள்ளனர். இது சட்ட ரீதியான கொள்கை மாற்றமாக இல்லாவிட்டாலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலையின் தீவிரத்தை பிரதிபலிக்கும் ஒரு அறிகுறியாக பலரும் பார்க்கின்றனர்.

ரஷ்யாவின் பார்வையில், இந்தப் போர் உக்ரைனுடனான மோதலாக மட்டுமல்ல, அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகள் வழங்கும் உளவுத்துறை, செயற்கைக்கோள் தகவல், நவீன ஆயுதங்கள் மற்றும் நிதி ஆதரவுகளால் முன்னெடுக்கப்படும் மறைமுகப் போருமாகும். மேற்கத்திய நாடுகள் நேரடியாக போர்க்களத்தில் இல்லாவிட்டாலும், அவற்றின் ஆதரவு உக்ரைனின் இராணுவ திறனை அதிகரித்துள்ளது என்பது ரஷ்யாவின் நீண்டகால குற்றச்சாட்டு.

## ரஷ்யாவின் சவால்கள்

இந்நிலையில், ரஷ்யா சந்தித்துள்ள சவால்களும் இந்த விவாதத்தை தீவிரப்படுத்தியுள்ளன. உக்ரைனின் நீண்ட தூர ட்ரோன் தாக்குதல்கள், ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், கருங்கடல் பகுதியில் ஏற்பட்ட இராணுவ அழுத்தங்கள் ஆகியவை ரஷ்ய பாதுகாப்பு வட்டாரங்களில் கவலையை ஏற்படுத்தியுள்ளன.



**ரஷ்யாவின் தேசியவாத வட்டாரங்கள் மற்றும் சில பாதுகாப்பு மூலோபாயவாதிகள், உக்ரைனில் வழக்கமான ஆயுதங்களால் வெற்றி பெறுவது கடினமாகி விட்டதால், அணு ஆயுத அச்சுறுத்தலை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கி-யுள்ளனர். மேலும் ரஷ்ய அரசின் சிறப்பு இராணுவ நடவடிக்கை என்று அழைக்கப்பட்ட உக்ரைன் மோதலை, சமீபகாலங்களில் கிரெம்ளின் அதிகாரிகள் சிலர் வெளிப்படையாக போர் என்று குறிப்பிடத் தொடங்கியுள்ளனர். இது சட்ட ரீதியான கொள்கை மாற்றமாக இல்லாவிட்டாலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலையின் தீவிரத்தை பிரதிபலிக்கும் ஒரு அறிகுறியாக பலரும் பார்க்கின்றனர்.**

சில மேற்கத்திய மதிப்பீடுகளின்படி, போரின் தொடக்கத்திலிருந்து ரஷ்யா மிகப் பெரிய மனிதவள இழப்புகளை சந்தித்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் உயிரிழப்புகளின் துல்லியமான எண்ணிக்கையை சுயாதீனமாக உறுதிப்படுத்துவது மிகவும் கடினமானதாகவே உள்ளது. போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் வெளியிடும் எண்ணிக்கைகள் ஒன்றுக்கொன்று மாறுபடுவதால், இவ்வாறான மதிப்பீடுகளை எச்சரிக்கையுடன் அணுகுவது அவசியம்.

செர்ஜி கரகானோவ் போன்ற மூலோபாயவாதிகள் முன்வைக்கும் கருத்துகள் இன்னும் கடுமையானவை. அவர்களின் பார்வையில், மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவின் அணு அச்சுறுத்தலை முழுமையாக நம்பவில்லை. எனவே, அந்த நம்பிக்கையை மீண்டும் உருவாக்குவதற்காக மிகவும் கடுமையான எச்சரிக்கைகள் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட அணு நடவடிக்கைகள் கூட பரிசீலிக்கப்படலாம் என்று அவர்கள் வாதிடுகின்றனர். இருப்பினும், இவை ரஷ்ய அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் அல்ல என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

அணு ஆயுதங்கள் தொடர்பான உலக அரசியலில் மிக முக்கியமான கோட்பாடு “Mutually Assured Destruction (MAD)” எனப்படும் பரஸ்பர உறுதியான அழிவு கொள்கையாகும். அதாவது, ஒரு அணு சக்தி மற்றொரு அணு சக்தியைத் தாக்கினால், இரு தரப்பும் பேரழிவைச் சந்திக்கும். இந்தக் கொள்கையே கடந்த பல தசாப்தங்களாக உலகளாவிய அணுப் போரைக் கட்டுப்படுத்திய முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இதனால், பல பாதுகாப்பு நிபுணர்கள் ஒரு முழுமையான அணு ஆயுதப் போர் நடைபெறுவதற்கான வாய்ப்பு இன்னும் குறைவாகவே இருப்பதாகக் கருதுகின்றனர். காரணம், அதன் விளைவுகள் ரஷ்யாவிற்கும், நேட்டோவிற்கும், உலகப் பொருளாதாரத்திற்கும் பேரழிவாக இருக்கும். இருப்பினும், தவறான கணிப்பு, தகவல் பரிமாற்றப் பிழை அல்லது கட்டுப்பாட்டை மீறும் பிராந்திய மோதல் போன்றவை மிகப் பெரிய நெருக்கடியை உருவாக்கும் அபாயம் இருப்பதாகவும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

இந்தப் போரின் மற்றொரு முக்கியமான பரிமாணம் பொருளாதாரமாகும். ரஷ்யா மீது விதிக்கப்பட்டுள்ள கடுமையான பொருளாதாரத் தடைகள், எரிசக்தி சந்தையின் மாற்றங்கள், ஐரொப்பாவின் பாதுகாப்புச் செலவின உயர்வு, உலகளாவிய உணவு மற்றும் உர விநியோகச் சங்கிலிகளின் பாதிப்பு ஆகியவை உலக பொருளாதாரத்தை பல ஆண்டுகளாகச் சவாலுக்கு உள்ளாக்கியுள்ளன.

அதே நேரத்தில், இந்தப் போர் சர்வதேச அதிகாரச் சமநிலையையும் மாற்றியுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோ ஆகியவை பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்தியுள்ளன. மறுபுறம், ரஷ்யா சீனா, வடகொரியா, ஈரான் உள்ளிட்ட நாடுகளுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்த முயற்சித்து வருகிறது. இதனால் உலகம் மீண்டும் போட்டியிடும் அதிகார மையங்களாகப் பிரியும் நிலை உருவாகியுள்ளது.

எனினும், தேசியவாத வட்டாரங்களில் இருந்து வெளிவரும் தீவிரமான கருத்துக்களையும், ஒரு அரசின் அதிகாரப்பூர்வ முடிவுகளையும் ஒன்றாகக் கருதக் கூடாது. ரஷ்யாவில் பல்வேறு கருத்தோட்டங்கள் இருப்பது போலவே, மேற்கத்திய நாடுகளிலும் இந்தப் போரை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவருவது என்பது குறித்து வேறுபட்ட அணுகுமுறைகள் காணப்படுகின்றன.

## நேட்டோ – ரஷ்யா மோதல்

இன்றைய சூழ்நிலையில் இந்த மோதல் மேலும் விரிவடைந்து நேட்டோ-ரஷ்யா நேரடி மோதலாக மாறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இதற்கு உறுதியான பதிலை யாராலும் வழங்க முடியாது. ஆனால், இரு தரப்பும் தங்களது இராணுவ நடவடிக்கைகளுடன் இணைந்து தூதரகத் தொடர்புகளையும் தொடர்வது, அணு ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் தவறான கணிப்புகளைத் தவிர்க்கும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பேணுவது மிகவும் அவசியமாகியுள்ளது.

யூரி பரஞ்சிக் அல்லது செர்ஜி கரகானோவ் போன்றோரின் கருத்துக்கள் உலகளாவிய கவனத்தை ஈர்த்தாலும், அவை உடனடியாக ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ அணு கொள்கையாக மாறிவிட்டன என்று கூற முடியாது. இருப்பினும், இவ்வாறான கருத்துக்கள் அதிகரிப்பது, போர் நீடிக்கும் போது அரசியல் மற்றும் பாதுகாப்பு அழுத்தங்களும் அதிகரித்து வருவதை வெளிப்படுத்துகிறது.

2022 ஆம் ஆண்டு தொடங்கிய ரஷ்யா - உக்ரைன் போர், நான்காவது ஆண்டையும் கடந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில் சில வாரங்களிலேயே முடிவடையும் என்று பலர் கருதிய இந்த மோதல், இன்று உலக அரசியலின் மையப் பிரச்சினையாக மாறியுள்ளது. இது இனி ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான எல்லைப் போராக மட்டும் பார்க்கப்படுவதில்லை. மாறாக, ரஷ்யாவுக்கும் மேற்கத்திய கூட்டணிக்கும் இடையிலான நீண்டகால அதிகாரப் போட்டியாகவே பல ஆய்வாளர்கள் இதனை மதிப்பிடுகின்றனர்.

# 20ஆம் ஆண்டு கண்ணீர் வணக்கம்




முல்லைத்தீவு மாவட்டத்தின்
வள்ளிபுனம் பகுதியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல
வளாகம் மீது 14.08.2006 இல் சிறிலங்கா யுத்த விமானங்கள்
திட்டமிட்டு மேற்கொண்ட கோரக் குண்டுத்
தாக்குதலில் 52 மாணவிகள் உட்பட
62 பேர் கொல்லப்பட்ட நாள்.



# ஆஸியில் செயற்கை நுண்ணறிவு 'AI' புதிய கட்டுப்பாடு:

# எழுத்து, இசை உரிமை பேண அரசு உறுதி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

19.07.2026




21ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய தொழில்நுட்பப் புரட்சியாகக் கருதப்படுவது செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) ஆகும். தொழிற்புரட்சி இயந்திரங்களின் யுகத்தை உருவாக்கியிருந்தால், டிஜிட்டல் புரட்சி கணினிகளின் உலகத்தை உருவாக்கியது. இன்று AI புரட்சி மனிதனின் சிந்தனை, முடிவெடுக்கும் திறன் மற்றும் படைப்பாற்றலின் சில பகுதிகளையே கணினி மூலம் நிறைவேற்றக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளது. கல்வி, மருத்துவம், சட்டம், பாதுகாப்பு, வேளாண்மை, வங்கி, ஊடகம், திரைப்படம், அறிவியல் ஆராய்ச்சி என அனைத்துத் துறைகளிலும் AI வேகமாகப் பரவி வருகிறது.

ChatGPT போன்ற மொழி மாதிரிகள், Midjourney மற்றும் DALL·E போன்ற பட உருவாக்கும் கருவிகள், மருத்துவ நோயறிதல் அமைப்புகள், தானியங்கி வாகனங்கள், நிதி பகுப்பாய்வு மென்பொருட்கள் என AI மனித சமுதாயத்தின் அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாக மாறிவிட்டது. ஆனால் இந்த முன்னேற்றம் பல புதிய கேள்விகளையும் எழுப்பியுள்ளது.






முக்கியமாக AI-யை யார் கட்டுப்படுத்துவார்கள்? படைப்பாளிகளின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படும்? மக்களின் தனியுரிமை என்ன ஆகும்? தரவு மையங்களின் அதிகரிப்பு சுற்றுச்சூழலை எவ்வாறு பாதிக்கும்? வேலைவாய்ப்புகளின் எதிர்காலம் என்ன? இந்தக் கேள்விகளுக்கான பதிலைத் தேடும் முயற்சியாகவே அவுஸ்திரேலியாவின் தொழிற்கட்சி அரசு, பிரதமர் அந்தோனி அல்பனீஸ் தலைமையில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான புதிய தேசிய கொள்கையை அறிவித்துள்ளது. இந்தக் கொள்கை வெறும் தொழில்நுட்ப வளர்ச்சியைப் பற்றியது மட்டுமல்ல; அறிவுசார் சொத்துரிமை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மின்சார வள மேலாண்மை, பொருளாதார வளர்ச்சி மற்றும் ஜனநாயக ஆளுமை ஆகிய அனைத்தையும் இணைக்கும் விரிவான தேசியத் திட்டமாகும்.

## AI வளர்ச்சியும் சட்டங்களும்

செயற்கை நுண்ணறிவு இயங்குவதற்கு அளவற்ற தரவுகளும், மிக உயர்ந்த கணினி செயல்திறனும் தேவைப்படுகிறது. ChatGPT போன்ற பெரிய மொழி மாதிரிகளைப் பயிற்றுவிப்பதற்கு கோடிக்கணக்கான புத்தகங்கள், இணையதளங்கள், ஆய்வுக் கட்டுரைகள், செய்திக் குறிப்புகள், புகைப்படங்கள், காணொளிகள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இதனை செயலாக்குவதற்காக ஆயிரக்கணக்கான சக்திவாய்ந்த கணினிகள் ஒரே நேரத்தில் இயங்கும் தரவு மையங்கள் (Data Centres) உருவாக்கப்படுகின்றன.

இத்தகைய தரவு மையங்கள் மிக அதிக அளவில் மின்சாரத்தையும் தண்ணீரையும் பயன்படுத்துகின்றன. சில பெரிய AI தரவு மையங்கள் ஒரு சிறிய நகரம் பயன்படுத்தும் அளவுக்கு மின்சாரத்தை நுகரக்கூடியவை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதேபோல், சேவையகங்களை குளிர்விக்க நாள்தோறும் இலட்சக்கணக்கான லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. இதனால் மின்சார உற்பத்தி, நீர்வளம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கார்பன் வெளியேற்றம் தொடர்பான கவலைகள் உலகம் முழுவதும் அதிகரித்துள்ளன.

மற்றொரு புறம், AI நிறுவனங்கள் தங்களது மாதிரிகளுக்குப் பயிற்சி அளிக்க எழுத்தாளர்கள், இசையமைப்பாளர்கள், ஓவியர்கள், திரைப்பட தயாரிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரின் படைப்புகளை அனுமதியின்றி பயன்படுத்துகின்றன என்ற குற்றச்சாட்டுகளும் அதிகரித்து வருகின்றன. உலகின் பல நாடுகளில் இதுதொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பின்னணியில்தான் அவுஸ்திரேலிய அரசு தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் படைப்பாளிகளின் உரிமைகளுக்கும் இடையில் சமநிலையை ஏற்படுத்தும் நோக்கில் புதிய சட்டக் கட்டமைப்பை உருவாக்க முனைந்துள்ளது.

## தேசிய AI அலுவலகம்

இந்தப் புதிய திட்டத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று "Office of AI" எனப்படும் தேசிய செயற்கை நுண்ணறிவு அலுவலகத்தை நிறுவுவதாகும். பிரதமர் மற்றும் அமைச்சரவைத் துறையின் கீழ் இயங்கவுள்ள இந்த அமைப்பு, நாட்டின் AI கொள்கைகளை ஒருங்கிணைக்கும் மைய அமைப்பாகச் செயல்படும்.

இந்த அலுவலகம் தேசிய அளவிலான AI தரநிலைகளை உருவாக்குவது மட்டுமல்லாமல், புதிய தொழில்நுட்பங்களால் உருவாகும் அபாயங்களை மதிப்பீடு செய்தல், பாதுகாப்பு வழிகாட்டுதல்களை உருவாக்குதல், அரசுத் துறைகளில் AI பயன்பாட்டை கண்காணித்தல் மற்றும் மாநில அரசுகள், பல்கலைக் கழகங்கள், தனியார் நிறுவனங்கள், கலைத்துறையினர் ஆகியோருடன் இணைந்து கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் போன்ற பொறுப்புகளையும் ஏற்கும். இதன் மூலம் பல்வேறு துறைகளில் சிதறிக்கிடக்கும் AI நிர்வாகத்தை ஒருங்கிணைத்து, தேசிய அளவில் ஒரே மாதிரியான கொள்கையை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

AI வளர்ச்சியுடன் அவுஸ்திரேலியாவில் தரவு மையங்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் மின்சார உற்பத்தி மற்றும் மின்விநியோக அமைப்புகள் மீது கூடுதல் அழுத்தம் உருவாகும் அபாயம் உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு அரசு புதிய தரநிலைகளை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. அதன்படி, AI தரவு மையங்களை அமைக்கும் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்கள் அல்லது தனிப்பட்ட மின்சார ஏற்பாடுகள் மூலம் உறுதி செய்ய வேண்டும். பொதுமக்களின் மின்சார பயன்பாட்டை பாதிக்கும் வகையில் தேசிய மின் வலையமைப்பின் மீது அதிக சுமையை ஏற்படுத்தக் கூடாது.

மேலும், தண்ணீர் பயன்பாட்டைக் குறைக்கும் நவீன குளிர்விப்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். புதிய தரவு மையங்களை அமைப்பதற்கு முன் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு கட்டாயமாக்கப்படும். விவசாய நிலங்கள், குடியிருப்புப் பகுதிகள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவற்றின் இருப்பிடங்களும் திட்டமிடப்பட வேண்டும். இதன் மூலம் AI வளர்ச்சியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஒன்றோடொன்று இணைந்து செல்ல வேண்டும் என்ற கொள்கையை அரசு வலியுறுத்துகிறது.

**AI மனித சமுதாயத்தின் அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாக மாறிவிட்டது. ஆனால் இந்த முன்னேற்றம் பல புதிய கேள்விகளையும் எழுப்பியுள்ளது. AI-யை யார் கட்டுப்-படுத்துவார்கள்? படைப்பாளிகளின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படும்? மக்களின் தனியுரிமை என்ன ஆகும்? தரவு மையங்களின் அதிகரிப்பு சுற்றுச்சூழலை எவ்வாறு பாதிக்கும்? வேலைவாய்ப்புகளின் எதிர்காலம் என்ன? போன்ற வினாக்கள் எழுந்துள்ளன.**

**இந்தக் கொள்கையின் மிகவும் முக்கியமான மற்றும் அதிக விவாதத்தை ஏற்படுத்திய அம்சம் பதிப்புரிமை (Copyright) பாதுகாப்பாகும். AI நிறுவனங்கள் இலக்கியங்கள், செய்திக் கட்டுரைகள், பாடல்கள், ஓவியங்கள், புகைப்படங்கள் உள்ளிட்ட படைப்புகளை அனுமதியின்றி பயன்படுத்துவதை ஆஸி அரசு ஏற்க முடியாது என்று பிரதமர் அந்தோனி அல்பனீஸ் தெளிவு படுத்தியுள்ளார்.**

www.sangathamil.com







## பதிப்புரிமை – படைப்பாளிகளுக்கு நம்பிக்கை

இந்தக் கொள்கையின் மிகவும் முக்கியமான மற்றும் அதிக விவாதத்தை ஏற்படுத்திய அம்சம் பதிப்புரிமை (Copyright) பாதுகாப்பாகும். AI நிறுவனங்கள் இலக்கியங்கள், செய்திக் கட்டுரைகள், பாடல்கள், ஓவியங்கள், புகைப்படங்கள் உள்ளிட்ட படைப்புகளை அனுமதியின்றி பயன்படுத்துவதை அரசு ஏற்க முடியாது என்று பிரதமர் அந்தோனி அல்பனீஸ் தெளிவுபடுத்தியுள்ளார். ஒரு படைப்பாளியின் அனுமதியின்றி அவரது படைப்பைப் பயன்படுத்துவது திருட்டுக்குச் சமம் என்ற அவரது கருத்து அவுஸ்திரேலிய கலைத்துறையினரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

எதிர்காலத்தில் AI நிறுவனங்கள் பதிப்புரிமை பெற்ற படைப்புகளைப் பயன்படுத்த விரும்பினால் உரிமம் பெற வேண்டும் அதற்குரிய கட்டணத்தையும் செலுத்த வேண்டும் என்ற கொள்கையை அரசு முன்னிறுத்தியுள்ளது. இதனால் எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள், பதிப்பகங்கள், செய்தி நிறுவனங்கள் மற்றும் திரைப்படத் துறையினர் தங்களது அறிவுசார் சொத்துகளுக்கான நியாயமான வருமானத்தைப் பெறும் வாய்ப்பு உருவாகும்.

இந்த அறிவிப்பை தொழில்நுட்ப நிறுவனங்கள் கலவையான பார்வையுடன் அணுகியுள்ளன. Microsoft, Anthropic போன்ற சில நிறுவனங்கள் தெளிவான சட்டங்கள் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் என்று வரவேற்றுள்ளன. சட்டத் தெளிவு இருப்பதால் நீண்டகால முதலீடுகளைத் திட்டமிடுவது எளிதாகும் என்பது அவர்களின் கருத்தாகும். ஆனால் சில தொழில்நுட்ப நிறுவனங்களும் தொழில்துறை அமைப்புகளும் அதிக கட்டுப்பாடுகள் புதுமையை மந்தப்படுத்தக்கூடும் என்றும், உலகளாவிய AI போட்டியில் ஆஸ்திரேலியாவின் போட்டித் திறன் குறையக்கூடும் என்றும் எச்சரிக்கின்றன.

அரசின் பதில் வேறுபட்டதாக உள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சி என்பது கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் அல்ல; மாறாக, சமூக நலன், மனித உரிமைகள் மற்றும் பொது நம்பிக்கையைப் பாதுகாக்கும் பொறுப்புடனான வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும்.

## வேலைவாய்ப்புகள் மற்றும் சமூக மாற்றங்கள்

AIயுக வளர்ச்சியால் எதிர்காலத்தில் பல பாரம்பரிய வேலைகள் மாற்றமடையக்கூடும் என்ற அச்சம் உலகளவில் நிலவுகிறது. கணக்கியல், வாடிக்கையாளர் சேவை, மொழிபெயர்ப்பு, தகவல் பகுப்பாய்வு போன்ற துறைகளில் தானியக்கம் அதிகரித்து வருகிறது.

இதனால் தொழிற்சங்கங்கள் AI காரணமாக வேலை இழக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு மறுபயிற்சி, புதிய திறன்களைப் பெறும் வாய்ப்புகள், தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் AI பயன்பாட்டில் மனித மேற்பார்வை போன்ற அம்சங்களை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. AI மனிதர்களை முழுமையாக மாற்றுவதற்குப் பதிலாக, மனிதர்களுடன் இணைந்து செயல்படும் தொழில்நுட்பமாக உருவாக்கப்பட வேண்டும் என்பதே அரசின் நீண்டகால நோக்கமாகும்.

## உலகளாவிய சூழலில் ஆஸி நிலை

ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே AI Act என்ற விரிவான சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. கனடா, ஜப்பான், தென் கொரியா உள்ளிட்ட பல நாடுகளும் AI ஒழுங்குமுறைகளை உருவாக்கி வருகின்றன. அமெரிக்கா இதுவரை சந்தை சார்ந்த, ஒப்பீட்டளவில் தளர்வான அணுகுமுறையைப் பின்பற்றுகிறது.

இந்த நிலையில், அவுஸ்திரேலியா தொழில்நுட்ப வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பதிப்புரிமை, முதலீடு, சமூக நம்பிக்கை மற்றும் மனித உரிமைகள் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் தனித்துவமான தேசிய AI மாதிரியை உருவாக்க முயற்சிக்கிறது. இந்த முயற்சி வெற்றியடைந்தால், உலகின் பல நாடுகளுக்கும் இது ஒரு முன்னுதாரணமாக அமையக்கூடும்.

செயற்கை நுண்ணறிவு மனித வரலாற்றின் மிகப் பெரிய அறிவியல் முன்னேற்றங்களில் ஒன்றாக இருந்தாலும், அதனை பொறுப்புடன் பயன்படுத்துவதே உண்மையான சவாலாகும். தொழில்நுட்ப வளர்ச்சி மனித நலனுக்கு உதவ வேண்டுமே தவிர, மனித உரிமைகள், படைப்பாற்றல், சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நீதியை பாதிக்கக் கூடாது.

இந்த அடிப்படையில்தான் ஆஸ்திரேலியாவின் புதிய AI கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. தரவு மையங்களின் ஆற்றல் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது, படைப்பாளிகளின் அறிவுசார் சொத்துரிமையை பாதுகாப்பது, தேசிய AI அலுவலகத்தை நிறுவுவது, வேலைவாய்ப்பு மற்றும் சமூக நலனைக் கருத்தில் கொண்டு ஒழுங்குமுறைகளை உருவாக்குவது போன்ற நடவடிக்கைகள் எதிர்கால AI நிர்வாகத்திற்கு புதிய தரநிலைகளை உருவாக்கக்கூடியவை.

வரும் ஆண்டுகளில் AI உலகப் பொருளாதாரத்தையும், அரசியலையும், மனித வாழ்க்கையையும் ஆழமாக மாற்றும் என்பது உறுதி. ஆனால் அந்த மாற்றம் மனிதகுலத்தின் நலனுக்காக அமைய வேண்டுமெனில், புதுமைக்கும் பொறுப்புக்கும் இடையிலான சமநிலையே மிக முக்கியமானது. அந்த சமநிலையை உருவாக்கும் முயற்சியாகவே ஆஸ்திரேலியாவின் புதிய செயற்கை நுண்ணறிவு கொள்கை உலக கவனத்தை ஈர்த்துள்ளது.





தமிழீழமே
ஒரே தீர்வு
Thamileelam is the only solution



# தமிழீழ விடுதலை வரலாற்றில் ஆகஸ்ட்



## குடியுரிமை பறிப்பு

தமிழர்கள் என்னும் காரணத்துக்காக குடியுரிமைச் சட்டம் என்னும் போர்வையின் கீழ் மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமை 20.08.1948 அன்று சிங்களப் பேரினவாத ஆட்சிபீடத்தினால் பறிக்கப்பட்டது.



## தமிழர் மீதான இனப்படுகொலை 15-27.08.1977

தமிழருக்கெதிரான இனப்படுகொலை நடவடிக்கையான 1977 ஆவணிப்படுகொலை தொடங்கிய நாள் (15-27.08.1977). இனப்படுகொலையின் பின்னர்தான் நிராயுதபாணிகளாக நின்ற தமிழர்களை நோக்கி போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் என்று கொக்கரித்தார் பேரினவாதி ஜெயவர்த்தனா. இவ் இனவெறியில் 400 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10,000 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.



## மன்னாரில் நிகழ்ந்த முதல் கண்ணிவெடித் தாக்குதல்

மன்னார் மாவட்டத்தில் முதல் கண்ணிவெடித்தாக்குதல் மன்னார் - பூநகரி வீதியில் நடந்த நாள் 11.08.1984.

## சுதுமலைப் பிரகடனம்

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலை என்னும் இடத்தில் 04.08.1987 அன்று முதன்முதலில் தமிழீழ மக்கள் முன்தோன்றி உரையாற்றினார். இவ் உரையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனமாகும்.



“இந்திய - இலங்கை ஒப்பந்தமானது, எமது தேசிய இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது” என்பதனை மிகத் தீர்க்கதரிசனமாக அவ் உரையில் கூறியிருந்தார் தலைவர் அவர்கள்.

## இந்தியப்படைகளால் இடம்பெற்ற வல்வெட்டித்துறைப் படுகொலை

1989 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2, 3. 4 ஆகிய திகதிகளில் யாழ். குடாவின் வல்வெட்டித்துறைப் பகுதியில் வீடுகளிலும், வீதிகளிலும் நின்ற மக்கள் இந்திய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதேவேளை, இந்திய இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களும் அடித்துக் கொல்லப்பட்டனர். இப்படுகொலைச் சம்பவத்தில் சிறுவர், மாணவர், வயோதிபர், பெண்கள் உட்பட 64 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு, சொத்துக்கள், உடமைகள் என்பனவும் பெருமளவில் நாசமாக்கப்பட்டன.



## வீரமுனைப் படுகொலை

அம்பாறை மாவட்டத்தில் 10.08.1990 அன்று கோயில் ஒன்றில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழ் மக்கள் முஸ்லீம் காடையர்களால் வெட்டிக்கொல்லப்பட்டனர். 100 தமிழ் மக்கள் வரை கொல்லப்பட்ட இத்தாக்குதல், ஜனாதிபதி ஆர். பிரேமசாதா அவர்கள் ஆட்சிக்காலத்தில் நடாத்தப்பட்டது.



## ஆகாய கடல்வெளிச்சமர் முடிவு நாள் – 09.08.1991

போராட்ட வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக அமைந்த ஆனையிறவுச்சமர் (10.07.1991-09.08.1991) இலஙகைத்தீவில் இரண்டு இராணுவங்கள் என உலகம் வர்ணித்த இந்தச் சரித்திரச் சமரில் 608 மாவீரர்கள் வீரச்சாவடைந்தார்கள்.










## மணலாற்றில் சிறீலங்கா படையினரின் ஒப்பரேசன் மின்னல் இராணுவப் படையெடுப்பு

29.08.1991 அன்று ஆரம்பித்த ஒப்பரேசன் மின்னல் என்ற பாரிய படையெடுப்பு தமிழீழத் தாய கத்தை இரண்டாக பிளக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. 26 செப்டம்பர் வரையான 28 நாட்கள் நீடித்த இச்சமரில் எமது முதுநிலைத் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் ஜஸ்ரின் உட்பட 236 வீரர்கள் வீரச்சாவடைந்து தேசத்தை காத்தனர். 300 வரையான தமது சிப்பாய்களை இழந்து சிங்களப்படை தோல்வியைச் சந்தித்தது.

## அராலிக் கண்ணிவெடித் தாக்குதல்

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட சிங்களப்படைத்துறையின் வடபிராந்திய தலை மையை ஒரே தாக்குதலின் மூலம் இல்லாதொழித்தது விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதல். சிங்கள ஆட்சியாளர்களையும், படைத்தலைமையையும் பேரதிர்ச்சிக்குள்ளாக்கிய இத்தாக்குதல் 09.08.1992 அன்று நிகழ்த்தப்பட்டது.



Lt. Gen. Denzil Kobbekaduwa



Major General Wijaya Wimalarathne



Rear Admiral Mohan Jayamaha | Lt Colonel YN Palipana | Lt Colonel HR Stephen | Lt Colonel GH Ariyarathne

Lt Commander CB Wijepura | Lt Commander Asanga Lankathilaka | Major Nalin de Alwis | Private WJ Wickremasinghe

www.sangathamil.com

### மயிலந்தனைப் படுகொலை

மட்டக்களப்பு மயிலந்தனைப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பிற்குப் பயந்து பதுங்கச்சென்றவேளை, அங்கு பதுங்கியிருந்த சிறீலங்கா விசேட அதிரடிப்படையினர் அப் பொது மக்களை வெட்டியும், சுட்டும் படுகொலை செய்தனர். 09.08.1992 ஆம் திகதி நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் 50 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.





### லெப். கேணல் இராஜன் வீரச்சாவு – 27.08.1992

புலிகளின் முதல் நிலைத் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் இராஜன் (சோமசுந்தரம் சற்குணம் - மாதகல், பிறப்பு: 11.02.1966) இராணுவ நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில் திறமை யாக செற்பட்டு, தலைவரின் பாராட்டைப் பெற்றவர்; சக போராளிகளுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்த இவர் மாதகல் பகுதியில் சிறீலங்கா இராணுவம் மீதான ஒரு தாக்குதலில் வீரச் சாவடைந்தார்.

### கிளாலி கடல் நீரேரியில் கரும்புலித் தாக்குதல் – 26.08.1993

யாழ். குடாநாடு மீதான முற்றுகை வலையின் பிரதான முடிச்சான கிளாலி நீரேரியில் சிங்கள தேசத்தின் கடற்படைப் படகான நீருந்து விசைப்படகுகள் இரண்டினை வெவ்வேறு கரும்புலித் தாக்குதல் மூலம் மேஜர் வரதன் (கந்தசாமி இராமச்சந்திரன் - மட்டக்களப்பு, பிறப்பு: 19.07.1974) மற்றும் கப்டன் மதன் (சீனிவாசன் சிவகுமார் - மட்டக்களப்பு, பிறப்பு: 07.09.1995) ஆகியயோர் மூழ்கடித்தனர். இவ் இரண்டு வீரர்களும் அடுத்தடுத்து நடாத்திய கடற்கரும்புலித் தாக்குதலால் கிளாலியின் மேலாதிக்கம் புலிகளின் கைகளில் வந்து வீழ்ந்தது.





### பருத்தித்துறை கடற்பரப்பில் கரும்புலித் தாக்குதல் – 29.08.1993

சிங்கள கடற்படையின் மிதக்கும் சுப்பர் டோரா படகுகள், இவை போராட்டத்திற்கும், மக்களுக்கும் செய்த இழப்புகள் கொஞ்சநஞ்சமல்ல. இத்தகைய ஒரு சுப்பர் டோராவை மேஜர் புகழரசன் (சுப்பிர மணியம் நாகநீதன் - அரியாலை, பிறப்பு: 15.11.1975), கப்டன் மணியரசன் (தேவநாயகம் இராஜ ரூபன் - குடத்தனை, பிறப்பு: 22.10.1977) இணைந்து கரும்புலித் தாக்குதல் மூலம் மூழ்கடித்தனர். இதன் மூலம் இரண்டு ஒலிகன் ரக நவீன இயந்திரத் துப்பாக்கிகள் புலிகளுக்குக் கிடைக்கப் பெற்றன.





### பலாலி சிறீலங்கா படைத்தள மையப்பகுதியின் மீதான கரும்புலித் தாக்குதல்

02.08.1994 அன்று சிங்களத்தின் மிக இறுக்கமான பலாலி பெருந்தளத்தின் மையத்தில் சிங் களத்தினை அதிரவைத்த பெரும் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் பெல். 212 ரக உலங்கு





வானூர்தி ஒன்றும் பவள் கவச வாகனம் ஒன்றும் தாக்கியழிக்கப்பட்டது. பலம் வாய்ந்த எந்த குகைக்குள்ளும் புலிகளால் புகமுடியும் என்பதை எதிரிக்குணர்த்திய தாக்குதலை நடாத்தி வீர காவியமான கரும்புலிகளான மேஜர் ஜெயம் (குணநாயகம் தேவராசா - திருகோணமலை, பிறப்பு:







05.03.1976), மேஜர் திலகன் (சுப்பையா ராஜ் - மட்டக்களப்பு, பிறப்பு: 20.06.1976), கப்டன் திரு (கோணமலை முகுந்தன் - அப்பாறை, பிறப்பு: 20.06.1975), கப்டன் நவரெட்ணம் (கிருஸ்தோகுலெம்பேட் அண்ணாதாஸ் - மடு, மன்னார், பிறப்பு: 22.09.1977), லெப். ரங்கன் (குணமாலை ரதிக்குமார் - வட்டக்கச்சி, பிறப்பு: 09.02.1976)ஆகிய கரும்புலிகள் அடங்குவர்.

### முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி வீரச்சாவு – 16.08.1994



தலைவர் அவர்களோடு முதற் கடற் கரும்புலி அங்கயற்கண்ணி



காங்கேசன்துறை துறைமுகத்திற்குள் ஊடுருவி, அங்கு தரித்து நின்ற கண்காணிப்புக் கப்பலைத் தகர்த்த முதற் பெண் கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி (புஸ்பகலா துரைசிங்கம் - மண்கும்பான், யாழ்., பிறப்பு: 10.05.1973) வீரச்சாவு.

### சண்டிலிப்பாய் படுகொலை



21.08.1995 அன்று "ரெகன் பயர்" என்னும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட சிறீலங்கா படையினரின் எறிகணை வீச்சில் 12 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.



### லெப். கேணல் தாட்சாயினி வீரச்சாவு – 03.08.1997

ஜெயசுக்குறுப் களத்தில் புலிகளின் பலமான எதிர்த்தாக்குதலுக்கு வலுச்சேர்க்கும் களச் செயற் பாட்டின் போது எதிர்பாராத வெடிவிபத்தில் லெப். கேணல் தாட்சாயினி (மனுவேற்பிள்ளை கிளாறின்பிளோறா – புலோப்பளை, யாழ்., பிறப்பு: 03.11.1965) வீரச்சாவடைந்தார்.

### புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படை மீது கரும்புலித் தாக்குதல்

16.08.1999 அன்று புல்மோட்டைக் கடற்பரப்பில் ரோந்து வந்த சிறீலங்காக் கடற்படையினர் மீது விடுதலைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது கடற்படையினரின் சுப்பர் டோராப் படகு ஒன்றைத் தகர்த்து கடற் கரும்புலிகளான லெப். கேணல் நீதியப்பன் (வீரவாகு சிவனேஸ்வரன் - திருகோணமலை, பிறப்பு: 15.10.1977), மேஜர் எழில்வேந்தன் (அந்தமான்) (வடிவேல் செந்தில்குமார் - மட்டக்களப்பு, பிறப்பு: 17.07.1978) ஆகிய இருவரும் கடலில் காவிய மானார்கள்.



### கேணல் ராயு (குயிலன்) சுகயீனம் காரணமாக சாவு



தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வே. பிரபாரகன் அவர்களுடன் உடனிருந்து தலைவரின் போரியல் நுட்பங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தவர் கேணல் ராயு (அம்பலவாணர் நேமிநாதன் - ஏழாலை, யாழ்., பிறப்பு: 30.08.1961). முதலாவது சிறப்புக் கொமாண்டோ படையணிளை உரு வாக்கியவர். விடுதலைப் புலிகளின் பொறியியல் பிரிவின் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். விடுதலைப்போரின் முதலாவது கனரக ஆட்லறிப் பீரங்கிப் படையணியினர் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்தவர் மாவீரன் கேணல் ராயு 25.08.2002 அன்று சுகயீனம் காரணமாக சாவைத் தழுவிக்கொண்டார்.

### செஞ்சோலை வளாகப் படுகொலை



முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளிபுனம் பகுதியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது சிறீலங்காவின் யுத்த விமானங்கள் மேற்கொண்ட கோரக் குண்டுத்தாகுதலில் 52 மாண வர்கள் உட்பட 62 பேர் கொல்லப்பட்டனர். நூறுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இத்தாக்குதலில் படுகாய மடைந்த மாணவி ஒருவர் சிங்கள தேசத்தில் சரியான முறையில் சிகிச்சை மேற்கொள்ளாதலால் 28.09.2006 அன்று மரணமானார்.










## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# செஞ்சோலையில் உதிர்ந்த மலர்கள் நினைவில்....

## 20ஆம் ஆண்டு நினைவுகளுடன்...



14.08.2006 14.08.2026